# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 297 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 02, ஞாயிற்றுக்கிழமை 18.09.2016


## தீயணைப்புப் படை இல்லாதமையே இடருக்குக் காரணம்

விரைவில் அது உருவாக்கப்படும் என்கிறார் வடக்கு முதலமைச்சர்



கிளிநொச்சி, செப். 18
கிளிநொச்சியில் தீயணைப்பு வசதிகள் இல்லாதமையே இந்தப் பெரும் இடருக்கு வழி கோலியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான » 49ஆம் பக்கம்

## இந்திய ராணுவத்தால் சுடுகாடாகின்றது ஈழம்

*கருணாநிதிக்கு பிரபாகரன் எழுதிய கடிதத்தை 27 ஆண்டுகளுக்குப் பின் வெளியிட்டார் வைகோ*



சென்னை, செப். 18
இந்திய இராணுவத்தால் எமது நாடு சுடுகாடாகிக் கொண்டிருக்கின்றது. இதனைத் தமிழகத்தின் கவனத்துக்கும், இந்திய எதிர்க்கட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லுங்கள் என்று, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப் » 49ஆம் பக்கம்

## தியாகி திலீபனின் நினைவு இன்று கிளிநொச்சி நகரில்



கிளிநொச்சி, செப். 18
இந்திய இராணுவத்துக்கு எதிராக உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் இன்று காலை இடம்பெறவுள்ளன. இதற்கான சுவரொட்டிகளும் கிளிநொச்சி நகரில் ஒட்டப்பட்டுள்ளன.
ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில், ஆனந்தசங்கரியைச் செயலாளர் நாயகமாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. » 53ஆம் பக்கம்

## முழுமையான அதிகார பீடமாக மாகாண சபை மாறவேண்டும்

ரணில் முன்னிலையில் கூறினார் வடமாகாண முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், செப். 18
மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் எண்ணம் கொழும்பு அரசுக்கு இருந்தால் முழுமையான அதிகார பீடமாக மாகாண சபையை மாற்ற வேண்டும். கொழும்பு அரசுக்கும் மாகாணத்துக்கும் 'ஒருங்கியலும் நிரல்' என்ற ஒன்று இருக்கக் கூடாது. அவ்வாறு இருப்பதால் மாகாணத்தின் அதிகாரங்களைக் கொழும்பு அரசு பிரயோகிக்கத் தலைப்படுகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலக கட்டடத் திறப்பு விழாவில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
(விரிவு: பக். 06)

**கொழும்பு–மாகாணங்கள் இடையே**

# சமாந்தரமான அதிகாரப் பகிர்வு

இது பற்றியே இப்போது ஆராய்கிறோம் என்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 18
கொழும்பு அரசுக்கும், மாகாணங்களுக்கும் இடையில் சமாந்தரமாக அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலகத்தில் நிறுவப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட » 53ஆம் பக்கம்



## கீரிமலையில் வீடுகளை கையளிப்பார் ஜனாதிபதி

அடுத்த மாதம் 2 ஆம் திகதி நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 18
கீரிமலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளை, அடுத்த மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையளிக்கவுள்ளார். இராணுவத்தினரால் விடுவிக்கப்படுவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 400 ஏக்கர் நிலமும் காணி உரிமையாளர்களிடம் வழங்கப்படவுள்ளது.
நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணியில்லாத குடும்பங்களுக்கு, கீரிமலை–மாவிட்டபுரம் வீதியில், சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் » 49ஆம் பக்கம்

## கற்கால மனிதர் மன்னாரில் வாழ்ந்தமைக்கு ஆதாரங்கள்



*1,600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என பல்கலை. தொல்லியல்துறை தெரிவிப்பு*

மன்னார், செப்.18
ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் க்ற்கால மனிதர்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள், மட்பாண்டங்கள் மன்னாரில் காணப்படுவதாக ஆய்வை மேற்கொண்டுள்ள யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.
(விரிவு: பக். 02)

## 220 மில்லியன் பெறுமதியான சொத்துகள் தீயில் கருகி நாசம்

*124 வர்த்தகர்களுக்குப் பாதிப்பு*
*கிளிநொச்சி சந்தை தீ விபத்தில்*

கிளிநொச்சி, செப். 18
கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் 124 வர்த்தகர்களின் 220 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் தீயில் கருகிப் போயுள்ளன. பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உடனடி இழப்பீட்டு உதவித் தொகையாக ஒவ் » 49ஆம் பக்கம்



## வடக்கின் அபிவிருத்திக்கு முத்தரப்புக் குழு அமையும்

*கூட்டமைப்பு-ரணில் இடையே இணக்கம்*

யாழ்ப்பாணம், செப். 18
வடக்கின் அபிவிருத்தி மற்றும் முதலீடுகள் தொடர்பில் முத்தரபபுக் குழு அமைத்துச் செயற்படுவதற்கு பிரதமர் மற்றும் தமிழத் தேசியக் கூட்டமைப்பினருடனான நேற்றைய சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.
மேலும் மயிலிட்டியை விடுவிப்பதாகத் தைப்பொங்கல் நிகழ்வில் உறுதியளித்ததற்கு அமைவாகச் செயற்படவேணடும் என்றும் பிரதமரிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.
யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரம » 49ஆம் பக்கம்




அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...

24 கெரட் இற்கு ரூ.36,000

22 கெரட் இற்கு ரூ.33,000

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411

ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை

011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

# 1600 ஆண்டுகளுக்கு முன்னர் கற்கால மனிதர்கள் மன்னாரில் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் மீட்பு

மன்னார், செப். 18

ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் கற்கால மனிதர்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள், மட்பாண்டங்கள் மன்னாரில் காணப்படுவதாக ஆய்வை மேற்கொண்டுள்ள யாழ்.பல்கலைக்கழக தொல்லியற்றுறையினர் தெரிவித்தனர்.

ஐயனார் உட்பட சிவன், வேல், சூலம், லிங்கம் ஆகிய வழிபாட்டுத் தெய்வங்களின் உருவப் பகுதிகளையும் அங்கு காணமுடிந்ததாக அவர்கள் கூறினர்.

மன்னார் மாதோட்ட கட்டுக்கரைக் குளத்தை அண்மித்த குருவில்வான் பகுதியில் இந்தப் பண்டைய காலத் தொல்பொருள் எச்சங்களைக் கண்டறிந்துள்ளதாக தொல்லியல்துறையினர் தெரிவித்தனர்.





ஏற்கனவே 2 தடவைகள் இந்த இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 3 ஆவது தடவையாக விரிவுரையாளர்கள் இருவர் உட்பட தொல்லியல் சிறப்புக் கலை பயிலும் 22 மாணவர்கள் கடந்த முதலாம் திகதியிலிருந்து ஆய்வில் ஈடுபட்டு இவற்றைக் கண்டறிந்ததாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

தற்போது மீட்கப்பட்ட தொல்பொருளில் சுடு மண்ணால் செய்யப்பட்ட மணிகள், யானைகள், குதிரை போன்றவற்றின் பாகங்கள், சிவலிங்கத்தின் பாகங்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட வழிபாட்டுத் தெய்வங்களின் உருவப் பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

குளத்துக்கு அருகே, வரம்பை அண்மித்து சுமார் 2 கிலோமீற்றர் நீளத்துக்குத் தொல்பொருள்கள் இருப்பதாக நாம் இனங்கண்டு அடையாளப்படுத்தியுள்ளோம். அங்கு இத்தகைய தொல்பொருள்கள் பல பரப்பில் காணப்பட்டிருக்கலாம். தற்போது குளக்கட்டின் உள்ளே 2 கிலோமீற்றர் நீளமான அல்லது அதற்கும் மேற்பட்ட பரப்பளவில் தொல்பொருள்கள் இருக்கலாம் என்று நாம் கருதுகிறோம்.



குளக்கட்டின்வெளியே 3 இடங்களில் கிடங்குகளாக அகழ்ந்து ஆய்வைமேற்கொண்டோம். அதன்போது மீட்கப்பட்டவையே இத்தகைய சுடுமட்பாண்டங்கள்.

அங்கு மீட்கப்பட்ட தொல்பொருள்களின் சிதைவுகள் ஐயனார் வழிபாட்டு முறைக்கான விஞ்ஞானபூர்வமான தடயப் பொருள்களாக உள்ளன எனப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.



தற்போது மீட்கப்பட்டுள்ள தொல்பொருள்களின் பாகங்களைப் பாதுகாத்தல்,வரலாற்றுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் மீட்கப்படுகின்ற பொருள்களைப் பாதுகாத்து மக்களுக்குத் தெளிவுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்தப் பணி இன்றுடன் (நேற்றுடன்) நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்காகக் கலாசார மத்திய நிலையத்தினரும் இணைந்து கொள்வதாகவும் அதற்காக ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாகவும் தெரிவித்துள்ளனர் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

(த-4-56-37)

## பெரஹராவில் யானை தாக்கி பெண் ஒருவர் பரிதாபச் சாவு

கொழும்பு, செப். 18

இரத்தினபுரி, மஹா சமன் தேவாலயத்தில் இடம்பெற்ற பெரஹராவில் கலந்து கொண்டிருந்த யானை ஒன்று குழம்பித் தாக்குதல் நடத்தியதில் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், 12 பேர் காயமடைந்தனர்.

60 வயதுடைய லீலாவதி என்ற பெண்ணே தாக்குதலில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பெரஹரா ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதுதவிர, கெட்டபெர விகாரையின் வருடாந்த பெரஹரா நிகழ்வின்போது இடம்பெற்ற இடரில் நான்கு பேர் காயமடைந்தனர்.

பெரஹரா ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில், யானை ஒன்று குழம்பியுள்ளதாக வதந்தி பரவியதையடுத்து, ஏற்பட்ட அமைதியின்மையால் இந்த இடர் இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(த-5)

## முள்ளியவளையில் சிக்கியது 350 கிராம் கஞ்சா

முல்லைத்தீவு செப். 18

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரின் நடவடிக்கையில் முள்ளியவளையில் 350 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிஜிராபுரம் பகுதியிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து கஞ்சா கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் கீழ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்ணம் ஜெசிந்தன் தலைமையில் ஜெயசேகர, குலதுங்க, இந்திரரட்ண, ஜெனன், பண்டார ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து கஞ்சா கடத்தலை முறியடித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதி மன்றில் முற்படுத்தப்படுவார்- என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-21,ரி7)

# எம் வாழ்க்கையை எரித்துவிட்டது தீ

## கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் வேதனை

கிளிநொச்சி, செப். 18

ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கிகளிலும்,மொத்தவியாபாரிகளிடமும் கடன்களைப் பெற்றும், நகைகளை அடகு வைத்தும் சந்தையில் வியாபாரத்தை ஆரம்பித்தோம். இந்த நிலையில் எமது கடைகளில் பற்றி எரிந்த தீ எங்களது வாழ்கையை எரித்து விட்ட தீயாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு தீயில் கருகிப்போன கிளிநொச்சி பொதுச் சந்தை கட்டடத் தொகுதியின் வர்த்தகர்கள் பலர் தலையில் கை வைத்துக் கதறி அழுதனர்.




கிளிநொச்சிச் சந்தையில் தீ பற்றியுள்ளது என்பதைக் கேள்வியுற்று பதறிப் போய் ஓடிவந்தோம். இங்கு வந்து பார்க்கும் போது எமது கடைகளும் தீப் பற்றி எரிந்தன. கடைகளின் பின் பகுதியை உடைத்து, திறந்து கையில் அகப்படுவதைக் கொண்டு வெளியேறினோம். அதற்குள் கடைக்குள் தீ பரவி முற்றாக எரிய ஆரம்பித்தது. என்ன செய்வது என்று தெரியாது ஒரு கட்டத்தில் கை, கால்கள் நகர மறுத்துவிட்டன. உதவிக்கு வந்த பலரும் கடைகளின் உள்ளே இருந்து பொருள்களை வெளியே கொண்டு வந்து பல இடங்களிலும் குவித்தார்கள். அந்தப் பொருள்களும் நீர்த்தாங்கி வாகனங்கள் ஏறிக் கடந்து சென்றதால் விற்பனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட திருடர்களும் பொருள்களைத் திருடிச் சென்றுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இங்குள்ள வியாபாரிகள் அனைவருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலும், மொத்த வியாபாரிகளிடமும் கடன்கள் உண்டு. இதனைத் தவிர வியாபாரத்துக்காக அடகு வைத்த நகைகள் என நாம் மிகப் பெரும் சுமைக்குள் வாழ்கின்றோம். இந்த நிலையில் ஏற்பட்ட தீ எங்களது வாழ்க்கையை எரித்துவிட்ட தீயாகவே அமைந்துள்ளது. நாங்கள் பட்ட கடன்களை எப்படியாவது காலப்போக்கில் அடைத்துவிடலாம். அதன் பின்னர் நிம்மதியாக வாழலாம் என்று அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். அதற்கிடையில் எமது வாழ்க்கை கருகிப்போய் விட்டது. வாழ்வாதாரத்துக்கு எந்த வழியும் இன்றித் திண்டாடும் நிலை வந்துவிட்டது என்று வர்த்தகர்கள் பலர் வேதனையுடன் கதறி அழுதனர்.

நேற்று முன்தினம் எரிந்து கருகிப்போன கிளிநொச்சி பொதுச் சந்தையை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், கே.கே. மஸ்தான், மற்றும் தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோர் பார்வையிட்டு நிலமைகளை விசாரித்தனர்.(த-21-35)

# September 25ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து 10% விலைக்கழிவை பெற்றிடுங்கள்




## Civil Engineering
## Quantity Surveying
## Bio Medical Science
## Business Management
## Compuiting/Networking

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY • ICBT

**ICBT CAMPUS JAFFNA**

**021 4 777888**
**#580**
**Hospital Road**
**Jaffna**

# பாடசாலையில் பயன்தரு மர நடுகை மடுவில் ஆரம்பம்

மன்னார், செப். 18


மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்ப பாடசாலையில் மரம் நாட்டும் நிகழ்வு மடு வலயக்கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பாடசாலைகளில் பயன் தரும் மரங்களை நடும் வகையிலேயே மடு கல்வி வலயத்துக்குபட்ட பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்ப பாடசாலையில் மரம் நடும் நிகழ்வு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வுக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டார்.

நிகழ்வில் மடு வலயக்கல்வி திணைக்களத்தின் அதிகாரி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தனது மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒலி பெருக்கித் தொகுதியையும் பாடசாலைக்குக் கையளித்தார்.

(ற-56)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பரிசுத் தினம் - 2016

தலைவர்:
திரு.ஐ.தயானந்தராஜா (அதிபர்)
இடம்:
குமாரசுவாமி மண்டபம்
காலம்:
நாளை(19.09.2016) திங்கட்கிழமை - முற்பகல் 9.30 மணி
பிரதம விருந்தினர்:-
பிரதம நீதியரசர் கனகசபாபதி சிறீபவன் அவர்கள்
(Chief Justice, Democratic Socialist Republic of Sri Lanka)
பரிசு வழங்கல்:
திருமதி.ஜெயந்தி சிறீபவன் B.Sc.(Hon)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (C/26195) (11,18)

பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

Qualification
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

Benefits
- Basic Salary
*Marketing Executive - 15,000/= +++
*Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com
Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

கல்லீரல் தேவை
Liver Wanted



கல்லீரலின் ஒரு சிறு பகுதி தேவைப்படுகின்றது.
இரத்த வகை- A+/ O
வயது: 18-50
தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு.
அழையுங்கள் : 077 577 8871

ஜீவகவாத நிவாரணி

தலைவலி, காதுவலி, பல்வலி, தடிமல், இடுப்பு வலி, முதுகு வலி, தசை வலி, கெண்டை பிறள்வு, முழங்கால் வலி மற்றும் வீக்கம், முடக்கு வாதம், விரல்கள் கைகால் விறைப்பு, உளுக்கு, வீக்கம், கழுத்துச் சுழுக்கு, குத்துவலி, கொழுக்கல், நரம்புசார் வலிகள், பக்கவாதம், கீழ் பாதம் அரிப்பு மற்றும் வீக்கம், வாதம், விறைப்பு வாதம் என்பவற்றின் போது வெளிப்பூச்சுக்குப் பொருத்தமான உடன் நிவாரணம் தரும் கை கண்ட ஔடதமாகும்.
கண்களிலோ, புண்களிலோ பூசுவதைத் தவிர்க்கவும்
Manufactured by:
Jeewaka Herbal Products (pvt)Ltd, Yakkala.
சந்தைப்படுத்துவோர் - சிவா நறுமணப் பூங்கா
021 222 2567
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)

யாழ் நகரின் மத்தியில்
போன்சொப் வாடகைக்கு

போன்சொப் நடத்த விரும்புவோர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்! போன்சொப் நடத்த, திருத்த வேண்டிய உபகரணங்களுடனும், விரும்பினால் அனுபவமுள்ள திருத்துநருடன் (போன்) வாடகைக்கு உண்டு. அத்துடன் 2 பிரபல போன் கொம்பனிகளின் சேவை முகவர் அதிகாரமும் உண்டு.
விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
077 360 8642

ES Printers

ES Giftz
உங்கள் உறவினர்களுக்கு அன்பளிப்பு பொருள்களை எம் இணையத்தளம் ஊடாக அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com





Poster / Notice
Lable / Wedding
Card/ Bag Print/
Award/ Frame Item/
Batch / Vehicle Brand/
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark/
Pen Print /
Book Printing/
Woodent Print

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.






021 492 7471 / 021 492 7472
#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com

# 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தார் திலீபன்

- ந.லோகதயாளன்.

திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் முதல் மூன்று நாளும் நகர்ந்தபோது தினமும் கூடிய மக்களின் முன்பு உரையாற்றிய திலீபன் நான்காம் நாள் சோர்வடைந்து காணப்படுகின்றார். தினமும் பார்வையிடக் கூடும் மக்கள் ஒரு சில ஆயிரம் என்பதைத் தாண்டி பல்லாயிரக் கணக்கில் கூடியதுடன் பாடசாலை மாணவர்களும் குவிந்தனர்.

ஓர் இதய தீபம் மெல்ல மெல்ல உருகுவதை இந்திய அரசு ஒரு உத்தரவாத்தின் மூலம் நிறுத்தாதா என்ற ஏக்கம் நான்காம் நாள் இந்தியாவின் பக்கம் கோபமாகத் திரும்ப ஆரம்பிக்கின்றது. இதன்போது அருகில் இருந்த மு.வே.யோ.வாஞ்சிநாதன், ராஜன் , காசி ஆனந்தன் உள்ளிட்டோர் பொறுமை இழந்த நிலையில் காணப்படுகின்றனர். முரளி, ஜவான் (தமிழன்பன்) உள்ளிட்ட போராளிகளின் ஏற்பாட்டில் கூடும் மக்களின் மனக் குமுறல் பதிவிடப்பட்டு அங்கு நின்ற ஈழநாதம் பத்திரிகையின் அப்போதைய ஊடகப் பணியாளர்களான இராதையன் , திருச்செந்திநாதன் உள்ளிட்டோரால் ஈழநாதம் பத்திரிகையில் செய்தி அறிக்கை இடப்படுகின்றது.



இவற்றின்போது திலீபனின் 5 கோரிக்கைகளுக்கும் அப்பால் அவற்றின் பின்னணிகள் தொடர்பிலும் எடுத்தியப்பப்படுகின்றது. அதாவது இந்தியா அளித்த வாக்குறுதியின் பிரகாரம் இந்திய அரசிடம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்ட நிலையில் பல புலிகள் சுடப்பட்டமையால் இந்திய அரசு எண்ணியதைப்போல் புலிகளின் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்த முனைகின்றனர்.

நிலம் மிக வேகமாக அபகரிக்கப்படுகின்றது. சிங்களக் குடியேற்றம் இடம் பெறுகின்றது. ஒப்பந்தத்தின் படி முகாம் அகற்றப்படாமல் புதிதாக முகாம்கள் அமைக்கப்படுகின்றன என்பதைப் புலிகள் இந்தியாவிடம் சுட்டிக்காட்டியபோது டிக்சிற் உள்ளிட்டோர் அதை மறுக்கின்றனர். இதனால் இவற்றை உறுதி செய்யும் நோக்கில் அன்று திருகோணமலை, மட்டக்களப்பு நிலவரங்களை அறிய புலிகளின் முக்கிய தளபதிகளான புலேந்தி அம்மான், றூட் ரவி , ரி.ஆர். ஓ. ரவி ஆகியோர் திருமலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களைக் கட்டதம்பலகாமம் மக்கள் நிறை குடம் வைத்து வரவேற்றனர். அதற்குப் பயன்படுத்திய மேசைகள் உடைந்தும் முறிந்தும் காணப்பட்டதோடு செம்புகள், குடங்கள் நெளிந்தே காணப்பட்டன . அதாவது அந்தப் பிரதேசங்களை விட்டு ஓடிச் சென்று மீண்டும் வந்த மக்கள் இந்தியா மூலம் நிரந்தர அமைதி கிடைக்கும் என நம்பினர். இவ்வாறு பிரதேசங்களைப் பார்வையிட்டுச் சென்ற அணியினர் திருகோணமலையில் சைனா பே விமான நிலையத்தில் உலங்கு வானூர்தியில் இறங்கிய இந்திய இராணுவ அதிகாரியையும் அழைத்துக்கொண்டு அல்லைக் கந்தளாய் வீதியை அடைகின்றனர்.

அங்கு புலிகள் தெரிவித்ததுபோன்று வீதியோரம் காடு அழிக்கப்பட்டு அன்றுதான் தென்னிலங்கையில் இருந்து கொண்டுவந்து இறக்கப்பட்ட சிங்கள மக்கள் நடு வீதியில் நின்று கொட்டில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதனை புலேந்தி அம்மான் நேரடியாகவே இந்திய அதிகாரியிடம் காண்பித்தபோது அதிகாரி வாய் அடைத்து நின்றார்.

இவ்வாறு சென்ற குழு அளித்த அறிக்கையின் பிரகாரமே திலீபனின் 5 கோரிக்கையில் இரு கோரிக்கையாகவும் இணைக்கப்பட்டது.

edexcel | PEARSON | London South Bank University | University of Wolverhampton | CIOB | RICS




Sharpen your skills with BCAS today for Colourful Careers tomorrow

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யும் வாய்ப்பு

UGC Recognized | TVEC Approved

ENG ENGINEERING
Civil & Construction
Telecommunication
Electrical | Electronics

BM MANAGEMENT
Business Management | Marketing
Human Resource Management

IT COMPUTING & SYSTEM DEVELOPMENT

BMS BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY

LLB LAW

QS QUANTITY SURVEYING

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131 | 077 960 3753
COLOMBO 077 283 4595

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

18 YEARS
ISO 9001:2008

HOTLINE : 021 2219910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

# மாகாணங்களைப் பரிபாலிக்கும் பொறுப்பு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 18
மாகாணங்களைப் பரிபாலிக்கும் பொறுப்பு, நிர்வகிக்கும் அதிகாரம் என்பன மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கே வழங்கப்பட வேண்டும். ஆளுநருக்கு ஒரு அதிகார அலகு, மாவட்ட செயலாளர்களுக்கு ஒரு அலகு, எமக்கு இன்னொரு அலகு என்றிருந்தால் மாகாணம் உருப்படாது போய்விடும். முரண்பாடுகளே மிஞ்சும். அவற்றைத் தவிர்ப்பதென்றால் இந்திய நாட்டின் அதிகார அலகுகளின் ஆளுநர்கள் போலவே இங்கும் ஆளுநர்கள் ஆளுநர்களாகவே இருக்க வேண்டும். ஆள்பவர்களாக மாறிவிடக் கூடாது.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் புதிய நிர்வாகக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு முதலமைச்சர் உரையாற்றினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

"1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை உடன்பாட்டின் அடிப்படையிலும் அப்போதைய 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலும் மாவட்டச் செயலாளர்கள் மாகாண நெறிப்படுத்தலின் கீழ் இருந்தார்கள். அந்த முறை 1992ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

திருத்தங்கள் நடைபெற்று திருத்தப்பட்ட அரசமைப்பு அல்லது புதிய அரசமைப்பு வெகுவிரைவில் வரவிருக்கும் நேரத்தில், அதிகாரப் பரவலாக்கல் ஆரோக்கியமாக நடைபெறும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில், பல் நிர்வாக அலகுகளை நீக்கி ஒற்றுமைப்பட்ட ஒரே மாகாண நிர்வாகம் நடைபெற பிரதமர் வழிவகுக்க வேண்டும்.

இன்று 3 அதிகார அலகுகள் வடக்கு மாகாணத்தில் நடைமுறையில் இருக்கின்றன. ஆளுநர் அதிகார அலகு, மாவட்டச் செயலர்கள் அதிகார அலகு, மாகாண அலகு. முதல் இருவரும் முறையே ஜனாதிபதியின் முகவராகவும் கொழும்பு அரசின் நெறிப்படுத்தலுக்கு உட்பட்டவர்களாகவும் இருப்பதால் கூடிய அதிகாரங்களை அவர்களே பரிபாலிக்கக் கூடியதாக உள்ளது. உண்மையில் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் எண்ணம் கொழும்பு அரசுக்கு இருந்தால் முழுமையான அதிகார பீடமாக மாகாண சபையை மாற்ற வேண்டும். கொழும்பு அரசுக்கும் மாகாணத்துக்கும் ஒருங்கியலும் நிரல் என்ற ஒன்று இருக்கக் கூடாது. இருந்தால் மாகாணத்தின் அதிகாரங்களை கொழும்பு அரசே பிரயோகிக்கத் தலைப்படுகின்றது. கொழும்பு அரசுக்கும் மாகாணத்துக்கும் அவற்றின் அதிகாரங்கள் மிகத் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டு ஒரே விடயம் சம்பந்தமாகப் பலர் அதிகாரம் செலுத்தும் நிலையை நாங்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அண்மையில் முதலீட்டாளர்களை வரவேற்று இங்கு அவர்களின் பெயர்களைப் பதிவு செய்ய ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதற்கு நான் எதிர்ப்பாளன் அல்ல. நாங்கள் மாகாணத்தின் தேவைகள் பற்றி ஒரு முறையான தேவைக் கணிப்பைப் பல் நிறுவனங்களின் ஒத்தாசையுடன் செய்ய விழையும் நேரம் எமது தேவைகள் என்னென்ன, எவ்வாறான முதலீடுகள் எமக்கு எந்தெந்தத் துறை சம்பந்தமாக அவசியம், எங்கெல்லாம் எவ்வாறான செயற்றிட்டங்கள் நிறுவலாம் என்றெல்லாம் ஆராயாமல் வெறுமனே முதலீட்டாளர்களை வர அனுமதிப்பதால் திட்டமிட்ட நிரந்தர அபிவிருத்திக்கு முட்டுக்கட்டைகள் போட்டவர்களாவோம் என்ற கருத்தைக் கூறி வைத்தேன்.

2003ஆம் ஆண்டு இதே பிரதமர் உருவாக்கிய ஒரு பல் நிறுவன பல்துறை சார்ந்த தேவைகள் கணிப்பின் அடிப்படையில் தயாரிக்கப்படும் புதிய கணிப்பொன்றின் பின்னரே எமது தேவைகளுக்கு ஏற்றவாறு முதலீடுகள் நடைபெற வேண்டும் என்று கருதினோம். உடனேயே பல முதலீட்டாளர்களை இங்கு கொண்டுவர எத்தனித்தல் மாட்டுக்கு முன் கரத்தையைக் கட்டுவதாக முடியும் என்று தெரிவித்திருந்தேன். எமக்குப் போதிய நீர் இல்லை. வடிகால் வசதியில்லை. மனித வளங்கள் தேர்ச்சி பெற்றவர்களாக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் முதலீட்டாளர்களை இங்கு கொண்டு வந்தால் குழப்பங்களே மிஞ்சும், குறைபாடுகளே வெளிச்சமாவன என்று கருதினேன். தான்தோன்றித்தனமாக அபிவிருத்திகளில் இறங்குவதை நாங்கள் விரும்பவில்லை.

சென்ற கிழமை ஒரு சிங்கள முதலீட்டாளர் எம்மைச் சந்தித்தார். நாம் அவருக்கு சகல உதவிகளையும் அனுசரணைகளையும் வழங்கி வருகின்றோம். அவர் ஒரு விடயத்தைப் பகிரங்கமாகவே கூறினார். எம்முடன் தொடர்புகள் வைத்திருக்கத் தமக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்றும், இதே செயற்றிட்டத்தைத் தான் 2011ம் ஆண்டு கொண்டு வந்தபோது ஒரு பெருந்தொகைப்பணத்தை மத்திய அமைச்சர் ஒருவர் தமக்குத் தந்தால்தான் அனுமதி அளிக்க முடியும் என்று கூறினார் என்றும் தான் அதற்கு இசையவில்லை என்றும் தெரிவித்தார்.

எமது தேவைகளையும் ஏழ்மையையும் பாதிப்புக்களையும் முன்வைத்து கொழும்பு அரசில் உள்ளோர் வியாபாரம் செய்வதை நாங்கள் கண்டிக்கின்றோம். எமது தேவைகளைத் தாமே தான்தோன்றித் தனமாக நிர்ணயிப்பதையும் முதலீடுகளுக்குத் தமக்கு முற்பணம் தர வேண்டும் என்று இலஞ்ச ஊழல்களில் ஈடுபடுவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொழும்பு அரசானது எமக்கு ஒரு தந்தை போன்றிருந்து அனுசரணை வழங்க வேண்டும் என்று விரும்புகின்றோம். எமது கடமைகளை அவர்கள் போட்டிமுத்துக் கொண்டு தமக்கென வேறொரு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். ஜனநாயகம் என்றால் மக்கள் விருப்பு என்று பொருள்படும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தேவைகளையும் செயற்திட்டங்களையும் நிர்ணயிக்க வேண்டும். வேற்று மாகாணங்களைச் சேர்ந்த மத்திய மக்கள் பிரதிநிதிகளாலோ, எமது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநராலோ, அதிகார மட்ட அலுவலர்களாலோ எம்முடன் கலந்தாலோசிக்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஈற்றில் எமக்குப் பாதிப்புக்களையே விளைவிப்பன. ஆற அமர சிந்திக்காது பணத்துக்கு ஆசைப்பட்டு பின்னணி தெரியாத முதலீட்டாளர்களைப் பெருவாரியாக இங்கு கொண்டு வருவது எமக்குக் கால ஓட்டத்தில் கடும் பாதிப்புக்களையே ஏற்படுத்துவன. சமூக சீர்குலைப்புக்களை ஏற்படுத்துவன.

சமாதானத்தைக் கட்டி எழுப்ப ஐக்கிய நாடுகள் பணம் தந்து உதவியுள்ளது. எம்முடன் கலந்தாலோசிக்காமால் எமது தேவைகளை எம்மிடம் இருந்து தெரிந்து கொள்ளாமல் அதற்கான அச்சுவார்ப்புரு தயாரிக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை கண்டறிவது வேறு, கொழும்பு அரசால் நியமிக்கப்படும் அலுவலர்களின் கருத்துக்களை அறிந்து செயற்படுத்துவது வேறு. அலுவலர்கள் தொழிற்திறனை நாடுவார்கள். கொள்கை ரீதியாக மக்களின் நிலை கண்டு அல்லது அவர்கள் தேவை கருதிச் செயற்பட வேண்டியவர்கள் அல்ல அவர்கள். அத்துடன் மத்திக்கு இசையாவிடில் தண்ணீர் இல்லாக் காட்டுக்கு அனுப்பப்பட்டு விடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு உண்டு.

இப்பொழுது தீர்மானங்கள் கொழும்பு அரசால் எடுக்கப்படுகின்றன. எம்முடன் கலந்தாலோசிப்பது இல்லை. அவர்கள் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அனுசரணையாக எமது அலுவலர்கள் அழைக்கப்படுகின்றார்கள். மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், ஏன் எங்கள் தலைமைச் செயலாளர் போன்றோர் அழைக்கப்படுகின்றார்கள். எமது மக்கள் நலனை அவர்களைக் கொண்டு மத்தி, தான் வேண்டியவாறு தீர்மானிக்கின்றது. தொடக்கத் தில் இருந்தே இவ்வாறான செயற்றிட்டங்கள், கொள்கைகள், நடைமுறைகள் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து அவற்றின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்" - என்றார்.

(ற-4)

## அவன்கார்ட் விவகாரம்; இறுதி அறிக்கை தேவை

கொழும்பு, செப். 18
அவன்கார்ட் விவகாரம் தொடர்பிலான இறுதி விசாரணை அறிக்கை சமர்ப்பித்தாலேயே அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று காலி நீதிவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை எதிர்வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு காலி நீதிவான் நிலுபுலி லங்காபுர குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் அவன்கார்ட் கப்பலின் உக்ரைன் நாட்டுக் கப்டனை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோத ஆயுதக் கொள்வனவுக் குற்றத்தின் கீழ் குறித்த அவன்கார்ட் கப்பலின் உக்ரைன் நாட்டுக் கப்டன் ஜுலை 23ஆம் திகதி இரவு 8 மணியளவில் காலித்துறைமுகத்தில் வைத்துக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## புலம் பெயர் தமிழருடன் நிசா பிஸ்வால் சந்திப்பு



கொழும்பு, செப். 18
இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வால் நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பொன்றை நடத்தினார்.

அமெரிக்காவின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழில் உரிமைகள் உதவி செயலாளர் டொம் மாலி நொவ்ஸ்கியும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தப் பேச்சில் உலகத் தமிழர் பேரவையும் இடம்பெற்றுள்ளது.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்திரு எஸ்.ஜே.இம்மானுவல் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் போன்றவற்றிற்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த விவாதம் அமைந்ததாக அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## கிளி.மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் 26ஆம் திகதி

கிளிநொச்சி, செப். 18
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி மாவட்டத்தின் நான்கு இணைத் தலைவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பெரும் சர்ச்சையில் முடிவுற்றது. (ற-101)

## திருட்டுக்களில் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஆறு பேர் கைது



வவுனியா, செப்.18

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். திருடப்பட்டன என்று கூறப்படும் 12 பவுண் நகைகளும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன.

இவ்வாறு வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 5ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்துப் பொலிஸார் தெரிவித்ததாவது:

மன்னார், குருநாகல், வவுனியா போன்ற பகுதிகளில் திருட்டு நகைகள் விற்கப்படுகின்றன என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் வீடுகளில் திருடப்பட்ட தங்க நகைகள் விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்தது. கைது செய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் நால்வரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபர்கள் தோணிக்கல், மதவுவைத்தகுளம் போன்ற பகுதிகளில் திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். 7லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 12 பவுண் தங்க நகைகள் இவர்களால் திருடப்பட்டுள்ளன.

குறித்த நபர்களைக் கைது செய்வதற்கு வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் சிறப்புப் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டனர். பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்ணான்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிசிற குமார, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனவின் ஆலோசனையில், வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி செனரத் தலைமையிலான சார்ஜன் ஜேசுதாசன், அபேரத்தினா, எஸ். ஐ. ரத்னாயக்கா, சிசில் குமார, அடங்கிய குழுவினர் குறித்த நபர்களைக் கைது செய்தனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# பெண்களின் தலைமையில் 52 ஆயிரம் குடும்பங்கள்

## வடக்கு மாகாணத்தில் மட்டும்

வடக்கு மாகாணத்தில் வாழும் 3 லட்சத்து 76 ஆயிரத்து 405 குடும்பங்களில் 52 ஆயிரத்து 142 குடும்பங்கள் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களாகும். அந்தக் குடும்பங்களில் 10 ஆயிரத்து 303 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களாகும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டச்செயலகங்களின் புள்ளி விவரங்களில் இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் வாழும் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 691 குடும்பங்களில் 34 ஆயிரத்து 619 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். அவற்றில் 5 ஆயிரத்து 897 குடும்பங்கள் போரால் குடும்பத்தலைவர்களை இழந்துள்ளன.

வவுனியா நிர்வாக மாவட்டத்தில் வாழும் 54 ஆயிரத்து 622 குடும்பங்களில் 5 ஆயிரத்து 879 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். அவற்றில் 914 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளன.

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் வாழும் 42 ஆயிரத்து 991 குடும்பங்களில் 6 ஆயிரத்து 483 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். அவற்றில் ஆயிரத்து 192 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளன.

முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் வாழும் 42 ஆயிரத்து 178 குடும்பங்களில் 6 ஆயிரத்து 260 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். அவற்றில் ஆயிரத்து 830 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 43 ஆயிரத்து 923 குடும்பங்கள் வாழும் நிலையில் 5 ஆயிரத்து 168 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். அவற்றில் 470 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளன.

போர் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் விதவைகள் ஆக்கப்பட்ட பெண்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகமாக வாழ்கின்றனர். வடக்கு மாகாணத்தில் இறுதி ஆண்டின் நிலவரப்படி மாகாணத்தில் வாழும் குடும்பங்களில் 18 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். (ற-101)

## தேசிய உள்ளூராட்சி மாதம் ஒக்ரோபரில் முன்னெடுப்பு

நாடு தழுவிய ரீதியில் 330 உள்ளூராட்சிச் சபைகளிலும் உற்பத்தித் திறன் வாய்ந்த் சேவையூடான பேண்தகு அபிவிருத்தி எனும் தலைப்பில் உள்ளூராட்சி மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா இதற்கான துரித முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக ஒக்ரோபர் மாதங்களில் உள்ளூராட்சி வாரம் கொண்டாடப் படுகின்றது. இந்த வருடம் ஒக்ரோபர் முழுமாதமும் உள்ளூராட்சி மாதமாக வினைத் திறனுடன் முன்னெடுக்குமாறு நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள் ஆணையாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அடுத்தமாதம் 3ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான ஒரு மாத காலப் பகுதியில் பொது மக்களின் முறைப்பாடுகள், ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல், வருமான அதிகரிப்பு நடமாடும் சேவைகளை முன்னெடுத்தல் முறையான திண்மக் கழிவு முகாமைத்துவம் ஆரோக்கியமான சுகாதாரத் திட்டம், கல்வி மற்றும் நூலக நிகழ்ச்சித் திட்டங்கள், எனப் பல வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களை சிறப்பானதாக முன்னெடுத்துச் செல்ல உள்ளூராட்சிச் சபைகளுடன் இணைந்த ஏனைய திணைக்களங்கள் அமைச்சுக்களின் உதவிகளைப் பெறலாம் என மாகாண சபைகளின் உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-50)

# அதிபர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கோரிப் போராட்டம்

## ஆசிரிய அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

அதிபர் சேவையில் சகல தரத்திலும் உள்ள அதிபர்கள் படுமோசமான பிரச்சினைகள் பலவற்றுக்கும் முகம்கொடுக்கின்றனர். அவற்றைத் தீர்ப்பதற்குக் கல்வி அமைச்சு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு ஆசிரிய அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்தது.

இது தொடர்பில் குறித்த சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது-

தீர்வு நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக அதிபர்களை அலைய விட்டு அவர்கள் மூலமாகப் பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் மட்டும் கல்வி அமைச்சு கவனம் எடுத்துவருகின்றது.

வர்த்தமானி அறிவித்தலின் பின் 2009.11.13 இல் அதிபர் சேவையில் 2II தரத்துக்கும் III தரத்துக்கும் நியமனம் பெற்ற அதிபர்களுக்கு ஆறு வருடங்கள் கடந்த பின்னரும் உயர் தரங்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் எவற்றையும் கல்வி அமைச்சு செய்யவில்லை. பதவி உயர்வு கிடைக்காததால் பதவி உயர்வுக்கான பாடசாலைகள் கிடைப்பதும் நழுவுகின்றது. அதிபர் சேவைக்கு 2009க்குப் பின்னர் நீதிமன்றத் தீர்மானத்துக்கு அமைவாக நியமனம் பெற்ற அதிபர்களின் நியமனத்தில் முந்திய திகதியிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது எதிர்ப்பு நடவடிக்கையின் ஊடாக முன்வைத்த எமது கோரிக்கைகளுக்கும் சரியான பதில் கொடுக்கப்படவில்லை. பல்வேறு போலியான அறிக்கைகளை விட்டு அதிபர்களைக் குழப்பும் செயற்பாடுகள் கல்வி அதிகாரிகளால் செய்யப்படுகிறன.

இலங்கை அதிபர் சேவைக்கான பழைய யாப்பின்படி அதிபர் III 2II, 2, 1, I ஆகிய தரங்கள் இருந்தன. 1885 /31க்கு உரிய புதிய அதிபர் சேவை யாப்பில் அதிபர் சேவை 3,2,1 எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதிபர் சேவையில் 2II , 2I என்பன இரண்டாம் தரத்துக்கு உள்வாங்கப்படும் போது 2I தரத்துக்குரிய ஊதியம் நிர்ணயிக்கப்படாததால் முதலாம் தரத்துக்குப் பதவி உயர்வு பெற்ற அதிபர்களுக்கு இதுவரை ஊதிய நிலுவை மட்டுமன்றி ஊதியமும் இல்லாமல் போயுள்ளது.

இது சம்பந்தமாகப் பல சந்தர்ப்பங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ள போதும் அமைச்சிடம் சரியான செயற்றிட்டங்கள் இல்லாமையால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் அசெளகரியத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அதிபர் சேவைய்ய 2004 வருடத்தில் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்படும் பொழுது வலயக்கல்விக் காரியாலயங்கள் கல்விக் காரியாலயங்கள் செயற்பாட்டுத் திறன் இன்மை காரணமாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற இயலாத அதிபர்கள் இன்று வரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி பதவி உயர் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஆசிரிய சேவையில் இருந்து அதிபர் சேவைக்குச் செல்லும் போது ஊதியம் குறைந்து செல்வது சம்பந்தமாக சரியாகப் பதிலிறுப்பதற்கும் அது சம்பந்தமாக ஒரு நிவாரணத்தை அளிப்பது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் கல்வி அமைச்சால் செய்யப்படவில்லை. பாடசாலைகளில் அதிபர் தரங்களை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு சட்டபூர்வ நிலை இருந்தும் அப்படியான சந்தர்ப்பம் படு மோசமான முறையில் இல்லாது செய்யப்பட்டுள்ளது.

அதிபர்சேவை மூன்றாம் தரத்துக்கு 2016 வைகாசி 9 இல் நியமனம் பெற்ற அதிபர்கள் 3 ஆயிரத்து 856 பேர் இதுவரை பாடசாலைகளில் பணியில் அமர்த்தப்படவில்லை. அதற்குப் பதிலாக பதில் கடமை ஆற்றுபவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான முயற்சியில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது. அதிபர் சேவையில் முதலாம் தர அதிகாரிகளுக்கு 1998ஆம் ஆண்டு வரை கிடைத்திருந்த வரியற்ற வாகனப்பத்திர அனுமதியை மீண்டும் கொடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அந்தச் சலுகை இன்றுவரை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை நிறைவேற்றுத் தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதுடன், அந்தத் தரத்துக்குச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும் எந்தச் சலுகையும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்போது அனுபவிக்கும் சலுகைகளும் இல்லாது செய்யப்பட்டுள்ளன.

3/2014 சுற்றறிக்கையின்படி ஊதிய மீளாய்வு செய்யப்படவில்லை. அதே போன்று 2003 வரை வினைத் தடை தாண்டல் பரீட்சை நடத்தப்படாமையால் பாதிக்கப்பட்ட அதிபர்களின் இழப்பு சீர் செய்யப்படவில்லை. 2008.07.01இல் அதிபர் தரத்துக்கு உள்வாங்கப்படல் தாமதமானதால் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்குப் பிரச்சினை உருவாகியுள்ளது. அரசியல் பழிவாங்கலின் பேரில் அதிபர் சேவை நியமனம் வழங்குவதன் மூலம் கல்வி அமைச்சு அதிபர் சேவை யாப்பை படு மோசமாக மீறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பது நிறுத்தப்படவில்லை.

அதிபர் சேவையில் சகல தரங்களிலும் உள்ள அதிகாரிகள் இப்படியான துன்பங்களுக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் கடந்த வருடம் வேறுவேறாகப் போராடினோம். ஆனால் ஆட்சியாளர் அதிபர் சேவையில் உள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுத்தரத் தவறிவிட்டனர். இப்படியான ஏமாற்று நிலைக்கு உள்ளாகி இருப்பதை விடுத்து சகல தரத்திலுமுள்ள அதிபர்கள் ஓரணியில் சேர்ந்து பரந்துபட்ட போராட்டத்துக்குச் செல்ல ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பெரிய எதிர்ப்புப் போராட்டத்துக்கு சகல தர அதிபர்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாண வலியுறுத்தி ஒன்றுபடும்படியும் அதன்மூலம் பரந்துபட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வலியுறுத்துவதற்கு முன்வரும்படியும் அழைக்கிறோம். சகலரும் வருகை தந்து ஒன்றுபட்டு நிற்பதன்மூலம் எமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை முன்னேறிச்செல்வோம் - என்றுள்ளது. (ற-4)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அலைபேசியில் ஆபாசப் படம் வைத்திருந்தால் ஆபத்து

## ஓமந்தை கிராம இணைப்பு பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

வவுனியா, செப்.18

வவுனியா, ஓமந்தைப் பகுதிகளில் சில வயோதிபர்கள் தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருக்கிறார்கள் என்று அறிகின்றேன். ஆபாசப் படங்கள் வைத்திருந்தால் 5 ஆயிரம் ரூபா தண்டமும், சட்ட நடவடிக்கை மூலமான தண்டனையும் விதிக்கப்படும் என்று எச்சரிக்கின்றேன்.

இவ்வாறு ஓமந்தை கிராம இணைப்புப் பொலிஸ் அதிகாரி என்.நவரத்தின தெரிவித்தார்.



ஓமந்தைக் கிராம மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்று சந்திப்பு நடைபெற்றது. அதில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

"கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்ச் செய்கை நாசமடைகின்றது. பொருளாதார ரீதியில் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர். அதை மட்டுப்படுத்த பொலிஸார் கால்நடை உரிமையாளர்களிடம் உரையாடினர். எதிர்பார்த்த அளவு உரிமையாளர்கள் மாடுகளைத்தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவில்லை. மீண்டும் வயல் நிலங்களில் மாடுகள் நெற்பயிரை மேய்ந்தது மட்டுமல்லாது வீதி விபத்துக்களையும் ஏற்படுத்தியுள்ளன.

வாகனச் சாரதிகளின் அவதானமின்மையாலும்; கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் குறுக்காகச் சென்றதாலும் இந்த வீதி விபத்துக்கள் ஏற்பட்டன. 9 மாடுகள் இரண்டு மாதங்களுக்குள் உயிரிழந்துள்ளன. ரயில் தண்டவாளங்களிலும் மாடுகள் சாவடைந்துள்ளன. உரிமையாளர்கள் மாடுகளைச் சரியாக கட்டி அல்லது, தமது காணி களில் அவர்கள் கண்காணிப்பில் வளர்க்கவேண்டும். அதனால் தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்க்கமுடியும்.

ஓமந்தையில் சில கிராமங்களில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் உள்ளனர். இவர்களைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு மட்டுமல்ல அந்த ஊரில் உள்ளவர்களுக்கும் குறிப்பாக சிவில் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்களுக்கும் உண்டு.

சில வயோதிபர்கள் ஆபாச படங்களை அலைபேசியில் வைத்திருப்பது பற்றிக் கேள்விப்பட்டேன். இளைஞர்கள் அலை பேசியில் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் ஆபாசப் படங்களை வைத்துள்ளனர். எம்மால் அவர்கள் பிடிக்கப்பட்டால் தண்டனை மட்டு மல்ல, அவர்களுக்கு வேலை வாய்ப்பு வருகின்ற போது நற்சான்றிதழ்கள் வழங்கப்படாது. பாடசாலைக்கு அல்லது தனியார் கல்வி நிலையங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் அவர்களுடன் சென்று வருவதே பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக அமையும்.

அடையாள அட்டை தொடர்பான புதிய சுற்றுநிரூபம் பொலிஸ் நிலையங்களுக்கு வந்துள்ளது. அது பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். அடையாள அட்டையைக் கொண்டுசெல்லத்தவறுவதால் விபத்துக்கள் போன்ற சம்பவங்களில் அடையாளம் காண்பதும் எமக்குச் சிரமமாக இருக் கின்றது- என்றார்.

(ந-21,402)

# எலிக் காய்ச்சல் தொற்று வவுனியாவில் அதிகரிப்பு

## முன்னேற்பாட்டு நடவடிக்கை அவசியம் என வலியுறுத்து

வவுனியா, செப்.18

எலிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையில் அனுராதபுரம், பொலநறுவைக்கு அடுத்ததாக வவுனியா உள்ளது. கடந்த வருடம் 8 பேர் வவுனியாவில் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறு ஓமந்தை சுகாதாரப் பரிசோதகர் க.சிவரஞ்சன் தெரிவித்தார்.

ஓமந்தை கிராமசேவகர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற எலிக் காய்ச்சல் மற்றும் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு வவுனியாவில் 8 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். அதில் ஓமந்தையைச் சேர்ந்த விவசாயிகளும் அடங்குகின்றனர். ஓமந்தையைச் சேர்ந்த பலர் வயல் வேலைகளில் ஈடுபடுகின்றனர். வயல்களிலே எலிக் காய்ச்சல் பரவும்வாய்ப்பு அதிகம் உள்ளது. மாடுகளுக்கு எலிக் காய்ச்சல் ஏற்பட்டு அதன் மூலம் அதன் உரிமையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புக்களும் உள்ளன. எலிக் காய்ச்சலை வரும் முன் தடுக்கலாம். அதற் குரிய மருந்து வகைகளை வைத்திசாலையில் பெற்றுக் கொள்ளலாம். வீடுகளில் எலியின் சிறுநீர் உணவுகளில் அல்லது நீர்தேங்கி நிற்கும் இடங்களில் கலப்பதன் மூலம் எலிக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

> “ஓமந்தையில் ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் ரயில் பயணிகள் கழிவுப் பொருள் களை வீசுகின்றனர். உல்லாசப் பயணிகள் உணவை மர நிழல்களில் சாப்பிட்ட பின் தண்ணீர் போத்தல்கள் மற்றும் கழிவுப் பொருள்களை வீசுகின்றனர்.”

ஓமந்தையில்ரயில்நிலையத்தை அண்மித்த பகுதியில் ரயில் பயணிகள் கழிவுப் பொருள்களை வீசுகின்றனர். உல்லாசப் பயணிகள் உணவை மர நிழல்களில் சாப்பிட்ட பின் தண்ணீர் போத்தல்கள் மற்றும் கழிவுப் பொருள்களை வீசுகின் றனர். அவற்றில் நீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகுகின் றன. இதனை மட்டுப் படுத்த பொதுமக்கள் முன்வர வேண் டும்.

எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாக அரசு அறிவித்துள்ளது. அந்தக் காலப்பகுதியில் பல இடங்களில் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகளை மக்கள் முன்னெடுக்க வேண்டும். பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் மழை காலம் வரவுள்ள நிலையில் வெகுவிரைவான டெங்கு ஒழிப்பை முன்னெடுக்க வேண்டும்"- என்றார்.

விழிப்புணர்வு கூட்டத்தில் வவுனியா சுகாதாரப் பணிமனையை சேர்ந்த வைத்தியர்-தொற்றா நோய் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.யூட்பீரிஸ் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

(ந-21,402)



'வரும் முன் காப்போம்' என்ற தொனிப்பொருளில் ஓமந்தை கிராமசேவகர் அலுவலகத்தில் டெங்கு ஒழிப்புச் சிரமதர்னம் நேற்று நடத்தப்பட்டது. ஓமந்தை கிராமசேவகர் செ.அனுசியா தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் ஓமந்தைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பலந்து கொண்டு சிரமதானம் செய்தனர். (ந-402)

### பொலிஸ் நிலையங்கள் திறப்பு விழா

முல்லைத்தீவு, செப். 18

வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் நிலையக் கட்டடங்கள் இன்று திறக்கப்படவுள்ளன.

வவுனியா வடக்கு, நெடுங்கேணியில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையக் கட்டடம் காலை 9 மணிக்கும், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையக் கட்டடம் மு.ப. 10 மணி யளவிலும் திறக்கப்பட வுள்ளன.

இரண்டு பொலிஸ் நிலைய கட்டடங்களும் சட்ட ஒழுங்குகள் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சாகல ரத்நாயக்கவால் திறக்கப்படும்.

கடந்த மாதம் இந்தப் பொலிஸ் நிலையங்கள் திறந்துவைக்கப்பட உள்ளன என்று தெரிவித்திருந்த நிலையில் திறப்பு விழா பிற்போடப்பட்டிருந்தது. (ந-ரி7)

# சட்டம் கடமை தவறியதாலேயே பெண்கள் பொறுமை இழந்தனர்

## நவ்வி கள்ளுத் தவறணை உடைப்புக் குறித்து ஓமந்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரி கருத்து

வவுனியா, செப்.18

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் தமது கடமையைச் சரியாகச் செய்யவில்லை. அதனாலேயே ஓமந்தை, நவ்வி கிராமத்தில் இருந்த கள்ளுத் தவறணை பெண்களால் அடித்து நொருக்கப்பட்டது. அவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்தமைக்கு இதுவே காரணம்.

இவ்வாறு ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ்த சில்வா தெரிவித்தார்.

ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடந்த மாதம் இடமாற்றம் பெற்றுச் சென்றார். புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக சுரேஸ்த சில்வா பொறுப்பேற்றுள்ளார். அவர் ஓமந்தைக் கிராம அலுவலர் செ.அனுசியா தலைமையில் ஓமந்தை மக்களுடன் நேற்றுக் காலை சந்திப்பு நடத்தினார். ஓமந்தை கிராம அலுவலர் அலுவலகத்தில் சந்திப்பு நடந்தது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவு நீடிக்க வேண்டுமானால் பொலிஸார் தமது கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். கடமையைச் சரியாக செய்யும் பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே நல்லுறவு சிறப்பாக அமையும்எனநம்புகின்றேன்.

நான் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தைப் பொறுப்பேற்ற தினத்தன்றே 18 பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து கள்ளுத் தவறணையை உடைத்தார்கள். அவர்கள் ஏன் இதனைச் செய்தார்கள் என்று நான் ஆராய்ந்தேன். அவர்களின் கணவர்மார், உறவினர்கள் கள் அருந்திவிட்டு அவர்களை அடிக்கிறார்கள், தகாத வார்த்தை பிரயோகிக்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண்கள் மன முடைந்தார்கள். சிவில் பாதுகாப்பு குழுவிடமும், பொலிஸாரிடமும் ஏனைய பல இடங்களிலும் இந்த விடயம் பற்றிப் பல தடவைகள் தெரிவித்தனர்.



ஆனால் தொடர்ந்து அந்தக் கள்ளுத் தவறணை இயங்கியது. இவர்களிடம் சொல்லி எந்தப் பிரயோசனமும் இல்லை என்று கருதிய அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து துணிவுடன் அடித்து உடைத்தார்கள். தற்போது கள்ளுத் தவறணைக்கு உரித்துடையவர்கள் நட்டஈடு கோருகின்றனர். இவர்கள் எப்படி நட்டஈடு கொடுப்பார்கள்? அவர்களுக்கு இப்போது சட்டப் பிரச்சினை வந்துள்ளது.

அதனால் தான் நாம் சொல்லுகிறோம் சட்டம் தன் கடமையைச் செய்யவேண்டும். பலபிரச்சினைகள் உருவெடுக்கும் போது சட்டம் சரியான முறையில் அதனைக் கையாள வேண்டும். புதிதாகப் பொறுப்பேற்ற நான் முதலில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களைத் தேடி அழிக்க முயற்சிப்பேன். இதன் மூலம் பல குடும்பங்கள் காப்பாற்றப்படும். மக்களின் நலன் கருதி நெடுங்கேணியில் புதிய பொலிஸ் நிலையம் திறக்கப்படவுள்ளது"- என்றார்.

சந்திப்பில் ஓமந்தை சிவில் பாதுகாப்புக் குழுவின் தலைவர் கே. ஆனந்தராஜா, ஓமந்தைக் கிராமப் பொலிஸ் இணைப்பு அதிகாரி என். நவரத்ன, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்தி சங்க இணைப்பு செயலாளர் சு.வரத குமார், பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர் ஏ. யூட்பீரிஸ், ஓமந்தை சுகாதாரப் பரிசோதகர் க.சிவரஞ்சன், ஓமந்தை குற்றத் தடுப் புப் பொலிஸ்பொறுப்பதிகாரி சமன் குமார ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-21,402)

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வில்லூன்றி, பண்ணைப் பிரதேசம், ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்தியிலிருந்து சத்திரச் சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரதக் கடவையிலிருந்து தட்டாதெருச் சந்தி வரை, கே.கே. எஸ். வீதி நாச்சிமார் கோயிலிலிருந்து சிவன் கோயில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடிச் சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதிச் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதிச் சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ். வீதி வரை, ஆசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப் புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் யாழ் நுண்கலைப்பீடம் தொழிநுட்பக்கல்லூரி, பல்கலைக்கழகக் கல்லூரி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிட்டெட், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிட்டெட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, போதனா வைத்தியசாலை, யாழ் கொமர்சல் வங்கி, யாழ்.தேசிய சேமிப்பு வங்கி, யாழ்.இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதாரத் திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ்.வைத்தியசாலை மூன்று மாடிக்கட்டடத் தொகுதி, அபிகட்டடம், யாழ். விடுதி, பல்கலைக்கழக தங்கு விடுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் கோம்பாவில், இரணைப்பாலை ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும் . (ற-ரி)

# அச்சுவேலி நெசவு நிலையத்தை தனியாரிடம் இருந்து மீளப்பெறுக

## வலி. கிழக்குக் கோப்பாய்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

அச்சுவேலி, செப்.18

எந்தவிதமான அனுமதியும் இன்றி தனியாரின் பாவனையில் இருக்கும் அச்சுவேலி நெசவு நிலையக் காணியையும், கட்டுமானங்களையும் சிறுகைத்தொழிற் திணைக்களம் பொறுப்பேற்க வேண்டும். இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் தொழில் முயற்சி மையமாக செயற்பட வைப்பதற்கு ஆவன செய்யப்படவேண்டும்.

இவ்வாறு அச்சுவேலி சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலி.கிழக்குக் கோப்பாய்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர்.

பொதுச் சொத்தாகிய அச்சுவேலி மேற்கு நெசவு நிலையத்தின் சமகால நிலைப்பாடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை செவிமடுத்த இணைத் தலைவர்கள், மேலதிக விவரங்களை கோப்பாய்ப் பிரதேச செயலரிடம் கேட்டறிந்தனர். பொதுச் சொத்தை உரியமுறையில் பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

அச்சுவேலி நெசவு நிலையம் நகரத்துக்கு அண்மையில் இராச வீதியில் அச்சுவேலி யூனியன் இராணுவ முகாமுக்கு முன்பாக பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ளது. 120 அடிநீளமானதும் 20 அடி அகலமானதுமான மண்டபம், நெசவு நிலைய பணியாளர்கள், உத்தியோகத்தர் தங்குவதற்கான வீடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஆறு பரப்புக் காணியில் நெசவு நிலையம் அமைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதன்னிலை நெசவு நிலையங்களில் ஒன்றாக முன்னர் அது செயற்பட்டது. 20க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவுப்பொறிகள் செயற்பட்டன. 20க்கும் மேற்பட்ட யுவதிகள் நெசவு வேலையை மேற்கொண்டு கணிசமான அளவு வருமானத்தைப் பெற்றனர்.

வலிகாமம் இடப்பெயர்வை அடுத்து கைத்தறி நெசவுப் பொறிகள் சேதமாக்கப்பட்டன, அப்புறப்படுத்தப்பட்டன. மீளக் குடியமர்ந்த பின்னர் நெசவு நிலையம் செயற்படவில்லை.

இடைக் காலத்தில் தனியார் ஒருவர் நெசவு நிலையக் கட்டடம், காணி என்பனவற்றை யாருடைய அனுமதியும் இன்றி சுயமாக பொறுப்பேற்று நெச வு சாலைக்கான கட்டுமானங்களிலும் மாற்றங்களை மேற்கொண்டு பயன்படுத்துகின்றார் என்று கூறப்படுகின்றது.

நெசவு நிலையத்தை இதுவரைகாலமும் உரிய முறையில் பொறுப்பேற்று பொதுப் பயன்பாட்டுக்கு அல்லது இளைஞர்களின் தொழில்விருத்திக்கு ஏற்புடைய வகையில் பயன்படுத்துவதற்கு உரிய திணைக்களமோ வலி.கிழக்குப் பிரதேச அதிகாரிகளோ முன்வராதமை குறித்துப் பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (ற-11)

## பாராட்டு விழா

அச்சுவேலி, செப்.18 .

சமூக சேவகி திருமதி ருக்குமணி ஆனந்தவேலின் பொதுச் சேவையைப் பாராட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் 'பாராட்டுவிழா நடைபெறும்.

நீர்வேலி நலன்புரி சங்கத்தின் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் நீர்வேலி நலன்புரி சங்க லண்டன் தாய்ச் சங்க பிரமுகர்கள் உரையாற்றுவர். (ற-11)

# பனம் களி ஐஸ்கிறீம் ஆராய்ச்சி வெற்றி

## பனை அபிவிருத்திச் சபை ஆராய்ச்சி நிலையத்தினர் தெரிவிப்பு

பனை அபிவிருத்திச்சபையால் முன்னெடுக்கப்பட்ட பனங்களியில் இருந்து யோக்கட் மற்றும் ஐஸ் கிறீம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சிகள் வெற்றியளித்துள்ளன. அவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்ய தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதடியில் உள்ள சபையின் ஆராய்ச்சி நிலையத்தின் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.

பனம் பொருள் உற்பத்தியிலான யோக்கட் நல்லூர் ஆலயத் திருவிழாவில் மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. சபையின் கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக அவை விநியோகிக்கப்பட்டன. மக்கள் அதில் அதிக ஆர்வம் காட்டி பெற்றுக்கொண்டனர்.

யோக்கட்டில் 20 வீதம் பனம் களி சேர்க்கப்பட்டுள்ளது. ஐஸ்கிறீமில் 15 வீதம் பனம் களி சேர்க்கப்பட்டு இந்த இரண்டு உற்பத்திகளும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வெற்றியளித்துள்ளன. பனம் பொருளிலான ஐஸ்கிறீம் விரைவில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படும். அதற்கான செயற்பாடுகள் யாவும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சி நிலைய முகாமையாளர் எஸ்.விஜயந்திரன் தெரிவித்தார்.

உள்ளூர் பனம் உற்பத்தியை இவ்வாறு ஆராய்ச்சிக்கு உட்படுத்தி மேலும்சில பொருள்களைத்தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பனையில் இருந்து காலபோகத்தில் பெறப்படும் நுங்கு மற்றும் பனம் விதையில் இருந்து பெறப்படும் பூரான் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்தான அடுத்த கட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை இரண்டும் வெற்றியளித்தால் நவீன முறையில் ரின்களில் அடைத்து சந்தைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,17)

## கணினிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்.18

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கணினி வலையமைப்பு, கணினி வன்பொருள் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கும் பயிற்சி நெறிகளில் ஈடுபாடுடையோர் இந்த மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் என கரவெட்டிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ற)



# அரசியல் தீர்வு தராவிட்டால் அரசுக்கு ஆதரவு கிடையாது

## எச்சரிக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

கொழும்பு, செப். 18

அரசியல் மறுசீரமைப்பு ஊடாகத் தேசியப் பிரச்சினைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வு வழங்கப்படாவிடின் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திரும்பப் பெறும்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நல்லாட்சியில் பெண்கள் என்ற அமைப்பின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய போதே இரா.சம்பந்தன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னைய அரசமைப்புக்களை உருவாக்கும்போது தமிழ் மக்களின் கருத்துக்கள் மற்றும் அபிலாஷைகள் விரிவான முறையில் எடுத்துரைக்கப்படவில்லை. புதிய அரசும் இதே தவறைச் செய்யாது என நம்புகிறோம்.

நாட்டின் இன, மத மற்றும் சமூக வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களுக்கும் நியாயம், சமாதானம் மற்றும் செழிப்பைப் புதிய அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கான முக்கிய நோக்கத்துக்கான செயன்முறைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் - என்றார். (த-4)

Midea
AIR CONDITIONERS

வெளிப்புற
AC (Outdoor)
ஒன்றைப் பொருத்த
இடவசதி இல்லையா?

உலகின் அதி நவீனமான
தூக்கிச் செல்லக்கூடிய எயார்
கண்டிஷனரை தெரிவுசெய்க

உலகின் மிகப் பெரிய எயார் கண்டிஷனர் உற்பத்தியாளரான Midea வழங்கும் வெளிப்புர பிரிவு அற்ற Portable AC ஒரு வழமையான எயார் கண்டிஷனர் போலவே சிறப்பாகக் குளிரூட்டும். இலங்கையில் டெலிசொனிக் மட்டுமே வழங்கும் Midea வின் குளுகுளு சுகத்தை நாடுங்கள்.



Midea Portable Air Conditioner Features

- Slim and Fashionable Design
- Side Carry Handle
- Omini Directional Castors
- Auto Restart
- Built-in Temperature Sensor
- Ionizer Option for Fresh & Clean Air
- Dual Hose
- Easy Recogonizable Icons
- Fashionable LED Display
- Auto Swing
- Eco Design: 0.5Wm Standby

World's No.1 Brand of Air Treatment Products
Accumulated Global Sales up to 120,000,000 Units
Forbes 500 Companies
AFTER SALES SERVICE
3 FREE SERVICES
FREE

Capacity: 12,000 Btu | விலை - ரூ.57,250.00

இலங்கையில் ஏக பிரதிநிதி
Telesonic
SINCE 1979
டெலிசொனிக் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் இல.18, டெய்ஸி விலா அவெனியூ, ஆர். ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 04.
மின்னஞ்சல்: ac.sales@telesoniclanka.com இணையத்தளம்: www.telesoniclanka.com
துரித அழைப்பு: 0117 273 737, 0715 653 653

## இலஞ்ச ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் வரும்

கொழும்பு, செப். 18

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் 2015 ஆம் ஆண்டுக்கான விசாரணை அறிக்கையை குறுகிய காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளரும், ஜனாதிபதி ஆலோசகருமான தில்ருக்சி டயஸ் விக்ரமசிங்க தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில், 2015 ஆம் ஆண்டு ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டின் விசாரணை அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-4)

## முதலமைச்சர் வீட்டு கிணற்றில் தோட்டா

கொழும்பு, செப். 18

வட மத்திய மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வீட்டிலுள்ள கிணற்றில் இருந்து தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முதலமைச்சரின் அநுராதபுரத்திலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து இவை மீட்கப்பட்டன. பழைய தோட்டாக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன:

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## இயற்கை எரிவாயு மின் நிலையத்துக்கு உதவ இந்தியா தயார்

கொழும்பு, செப். 18

இலங்கையில் அனல் மின்நிலையம் அமைப்பது சிக்கலாகியுள்ள நிலையில், இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்காக இலங்கைக்கு உதவி வழங்கத் தயாராக உள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அதேவேளை, நிலக்கரியில் இருந்து இயற்கைஎரிவாயுவுக்கு மாறும்போதுள்ள மறைமுகமான பாதிப்புக்கள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும் என இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

அடுத்த மாதம் அளவில் இலங்கையில் அல்லது இந்தியாவில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழுவின் சந்திப்பில் இந்த விடயம் குறித்துத் தெளிவுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் பொருட்டுக் கூட்டு நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டிருந்தபோதிலும் அதன் சந்திப்புக்கு இதுவரை காலம் ஒதுக்கப்படவில்லை.

சூழலியல் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சம்பூரில் அனல் மின்நிலையத்தை அமைக்கும் திட்டமில்லை என அரசு அண்மையில் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இலங்கை அரசின் ஒருதலைப் பட்சமான இந்தத் தீர்மானம் குறித்து இந்தியா அதிருப்தி அடைந்தபோதிலும் இயற்கை எரிவாயு மின் உற்பத்தித் திட்டத்தை நிறுவுவதற்கு உதவத் தயார் எனவும் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இயற்கைஎரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கை இலங்கைக்கு எந்தளவு பொருத்தமானது என்ற கேள்வியும் உள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-4)

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### வீடு விற்பனைக்கு
தெல்லிப்பழை கொல்லன்கலட்டியில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6 அறை. 2 குளியலறையுடன் வீடு விற்பனைக்கு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.
**077 100 1390**
(ஞாயிறு. திங்கள் தினங்களில் பார்வையிடலாம்)

### காணி விற்பனைக்கு
சுண்டுக்குளி, சோமசுந்தரம் ஒழுங்கையில் கண்டி றோட்டில் இருந்து சிறிய தூரத்தில் 1½ பரப்புக் காணி 4 பக்கமும் சுற்றுமதில் கிணற்றுடன் உடனடியாக விற்பனைக்குண்டு.
**076 835 3719**

### விற்பனைக்கு
ஒரு ஏக்கர் தென்னந் தோட்டக். காணி விற்பனைக்குண்டு.
இடம்: அன்புச்சகோதரர் இல்ல வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
**தொடர்பு: 077 586 9600**

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், துரையப்பா லேன், ஈச்சமோட்டை வீதி, 27/2ஆம் இலக்கத்தில் உள்ள நிலப்பரப்பு 2 குளி 0.25 உம் வீடும் விற்பனைக்குண்டு.
**077 022 9762**

### வீடு விற்பனைக்கு
ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதி. ஆறுகால் மடத்துக்கும் ஆனைக் கோட்டைச் சந்திக்கும் இடையில் 5½ பரப்புக் காணியுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு.
**076 928 0767**

### காணி விற்பனைக்கு
மூளாய் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 993 3128**

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
40 நாள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
**077 735 2095**

### வீடு விற்பனைக்கு
இல.137, கண்டிவீதியில் அமைந்துள்ள (கச்சேரிக்கு அருகில்) 3½ பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.
**077 520 5459, 075 831 2074**

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் கிழக்கு. இல. 60, உடையார் லேனில் 3¾ பரப்பு வெற்றுக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.
**021 221 3632, 077 751 3872**

### தேவை
பருத்தித்துறை வடை தேவை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தரமான பருத்தித்துறை வடை தேவை. சப்ளை செய்யக்கூடிய தயாரிப்பாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
**075 491 8984**

### வேலைக்கு ஆள்கள் தேவை
வவுனியாவில் மில் வேலைக்கும் பலசரக்கு விற்பனை நிலையத்திற்கும் ஆண், பெண் வேலை ஆள்கள் தேவை. தகைமைக்கு ஏற்ற வேலை வாய்ப்பு. உடனடித் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு: 075 9022 330**

### தேவை
யாழ் நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவமுள்ள
1. சிட்டை எழுதுனர், கணினி மூலம்
2. விற்பனையாளர்
} ஆண்
உடன் தேவை.
**தொடர்பு: 077 392 1662**

### வேலையாள்கள் தேவை
யாழ் மாவட்டத்தில் தச்சுவேலை திறமையாகச் செய்யக்கூடியவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 063 0231/ 077 663 6155**

### தேவை
கட்டடம் கட்டும் வேலைத் தளங்களுக்கு மேசன்மார் தேவை.
**071 164 4534, 077 245 0564, 071 164 2884, 076 556 0857, 071 489 3222, 071 581 7299**

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரகமுடைய லக்கினத்தில் செவ்வாயும் அனுசநட்சத்திரமும் உடைய சொந்த தொழிலிலுள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
**தொடர்பு: 077 822 2446**

### அலுவலக பாவனைக்கு வீடு தேவை
யாழ்ப்பாணம், கச்சேரி சுற்றுவட்டத்தில் மேற்படி பாவனைக்கு வீடு தேவை. உடன் தொடர்புகளுக்கு
**077 397 9388/ 077 355 7945**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தீய பழக்கமற்ற, லண்டன் விசாவுள்ள, குறுகிய காலத்துக்குள்ளேயே விவாகரத்துப் பெற்ற 37 வயது ஆணுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
**0044 7466 487026**

# ஏனையவை

### வேலைக்கு ஆட்கள் தேவை
உடனடியாகவேலைக்குஆட்கள் தேவை. (வோட்டர் புரூபிங் /பெயின்டிங்) கடுமையான வேலை இல்லை. தங்குமிடம், உணவு, சம்பளம் + OT
தொடர்புகளுக்கு -
0774907100/0777513329/ 0777634540

### வீடு வாடகைக்குண்டு
யாழ். மாநகரசபை எல்லைக்குள் போதனா வைத்தியசாலை. பஸ் நிலையம் ஆகியவற்றிற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. கல்வி நிலையங்களுக்கும் உகந்தது.
**077 929 1959, 077 921 3609**

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம், 45 வயதுடைய , வங்கியாளர், விவாகரத்துப் பெற்றவர். இவருக்கு தகுந்த மண மகளை மைத்துனர் எதிர்பார்க்கின்றார். படம், குறிப்பு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
baravinthan@yahoo.com

### வேலையாள் தேவை
நெல்லியடியில் உள்ள புடைவையகத்துக்கு வேலை ஆள்கள் (இருபாலாரும்) தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**076 576 9430**

### வீடு வாடகைக்கு
பொற்பதி வீதி. கோண்டாவில் கிழக்கில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
**தொடர்பு: 077 368 6186**

### மணமகள் தேவை
யாழ்.இந்து குருகுலம், 34 வயது, 5'9" உயரம், உத்தரம் -2 ஆம் பாதம். Engineer, லண்டனில் (UK) Business Visa வில் IT Networking Consultant ஆகத் தொழில்புரியும் மணமகனுக்குத் தகுந்த படித்த மணமகளை லண்டனில் (UK) அல்லது உள்நாட்டில் எதிர்பார்க்கின்றோம்.
**077 718 9580**- Ponsbala@ymail.com

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### அறைகள் வாடகைக்கு
யாழ்.போதனா வைத்தியசாலை, பஸ்நிலையம் ஆகியவற்றுக்கு அருகில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள், தாதிகள் தங்குவதற்கு ஏற்ற அறைகள் வாடகைக்கு உண்டு.
**077 427 7834**

### வேலைவாய்ப்பு
கொழும்பிலுள்ள துறைமுகம்/ விமான நிலையம் தனியார் துறைக்கு தச்சன், வெல்டர், மின்னியல்துறை, கெட்ரிங், லொன்றி மற்றும் சாதாரண வேலையாள்கள் போன்ற பிரிவுகளுக்கு வயது 18 - 50 வரை ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 48,000/- வரை தொழிலடிப்படையில் வழங்கப்படும். உணவு தங்குமிடம் வழங்கப்படும். கொழும்பில் தொழில்புரிய விரும்புபவர்கள் தொடர்புகொள்க.
**077 843 0179**
435, 2/18, Fountun Plasa Borella Road, Maradana.

### ஆலய வேலை வாய்ப்பு
நுவரெலியா, ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சித்தாஎலிய சீதையம்மன் ஆலயங்களில் உடனடி வேலைவாய்ப்புகள்.
- ஐந்து (5) குருக்கள்
- இரண்டு (2) முகாமையாளர்கள்
- இரண்டு (2) தேசிகர்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலைவாய்ப்புகளுக்கு உடனடியாகத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம், தங்குமிட வசதி என்பன பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை கௌரவ செயலாளர், நுவரெலியா, ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கோயில் வீதி, ஆவேலியா, நுவரெலியா என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் 30.09.2016 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்கவும்.
தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
052-2222038 077-3034821 077-3273095

### வாடகைக்கு
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தில் தனிவழிப் பாதையுடன் Car Parking, பல்கணி போன்ற வசதிகளுடன் இரு Room கள் மாத /நாள் வாடகைக்கு உண்டு. கடையும் ( Stock உடனோ/ இல்லாமலோ) மாதவாடகைக்கு அதே இடத்தில் உள்ளது.
**மதி:- 077 329 6035, 077 554 1389**

### வேலைவாய்ப்பு
கட்டடம் கட்டும் வேலைத் தளங்களுக்கு போம் வோர்க் தச்சர்கள், கம்பி வளைத்துக் கட்டும் தொழிலாளிகள் (Bar benders ). பொதுத் தொழிலாளிகள் தேவை.
**071 164 4534, 077 245 0564, 071 164 2884, 076 556 0857, 071 489 3222, 071 581 7299**

### Colombo Higher Education
யாழ் மண்ணில் இன்று
**Study in Europe**
**Schengen Visa**




இம்முறை விசா பெற்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு
- IELTS தேவையில்லை (Schengen Visa).
- குடும்பத்துடன் விண்ணப்பிக்கலாம்.

- ★ எந்தவித முற்பணமும் இல்லை
- ★ எல்லா விதமான சேவை கட்டணமும் விசாவிற்கு பின்னரே
- ★ நேரடியாக ஆவணங்களுடன் வரவும்.

இடம் : Gnanams Hotels திகதி : 18.09.2016
நேரம் : 10am - 3pm

மேலதிக விபரங்களுக்கு
COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
No. 40 2/2, Galle Road, Colombo 06.
077 024 25 55 / 077 736 12 30
011 754 9600
Email : info@checonline.com | web : www.checonline.com

**S.K.Broking**
**வீடு விற்பனைக்கு**
பிறவுண் றோட் இந்து மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் 2¼ பரப்பு காணியுடன் புத்தம் புதிய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.
077 461 3884, 077 1933 490

**வேலையாள் தேவை**
**(Sales man)**
எமது நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர். சுய விவரத்துடன் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும். (J 4406) (12,17,18)
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோஸ்
இல. 70/1 , மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம். 021 222 2763

**வாடகைக்கு**
K.K.S வீதியில் யாழ் நகர மத்திய பகுதியில் 3 மாடி வியாபாரக் கட்டடத் தொகுதி வாகன தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு உண்டு. அலுவலக உபயோகத்திற்கு உகந்தது (J 4408) (12,17,18)
தொடர்பு: 077 730 1392

## புளியம்பொக்கணை, நாகேந்திரபுரத்தில் யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி, செப்.18
புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளுக்குள் நேற்று இரவு யானைகள் புகுந்தன. அதனால் அந்தப் பகுதி பதற்றத்துடன் காணப்பட்டது. கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவை புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம் பகுதிகள். மக்கள் வாழ்விடங்களை அண்டிய பகுதி' களுக்குள் நுழைந்த யானைகளால் பதற்றம் ஏற்பட்டது. 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பகுதிகளுக்கு யானைகள் வருவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. புளியம் பொக்கணை கமநல சேவைத் திணைக்கள பாதுகாப்பு வேலியை யானைகள் அடித்துத் துவம்சம் செய்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-101)

**உடற்பருமன் கொண்டோருக்கும் உடல்எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)**
ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ
ஆயுள்வேத கேர்பல் ஔடதம்
(பாம்மா, குளிசை, டொனிக், கிறீம்)
உடல் பருமன் கொண்டோருக்கு
விலை 3500/= , 5500/= , 9000/=
உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு, குறைத்தல், வயிற்றுக்கோளாறு, நாட்பட்டஅஜீரணம், மலச்சிக்கல் அனைத்திற்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.
ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.
உடல் எடை குறைவானோருக்கு
விலை 3500/= , 5500/= , (24000/= 3மாதத்திற்குரியது).
உடல் எடை கூட்டுதல், ஒட்டியகன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்திற்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 210 6155
221, நாவலர்றோட்
(பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

**காணி விற்பனைக்குண்டு**
மல்லாகம், கே.கே.எஸ் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சோடாக் கம்பனி ஒழுங்கை அருகில்)
077 753 2994

**பணிப்பெண் தேவை**
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பெண் பணியாளர் தேவை.
(சம்பளம் - 15,000/= - 18,000 / = வரை
தொடர்பு: 077 222 4913

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 6 அறைகளுடனான பிரதான வீதியை முகப்பாக கொண்ட தனி மின்சார, TP வசதிகளுடன் பெரிய வீடு வாடகைக்குண்டு.
நிறுவன தேவைக்கு மட்டும்.
077 547 2377

**வீடு வாடகைக்கு**
பலாலி வீதி, உரும்பிராயில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள் அல்லது அலுவலகங்கள் நடத்து வதற்கு மிகவும் பொருத்தமானது
தொடர்பு: 077 071 1304/ 077 955 4174
021 223 0938

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



| மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | ப்ரொன்ஸ் |
|---|---|
| 10.00 a.m / 1.00 p.m | 10.30 a.m / 1.30 p.m |
| 4.00 p.m / 7.00 p.m | 4.30 p.m / 7.30 p.m |

Fri/Sat/Sun 9.30 p.m


சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**காணியுடன் வீடு விற்பனைக்கு**
கட்டுடை, மானிப்பாயில் 08 பரப்பும் 7/16 குளியும் உள்ள காணியும் அதில் உள்ள நான்கு அறைகளும் இரண்டு குளியலறைகளும் அடங்கலாக உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. விலைபேசித்தீர்மானிக்கப்படும். (J 4406) (12,17,18)
தொடர்பு: 077 729 8108

**விற்பனை பிரதிநிதி தேவை**
**(Sales Rep)**
எமது நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும் (J 4406) (12,17,18)
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோஸ்
இல. 70/1 , மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2763

**அமெரிக்க வீஸா லொத்தர்**
BBS Netting மூலம் விண்ணப்பியுங்கள்.
14 ஆவது வருட சேவையில் எமது விண்ணப்பம் பெற ரூ15/= முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்.
Single-475/=
Family-975/=
BBS Netting,
3/14 Pinwatta Road,
Dehiwala
077 581 1106
யாழ்ப்பாணத்தில் விண்ணப்பம் பெற
உமா ஸ்ரோர்ஸ்,
இல: 378(260) கே.கே.எஸ் வீதி, (சிவன் கோயிலடி)
www.bbsnetting.com

**சேவைநலன் பாராட்டு**

திருமதி சந்திரபிறேமா
சிவானந்தன்
(தரம்I, B.Sc Nursing)
யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையில் கடந்த 39 வருடங்களாகத் தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிச் சகோதரியாகவும் அரும்பணியாற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலத்தில் எல்லாச் சிறப்புடனும் தேகாரோக்கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
தாதிய உத்தியோகத்தர் - நலன்புரி கூட்டுறவுச்சங்கம்-யாழ்ப்பாணம்.


**Purany Beauty Fashion**
**பூரணி பியூட்டி பஷன்**
* மணப்பெண் அலங்காரம்
* பேஷியல் * சிகையலங்காரம் * கேக் வகைகள்
* மற்றும் அனைத்து வகுப்புக்களும்
* அனுபவமுள்ள, ஆர்வமுள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்பும் உண்டு.

# 101, செட்டித்தெரு, நல்லூர்.
077 509 8103, 077 731 6453

**வேலைவாய்ப்பு**
நம் நாடுபூராகவும் உள்ள தொழிற்சாலைகளில் லேபல், பொதியிடல், தயாரிப்பு, களஞ்சியப் பிரிவு, பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், QC, Clerk , கனரக / மென்ரக சாரதிகள், உதவியாளர்கள், மேசன்மார்கள் மற்றும் Hotel களில் Room Boy, Steward, Cook, Kitchen-Helper போன்ற பிரிவுகளுக்கு வெற்றிடம். வயது 18-55 ஆண்/பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18,000/= - 46,000/= வரை தொழிலடிப்படையில். உணவு தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 6838226
No: 103/1, Station Road, Vavuniya.

**நல்ல வாய்ப்பு**
30,40,50 இலட்சங்களைச் செலவு செய்ய முன் தகுதியான சித்த, ஆயுர்வேத, Homoeo, Acu சிகிச்சைகள் மூலம் சில ஆயிரங்களுடன் உங்கள் குழந்தைக் கனவு நனவாகக் கூடும். உயிர் அணுக் குறைவு, கருமுட்டை வளர்ச்சிக் குறைபாடு, கருப்பைக் கட்டி, பலோப்பியன் அடைப்பு, கரு தங்காமை, செயற்பாடுகளில் வீரியம் இன்மை, மருத்துவ சோதனைகள் செய்தவர்கள் அவற்றுடன் என்னைச் சந்திக்கலாம். மேலும் மது, போதை, புகை அடிமைகளை மீட்டல், சளி, இருமல், கபாலநீர், Asthma இளைப்பு, களைப்பு, சிறுநீரகக் கல், வாதம், Aarthritis கழுத்துவலி, முள்ளந்தண்டு வலி அனைத்தும் சீர் செய்யப்படும். 23 வருட கால சேவை.
077 730 1669
சித்தவைத்தியர் :-Dr.R.Sivagurunathan
54, 33rd, Lane, Wellawatte.
யாழ்ப்பாணத்திலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

**வீட்டு மின்சார இணைப்பு தொழில்நுட்பம் சம்பந்தமான பாடநெறி**
செயல்முறை பயிற்சியுடன் மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரிய இருப்பவர்களுக்கு தேவையான ஆங்கில பேச்சு பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும்
பயிற்சி காலத்தில் செயல்முறை பயிற்சியுடன் சரியான முறையில் சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படும்.
பாடநெறியை பூர்த்தி செய்யும் அனைவருக்கும் 50000க்கு மேற்பட்ட சம்பளத்தில் வேலைவாய்ப்பு
பாடநெறிக்கான காலம் 70 நாள்கள் மட்டுமே


பாடநெறி கட்டணம் ரூபா 35000 மட்டுமே தவணை முறையிலும் கட்டணத்தை செலுத்தலாம்
பாடநெறியை தொடர இருப்பவர்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை 0775509641 என்ற இலக்கத்துக்கு SMS செய்யவும்.
இல.40, கண்டி வீதி, தலுகம,களனி.
T.P:0112912641/0754933349
www.bloomingbudsecampus.com
facebook.com/bloomingbuds international ecampus
ஹொட்லைன்
0715669641

# காக்கைதீவு இறங்குதுறையை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மீள் குடியேற்ற அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 18

வலி.தென்மேற்கில் மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சாவற்கட்டு, காக்கைதீவு ஆகிய ஐந்து கிராமங்களில் வசிக்கும் 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் காக்கை தீவு இறங்குதுறை 300 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளது. இந்தத் துறையை நம்பியிருக்கும் ஆயிரத்து 500க்கும் அதிகமான மீன் பிடித் தொழிலாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். வருமான இழப்புக்கும் உள்ளாகின்றனர்.

இவ்வாறு அந்தப் பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

மீனவர்களின் வசதி கருதி மாறி வரும் நவீன யுகத்துக்கேற்ப இந்தத்துறைமுகத்தை நங்கூரமிடும் துறைமுகமாக அபிவிருத்தி செய்துதர வேண்டும் என்று சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சிறைச்சாலை மறுசீரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சரைக் கோரியுள்ளது.

இதுகுறித்து அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

எமது சங்கத்தின் துறைமுகமானது காக்கைதீவில் உள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகத்தை 5 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500க்கும் அதிகமான மீன்பிடித் தொழிலாளர்கள் நேரடியாகப் பயன்படுத்துகின்றனர்.

500க்கும் அதிகமான இடை நிலைத் தொழிலாளர்கள் துறை முகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தத் துறைமுகம் நீண்ட காலமாக எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லாதுள்ளது. இந்தத் துறை முகம் கிட்டத்தட்ட 300 ஆண்டுகளாக எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லாதுள்ளது. மாறிவரும் நவீன யுகத்துக்கு ஏற்ப இந்தத் துறைமுகத்தை நங்கூரமிடும் துறைமுகமாக ஆழப்படுத்தி அபிவிருத்தி செய்வதுடன் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொண்டு இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்துதர வேண்டும்.

விஸ்தீரணம் கொண்ட ஓய்வு மண்டபம், வலை திருத்துவதற்கும் ஓய்வு எடுப்பதற்குமான இடம், கழிப்பறை வசதிகள் போன்றவைகளை அமைக்க ஆவன செய்ய வேண்டும். இத்துறைமுகத்தைப் பயன்படுத்தும் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் 3 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தில் இருந்து வருபவர்கள், நன்னீரில் குளிப்பதற்கும் உடை மாற்றுவதற்குமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தற்போது பெருமளவு தொழிலாளர்கள் இயந்திரங்களைப் பயன்படுத்துவதனால் அவற்றுக்குத் தேவைப்படும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டி உள்ளது. இந்தச்சிரமத்தை நீக்கும் பொருட்டு இந்தப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைக்க ஆவன செய்யவேண்டும்.

தற்போது 800 அங்கத்தவர்கள் எமது சங்கத்தில் உறுப்பினராக உள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பீஸ் வலை வீதம் 800 அங்கத்தவர்களுக்கும்ரூபா20மில்லியன்பெறுமதியான வலைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது.(ற-115)

# பனை ஏறும் இலகு கருவி அடுத்தாண்டு விநியோகம்

## பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.18

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 11 மில்லியனுக்கு மேற்பட்ட பனைகள் உள்ளன. உயர்ந்த பனை மரங்களில் ஏறிப் பயன்பாடு பெறுவது மிகக் கடினம். இந்தச் சிக்கலைத் தீர்க்கும் முகமாக பனை ஏறும் இலகு கருவி விரைவில் மக்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்தக் கருவி அடுத்த வருடம் தொடக்கம் பாவனைக்கு வரும்.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலைய முகாமையாளர் எஸ்.விஜயந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"பனையில் ஏறி பயனைப் பெறும் சிரமத்தைத் தவிர்க்கத் தற்போது பனை அபிவிருத்திச் சபையின் கைதடியில் உள்ள ஆராய்ச்சி நிலையம் பனை மரம் ஏறும் இலகு நவீன கருவி ஒன்றை ஜப்பானில் இருந்து தருவித்துள்ளது.

இந்தப் பனை மரம் ஏறும் இலகு நவீன கருவி ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு மிகவும் வெற்றியளித்துள்ளது. இந்தியாவில் இருந்தும் பனை மரம் ஏறும் இலகு கருவி தருவிக்கப்பட்டது. அதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் போதியளவு வெற்றியளிக்கவில்லை.

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட பனைமரம் ஏறும் கருவிகளை மேலும் தருவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதைய நிலையில் பனை மரங்களில் ஏறிப் பயனைப் பெறுவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. பனை மரங்களில் இருந்து பெறப்படும் பயனை இழக்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன் அதன் வளங்களும் வீணாக அழிந்து செல்கின்றன.

பனை ஏறும் இலகு கருவியை விரைவில் மக்கள் மத்தியில் அறிமுகம் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கருவி மூலம் மக்கள் பனை உச்சிக்குச் சென்று அதிக பயனைப் பெறமுடியும். அதனை இலகுகடன் அடிப்படையிலா அல்லது என்ன அடிப்படையில் பெற்றுக் கொள்வது என்று அடுத்த வருடம் தீர்மானிக்கப்படும்" - என்றார். (ற-4,17)

# நங்கூரம் இடும் மையங்களை முல்லைத்தீவில் அமைக்குக

## முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கோரிக்கை

முல்லைத்தீவுக் கரையோரத்தில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் நன்மைகருதி மூன்றிடங்களில் நங்கூரம் இடும் மையங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"முல்லைத்தீவுக் கடற்கரையோரங்களில் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்காக ஆய்வு செய்த குழுவினர் துறைமுகம் அமைப்பதற்குத் தரைத் தோற்றம் பொருத்தமாக இல்லை என்று தெரிவிக்கின்றனர். மாத்தளன், முல்லைத்தீவு நகரம், செம்மலை ஆகிய மூன்றிடங்களில் நங்கூரமிடும் மையங்களை அமைத்துத் தர வேண்டும். முல்லைத்தீவுக் கரையோரத்தில் வெளிச்ச வீடு அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது" - என்றார். (ற-ரி7)

கண்ணீர் அஞ்சலி



எனது நண்பன் மு.நவநீதனின் அன்புச் சகோதரியும், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான

வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

அவர்கள் இறைபதமெய்தியதை அறிந்து துயருறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

றஞ்சனா ரெக்ஸ்
சுன்னாகம்.

சு.கனகநாயகம் (சந்திரன்)

(ஜே.4688) (13.18)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஜெயராணி
ரெட்ணராஜா

தோற்றம்
21.03.1949

மறைவு
18.09.2015

நீர் மறைந்து ஆனதுவோ ஒரு வருடம்
நின் நினைவலைகள் மாறவில்லை ஒருபொழுதும்
நாம் உம்மை நினைந்துருகும் பொழுதினிலே
உம் நிஜமுகம் காண வழியில்லைஇப்புவியினிலே
நீர் நித்தியமாய் இறையடியில் இளைப்பாற
நாம் எத்தினமும் பிரார்த்திப்போம் இறைவனிடம்

12/3, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(ஜே.4657)(11,17,18,)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



இறப்பு
10.10.2014

பிறப்பு
18.10.1954

மார்க்கண்டு இரவீந்திரன்

(முன்னாள் குடிவரவு குடி அகல்வு திணைக்கள மொழிபெயர்ப்பாளர், முன்னாள் யாழ். பரியோவான் கல்லூரி ஆங்கில ஆசிரியர், முன்னாள் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர்)

எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மாசாந்தி அடைய என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்

61/6, பாரதிவீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.
077 674 7514

(ஜே/4684)(11.17.18.)

# அரச வைத்திய அதிகாரிகள் போராட்டத்துக்கு ஆதரவு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் எதிர்வரும் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள எழுந்து நிற்போம் என்னும் ஒரு மணிநேர கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கப் படும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வட மாகாணத்தில் போரின் பின்னர் ஏற்படும் உயிர் அழிவுகள் அளவு கடந்து செல்கின்றன. இதற்கான முழுக் காரணம் சட்டம் ஒழுங்கு சீராக பேணப்படாமை, அளவுக்கு அதிகமான போதைப் பாவனை போன்றவையே.போரால் அழிவடைந்த எம் இனம் தொடர்ந்தும் அழியும் நிலைமைகளை நாம் வேடிக்கை பார்க்க முடியாது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி அனைத்து பாடாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளுக்குச் சென்று மு.ப. 10 மணி முதல் மு.ப. 11 மணி வரை பாடசாலை நுழைவாயிலில் ஒன்றுகூடி அமைதியான முறையில் 'வீதி ஒழுங்கை முறையாகப் பின்பற்றுதல்' 'போதை ஒழிப்பு' 'சட்டத்தை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்தல்' போன்ற வாசகங்களுடன் கவனவீர்ப்பில் ஈடுபட வேண்டும் - எனக் குறித்த சங்கம் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது. (ந-ரி7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பண்டிதை வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

(முன்னாள் ஆசிரியை - காங்கேசன்துறை, யா/நடேஸ்வராக்கல்லூரி, மானிப்பாய் சோதி வேம்படி கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை புனிதஹென்றி அரசர் கல்லூரி, ஓய்வுநிலை விரிவுரையாளர், அளுத்கம தர்கா நகர் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கனடா, ரொறன் ரோவில் வசித்து வந்த வருமான திருமதி பண்டிதை வள்ளிநாயகி இராமலிங்கம் (குற மகள்) கடந்த (16.09.2016) வெள்ளிக் கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) அன்பு மனைவியும் DR.சசிகலா, கலைவாணி, துளசிராம், குகபாலிகா ஆகியோரின் அன்புத் தாயும் செந்தில் லால், பாலச்சந்திரன் மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வாணி 001 416 259 2451
ரதி 0112 738 492, ராணி 011 276 1410

### தியாகராசா விஜேந்திரன்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ்.கச்சேரி)



யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா விஜேந்திரன் 13.09.2016 செவ்வாய்க் கிழமை, லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - ஆச்சிக் குட்டி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இந்துமதியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யுகராஜியின் மாமனாரும், Dr. இராஜேந்திரன் (கொழும்பு), இராஜேஸ்வரி (பேபி- அளவெட்டி), காலஞ்சென்றவர்களான ஞானேந்திரன், Dr. விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நேசலட்சுமி, பத்மாவதி மற்றும் கமலாவதி (கொழும்பு), கோபாலசிங்கம் (நல்லூர்), இரட்ணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2016) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11,சங்கிலியன் வீதி,
நல்லூர். (J/4669) (11,18)

தகவல்:
நா.கோபாலசிங்கம்

சகுந்தலாதேவி (பிரித்தானியா - +4420 8399 9011),
இரட்ணசிங்கம் (பிரித்தானியா- +4420 8337 1584),
குலன் (பிரித்தானியா - +4479 5632 8732),
பாலகுமாரன் ( பிரித்தானியா - +4477 4085 5150)

# பாடசாலைகள் என்றும் அதிபர்களை மறக்காது

## உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

ஒவ்வொரு பாடசாலையும் அதிபர்களை என்றுமே மறக்காது. அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றாலும். இடமாற்றம் பெற்றுச் சென்றாலும் கூட பாடசாலைகளில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முகக்குலகுமாரன்.

உடுவில் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் பிரிவுபசார விழா நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அதில் வாழ்த்துரையை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர்கள் ஒவ்வொருவரின் பங்கும் முக்கியமானது. பாடசாலையின் வளர்ச்சி மட்டுமல்ல மாணவர்கள் ஒவ்வொருவரின் வளர்ச்சியிலும் அதாவது ஒரு மாணவன் பல்வேறு துறைகளில் சாதனைகளைப் புதிவு செய்கின்றான் என்றால் அதில் அதிபர்களின் வழிநடத்தல்களும் இருக்கும். ஓய்வு பெற்ற அதிபர்கள் ஓய்வு பெற்ற பின்னும் ஏதோ ஒரு வழியில் பாடசாலையுடன் ஓயாமல் பணி செய்கிறார்கள். இடமாற்றம் பெற்ற அதிபர்கள் தாம் பணியாற்றிய பாடசாலைகளை மறப்பதில்லை. உடுவில் கல்விக் கோட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர்கள் தாம் பணியாற்றிய பாடசாலைகளில் இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். பாடசாலைகள் எப்பொழுதும் மறந்து விடாது - என்றார்.

நிகழ்வின் வரவேற்புரையை பொருளாளர் செ.பரமேஸ்வரனும், தலைமை உரையை தலைவர் ஆ.சிறிதரனும் வழங்கினர். பாடசாலையின் ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

# கீரிமலை தாழ் நிலப் பிரதேசத்தில் உக்காத கழிவுகள் புதைக்கப்படும்

## வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு திட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை மூலம் திரட்டப்படும் உக்காத கழிவுகளைக் கீரிமலை தாழ் நிலப் பிரதேசத்தில் புதைக்கப்படத் திட்டமிடப்படுகிறது.

அதற்கான ஏற்பாடுகள் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஈ.டி.சி.எவ் (E.D.C.F) திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப் படவுள்ளது.


வடமாகாணத்தில் 17 உள்ளூராட்சி சபைகளிலும்தினமும் சேரும் 50 தொன்னுக்கு மேற்பட்ட உக்காத திண்மக்கழிவுகளைப் புதைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 7 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முன்னெடுக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக பரீட்சார்த்தமாக 2.3 ஹெக்ரெயர்களில் திண்மக் கழிவுகள் புதைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட திட்டமிடல் நடவடிக்கை 2014ஆம் ஆண்டுமுதல்மேற்கொள்ளப்படுகின்றது. இது குறித்து விரைவில் வடமாகாண சபையில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளது என்று உள்ளூராட்சி அமைச்சுச் செய்திகள் தெரிவித்தன. (ற-50)

# வடக்கு அரச பஸ்களுக்கு அடுத்தாண்டு இலத்திரனியல் பற்றுச்சீட்டு இயந்திரம்

வவுனியா, செப்.18

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அரச பஸ்களுக்கு இந்த வருட இறுதிக்குள் இலத்திரனியல் பற்றுச்சீட்டு வழங்கும் இயந்திரம் வழங்கப் படும்.



இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைவர் ரமல் சிறிவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவைகளில் உள்ள குறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேற்றுக் காலை வவுனியா இ.போ.ச சாலைக்கு ரமல் சிறிவர்த்தன சென்றார். அங்கு இ.போ.ச. சாலை ஊழியர்கள், சாரதிகள், முகாமையாளர்களுடன் கலந்துரையாடினார். வவுனியா சாலையின் உள்ள தங்குமிட வசதிகள் உட்பட மலசலகூட வசதிகள் இல்லாத பிரச்சினைகள் போன்றவை அவருக்குத் தெரியப்படுத்தப் பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த ரமல் சிறிவர்த்தன:

இந்த வருட இறுதிக்குள் வட பகுதியிலுள்ள இ.போ.ச சாலை பஸ்களின் நடத்துநர்களுக்கு இலத்திரனியல் பற்றுச்சீட்டு வழங்கும் இயந்திரம் வழங்கப்படும். வவுனியா சாலையில் காணப்படும் குறைபாடுகள் அனைத்தும் விரைவில் நிவர்த்தி செய்யப்படும். விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்வோருக்கு இரண்டு மாதங்களில் அனைத்துக் கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வடமாகாண இலங்கை போக்குவரத்துச் சாலை இலங்கையில் மூன்றாவது இடத்திலுள்ளது. வடமாகாணத்தில் வவுனியா சாலை முதலாவது இடத்திலுள்ளது.- என்றார்.

நிகழ்வில் வடமாகாண முகாமையாளர் கிரிபத் தொடுவ, உதவி முகாமையாளர், வவுனியா சாலை முகாமையாளர், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-2)


எங்கும் கிடைக்காத அதிசிறந்த விலைகள்
காகில்ஸ் புட்சிட்டி இடமிருந்து மட்டுமே
ஏதேனும் சுப்பர் மார்க்கட் வலையமைப்பு கீழுள்ள உற்பத்திகளுக்கு எம்மிலும் குறைந்த விலை தந்தால்
அவர்களை விட சிறந்த விலை தர நாம் தயார்.*
75/-
சம்பா அரிசி ஸ்டீம்ட் 1kg**
253/-
கடலை 1kg**
185/-
பயறு 1kg**
135/-
காகில்ஸ் மெக்கரல் 425g**
45/500g
தேசிய பெரிய வெங்காயம்
84/500g
போஞ்சி
159/500g
ஃபியூஜி ஆப்பிள்
179/500g
லேன பரவ்
299.00
மெஜிக் ரிபன் ஐஸ்கிறீம் (மெங்கோ / ஸ்ட்ரோபெரி) 1Ltr
180.00
கொத்மலே ஃபுல் க்றீம் மில்க் 1Ltr**
169.00
கிஸ்ட் சொக்லட் க்றீம் 400g
368.00
மெஜிக் சொக்லட் ரிபன் ஐஸ்கிறீம் 1Ltr
770.00
நெஸ்பிறே எவ்ரிடே பால் மா 1kg**
175.00
ப்ரூக் பொண்ட் லாவோஜி தேயிலை 200g
272.00
மேரினா தேங்காய் எண்ணெய் 675ml**
42.00
மெகி இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் சிக்கன் 80g**
179.00
ஃபண்டா சொஃப்ட் ட்ரிங் 2Ltr
200.00
545g
139.00
சன்லைட் 1kg
140.00
விம் 500ml
96.00
சிக்னல் பற்பசை 120g
1094.00
Seven Seas மீன் எண்ணெய் கோட் 100 capsules
காகில்ஸ் லோயல்டி மெம்பர்கள் 30% கழிவை அனுபவிக்கலாம்
2016 செப்டெம்பர் 15 முதல் 29 வரை மட்டுமே.
245.00
கிஸ்ட் அப்சலூட் ஆப்பிள் ஜூஸ் 1Ltr
469.00
கிளாசிக் கோப்பி 100g
325.50
கெலொக்ஸ் கோர்ன் ப்ளேக்ஸ் 250g
276.50
ஹோர்லிக்ஸ் பக்கற் 400g
385.00
மில்க்கா ப்ரொசஸ்ட் செடர் செடர் சீஸ் 200g
147.00
மவுன்டன் டியூ 2Ltr
413.00
டர்க்கி சன்ஃப்ளவர் ஒயில் 1Ltr
367.50
சுப்ரீமோ சிக்கன் சொசேஜஸ் 500g
189.00
மெலிபன் க்றிஸ்கோ பிஸ்கட்ஸ் 215g
399.00
கம்பர்ட் ஃபெப்ரிக் கண்டிஷனர் அன்டி பக்டீரியல் 800ml
150.50
வெஸலின் ஹெல்தி வைட் க்றீம் 100ml
1295.00
பெடிக்றீ அடல்ட் சிக்கன் அன்ட் வெஜிடபிள் 3kg
இப்பொழுதே காகில்ஸ் லோயல்டி மெம்பராகினால்
ரூ.500 பெறுமதியான ஷொப்பிங்
இலவசம்
Cargills
Cargills food city
வீடு செல்லும் போது

# மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நல்லாட்சி அரசு

## சிறிவிமல தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 18

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் சரிவர நிறைவேற்றாத நல்லாட்சி அரசு, புதிய பிரச்சினைகளை உருவாக்கி நாட்டு மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு கொப்படியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புமரணப்பொறி என்ற பிரசாரத்தைத் தேசிய சுதந்திர முன்னணி நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச கொப்படியாகொட சிறிவிமல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். இதன்போதே விமலிடம் தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டு மக்களுக்குப் புதியதொரு அரசமைப்பு அவசியமில்லை. தற்போதுள்ள அரசமைப்பின் குறைபாடுகளை நிவர்த்தி செய்துக் கொண்டு முன்னகர்ந்து செல்ல முடியும். தற்போதுள்ள அரசமைப்பில் மாற்றம் செய்யுமாறு அரசிடம் எவரும் கேட்கவில்லை. மாறாக நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்குத்தீர்வு காணவே தற்போதைய ஆட்சியாளர்களிடத்தில் நாடு கையளிக்கப்பட்டது.

எனவே இவர்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அதற்கு மாறாக இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி அதனூடாக மக்கள், குழுக்கள் மத்தியில் முறுகல் நிலைகளை ஏற்படுத்திவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர். அதனால் தேசிய சுதந்திர முன்னணி முன்னெடுத்துச் செல்லும் தெளிவுபடுத்தல் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது.

தற்போது உருவாக்கப்பட்டு வரும் அரசமைப்பு நாட்டைச் சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதே எமது நிலைப்பாடாகின்றது.

அத்துடன் இந்த நிலைப்பாட்டை உணர்ந்து அரசமைப்புப் புத்துருவாக்கச் செயற்பாடுகளிலிருந்து தேசிய சுதந்திர முன்னணி விலகியிருந்தாலும் கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கின்ற சிலர் தற்போதும் அரசமைப்பு புத்துருவாக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் குழுக்களில் உள்ளனர். அவர்களும் இந்தச் செயற்பாடுகளிலிருந்து விலகி நிற்க வேண்டும்–என்றார். (த-4)

# வற் வரிச் சட்ட வரைவுக்கு சு.க. சிந்தித்து வாக்களிக்கவேண்டும்

## மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது

கொழும்பு, செப். 18

வற் வரி சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது மக்களின் பக்கமிருந்து சிந்தித்து வாக்களிக்கவேண்டியது சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கடமை.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசு மீண்டும் ஒரு முறை நாட்டு மக்கள் மீது அதிக வரிச் சுமையைச் சுமத்தி மக்களை நெருக்கடிக்குள் தள்ள முற்படுகின்றது. அதனால் கடந்த அரசின் செயற்பாடுகளிலும் இந்த அரசின் செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க வகையிலான மாற்றங்கள் எவையும் இல்லையெனத் தெரிய வருகின்றது.

அதற்கமையவே நாட்டு மக்கள் மீது அதிக வரிச் சுமை சுமத்தப்படுகின்றது. இந்தவரிவிதிப்புமுறைமை நீதியானதாக இல்லை. காரணம் அரசு மக்களிடத்தில் வரி அறவிடும் போது அறவிடும் முறைமை, வரி வழங்கும் முறைமை, என்பன இலகுவானதாக அமைய வேண்டும். வரி விதிப்பு, அறவீட்டு முறைமைகள் சட்டத்துக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

ஆனால் நல்லாட்சி அரசினால் செயற்படுத்தப்பட்ட வற்வரி சட்ட வரைவு நாடாளுமன்றத்திலோ அமைச்சரவையிலோ அனுமதி பெறப்படாமல் கொண்டுவரப்பட்டதால் உயர் நீதிமன்றமும் இந்த சட்ட வரைவை நிராகரித்து தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறான நிலையிலேயே மீண்டும் இந்த வரிக் கொள்கையை செயற்படுத்த இந்த அரசு முனைப்புடன் செயற்படுகின்றது.

இவ்வாறான பாராதூரமான சிக்கல்கள், குழப்பங்களின் மத்தியிலேயே மீண்டும் வற் வரி திருத்தச் சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவுள்ளது. ஆனால் இந்தச் சட்டத்தில் எந்தவித பாரிய மாற்றங்களும் செய்யப்படவில்லை.

வைத்தியத் துறை மற்றும் பால்மா உள்ளிட்டவைக்கு விதிக்கப்பட்ட வரிகள், தொலைத் தொடர்பாடல் இயந்திரங்களுக்கான வரிகள் உள்ளிட்டவற்றில் மாத்திரம் சிறிது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை திருத்தங்கள் அல்ல மக்களின் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கான சூட்சுமச் செயற்பாடுகள்.

அண்மையில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களும் இந்த சட்டவரைவில் தமக்கு உடன்பாடில்லை, திருத்தங்கள் வேண்டும் என்று வலியுறுத்தினர். இருப்பினும் அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர். இந்த சட்ட வரைவில் நீதி, நியாயம், இலகுவான வரி அறவீட்டு முறைமை உள்ளிட்ட வரி விதிப்புக்கான எந்த வித படிமுறைகளும் பின்பற்றப்படவில்லை.

அரசு ஒரு வருடம் பூர்த்தியாகும் போது 25 வீத வருமானத்தை வரி விதிப்பினாலேயே பெற்றுக் கொண்டுள்ளது. மகிந்த அரசும் இவ்வாறான செயற்பாடுகளையே முன்னெடுத்து வந்தது. இந்த அரசினால் சட்டத்துக்கு முரணாக மக்களிடத்தில் வரி அறவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் நீதிமன்றத் தடை உத்தரவுக்கு முன்னர் பெறப்பட்ட வரித் தொகையை மீண்டும் மக்களுக்குச் சென்றடையச் செய்வதற்கான பொறிமுறை ஒன்றையும் உருவாக்க வேண்டும்.

அதனால் வற் வரி சட்ட வரைவுக்கு அன்று போன்றே இன்றும் நாம் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். அரசில் உள்ள சிலரும் கூட இந்த வரி விதிப்புக்கு எதிராக பேசுகின்றனர் – என்றார். (த-4)

# நல்லாட்சி அரசை உருவாக்க உழைத்தோர் கடும் விசனத்தில்

## பிரசன்னரணதுங்க எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

நல்லாட்சி அரசை உருவாக்க உழைத்த பல்கலைக்கழக பேராசிரியர்களும் தற்பொழுது அரசை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிரானவர்களைப் பல்வேறு உபாயங்களைப் பிரயோகித்து அடக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அரசுடனும் திருடர்கள் இருக்கின் றார்கள். அவர்களை விட்டு, எதிர்க் கட்சியிலுள்ளவர்களை மாத்திரமே கைது செய்கின்றனர்.

ஜனாதிபதி மீதும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. இருப்பினும், அவரைப் பற்றி எந்தவொரு மேடையிலும் நாம் திருடர் என விமர்சித்ததில்லை.

குற்றச் சாட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து முடிந்த பின்னரே குற்றவாளியா இல்லையா? என்பது தீர்மானமாகின்றது.

எம்முடன் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ளவர்களை நாம் சுற்றவாளிகள் எனக் கூறுவதுமில்லை.

குற்றவாளியைத் தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றம்–என்றார். (த-4)

# வீழ்ச்சி கண்டு வருகின்றது ஒன்றிணைந்த எதிர்க்கட்சி

## கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, செப். 18

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் வீழ்ச்சியடைந்து வருகின்றனர் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா தெரிவித்தார். ராஜகிரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன், கட்சியின் ஆதரவாளர்கள் இணைய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் கோரிக்கை. அதற்கான செயற்பாடுகளை ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சி முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சி அல்லாத உறுப்பினர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்– என்றார். (த-4)




LG
Life's Good
மாதாந்தம் ரூ.1,099/- மட்டுமே செலுத்தி
LG K10 ஒன்றை
இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்
20 மாதம் வட்டியின்றிய தவணைமுறை கொடுபணவு
பிரத்தியேகமாக நேஷன் ட்ரஸ்ட் வங்கி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடனட்டைதாரர்க்கு
Nations TrustBank
வட்டி இல்லை ஜொலி அதிகம்
*நிபந்தனைகளுக்குட்பட்டது
*கடனட்டை இல்லையெனினும் அபான்ஸ் வட்டியின்றிய முறையில் ஒரு தவணைக்கட்டணம் இலவசம்
துரித அழைப்பு : 011-5999000
நாடெங்கிலுமுள்ள Abans காட்சியறைகளில் மற்றும் முதன்மை பங்காளர்கள் இடம் கிடைக்கும்
Like us on f / LG mobile - Abans
Abans


குறைந்த மின்விசை (100V)
உங்கள் குளிர்சாதன பெட்டி
அதிக மின்விசை
ஏற்றத் தாழ்வுகளை
தாக்குப் பிடிக்குமா?
திடீர் மின்விசை ஏற்றத் தாழ்வுகளால் உங்கள் குளிர்சாதன பெட்டியின் கொம்பிரசர் செயலிழப்பது குறித்து இனிமேல் கவலையே தேவையில்லை. சகல LG இரட்டைக் கதவு குளிர்சாதன பெட்டிகளும் மின்விசை ஏற்றத் தாழ்வுகளை தாக்குப் பிடிக்கும் வகையில் தரமுயர்த்தப்பட்டுள்ளன. எனவே, LG இரட்டைக் கதவு குளிர்சாதன பெட்டிகளை வைத்திருக்கும் நீங்கள் பணத்தை மீதப்படுத்துவதோடு மன நிம்மதியாகவும் வாழலாம்.
LGயின் புதுமை LVS & HVS அம்சங்கள்
Smart Inverter Compressorகளுடனான சகல LG இரட்டைக்கதவு குளிர்சாதன பெட்டிகளும் LGயின் தனித்துவமான LVS (Low Voltage Start -ability) and HVS ( High Voltage Safe) அம்சங்களுடன் வருகின்றன. இத்தகைய அம்சங்கள் சீராக்கல் கருவி இன்றியே 100 மின்விசையிலிருந்து 290 மின்விசை வரை ஏற்றத் தாழ்வாக பாயும் மின்சாரத்தினால் ஏற்படும் தளம்பல் நிலையை கட்டுப்படுத்தி ஒரு சீராக வைத்திருக்கின்றன.
LG
Life's Good
பாதிப்பு ஏதும் இல்லை
100V
290V
LG LOW VOLTAGE STARTABILITY
LG HIGH VOLTAGE SAFE
கூடிய மின்விசை (290V)
ரூ.7,500 பரிசுகூப்பன்
ரூ.107,999
இச்சலுகை செப்டெம்பர் 30ஆம் திகதி வரை மட்டுமே
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
us at www.facebook.com/abans
Abans

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இராணுவத் தலையீட்டை நிறுத்த பிரதமரின் உடனடிக் கவனம் தேவை

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் தருணத்தில் வெளியாகி இருக்கும் தகவல், அவரது நல்லாட்சி அரசின் கைகள் வடக்கில் எந்தளவுக்குச் செல்வாக்குடன் உள்ளன என்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. கிளிநொச்சி மாவட்டம் திருவையாற்றில் இராணுவ அதிகாரியை அழைக்காததன் காரணத்தால் கௌசல்யன் முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவுக்கு அந்தப் பள்ளியின் ஆசிரியர்களைச் செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்திருப்பது வடக்கில் இன்னமும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு அப்பட்டமாக இருக்கிறது என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

கொழும்பின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலும் இதுவேதான் நடந்தது. வடக்கில் சிவில் நிர்வாக விடயங்களில் இராணுவத்தினர் அளவுக்கு மீறித் தலையிட்டனர். அருகில் உள்ள இராணுவ முகாமின் அதிகாரிகள் அழைக்கப்படாத எந்தவொரு நிகழ்வும் நடைபெற முடியாது என்கிற அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது. மகிந்தவை ஆட்சியி லிருந்து அகற்ற வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் வேணவாக் கொண்டிருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம். அதனால்தான் அவர்கள் ஜனவரி 8 வாக்குப் புரட்சியின்போது மைத்திரியை முழுமையாக ஆதரித்து அவரது வெற்றிக்கு உதவினார்கள். அதைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வருவதையும் ஆதரித்தார்கள். தேர்தல்களின்போது மைத்திரி மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வழங்கிய, சிவில் நிர்வாக விடயங்களில் இராணுவத்தினரின் தலையீட்டை நிறுத்துவோம் என்ற வாக்குறுதிக்காகவும்தான் தமிழ் மக்கள் அவர்களை ஆதரித்தார்கள். வெற்றி பெற்றதும் அந்த வாக்குறுதியை அவர்கள் முழுமையாக நடைமுறைப்படுத்துவார்கள் என்றும் எதிர்பார்த்தார்கள்.

மகிந்த ராஜபக்சவின் காலத்துடன் ஒப்பிடும்போது, ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த விடயத்தில் சிறியளவிலான முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. எல்லா நிகழ்வுகளுக்கும் இராணுவ அதிகாரிகளை அழைக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு மெல்லத் தளர்ந்தது. யாழ்ப்பாணத்தில் அது இல்லாமலேயே போனது என்றுகூடச் சொல்லலாம். ஆனால், வன்னியில் 'இறுதிப் போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியில்' நிலைமை அப்படி இல்லை. அங்கு இப்போதும் இராணுவத்தினரின் கண்காணிப்பும், தலையீடுகளும் கணிசமான அளவில் உள்ளன. அதற்கான ஆகப் பிந்திய உதாரணமே திருவையாற்று முன்பள்ளியில் நடந்துள்ள சம்பவம்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வதை அனுமதிக்க முடியாது. இராணுவத்தினர் சிவில் நிர்வாக விடயங்களில் ஒருபோதுமே தலையிடக்கூடாது. அதுவும் தம்மை வன்கொடுமை செய்தது இலங்கை இராணுவம் என்று தமிழர்கள் இன்றும் ஆழமாக நம்பி வரும் நிலையில், அந்த இராணுவம் அந்த மக்களின் சிவில் நிர்வாக விடயங்களில் தலையிடுவதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

பொலிஸ் நிலையங்களைத் திறந்து வைப்பதால் மட்டும் வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி விட முடியாது என்பதை இந்தச் சம்பவத்தின் மூலம் பிரதமர் மற்றும் ஜனாதிபதி புரிந்துகொள்ளவேண்டும். இதுபோன்ற விடயங்களில் இராணுவத்தினருக்கு அரசியல் தலைமையிடம் இருந்து அழுத்தமான 'காத்திரமான' உத்தரவுகள் பிறக்கப்படாதவரையில் அவர்கள் தாம் நினைத்ததைச் செய்வதை நிறுத்தமாட்டார்கள்.

பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் நிலையில் நடந்துள்ள இந்தச் சம்பவத்தின் பாரதூரத் தன்மையை விளங்கிக்கொண்டு இதன் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும். இனிவரும் காலங்களில் இதுபோன்று சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடாத நிலமை ஏற்படுத்தப்படவேண்டும். அது மிக முக்கியமானது. புறக்கணிக்கக்கூடாதது.

கல்வியில் அரசியல் தலையிட்டதன் மூலம் 'தரப்படுத்தலால்' இலங்கை சந்தித்த வன்முறைகள் கொஞ்சநஞ்சமல்ல. இப்போது கல்விக்கே அடிப்படையான முன்பள்ளியில் இராணுவத்தினர் தலையிடுவதையும் குறைத்து மதிப்பிட முடியாது. முன்பள்ளிக் கல்வித்துறையில் இருந்து இராணுவத்தினரின் வகிபாகம் முற்றாக நீக்கப்பட்டு அது கல்வியியலாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கும்பிரதமர்உடனடியாகஆவனசெய்யவேண்டும்.

# காவிரி நதிநீர்ப் பிரச்சினை இந்தியாவுக்கு ஒரு கரும்புள்ளி

சேரலாதன்

காவிரி நதி நீரைப் பகிர்ந்து கொள்வதில் கர்நாடகாவுக்கும், தமிழ் நாட்டுக்குமிடையே மீண்டும் பிணக்கு ஏற்பட்டு, பெரும் கலவரமாக மாறியுள்ளது. காவிரி நீரைத் தமிழ் நாட்டுக்கு வழங்கக் கூடாது என்பதில் கர்நாடகாவில் உள்ள தீவிர கன்னட அமைப்புக்கள் பிடிவாதமாகச் செயற்பட்டு வருகின்றன. இதன் விளைவாகத் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் செயல்கள் அங்கு மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றன.

காவிரி நதி, கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகின்றது. இதன் காரணமாகவே அது காவிரி என்ற பெயர் பெற்றது. காவிரி நதி சுமார் 4400 அடி உயரத்தில் உற்பத்தியாவது குறிப்பிடத்தக்கது. இது பயணிக்கும் மொத்தத் தூரம் 800 கிலோ மீற்றராகும். கர்நாடகாவில் சுமார் 320 கிலோ மீற்றர் தூரத்தையும், தமிழ்நாட்டில் 416 கிலோ மீற்றர் தூரத்தையும் இந்த நதி கடந்து செல்கின்றது. இதேவேளை இந்த இரு மாநிலங்களின் எல்லையில் 64 கிலோ மீற்றர் தூரத்தைக்கடந்து பாய்கின்றது. கர்நாடக மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களைக் கடந்து, தமிழ்நாட்டின் தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் வழியாகச் சென்று காவிரி நதி, பூம்புகார் என்னும் இடத்தில் வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றது.

### தமிழ்நாட்டில் காவிரி நீரால் வளம் கொழிக்கிறது

தமிழ் நாட்டின் விவசாயத்துக்கு காவிரியிலிருந்து கிடைக்கும் நீரே உயிர் நாடியாக விளங்குகின்றது. தஞ்சாவூர், திருவாரூர், நாகை, திருச்சி, புதுக்கோட்டை, கடலூர் ஆகிய பகுதிகளை இணைத்து காவிரி நீர்ப்பாசன மண்டலத்தை அமைத்திருக்கிறார்கள். இந்த மண்டலத்தில் மூன்று பருவங்க ளில் நெல்லைப் பயிரிடுகின்றனர். இதற்குக் காவிரியிலிருந்து கிடைக்கின்ற நீரே பிரதானமாகப் பயன்படுகின்றது.

மேட்டூர் அணை, காவிரி ஆற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள மிகப் பெரிய அணையாகும். இது தமிழ் நாட்டின் சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அமைந்துள்ளது. இந்த அணை 1934ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டது. மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டால், அது காவிரி கழிமுகத்தின் கடை மடைப் பகுதிவரை செல்வதைக் காணமுடியும்.

தமிழ் நாட்டில் காவிரி பாய்ந்து செல்கின்ற வழியில் களனிகள், பசும் கம்பளங்கள் விரித்தாற் போன்று பசு மையாகக் காணப்படுகின்றன. தமிழர்கள் காவிரியைத் தமது தெய்வங்களில் ஒன்றாகவே கருதுகின்றனர்.

### கர்நாடகாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே நிலவும் நதி நீர்ப்பிரச்சினை

ஆனால் கர்நாடகாவின் தயவு இருந்தால் மட்டுமே, தமிழ் நாட்டில் காவிரி தவழ்ந்து செல்ல முடியுமென்றொரு நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. கர்நாடக அரசு காவிரி நதியின் குறுக்கே அணைகள் பலவற்றை அமைத்து நீரைத் தேக்கி வைத்துள்ளது. அதனால் காவிரியின் இயல்பான இயக்கம் முடக்கப்பட்டுள்ளது. அணைகளில் நீர் நிரம்பும்போது தான், நீரைத்திறந்து விடுவதென்ற கர்நாடகாவின் கொள்கை, தமிழ் நாட்டுக்குப் பலத்த அடியாக வீழ்ந்துள்ளது. இதனால் காவிரி நீரை நம்பி இருக்கின்ற தமிழ்நாட்டு விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

### பயனற்ற ஆணையங்கள்

காவிரி நதி நீரைப் பங்கிட்டுக் கொள்வதற்கு மத்திய அரசின் ஏற்பாட்டில் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள போதிலும், கர்நாடக அரசின் பிடிவாதமான, விட்டுக்கொடுக்காத செயற்பாடுகளால் ஆணையத்தால் பயன் எதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை. தற்போதுகூட, தமிழ் நாட்டில் நீரின்றி வாடுகின்ற நெற் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு காவிரியில் நீரைத் திறந்து விடுமாறு தமிழ் நாடு அரசு கோரியதைக் கர்நாடக அரசு நிராகரித்துவிட்ட நிலையில், வேறுவழியின்றி உயர் நீதிமன்றத்தின் உதவி நாடப்பட்டது. இதையடுத்து வினாடிக்கு 15 ஆயிரம் கன அடிவீதம் 10 நாள்கள் நீரை வழங்குமாறு கர் நாடக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கிணங்க வேறு வழியின்றி கர்நாடக அரசு நீரைத் திறந்து விட்டது. இதனை எதிர்த்துக் கர்நாடகாவில் போராட்டங்கள் வெடித்தன. தமிழர்களுக்குஎதிரான வன்முறைக்களமாக கர்நாடகா மாறியது. இதையடுத்து கர்நாடக அரசு உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நிறுத்தி வைக்குமாறு பதில் மனுத்தாக்கல் செய்தது. ஆனால் அந்த மனு நிராகரிக்கப்பட்டதுடன், மேலதிக நீரை தமிழ் நாட்டுக்கு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது. இதன் பின்னரே வன்முறைகள் உச்சக்கட்டத்தை எட்டின.

தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான பெறுமதிமிக்க வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர்களது வர்த்தக நிறு வனங்கள் மற்றும் கண்ணில் தென்பட்ட தமிழர்கள் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. கர்நாடகாவில் சுமார் 30 இலட்சம் தமிழர்கள் வசித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் பல்வேறு தொழில்களில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர். அங்கு இடம்பெறுகின்ற வன்முறைகளால் அங்கு வாழும் தமிழர்கள் பெரும் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை தற்போது கன்னடர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான மோதலாக வெடித்துள்ளதால். அடுத்த சில தினங்கள் மோசமாகவே அமைந்து விட வாய்ப்புண்டு.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும், கன்னட மொழி பேசுகின்ற மக்கள் ஏராளமாக அங்கு உள்ளனர். தமிழ் சினிமாவில் கன்னட நடிக, நடிகைகள் பலர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இதைவிட கன்னடர்களுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்கள் ஏராளமாக தமிழ் நாட்டின் உள்ளன. கர்நாடகாவில் இடம்பெறுகின்ற தமிழர்களுக்கெதிரான வன்முறைகளை இணையங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்கின்ற தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள், தமிழ் நாட்டிலுள்ள கன்னடர்களுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடவே செய்வார்கள். இதனால் கர்நாடகா மற்றும் தமிழ் நாட்டில் அமைதி சீர் கெடுவதற்கான சூழ்நிலைகள் உருவாகிவிடும்.

தமிழ்நாட்டுக்கு நீரை வழங்குவதால், தமது அரசியல் எதிர் காலம் பாதிக்கப்பட்டு விடுமென கர்நாடக ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். இதனால் வன்முறைகளைக் கட்டுபடுத்துவதில் அவர்கள் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவிரி நீர்ப் பிரச்சினையில் எந்தவிதமான சமரசத்துக்கும் இடமில்லாததொரு நிலை காணப்படுகின்றது. ஏனென்றால், பல லட்சம் மக்களின் பசியைப் போக்குவதற்கு காவிரி நீர் முக்கிய ஆதாரமாகக் காணப் படுகின்றது. இந்திய மத்திய அரசு இதில் தலையிட்டு உறுதியானதொரு தீர்வை வழங்க வேண்டும்.

இதில் அரசியல் வேறுபாடுகளுக்கு இடமேயில்லை. இரண்டு மாநிலங்களைச் சேர்ந்த மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது இந்திய மத்திய அரசுக்கு ஒருபோதுமே நல்ல பெயரைத் தேடித் தரப்போவதில்லை. தற்போது மத்தியில் இருக்கும் மோடி தலைமையிலான அரசு, காவிரிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வை வழங்க வேண்டும். இதைவிடுத்து காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடுகளில் அது ஈடுபடுமாயின், இந்திய மாநிலங்களின் ஒற்றுமைக்கும், நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் பங்கம் ஏற்படுவதை எவராலும் ஒருபோதுமே தடுத்து நிறுத்திவிட முடியாது.



வந்தியத் தேவர்

# இலங்கை அரசியலின் வேடிக்கையும் விநோதங்களும்

பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டின் ஆட்சி முறை, அங்குள்ள அனைத்து இன மக்களுக்கும் உகந்ததாக அமைதல் வேண்டும். இலங்கை பல்லின மக்களைக் கொண்டதொரு நாடு. ஆனால், இந்த நாட்டின் ஆட்சியில் அமர்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தார்மீகச் சிந்தனை அறவே கிடையாது. மக்களின் அபிலாசைகளை, மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைச் செவிமடுத்து ஆட்சியில் உள்ளவர்கள் செயற்பட்டாலேயே சுபீட்சமான பாதையைக் காணமுடியும். நேர்மை, நீதி, மனித உரிமைகள், சட்ட விதிமுறைகள் திசைமாறி விட்டதால், இனங்களிடையே கசப்புணர்வுகள் முற்றிக்கொள்ள தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க வேண்டியதாயிற்று. தென்பகுதி அரச தலைமைகளே தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கான பிதாமகர்கள். தமிழ் சிறுபான்மை மக்களின் மீதான தென்னிலங்கையின் மோசமான செயற்பாடுகளே தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா மனம் வெதும்பக் காரணமாக இருந்தது. நாட்டில் குருதி ஆறு ஓடும் காலம் தொடரவேண்டும் என விரும்பும் தென்னிலங்கைத் தரப்புக்கள் புத்தர் சிலைகளை ஆங்காங்கே வைத்து விடுவதால் நாடு புனிதமாகி விடுமா? சுதந்திரக் கட்சிக்குத் துரோகம் இழைத்து விட்டதாக மைத்திரிபால சிறிசேனவின் மீது பழி சுமத்துகிறார் மகிந்த ராஜபக்ச. இன அழிப்பு, ஊழல் மோசடிகள் எனப் பல்வேறு அட்டூழியங்களின் நாயகனாக அவரை உலகம் நோக்குகிறது என்ற உண்மையை மறந்து, கட்சிக்குத் துரோகம் செய்து விட்டார் மைத்திரி என மனம் வெதும்புகிறார். மிகப்பெரிய சர்வாதிகாரியாகச் செயற்பட்டு நாட்டுக்கே துரோகமிழைத்த ஒருவர், கட்சி பற்றிக் கவலைப்படுகிறார். ஒரு நேர்மையான தலைவன் நாடா, கட்சியா எனும்போது கட்சியைப் புறம் தள்ளிவிட்டு நாட்டின் நலனையே பெரிதாகக் கொள்வான். முன்னாள் ஜனாதிபதி மகிந்தவோ நாட்டைவிட கட்சி தான் முக்கியம் என்றநிலையில் உள்ளார். ஒரு ஜனாதிபதியாக உயர் பதவி யில் இருந்த ஒருவர், சிறிய அற்ப சொற்ப பதவியிலாவது அமர்ந்து விட வேண்டும் என்று விரும்பி அதற்காகவே ஊழல் மோசடிக் கும்பல்களுடன் இணைந்து அலைந்து கொண்டிருக்கிறார். இது வேடிக்கையும், விநோதமுமாக உள்ளது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம் ஒரு சர்வாதிகாரியின் ஆட்சிக் காலமாக இருந்தது என்பதை ஒப்புக்கொண்ட பன்னாட்டு சமூகம், ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியை ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கும் நல்லாட்சியின் உதயமாகவே கருதுகின்றது. ஆனால், அவரும் உடனடித் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இறுக்கமான முயற்சிகளை முன்னெடுக்காது,

> மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம் ஒரு சர்வாதிகாரியின் ஆட்சிக் காலமாக இருந்தது என்பதை ஒப்புக் கொண்ட பன்னாடு, ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியை ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கும் நல்லாட்சியின் உதயமாகவே கருதுகின்றது.

கால அவகாசங்களை நீடித்துக் கொண்டிருப்பதிலேயே கரிசனை கொண்டுள்ளார். போர்க்குற்ற விசாரணைகளில்கூட ஐ.நாவின் தீர்மானத்துக்கமைய அவர் செயற்படுவதாக இல்லை. சர்வதேச நீதித்துறையின் பங்களிப்பைத் தமிழர்கள் கோருவதற்கான காரணத்தைத்தான் உணர் வதாக ஐ.நா. செயலாளர் பான் கீ–மூன் கருத்து வெளியிட்டுள்ளார். தமிழர்களின் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால பொருட்படுத்துவதாகவும் இல்லை. மகிந்த ராஜபக்சவை மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைக்க வேண்டும் என்பதில் அவருக்கு உள்ள ஆர்வம், தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற விடயத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கோத்தபாயவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றிருக்கிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதபோதிலும், சமல் ராஜபக்சவுக்கும் தனக்கும் கட்சியில் முக்கிய பதவிகள் தரும்படியும், ராஜபக்ச குடும்பத்தின்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது எனவும் கோத்தபாய ஜனாதிபதியிடம் அவ்வேளை கேட்டுள்ளதாகத் தெரிகின்றது. குற்றமிழைத்தவர்கள் நடவடிக்கை வேண்டாம் என மன்றாடும் விநோதமும் கூட இந்த நாட்டு அரசியலாகி விட்டது. லஞ்ச ஊழல் மோசடி, பொருளாதார நிலை குறித்துப் பேசப்படுகிறது. உரிய நடவடிக்கைகளற்ற வெறும் பேச்சுக்கள் அவை. நாட்டின் மிகப் பெரிய தீர்வுகாணப்பட வேண்டிய விடயங்களில் சிறுபான்மைத் தமிழ் மக்களது பிரச்சினை முக்கியமானது. இந்த யதார்த்தத்தைத் தெரிந்து கொண்டும், தென்னிலங்கை எழுபது வருடங்களுக்கும் மேலாக இன வாதத்தை அடைகாத்துக் கொண்டிருக்கின்றது. நல்லாட்சி என்று வந்தாலும் கூட மகிந்தவினதும் மைத்திரியினதும் ஆட்சி முறையில் பெருமளவில் வித்தியாசங்கள் இருப்பதாக இல்லை. நாட்டின் முக்கிய பதவிகளில் சிங்கள பௌத்தர்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது அரச அமைப்புக்கு விரோதமானது என்ற உண்மையை ஏற்றுக் கொண்ட மகிந்த, இன்று அதனை ஆதரிப்பதும் விசித்திரமான அரசியல் போக்குத்தான். நல்லாட்சி என்றுவந்த மைத்திரியும் அதிலிருந்து விலகி வருவதும் முரண்பாடுதான். இலங்கை ஒரு நிச்சயமற்ற அரசியல் நிலைக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இன்றுவரை இன ஒடுக்குமுறைகளுக்குரியதாகவே அரசியல் சென்று கொண்டிருக்கிறது. இலங்கை அரசியலில் புதிய மாற்றத்தையும் திருப்பத்தையும் உண்டு பண்ணுவோம் என்ற முனைப்பில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ராஜதந்திரிகளைச் சுமந்தபடி விமானங்கள் வந்தும் போய்க் கொண்டுமாக இருக்கின்றன. அரசியல்வாதிகள் பிள்ளையையும் கிள்ளி விட்டுத், தொட்டிலையும் ஆட்டிவிடுபவர்களாக, சொல்வது ஒன்றும் செய்வது இன்னொன்றுமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஓடியோடிப் பேசுகிறார்கள், கூடிக்கூடிப் பேசுகிறார்கள். ஆனால், சிறுபான்மை மக்கள் தமது சொந்த நிலங்களில்கூட கால்பதிக்க முடியாதவர்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். இணக்க அரசியலும், நல்லாட்சித் தத்துவமும் வேடிக்கையும் விநோதங்களுமாக மக்களை ஏமாற்ற, இலங்கை அரசியல் பயணம், இழுத்தடிப்பு அரசியலாகத் தொடர்ந்து செல்கின்றது.

# நாடகங்களில் சாதியத்தை வெளிப்படுத்தும் கருக்களைத் தவிர்ப்போமே!

நாடகக் களரி நாடகக் குழுவால், அண்மையில் நல்லூர் சாதனா பாடசாலை மைதானத்தில், 2 வாரங்களாக, தினசரி குறுநாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. தென்னிந்திய தொலைக் காட்சிகளின் தொடர் நாடகங்களைப் பார்த்து சலிப்படைந்துள்ள எமது மக்களுக்கு, நாடகக்களரியின் நாடகங்கள் புதிய அனுபவமே.

நவீன அரங்கம், சுதேசிய பக்கவாத்தியம், அளவான மின்ஒளி, புரட்சிகரமான கருத்துக்கள், ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பு, நடிகர்களின் ஒப்பனை, இவைகள் மக்களின் மனதைக் கவர்ந்ததென்னமோ உண்மை தான்.

இந்த வகையில் 11.09.2016 அன்று மேடையேற்றப்பட்ட பறையன் என்ற நாடகத்தைப் பற்றிய சிறிய குறிப்பை இங்கு தருகிறேன்.

நாடகத்தின் கரு, மலை நாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத ஓர் இசைக் கருவியான தப்பு என்னும் பறையைப் பற்றியதாகும். ஒரு சிறிய குடும்பம். தகப்பன் தப்பு அடிப்பவர், அவரது மனைவி, மூன்றாமவரொருவர், அவர்களின் ஓரளவு படித்த வாலிப மகன்.

தனது தந்தை, சாவு வீடுகளிலும், கோயில் விழாக்களிலும் தப்பு அடிப்பதை மகன் வெறுக்கிறான். இனிமேல் தப்பு அடிக்க வேண்டாம் எனத் தந்தையை வற்புறுத்துகிறான்.

ஆனால், தந்தை மகனது அந்தப் போக்கால் நிரம்பவும் துன்புறுகிறார். தப்பு தங்களது பரம்பரைச் செல்வம். அதனை விட முடியாது எனக் கூறுகிறார். ஆனால், மகன் அதனை ஏற்க மறுத்து, வீட்டை விட்டு வெளியேறப் போவதாக மிரட்டுகிறான்.

அதே நேரம், அவனது தாயார் மகனே! இந்தத் தப்புத் தாண்டா, எங்கள் பரம்பரைச் சொத்து, உனது உடலில் ஓடும் இரத்தமும், இந்தத் தப்பினால் தான் வந்தது. இதை விட தப்பு எமது தமிழரின் கலாசார இசைக்கருவி என்று கூறுகிறார். ஈற்றில் மனம் மாறிய மகன் தானும் தப்புத் தட்டும் அடுத்த வாரிசாக மாறுகிறான்.

இதுவே நாடகத்தின் கருவாகும். நாடக முடிவில், சபையோரின் கருத்துக்களும் பகிரப்பட்டன.

தந்தையின் தொழிலை மகன் செய்ய வேண்டும் என்பதும், பரம்பரைத் தொழிலை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஏற்க முடியாது என ஓர் அன்பர் கருத்து வெளியிட்டார்.

இன்னொரு அன்பர், இது யாழ்.மக்களின், பழைய சாதி முறையை, மீண்டும் உயிர்ப்பிக்கத் தக்கதாக அமைகிறது" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், மலை நாட்டுத் தோட்டப்புறங்களில் தப்பு அடிப்பவர்கள் "சக்கிலியர்கள்", ஆனால் இங்கே பறையன் எனத் தவறாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் மற்றொரு நண்பர் இந்த நாடகத்தின் தலைப்பை பறையன் என நிர்ணயித்தமை, இங்குள்ள ஒரு பகுதி மக்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஹரிசன மக்களையும் அவமானப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டார்.

மொத்தத்தில் நாடகத்தின் அரங்கியலாளர்கள், இனிவரும் காலங்களில் இப்படி நாடகங்களுக்கு சாதிய அர்த்தத்தை வெளிப்படுத்தும் கருக்களையோ, தலைப்புக்களையோ பயன்படுத்தாது நல்ல கருத்துள்ள நாடகங்களை மேடையேற்றுவார்களென எதிர்பார்க்கிறேன்.

சி.கணபதிப்பிள்ளை
(ஓய்வு நிலை அதிபர்)

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

# காவிரியைப் பங்கிட்டுக்கொள்வதில் எங்கே சென்றது




## இந்திய ஒருமைப்பாடு?

பிரகாஸ்

தமிழ்நாட்டுக்கு காவிரி நீரைத் திறந்து விட்ட விவகாரம் தமிழ்நாடு, கர்நாடகா என்ற இரண்டு மாநிலங்களுக்கு இடையே கலவரமாகத் தலைவிரித் தாடுகிறது. தமிழ்நாட்டில் கன்னடத்தவர்களின் வாகனங்கள் நொருக்கப்பட்டன. சிலர் தாக்குதலுக்கும் உள்ளாகினர். கர்நாடகாவில் தமிழர்களது வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கண்மூடித்தனமான தாக்குதலைத் தமிழர்கள் எதிர்கொண்டார்கள். பொது இடங்களில் வைத்து தாக்கப்பட்டனர். வயது வேறுபாடின்றி அடிக்கப்பட்டனர். நிர்வாணப்படுத்தப்பட்டு உதைக்கப்பட்டனர். இந்திய ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றில் தமிழர்கள் தாக்கப்படும் காணொலிகளும் வெளியாகின. எல்லோரினதும் மனது கனகனத்தது, பதைபதைத்தது. வன்முறை, கலவரம், சட்டத்தை கையிலெடுத்தல் என எல்லாவற்றையும் தாண்டியிருந்தது கர்நாடகா. ஆனாலும் தமிழ்நாட்டிடமும் தவறுகள் ஏராளம் இருக்கின்றன என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

**காவிரி யாருக்குச் சொந்தம்**

ஏராளமான தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் அளவுக்கு நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்தக் காவிரி ஆறு கர்நாடகாவின் பிரம்மகிரி மலைப்பகுதியில் உற்பத்தியாகிறது. அண்ணளவாக 800 கிலோ மீற்றர் நீளமுடைய காவிரியில் கிட்டத் தட்ட 300 கிலோ மீற்றர் கர்நாடகாவுக்குள் உள்ளது. 500 கிலோமீற்றர் தமிழ்நாட்டுக்குள் உள்ளது. பெரும்பாலான பகுதி தமிழ் நாட்டுக்குள் உள்ளதால் அது ஆற்றுப்பூமி என அழைக்கப்படுகிறது. ஆனால் அதன் ஊற்றுப்பூமி அதாவது தோற்றப்பூமி கர்நாடகாவே. இதன் அடிப்படையிலேயே காவிரியைக் கர்நாடகா சொந்தம் கொண்டாடுகிறது. அதைத் தமிழ் நாட்டுக்கு வழங்குதல் தமக்கான கௌரவக் குறைவு என்றும் கர்நாடகா கருதுகிறது.

**கலவரத்துக்கான பின்னணி**

தமிழ்நாட்டில் 40 ஆயிரம் ஏக்கர்களில் சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. போதிய நீர் இல்லாத காரணத்தால் அந்த நெற்செய்கை பாதிப்படையும் நிலை தோற்றம் பெற்றது. இதனால் கர்நாடகாவிலிருந்து தமக்கு நீர் தருமாறு தமிழ்நாடு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. விசாரித்த நீதிமன்று கடந்த 7ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை காவிரி நீரைத் திறந்து விடுமாறு உத்தரவிட்டது. தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்குவதை கௌரவச் சிக்கலாகக் கருதும் கர்நாட்கா கலவரங்களைத் தோற்றுவித்தது. இதுவே இந்தக் கலவரத்தின் பின்னணி.

**தமிழ்நாட்டின் நதிகள் எங்கே?**


காவிரியைக் கர்நாடகா, தமிழ் நாடும் பயன்படுத்தட்டும் என்ற மனப்பான்மை கொள்ளாமை ஒருபுறமிருக்கட்டும். இது வேறு பிரச்சினை. தமிழ்நாட்டில் இருந்த ஆறுகள் எங்கே. "கூவம் நதியில் குளித்துமுடித்து முருகன் கோவிலில் வழிபாட்டுசெய்து சென்றார் பச்சையப்ப முதலியார்" என்று ஒரு பாடல் உள்ளது. "எழில்மிகு கூவம்" என்று பாரதிதாசன் பல பாடல்களை எழுதியுள்ளார். அதாவது கடந்த 70 வருடத்துக்கு முதல் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வதற்கும், குளிக்கக்கூடிய புனிதத் தன்மையிலும், அழகான தோற்றத்திலும் கூவம் இருந்துள்ளது. இன்று கூவம் நதியில் குளிப்பதைவிடுவோம். குறைந்தது அருகிலாவதுநிற்க முடியுமா? வைகை ஆறு எங்கே?. தாமிரவர்ணி நதி எங்கே? ஓர் ஆற்றுக்கு நீர் என்பது மேலாடை போன்றது. மேலாடையை எடுத்து குளிர்பான, மென்பான நிறுவனங்களுக்குக் கொடுத்தாயிற்று. மணல் என்பது உள்ளாடை போன்றது. மணலை எடுத்து லொறிகளிலும், கனரக வாகனங்களிலும் வைத்துக் கடத்திப் பணம் சேர்த்தாயிற்று. தம்மிடமிருந்த நீர் வளங்களை வேறு பயன்பாடுக்கு ஏற்ற தாக்கிவிட்ட தமிழ்நாடு காவிரிக்காக கர்நாடகாவிடம் கையேந்தி நிற்கின்றது. எஞ்சியிருப்பது காவிரி. அதையும் நாசமாக்கவா தமிழ்நாடு இந்தப் பாடுபடுகிறது. காவிரி கர்நாடகா வில் உற்பத்தியாகின்றமையால் அது தமக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கோருவதும் கர்நாடகாவின் முட்டாள்த்தனமே.

**பூச்சியத்தில் முடிந்த இந்திய ஒருமைப்பாடு**

நிகழ்கால உலகின் ஆகக்கூடிய பகைமை நாடுகளான இஸ்ரேல், பலஸ்தீனம், ஜோர்தான் தமக்குள்ளே நதியைப் பங்கிடுகின்றன. அதில் எந்தப் பிரச்சினையும் வரவில்லை. இந்தியா, பாகிஸ்தானுடன் இந் தூஸ் நதியைப் பங்கிடுகிறது. எந்தப் பிரச்சினையும் வரவில்லை. இந்தியாவும் பங் களாதேஷும் கங்கை நதியைப் பங்கிடுகின்றன எந்தப் பிரச்சினையும் வரவில்லை. உலகில் பல நாடுகள் பல நதிகளைப் பங்கிடுகின்றன எந்தப் பிரச் சினையும் வரவில்லை. ஆனால் இந்தியாவின் இரு மாநிலங்கள், ஒரு நாட்டின் இரு குழந்தைகள் ஒரு நதியைப் பங்கீடு செய்வதில் கடந்த 120 ஆண்டுகளாகப்பிரச் சினைகளுக்கு மேல் பிரச்சி னைகள் நீடித்துக்கொண்டுதான் இருக்கின்றன. இங்கே தான் இந்திய மத்திய அரசும் இந்திய மக்களும்தாம்அனைவரும் இந்தியர் என்று மார்தட்டிக் கொள்ளும்இந்திய ஒருமைப் பாடு பூச்சியத்தில் நிற்கிறது.



சூரியகாந்தி
உதயன்



# "இனிப்புச் சாப்பாடெண்டா அவனுக்குக் கடும் விருப்பம்"

## தியாகி திலீபனை மடியில் சுமந்த 'தாய்' தரும் கண்ணீர் வாக்குமூலம்



தர்ஷன்

"இனிப்புச் சாப்பாடெண்டாக் கடும் விருப்பம். சரியான கறுப்பன். குண்டனா இருந்தான். அவனுக்குக் கோப்பி அடிக்கடி குடுக்க வேணும்."

நினைவுகளின் இனிமையுடன் ஆரம்பிக்கிறார் பா.கமலாவதி. அவர்தான், பார்த்திபன் என்று இயற்பெயராலும் தியாகி என்று செயல் பெயராலும் அழைக்கப்படும் தீலிபனைப் பெரும்பாலும் வளர்த்த தாய். இன்னும் சொந்த ஊரிலேயேதான் வாழ்கிறார்.

நீண்ட தேடலின் பின்னர் அவரைக் கண்டடைந்தோம். இயல்பு குலையாத கிராமத்தின் நினைவுகளைத் தேக்கி வைத்த படியே அவர்களின் வாழ்க்கை நகர்கிறது. தான் வளர்த்த மகனின் நினைவுகளுடன் அவர் உரையாடத் தொடங்கினார்.வைத்த கண்வாங்காமல் கேட்டுக்கொண்டிருந்தோம்.

அவன் என்ரை சித்தப்பான்ர பெடியன். சித்தப்பாவுக்கு 4 பெடியள். இவன் நாலாவது பெடியன். பார்த்திபன்தான் பெயர். அவன் பிறந்து 11 மாசத்தால தாய் மூளைக் காய்ச்சல் வந்து இறந்து போயிற்றா. பிறகு வெளியாய்க் கிடந்த இந்தக் காணிக்கிலால (கையை நீட்டிக் காட்டுகிறார்) தகப்பன் நெடுகலும் கொண்டு வந்து எங்கட வீட்டில விட்டுட்டுப் போவார். பார்த்திபன் கூடுதலா என்னோடதான் வளர்ந்தவன். சின்னனில சரியான குளப்படி. துடியாட்டமாய் இருப் பான் எப்பவும். படிக்க வெளிக்கிட்டதும் தகப்பனோட மொரிஸ் மையினர் காரில ஏறிப் பள்ளிக்கூடம் போய் வருவான். கடைக்குட்டி எண்டதால தகப்பனுக்குச் சரியான செல்லம். படிப்பிலேயும் நல்ல கெட்டிக்காரன். ஏ.எல். படிக்க எண்டு என்னோட இருக்காம ஓட்டுமடம் சந்தியில போய் வீடு எடுத்து இருந்தவன். அப்பேக்கதான் அவனுக்கு மற்றதுகளில நாட்டம் வந்தது. தகப்பனும் அதற்கு தடையில்லாம உறுதுணையா இருந்தவர் போல. எங்களுக்கும் தெரியாது. முதல்நாள் வந்து கோப்பியும் குடிச்சுட்டு மாம்பழம் வெட்டிக் கொடுக்க சாப்பிட்டுட்டுப் போனவன். அடுத்தநாள் நல்லூர்க் கோயிலடில உண்ணா விரதம் இருக்கிறானாம் என்று அறிஞ்சு பதறிப்போய் ஓடினன்.

எங்கள மேடைக்குப் பக்கத்தில விடேல்ல. தூரமா இருந்துதான் பார்த்தனாங்க. சரியான சனம். நெடுகலும் வந்துபோகுங்கள். பிறகு புரட்டாதிச் சனி அன்று 12ஆவது நாளா இருக்க வேணும். மோசம் போயிற்றானாம் எண்டு தகவல் வந்தது. கண்ணீர் கட்டுப்பாடின்றி வெளிவர வார்த்தைகள் அடைத்துக் கொள்கின்றன. சிறிது நேரம் கழித்து மெல்ல மெல்ல ஆரம்பிக்கிறார். அவனுக்கு ஆன்மிகத்தில நம்பிக்கையில்லை. ஆடம்பரமும் பிடிக்காது. அளவில பெரிய சேட்டும் ஜீன்ஸும் போட்டுக் கொண்டு திரிவான். தமிழ்ச்சனம் கஷ்டப்பட்டது அவனைச் சரியாப் பாதிச்சிருக்கவேணும். தகப்பனும் நல்ல வழிகாட்டியாக இருந்ததாலதான் அவனால இவ்வளவு கஷ்டமான காரியத்தைச் செய்ய முடிஞ்சிருக்கு.

நீண்ட அமைதியுடன் கமலாவதி முடித்துக் கொள்கிறார். கனத்த இயத்துடன் நாம் அங்கிருந்து புறப்பட்டோம். தியாகத்தின் சுடரை ஏந்தியபடியே!



# நிறைவேறாது நீளும் கனவு: திலீபன்

யாதுமாகி

தாயில்லாமல் வளர்ந்த பிள்ளையவன். தாயில்லாமல் வாழ்ந்தாலும் தாய் நாடு இல்லாமல் வாழ இயலாது என்ற உண்மையுணர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழர்களின் உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடித் தன் உயிரையே தியாகம் செய்தவன்.

"காந்தி... காந்தி..." என்று எதற்கெடுத்தாலும் கொக்கரித்தபடி அகிம்சை வாதியை தேச பிதாவாகக் கொண்டாடும் இந்திய தேசத்திற்கே அகிம்சைப் போராட்டம் என்றால் இதுதான் என்று போதித்துக் காட்டியவன். இந்தியாவின் வஞ்சகத்தால் வீழ்த்தப் பட்டவன்.சிங்கள தேசத்தின் அடங்காத இனவாதத் தீயையும் அதற்கு இந்திய வல்லாதிக்கத்தின் பிரிக்க முடியாத ஆதரவையும் அனைத்துத் தமிழர்களுக்கும் புரிய வைத்தவன். உறங்குகிறான் தியாக தீபமாக.

இராசையா – பருவதபத்தினியின் புதல்வனாகப் பிறந்து இதுவரை எவராலும் பின்பற்ற முடியாத அகிம்சை வழிப்போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்து உயிர்த்தியாகம் செய்த வீரத் தமிழன் திலீபன். பார்த்திபன் எனும் இயற்பெயர் கொண்ட திலீபன், தாய் பருவதபத்தினியின் நான்காவது புதல்வன். பார்த்திபனைப் பிரசவித்த பதினொரு மாதங்களின் பின் தாய் பருவதபத்தினி மூளைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இறந்து விடுகிறார்.

மறுமணம் செய்யாமல் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பைச் சுமக்க ஆரம்பிக்கும் ஆசிரியரான தந்தை இராசையா அதில் வெற்றியும் கண்டுவிடுகிறார். பார்த்திபன் க.பொ.த. உயர்தரம் கற்பதற்காக ஓட்டுமடப் பகுதியில் தங்கியிருந்து கல்வி கற்று வந்த காலத்தில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள அடக்குமுறைகள் வேரூன்ற ஆரம்பிக்கின்றன.

அவன் உயர்தரப் படிப்பை முடித்துக் கொண்டு பல்கலைக்கழகம் நுழையும் தருவாயில் தமிழர் பிரதேசங்களில் அடக்கு முறைகள் உச்சம் கொள்கின்றன. இராணுவப் படைகளின் ஆக்கிரமிப்பு அதிகரிக்கின்றது. தன்னுடன் உலாவித் திரிகின்ற காலப்பொழுதுகளிலேயே தமிழ் மக்களுக்காகப் போராடும் உணர்வுடன் அவன் இருப்பதை தந்தை அறிந்துகொள்கிறார். மகனது பாதை கடினமானதாயினும் மிகச் சரியானது என்றுணர்ந்து தாய்க்கு ஈடாகப் பார்த்திபனைக் கவனித்து வந்த தந்தை, அவனை அவனது வழியிலேயே செயலாற்ற விட்டுவிட்டார். அந்தவேளை மெல்லத் துளிர்விட்டிருந்த தமிழீழ விடுதலைப் போராட்டம் பார்த்திபனையும் பற்றிக் கொள்கிறது. அவன் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் அது தனக்குள் ஈர்த்துக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் திலீபன் மிக விரைவாகவே தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறான். அவனது உழைப்பு அவனை யாழ்ப் பாண மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக்கு கிறது. அரசியல் 'குள்ளநரி' என வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலம் அது. மேற்குலகு சார் கொள்கையுடன் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்தியிருந்தார் ஜே.ஆர். அப்போது மேற்குக்கு எதிரான சோவியத் ஒன்றியத்துடன் இணைந்திருந்தது இந்தியா. ஜே.ஆரைக் குடுமியில் பிடித்திழுத்துத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தமிழ் இளைஞர்களின் ஆயுத எழுச்சியைப் பயன்படுத்திக் கொண்டது. 1987ஆம் ஆண்டில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அமைதிப் படை என்ற பெயரில் இந்திய அடக்குமுறைப் படை வடக்குக் கிழக்கில் நிலைகொண்டது.

## துளிர்விட்ட பார்த்திபனின் அகிம்சை

ஆயுத வன்முறை வழியைத் தமது போராட்டப் பாதையாக வரிந்துகொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு இந்த உடன்படிக்கையில் அவ்வளவு திருப்தியிருக்கவில்லை. எனவே அவர்கள் அதில் மாற்றங்களைக் கோரினார்கள். இந்திய மேலாதிக்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அதனால் தமது கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கு இந்தியாவுக்கு நன்கு பரிச்சயமான அகிம்சையைக் கையில் எடுப்பதற்குப் புலிகள் தீர்மானித்தார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த சண்டையில் காயமடைந்திருந்தான் திலீபன். விடுதலைப் புலிகளின் தலைவருடன் கலந்துரையாடித் தீர்க்கமான முடிவொன்றை எடுத்தவனாய், தமிழருக்கான சுதந்திரத்தை வேண்டிப் பட்டினிப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போகிறேன் என அறிவித்தான். இந்திய அரசையும் சிங்கள அரசையும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குச் செவி சாய்த்து நீதி வழங்கக் கோரி 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் ஆலய முன்றிலில் அமர்ந்தான்.

1- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படவேண்டும்.
2- புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகப் பகுதிகளில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
3- இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்றழைக்கப்படும் அனைத்து வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4- வடக்கு–கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
5- இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படை என்று அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உணவு ஒறுத்தல் போராட்டத்தை அவன் ஆரம்பித்தான். இன்று வரைக்கும் அவனது 4 கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் அப்படியேதான் உள்ளன.

## அகிம்சை வழியிலும் தோல்வி

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூர்க் கோவில் வீதியில் உணவையும் நீரையும் தவிர்த்து இதுவரை யாராலும் செய்யப்பட்டிருக்காத அகிம்சை வேள்வியை அவன் ஆரம்பித்தான். ஆனால், இந்திய அரசு தனது முகத்தைத் திருப்பிக் கொண்டது. காந்தி ஆங்கிலேயர்களின் முன்னால் அகிம்சையை ஆயுதமாக்கினார் என்பதால் வென்றார். ஆனால், இந்தியார்கள் தாம் ஆங்கிலேயர்கள் அல்லர் என் பதை நிரூபித்தார்கள். திலீபனின் அகிம்சை அவர்களின் கால் தூசியைக்கூட அசைக்கவில்லை.

போராட்டத்தை அறிவித்து முதல் நாள் மக்களுக்கு உரையாற்றியபடி இருந்த பார்த்திபன் இரண்டாம் மூன்றாம் நான்காம் நாள்கள் என நாள்கள் செல்லச் செல்ல சோர்ந்து போகத் தொடங்கினான். சிங்கள அரசாலும் இந்திய அரசாலும் கவனிக்கப் படாமல் இரவு பகலாகத் தொடர்ந்து நடந்த அவரது அகிம்சைப் போராட்டத்துக்கு ஒன்பதாவது நாள்தான் அப்போதைய இந்தியத் தூதுவர் டிக்சித் வருகை தந்தார். ஆனால் தீர்க்கமான பதிலையோ முடிவையோ கூறாமல் போராட்டத்தை முடி என்றார்.

கொஞ்சம் கொஞ்சமாக மடிந்து கொண்டிருந்த பார்த்திபன் தனது போராட்டத்தில் தொடர்ந்தும் உறுதி கொண்டிருந்தான். 12ஆம் நாளில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டான். அவனுடன் சேர்ந்து அகிம்சையும் இந்த மண்ணில் மடிந்தது. புரட்டாதிச் சனியான 26ஆம் திகதி காலை 10.58 அளவில் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற மனவெழுச்சியுடன் லெப்டினன் கேணல் திலீபனாகினான். ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உணவொறுத்த திலீபனின் உடல் வாடி வதங்கி, மெலிந்து சுருண்டு, நிலைகுலைந்து நினைவிழந்து போயிருந்தபோது அந்த உன்னத ஆன்மா அவன் உடலைவிட்டுப் பிரிந்தது.

ஒட்டுமொத்தத் தமிழர்களும் உயிர் உருகினர். காந்தியம் என்ற திரைக்குப் பின்னாலிருந்த தனது உண்மையான கோரமுகத்தினை வெளிக்காட்டியது இந்திய தேசம். காந்தியையே கொன்றவர்கள் அவர்கள். அவர் போதித்த அகிம்சையைக் கொல்வதா அவர்களுக்குச் சிரமம்?

**மக்கள் எழுச்சி**

திலீபனின் போராட்டமும் அதன் மீது அவன் காட்டிய தீவிரமும் மக்களிடையே பெரும் எழுச்சி அலையைத் தோற்றுவித்தது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் தன்னார்வத்துடன் முன்வந்து அவனது உணவொறுப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு பக்கபலமாக இருந்தனர். பாடசாலை மாணவர்கள், ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் வரும் நிறைந்த மக்களின் கூட்டம் அழுதழுது அவன் போராடத்திற்கு உரமூட்டியது.

மண்ணுக்காக உயிரைத் துய்யத் துணிந்த அந்த மாமனிதனை ஒரேயொரு முறையேனும் தரிசித்துவிட மக்கள் கூட்டம் முண்டியடித்தது. அவன் உயிர் பிரிந்தபோது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் கதறியழுதனர்.

சுதுமலை அம்மன் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திலீபனின் இறுதி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீட வைத்தியக் கலாநிதி சிவராஜாவிடம் திலீபனின் விருப்பப்படியே அவனது உடல் மருத்துவ பீடத்தின் தேவைக்காகக் கையளிக்கப்பட்டது.

**தியாக தீபம்**

தாய் இறந்ததும் தந்தையால் வளர்க்கப்பட்ட திலீபன். ஆடம்பர எண்ணங்கள் அற்றவன். ஆன்மிக ஈடுபாடற்ற அவன் யதார்த்த உலகில் மனித உயிர்கள் அனைத்தும் சமம், அவற்றின் மகத்துவங்கள் பேணப்பட வேண்டியவை, மனிதர்கள் அனைவரும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்று கருதியவன்.

கடைக்குட்டியாகவும் தந்தையின் செல்லப்பிள்ளையாகவும் வளர்ந்தபோதும் தன்னலமற்று மக்களுக்காகப் போராடப் புறப்பட்டவன். வன்முறைகளையும், காடையர்களின் அடக்கு முறைகளையும் அனுபவிப்பவர்களாக மக்கள் இருக்கக்கூடாது என்று கருதியவன். தமிழ் மக்கள் சுதந்திர நாட்டை அடையவேண்டும் என்ற கொள்கையில் தீராத பற்றுக்கொண்டிருந்தவன். அந்த நோக்கங்களுக்காகவே தன் உயிரையும் ஈந்த உண்மையான தியாகி. அவன் கனவு நிறைவேறாமலேயே நீள்கிறது.

> மண்ணுக்காக உயிரை துய்யத் துணிந்த அந்த மாமனிதனை ஒரேயொரு முறையேனும் தரிசித்துவிட மக்கள் கூட்டம் முண்டியடித்தது. அவன் உயிர் பிரிந்தபோது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் கதறியழுதனர்.



மல்லிகா

# பெண்கள் மீதான உளவியல் போர்



உலகில் மனித சந்ததிகள் வளர்ந்து செல்லக்காரணம் பெண். ஆதியில் அவளைச் சார்ந்தே வாழ்ந்த ஆண்கள், சொத்துடைமைச் சமுதாயம் மலர்ந்ததும் அவளையும் சொத்தாக்கினர். இதனால், தாய்வழிச் சமூகம் தந்தை வழிச் சமூகமானது. அந்தச் சமூகம் அவள் மீது எண்ணற்ற வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. இதில், இன்றைய நாகரிக யுகத்தில் பெண்களை அதிகம் துன்புறுத்தும் அவர்கள் மீதான உளவியல் போராக இருப்பது பாலியல் வன்முறையே.

**அடிமைகளாக்கப்படல்**

அதிகாரம் பறிபோகப் பெண்களுக்கு அடிமை விலங்குகள் மாட்டப்பட்டன. அவளைப் பாலியல் இயந்திரமாகவும் இன்பத்தின் ஊற்றாகவும் பார்த்தனர் ஆண்கள். அவளின் விருப்பங்களுக்கும் உரிமைகளுக்கும் எதிராக இருந்தனர். இந்த நிலையில், மாற்றத்தை யாசித்துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தினர் பெண்கள். இதனால் பெண் விடுதலை முனைப்புப் பெற்றது. அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் மீண்டும் உயர்ந்தனர் பெண்கள். ஆண்களுக்குச் சமமாகவும் வளர்ந்தனர் அவர்கள். ஆயினும், அவர்களின் அடிமை விலங்குகள் இன்னமும் முழுமையாக உடைபடவில்லை.

**தலைமைப் பீடங்களில்**

விலங்குகள் உடைக்கவும்- சிறகுகள் விரிக்கவும் துணிந்துவிட்ட பெண்களுக்கு, பெண்ணிய அமைப்புக்களும் பெண் விடுதலை யில் அக்கறை கொண்ட ஆண்களும் கரம் கொடுத்தனர். இதனால் இன்னும் ஒரு படி வேகமாக முன்னோக்கி நடந்தனர் பெண்கள். பாரதியின் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம், அறிவிலோங்கி வையகம் தழைத்திட உழைக்கின்றனர் அவர்கள். உலகெங்கிலும் வாழும் பெண்கள், உயரிய நிறுவனங்கள் மற் றும் அரச- தனியார் துறைகள் முதலான தலைமைப் பீடங்களில் பணியாற்றுகின்றனர். இரும்புப் பெண்கள் என்று ஆண்களே மெச்சும் அளவுக்கு இயந்திரமாகவும் பவ்வியமாகவும் உழைக்கின்றனர். இவர்களின் உழைப்பும் ஒருங்கிணைந்தே இன்று உலகத்தை ஒரு கிராமமாகச் சுருக்கியுள்ளது எனில் மிகையில்லை.

**அஞ்சும் ஆண்கள்**

இயல்பாகவே அறிவுத்திறன் மிக்கவர்கள் பெண்கள். வீட்டை மட்டுமன்றி நாட்டையும் அழகாக நிர்வாகிக்கத் தெரிந்தவர்கள் இவர்கள். அன்னை இந்திரா காந்தி, ஆங் சாங் சூகி போன்றவர்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். எங்கும் பெண், எதிலும் பெண் என்று கூறுமளவுக்கு இலங்கை உட்பட உலகம் வரை பெண்களின் பங்கேற்பு சகல துறைகளிலும் உள்ளது. அன்பை அன்பாலும், அதிகாரத்தை, அதிகாரத்தாலும்வெல்லத்தெரிந்த பெண்கள், அற்புத ஆளுமைகளாகத் திகழ்கின்றனர். இத்தகைய பெண்களின் அசுர வளர்ச்சி கண்டு ஆண்கள் அஞ்சுகின்றனர்.

**பாலியல் வன்முறை**

அறிவியல் ரீதியில் பெண்களை வெல்ல முடி யாத ஆண்கள், அவர்களுக்கு எதில் அடித்தால் வலிக்கும் என்று நன்கு சிந்தித்து, அவர்களை அழிப்பதற்குக் குறுக்கு வழியைக் கையாண்டனர். அதுதான் அவர்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள பாலியல் வன்முறை- உளவியல் போர். இதுதான் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அதியுச்ச வன்முறை. உள்வியல் ரீதியில் அவர்களை முடங்கச் செய்யும்தாக்குதல். இதனால் பாதிக் கப்படும் பெண்கள், தம்மைத் தாக்கியஆண்களைக் காட்டிக்கொடுக்கவும் தண்டிக்கவும் முன்வருவதில்லை.

**கேள்விக்குறியாகும் தனிநபர் ஒழுக்கம்**

ஒரு பெண் எந்தக் குற்றமும் செய்யவேண்டியதில்லை. அவள் ஒரு பெண்ணாக இருக்கிறாள் என்பதற்காகவே அவள் மீது வன் முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. இதில் அரும்பு, பிஞ்சு, பூ, காய், பழம் என்ற பேதம் கிடையாது. தம் சொந்த இன்பத்தை நுகர்வதற்காக எந் நிலையில் பெண் இருந்தாலும், அவள் பயன்படுத்தப்படுகிறாள்- இன்பம் கறக்கிறான் ஆண். அந்த ஆண்- தம்பி, அண்ணன், தந்தை, மாமன், சித்தப்பன், பாட்டன், அதிகாரி, ஆசான் என எந்த உறவு முறையாக இருந்தாலும், இன்பம் ஒன்றே அவன் இலக்கு. இந்தநிலையில், தனிநபர் ஒழுக்கம் என்பது இன்று கேள்விக்குறியாகி வருகிறது. எவரிடமும் அது நிலைத்து நிற்பதில்லை என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

**பாலியல் வன்முறைக்கு காரணம் என்ன?**

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு ஏராளம் காரணங்களை அடுக்கிக்கொண்டு போகலாம். அவற்றுள் மிக முக்கியமாக இருப்பவை ஆபாச இணையத்தளப் பாவனை மற்றும் ஆபாச சினிமாக்களின் அதிகரிப்பும், பெண்களைப் பழிவாங்கும் ஆண்களின் மனோப்பாவங்களுமே. இணையத்தளத்திலும், (போர்னோகிராபியை) பாலியல் காட்சிகளை பார்வையிடும் ஆண்களே பெண்களை அதிகம் வேட்டையாடுகின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. பெண்களைப் பழிவாங்கும் ஆண்கள், மிக நேர்த்தியாகக் காய்நகர்த்துகின்றனர். அது காதல் கொஞ்சலாக இருக்கும் அல்லது அன்புக்கான கெஞ்சலாக இருக்கும். இதன் அதியுச்சம் மிரட்டலாக இருக்கும். சில சமயங்களில் ஒன்றைக் கொடுத்துப் பெறுவதாகவும் இருக்கும்.

**மாற்றத்துக்கு வழி என்ன?**

ஆபாச இணையத் தளம் மற்றும் சினிமாக்களின் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால், இந்தத் தொழில்நுட்ப உலகத்தில் அது சாத்தியமற்றது. எனினும், கடுமையான சட்டங்களை உருவாக்கி, பாலியல் வன்முறையில் ஈடுபடுவோரைத் தண்டிப்பதன் வாயிலாகச் சற்றுக் குறைக்கலாம்.

அதேபோன்று பாலியல் விழிப்புணர்வுக் கல்வியைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இதன் தாக்கத்தைக் குறைக்கலாம்.



# முற்றுப்புள்ளி பெற்ற மகிந்தவின் தொட்டகுறை, விட்டகுறை

தவபாரதி

சர்வாதிகார ஆட்சி செய்து சென்ற மகிந்தவின் ஆட்சிக் காலம் நிறைவடைந்தும் கூட, தமிழர்களைக் குறி வைத்து அவர்களைப் பாதிக்கும் வகையில் கைச்சாத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றுதான் அண்மையில் நல்லாட்சி அரசால் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சம்பூர் அனல் மின் நிலையம் அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற போரின்போது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து மகிந்த அரசு கைப்பற்றிய முதலாவது பிரதேசம் சம்பூர் பகுதியாகும். 2006ஆம் ஆண்டில் இராணுவத்தின் பிடிக்குள் சென்ற சம்பூர் அதிலிருந்த உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு , அந்தப் போர்வை மூலமே இராணுவத்தால் தொடர்ந்தும் கையகப் படுத்தப்பட்டிருந்தது.

### மக்களின் எதிர்ப்பு

சம்பூரில் அனல்மின் நிலையம் ஒன்றை நிறுவுவதென இலங்கை மின்சார சபையும் இந்திய தேசிய அனல் மின் நிறுவனமும் (என்.ரி.பி.சி) இணைந்து கூட்டு ஒப்பந்தத்தை 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் 06ஆம் திகதி அன்று செய்தன. அன்றைய ஆட்சியாளர்களின் செல்வாக்குக் காரணமாக அதன் ஆரம்ப கட்டப் பணிகள் உடனே ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருந்த மக்கள் தங்களது வாழ்விடத்தில் உருவாக்கப்படும் அனல்மின் நிலையத்தால் நிலப்பரப்பை இழந்திருப்பதோடு அதனைக் கருத்திற் கொள்ளாமல் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால் அதனைச் சூழ்ந்துள்ள சூழலுக்கும் உயிர்களுக்கும் பாதிப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத் தும் என்றே அதன் உருவாக்கத்தை எதிர்த்து வந்தனர். இதில் ஒரு பகுதியினர் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இந்த மின் நிலையத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இறுதியாக இந்த வருட ஏப்ரல் மாதத்தில் கட்டை பறிச்சான் – சந் தோசபுர மக்கள் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தையும் குறிப் பிடலாம்.

### இலங்கை-இந்திய ஒப்பந்தம்

சம்பூர் அனல்மின் நிலையம் 500 மெகா வாற்ஸ் வலுவுடைய மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியவாறு அமைக்கப்படவிருந்தது. அதிகரித்து வரும் நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்ற நோக்குடன், 512 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமையப்போகும் இதன் கட்டுமானப் பணிகள் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட இருந்ததால், இந்தியா 200 மில்லியன் டொலர்களைக் கடனுதவியாக வழங்கியது. அத்துடன் அனல் மின் நிலைய உபகரணங்களையும் வழங்கும் என்றும் 540 ஏக்கர் காணியையும் உட்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி என்பவற்றை இலங்கை வழங்கும் என்றும் இருபத்தைந்து வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதற்கான வேலைத் திட்டங்கள் அனைத்தும் 2016ஆம் ஆண்டுடன் நிறைவடையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இன்றைய நல்லாட்சி அரசின் தலையீட்டால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

### அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி

அனல்மின் என்பது வெப்ப ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய பொருள்களை எரித்து அதிலிருந்து வெளிவரும் வெப்பத்தைக் கொண்டு நீராவியை உற்பத்தி செய்து , நீராவியால் இயக்கப்படும் சுழலியில் பொருத்தப்பட்ட மின் உற்பத்தி சாதனத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் மின்சாரம் ஆகும். இந்த வகை அனல் மின்னை உற்பத்தி செய்வதற்கு நீர், நிலக்கரி ஆகியன தேவை என்பதால் இவை எளிதாகக் கிடைக்கக் கூடிய இடங்களில் அனல் மின் நிலை யங்கள் நிறுவப்படுகின்றன. நிலக்கரியு டன் இயற்கை எரிவாயு, எண்ணெய் ஆகியவற்றை எரிபொருளாகக் கொண்டும் இந்த வகை அனல் மின் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஏலவே எமது நாட்டிலுள்ள புத்தள மாவட்டத்தின் நுரைச் சோலை அனல் மின் நிலையம் இத்தகையதே.

### தொடருமா நல்லாட்சி?

அதிகரித்து வரும் மின்சாரத் தேவைக்காக அமைக்கப்படும் அனல் மின் நிலையத்தால் அதனைச் சூழவுள்ள மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். மக்கள் தாம் வாழ்ந்தும் பாரம்பரியமாகத் தொழில் செய்தும் வந்த பகுதியை இழக்க நேரிடும். அனல் மின் நிலையத்தை அண்மித்த வனப்பகுதிகளிலுள்ள உயிரினங்கள், தாவரங்கள் பாதிக்கப்படும் . அத்தோடு அங்கே தேன் சேகரித்தல், கிழங்கு அகழ்தல் போன்ற ஜீவனோபாயத் தொழில்களில் ஈடுபடும் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

தினை, கேள், வரகு போன்ற தானியச் செய்கைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் அங்குள்ள ஆதிவாசிகள், பழங்குடியினர் உணவுக்கு அலைய வேண்டி ஏற்படும். புதிய நோய்கள் ஏற்படலாம். தொடர்ந்து எதிர்காலச் சந்ததிக்கும் இந்தப் பாதிப்புக்கள் தொடரும் என்பதால், இதற்கெதிராகக் குரல் கொடுத்து வந்த பிரதேச மக்கள், சிவில் அமைப்புக்களின் நீடித்த போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி இட்டுள்ளது நல்லாட்சி அரசு.

மக்களின் தொடர் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பூர் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் மாற்றுத் திட்டங்களிலும் மக் களின் ஒத்துழைப்புக்கள் இருந்தால் மட்டுமே மக்களாட்சி கொண்டதுதான் நல்லாட்சி என்பதற்குச் சாலப் பொருந்துவதாய் அமையும். அனல் மின் நிலையம் நிறுத்தப்பட்டது மட்டுமே போதாது. அதற்காக அரசு கையகப்படுத்திய மக்களின் வாழ்வாதார நிலங்களையும் அவர்களின் குடிமனைப் பகுதியையும் கூட மீளக் கையளிக்க வேண்டும். அதுவே நல்லாட்சிக்கு அழகு.

> அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற போரின் போது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து மகிந்த அரசு கைப்பற்றிய முதலாவது பிரதேசம் சம்பூர் பகுதியாகும். 2006ஆம் ஆண்டில் இராணுவத்தின் பிடிக்குள் சென்ற சம்பூர் அதிலிருந்த உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு , அந்தப் போர்வை மூலமே இராணுவத்தால் தொடர்ந்தும் கையகப்படுத்தப்பட்டிருந்தது.



# வாழைகளுக்கு வந்த வில்லங்கம்!



ந. ஜெயதாஸ்

சிவந்த தரைகள் படர்ந்த ஊருக்குள் கால் பதிக்கின்றோம். அது அங்கேயுள்ள மனிதர்களின் வியர்வை கலந்துதான் சிவந்து போயிருக்கும் போல. அதற்குக் கட்டியம் கூறுவதாகத் தென்படும் மனிதர்கள் சிலர் மரத்துப்போன மண்வெட்டி பிடித்த கைகளோடு அந்த மரத்தின் கீழ் நிற்கின்றனர்.

ஆம்! அண்மையில் நம்மூரில் எகிறிவிட்ட வாழைப் பழ விலையையும் வீழ்ச்சியடைந்த விளைச்சலையும் சற்றே விசாரித்தறிந்து கொள்ளவே இந்தப் பயணம். இது யாழ். பிரதேசத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ள நீர்வேலிப் பிரதேசம். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வானத்தை மறைத்துப் பரந்துள்ளதால் வெளிச்சம் குறைந்துவிட்ட மூடிப்படர்ந்த வாழைமரக் கூட்டங்களிடையே நுழைகின்றோம்.

தமது வேலையில் மும்முரமாக நின்று கொண்டிருக்கிறார்கள் மண் வெட்டியை ஏந்திய அந்த மனிதர்கள். பல ஏக்கர் கணக்கான காணிகளில் வாழையைப் பயிரிட்டுப் பரம்பரை பரம்பரையாகச் சீவித்து வரும் அவர்கள் அந்தத் தோட்டங்களுக்கு அருகிலேயே தமது குடியிருப்புக்களையும் அமைத்துள்ளனர். இதனால் அவற்றைப் பராமரிப்பது அவர்களுக்கு இலகுவாக அமைந்து விடுகின்றது.

### தோட்டம்

வாழைக்கன்றுகளைக் கிட்டத்தட்ட எட்டு முழத்துக்கு ஒன்று என்றவாறு ஒரு பரப்புக்குள் பதினைந்து வரையில் வளர்த்துக் கொள்கிறார்கள். கதலி, இதரை, கப்பல், மொந்தன் (கறி வாழை) ஆகிய இனங்களில் கதலியையே அதிகமாகப் பயிரிடுகின்றனர். நீண்டு வளர்ந்த, அளவில் பெரிய தாய் வாழை ஒன்றுடன் இணைந்து வளர்ந்துகொண்டிருக்கும் குட்டி ஒன்றும் காணப்படுகின்றது. வாழையிலிருந்து குலை ஒன்றை அறுவடை செய்வதற்கு ஒரு வருடம் பிடிக்கின்றது. முதலில் வெளிப்படும் அதன் பொத்தியை குலை விருத்திபெற்றதும் வெட்டினால், அதன் பின்னர் மூன்று மாதங்களில் பழங்கள் நிறைந்த குலையை அறுவடை செய்யமுடியும். அதனோடு வளர்ந்து வரும் குட்டியின் குலையை பின்னர் வரும் ஆறு மாதங்களில் அறுவடை செய்ய முடிகின்றது. பின்னர் அதன் குட்டி என்று அடுத்தடுத்துச் செல்கிறது வாழைக்குலை அறுவடை. இவ்வாறாக அடுத்தடுத்து பரந்த பரப்புக்களில் தொடர்ந்து விளைந்துகொண்டிருக்கும் வாழைப் பழ உற்பத்தியில் ஏனிந்த திடீர் வீழ்ச்சி?



### வீழ்ச்சி ஏன்?

இந்த வருட வைகாசி மாதத்தில் வீசியிருந்த காற்றினாலேயே களைகட்டியிருந்த வாழைப்பழச் செய்கை சோபையிழந்தது. வாழை மரம் மென்மையான தன்மையுடையது. நார்களால் கட்டமைக்கப்பட்ட அதனைக் காற்று ஆட்டம் காண வைத்துவிட அதனுள்ளே குருத்தாகிக்கொண்டிருந்த இந்தப் பருவத்துக்குக் கிடைக்கக்கூடிய வாழைக் குலைகளின் விருத்தி நெருக்கடிக்குள்ளாகிவிட்டது. இது வாழைகளைத் தாக்கும் ஒரு நோய் அல்ல. சென்ற வைகாசி மாதத்தில் வீசியிருந்த சோளகக் காற்றினால் (தெற்குத் திசையிலிருந்து வடக்கு நோக்கி வீசும் காற்று) குருத்தடைப்பு (பேச்சு வழக்கில் சடையிறது) என்ற தொண்டை அடைப்பு ஏற்பட்டு விளைச்சல் பாதிப்படைந்து விட்டது.

தலைப்பகுதியை அண்மித்ததாய் வெளிவரவிருந்த குருத்து காற்றினால் வாழை ஆடியதும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றது. இதனால் வழமை போன்று வெளிவராமல் இடையில் வெடித்துக் குலை வெளிவரும். இதனால் ஆரோக்கியமற்ற, சூம்பிய காய்களையுடைய குலைகள் வெளிவருகின்றன. இவற்றுடன் காற்றினால் முறிக்கப்பட்ட தாய் வாழைகள் தம்மை ஒட்டி வளர்ந்த குட்டிகளையும் முறித்து விடுகின்றன. இதன் பாதிப்பு இன்றுதான் நுகரும் எங்களை வந்தடைந்துள்ளன.

இவற்றுடன் குருக்கன் என்ற ஒரு வகை நோய்த் தாக்கமும் ஏற்படுகின்றது. இதனால் வாழைகள் அதிக கிளைகள் பரப்பி விடுகின்றன. அவற்றை எதிர்கொண்டு வெளிவரும் குலைகள் சீரற்றவையாகக் காணப்படுகின்றன. இதனாலும் தரமான குலைகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. இவை கதலி இன வாழைகளையே அதிகம் பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றன. இவற்றுடன் இதரை, கப்பல் போன்றவற்றுக்குக் குருத்து வெள்ளையாக அழுகி வரும் நோய் ஒன்றும் ஏற்படுகின்றது. நைலோன் குலை என்ற ஒரு வகை நோயாலும் பாதிக்கப்படும் இந்த வாழைகள் தமது விளைச்சலில் இவ்வருடம் வீழ்ச்சி கண்டுள்ளன.

அதிக காற்றுக் காரணமாக குருத்தடைப்பு – தொண்டைப்பு ஏற்பட்ட யாழ்ப்பாண மக்களால் அதிகம் நுகரப்படும் கதலிப் பழங்களுக்கே பெரும் தட்டுப்பாடும் அதிக விலையும் காணப்படுகின்றது.

### விரைவில் சரிவரும்

இத்தகைய தன்மைகள் இனிவரப் போகும் மழைப் பருவத்துடன் முற்றுப் பெற்றுவிடும். ஏனெனில் மாரி காலங்களில் வாழை களுக்கு நீர் பாய்ச்சத்தேவையில்லை. அதிக விளைச்சல் கிடைக்கும் மழை காலங்களில் வாழைப் பழங்களை மக்கள்நுகர்வதும் குறைவு. தன்னிச்சையாகப் பெருக்கமடையும் வாழையடி வாழைகளின் சாம்ராச் சியம் அண்மித்துக் கொண்டிருக்கும் மழை காலத்துடன் பெரிய விளைச்சலை எட்டப்போவதால் தற்போது நிலவுகின்ற வாழைப்பழத் தட்டுப்பாடுகளும் விலை ஏற்றங்களும் முற்றுப் பெற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

> இந்த வருட வைகாசி மாதத்தில் வீசியிருந்த காற்றினாலேயே களைகட்டியிருந்த வாழைப் பழச் செய்கை சோபையிழந்துள்ளது. வாழை மரம் மென்மையான தன்மையுடையது. நார்களால் கட்டமைக்கப்பட்ட அதனைக் காற்று ஆட்டம் காண வைத்துவிட அதனுள்ளே குருத்தாகிக் கொண்டிருந்த இந்தப் பருவத்துக்குக் கிடைக்கக்கூடிய வாழைக் குலைகளின் விருத்தி நெருக்கடிக்குள்ளாகி விட்டது.



# பிளாஸ்ரிக் போத்தல்களில் உள்ள உடல்நல அபாயம்!

மருத்துவர். சி.யமுனாநந்தா

பிளாஸ்ரிக் போத்தல்களில் உள்ள இரசாயன நச்சுக்கள் உடல் நலத்துக்குக் கேடாகலாம் என்பது அவதானிக்கப்பட்டு உள்ளது. இதனால் இலங்கை அரசு பிளாஸ்ரிக் போத்தல்கள் தயாரிப்பிலும் போத்தலில் அடைக்கப்படும் தண்ணீர் வியாபாரத்திலும் தரக்கட்டுப்பாட்டைப் பேண வலியுறுத்துகின்றது. பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள இரசாயனங்களில் முக்கியமாக உடல் நலத்துக்கு ஊறு விளைவிப்பவையாக உள்ள பிஸ் பீனோல் ஏ (BPA) எனும் பதார்த்தம் உடலில் ஈஸ்ரோஜன் ஓமோன் போன்ற இரசாயனக்கட்டமைப்பை உடையது. எனவே இது நஞ்சாதலால் நிர்ப்பீடனக்குறைபாடு பெண்கள் இளவயதில் பூப்படைதல், மாதவிடாய் சக்கரத்தில் மாறுபாடு ஆண்களிடத்தே விந்துக்களின் உற்பத்தி குறைதல் முன்னிற்கும் சுரப்பிப்புற்று நோய், மார்ப்புப் புற்றுநோய், நீரிழிவு, உடற்பருமன் அதிகரித்தல் என்பன ஏற்படலாம். அடுத்ததாக (Phthalates) பைத்தலைட் எனும் பதார்த்தம் ஓமோன்களில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஈரல் புற்று நோயை ஏற்படுத்தும். அடுத்து புரோமைட் எனும் பதார்த்தம் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே பிளாஸ்ரிக் போத்தல்களின் பாவனையை மறுபரிசீலனை செய்யவேண்டிய சூழல் உள்ளது. இயன்ற வரை இயற்கையான கொள்கலன்களையே பயன்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு பால் மாவைக் கரைத்து ஊட்டுபவர்களும் கண்ணாடிப் போத்தல்களைப் பயன்படுத்துவது நல்லது.

இலங்கையில் பிளாஸ்ரிக்கிலான உணவுக் கடதாசி, உணவு கையாளல் போன்றன கிழக்கு மாகாணத்தில் அதிகமாக உள்ளது. கிழக்கு மாகாண வீடுகளில் பெறப்பட்ட திண்மக்கழிவுகளில் 96 வீதம் உணவுக்ளைக் சுற்றப்பயன்பட்ட பிளாஸ்ரிக்குகள். இது தென் மாகாணங்களில் 80 வீதம் ஆகவும் வவுனியாவில் 76 வீதமாகவும் கிளிநொச்சியில் 75 வீதமாகவும் உள்ளது. இலங் கையிலுள்ள ஒரு வீட்டுக்கு சராசரியாக இது 35 வீதமாக உள்ளது. கொழும்பில் வீட்டுத்திண்மக்கழிவுகளில் உணவைச் சுற்றுவதற்குப் பயன்படுத்திய பிளாஸ்ரிக் கழிவுகள் 19 வீதமாக உள்ளன. இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களில் அதிகரித்த பிளாஸ்ரிக் பாவனைக்கு அவர்களின் வாழ்க்கைத் தர மாற்றமும் சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர்களின் வருகையும் காரணமாக அமைகின்றனர்.

எனவே பிளாஸ்ரிக் பாவனை உடல் நலத்துக்குக் கேடாவதுடன் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே இது தொடர்பான விழிப்புணர்வு எமக்குத் தேவை. குறிப்பாக இவற்றின் பாவனையைக் குறைக்கவும் மாற்று வழிகளைக் கண்டறியவும் முயற்சி செய்தல் வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணக்குடாநாட்டில் உணவுகளைப் பொதியிட வாழை இலைகளைப் பயன்படுத்தலாம். மண்பானைகளில் நீரைச் சேமிக்கலாம். கண்ணாடிக்குவளைகளைப் பயன்படுத்தலாம். குடிப்பதற்கான சுத்தமான நீரை குறிப்பாக இரணைமடுக்குளத்தில் இருந்து எடுத்தாவது விநியோகிக்கலாம். இது பற்றி சூழலியலாளர்களும் மருத்துவர்களும் நிர்வாக அதிகாரிகளும் சிந்திக்க வேண்டும்.

> “பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள இரசாயனங்களில் முக்கியமாக உடல் நலத்துக்கு ஊறு விளைவிப் பவையாக உள்ள பிஸ் பீனோல் ஏ (BPA) எனும் பதார்த்தம் உடலில் ஈஸ்ரோஜன் ஓமோன் போன்ற இரசாயனக் கட்டமைப்பை உடையது.”



# இட்டகொள்ளி

மரமொன்றை நடு
மனதில் கவலை இல்லை;
வரும்கால சந்ததி வளரும்
நன்மை கண்டு

காட்டை அழித்ததால்
நாடு கெட்டது;
வீடு செழிக்க வேண்டின்
விருட்சம் நடு

தட்டி மூட்டி
தடாலாய் புகை;
கெட்டியான உடம்பு
கொழுந்து விட்டு எரியுது பார்

மணக்கும் வாசம்
மனதை இழுக்கும் புகை;
உனக்கு நீயே
இட்ட கொள்ளி.

சிவா . பருத்தித்துறை.



# கலிகாலத் திருவிழா

வேட்டைத் திருவிழாவுக்காய் வேவு பார்க்க வருகிறது வேடுவர்கள் நிறைந்த கூட்டமென்று. அதில் கூச்சலிட்டு விசிலடிப்போர் ஒரு பக்கமாகவும் குவிந்து நின்று தமது மூஞ்சிகளைப் படம் எடுத்துப் பதிவிலிடுவோர் மறு பக்கமாகவும் நகர்ந்து செல்ல, பெருத்த தமது தொந்திகளை முன்னிறுத்தி நடத்திச் செல்கிறது நடுவர் குழுவென்று.

கடவுளர்கள் சவாரி செய்யும் வாகனங்கள் உயிர்பெற்று வரும் இந்தக் காலத்தில் அவர் தம் அடிவருடிகளின் ஆடம்பரங்களும் அதிகரித்து விட்டன. என்ன கொடுமை இது? இதுவரையில்லாத புதுவிதத் திருவிழா ஒன்று ஊர்முழுதும் நடந்தேறுகின்றது. எங்கிருந்தோ கொண்டுவரப்பட்ட யானை ஒன்று ஊர் முழுதும் உலவுகின்றதே. இது தான் இன்று ஊர் முழுக்கப் பரவி வரும் நாகரிகத் திருவிழா. பஞ்சம், பசி, பட்டினிகள் நிறைந்த நம் தேசம் கொண்ட புதுவிதத் திருவிழாவால் பாவப்பட்டவர்களுக்கு பயன் ஏதும் இல்லை. தெந்திகள் தான் வளர்வதும், வளம் பெறுவதுமாய் இருக்கின்றன. இதுதான் பணம் படைத்தோர் பக்தி வளர்த்துக் கொள்ளும் விதம்.

– ஜெ.றியா



# வேண்டாமே மணமுறிவு



12

எஸ்.மல்லிகா

கணவன்மார் தம் மனைவியைத் தவிர்த்து வேறொரு பெண்ணுடன் உறவு கொண்டால் விவாகரத்தை நாடுகின்றனர். அதேபோன்று, மனைவியர் செயற்படின் ஆண்கள் விவாகரத்துக் கோருகின்றனர். இன்று அநேகமான குடும்பங்கள் பிரிவதற்கு ஒருவருக்கு ஒருவர் செய்யும் இந்த நம்பிக்கைத் துரோகமும் காரணம் என்கின்றன ஆய்வுகள்.

மனித மனம் என்பது பூ மாதிரி. அன்பெனும் நீரை ஊற்றும்போது அது மலர்ந்தும், வெறுப்பெனும் தீயைக் காட்டும்போது அது காய்ந்தும் இருப்பது இயல்பு. எனினும், மனதில் விழும் அடியை உளவள ஆலோசனைகளால் சீர்செய்யலாம். ஆனால், நம்பிக்கைக்கு விழும் அடியை எதனைக் கொண்டும் சீர்செய்ய முடியாது. இதிலும், தம்பதியரிடையே நம்பிக்கை கேள்விக்குறியாகும் போது மணமுறிவுதான் ஏற்படும்.

இதற்கு உதாரணமாக ஒரு தம்பதியரின் வாழ்க்கை. அன்பாலும் மழலை மொழியாலும் நிறைந்த இல்லமது. வெள்ளை நிலவுகளென இரு பிள்ளை நிலவுகள். கணவன் பிரபல தொழிலதிபர். மனைவி அரச துறையில் பணியாற்றும் ஓர் அலுவலர். தன்னுடன் பணிபுரியும் சக ஆண் உத்தியோகத்தர் மீது மனைவிக்கு ஒருவித ஈர்ப்பு. அது நாளடைவில் காதலாகிக் கசிந்தது. இருவரும் பிரத்தியேக இடங்களில் தினமும் சந்திக்கத் தொடங்கினர். அந்தப் பெண்ணுக்குத் தன் பிள்ளைகள், கணவன் ஆகியோரின் அகமும் முகமும் மறந்தது. மூன்றாம் நபரான அந்த 'கள்ளக் காதலன்' அருளே இனித்தது. இத்தனைக்கும் அந்த நபர் இரு பிள்ளைகளுக்குத் தந்தை.



தன் மனைவியின் நடவடிக்கையில் சந்தேகம் உற்ற கணவன் அவளுக்குத் தெரியாமல் அவளைக் கவனிக்கத் தொடங்கினான். மனைவியின் லீலைகள் அம்பலமாயின. மனமுறிவுக்கு உள்ளான அவன் இடிந்துபோனான். கைக்குழந்தை அழுகை முதல் காதல் தோல்வித் தற்கொலை வரை பெரும்பாலனவற்றுக்கு மனமுறிவுதான் காரணி ஆகிறது. தவிர்க்க முடியாத இத்தகு சந்தர்ப்பங்களில் மனித மனம் செய்வதறியாமல் தவறான முடிவுகளை எடுக்கிறது. அப்படித்தான் அவனுடைய மனமும் முடிவெடுத்தது. ஆம்! தற்கொலை செய்ய முடிவெடுத்த அவனை, சமயத்தில் வந்து காப்பாற்றினான் நண்பன். அவர்களைக் குடும்பநல ஆலோசனைக்கு அழைத்துச் சென்றான். ஆயினும், தன் 'கள்ளக் காதலனை' தன்னால் மறக்க முடியவில்லை என்பதை வெட்கத்தை விட்டுத் தன் கணவனிடம் கூறினாள் மனைவி.

அதுமட்டுமல்ல தனக்கு விவாகரத்து வழங்கும்படியும் கெஞ்சினாள். சிறு பிள்ளைகள் மனம் தாயன்பை இழந்து விடும் போன்ற பல பிரச்சினைகளை எண்ணி விவாகரத்து வழங்க அவன் மறுத்தான். இந்தநிலையில் அந்த மூன்றாம் நபருக்கு கணவனின் நண்பன் கடும் எச்சரிக்கை விடுத்தும் அவர்களின் லீலை தொடர்ந்தது. மனைவியை வேலையை விட்டு நிற்குமாறு கூறியும் அவள் கேட்பதாயில்லை. எனினும் பிள்ளைகளுக்காக அவன் மனதைக் கல்லாக்கிக்கொண்டு வாழ்கிறான். வீட்டிற்குள் இரு துருவங்களாக அவனும் அவளும் வசித்தாலும் அவளைப் பிரிய அவனது மனம் இடமளிக்கவில்லை. என்றாவது மனைவியின் மனம் மாறும் என்ற நம்பிக்கையில் அவன் நாள்களை நகர்த்துகிறான். சுவருடன் மட்டும் பேசிக்கொண்டு அவனுடைய காலம் கரைகிறது.

மனித வாழ்க்கையில் எதுவும் எப்படியும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற களிமண் நெகிழ்ச்சி மனதுக்குத் தேவை. கல் மனம் உடைந்துப் போகும். களி மனம் உடையாது- குலையும். ஆனால் மீண்டும் உருவெடுக்கும்- தளிர்க்கும். அந்த நம்பிக்கைத் துளிர்களைத் தழுவியபடி மீண்டும் ஒரு வசந்தத்திற்காய் காத்திருக்கிறான் அவன். யார் சொன்னது ஆணுக்குள் ஈரமில்லை என்று?

(தொடரும்...)

## ஹைக்கூ

கண்கெட்டபிறகு
சூரிய நமஸ்காரங்கள்
'கரிகாலன்'

நெருப்பாய் எரிகின்றன
இரு மாநிலங்கள்
ஒரு சொட்டுத் தண்ணீர்!

திரைகடலோடி
திரவியம் தேடு
கஞ்சாப் பொதிகள்.

தலை நிமிர்கிறார்கள்
தகுதியற்றவர்கள்
பல்லிளிக்கிறது பணம்.

வயிற்றை நிரப்புகிறது
வடிகஞ்சி
வளர்ப்பு ஆடு பட்டினி.

அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.



## சிரிக்க... சிந்திக்க...



**நண்பன்(1)** - என்ன மச்சான் கலியாணம் முடிஞ்ச கையோடை ஹனி மூன் போகப் போறதாகச் சொன்னாய் இஞ்சை நிற்கிறாய்?

**நண்பன்(2)** - ஹனி மூனுக்கு முதல் பான் கீ மூனைச் சந்திக்கப் போறன்

**நண்பன்(1)** - ஏன்

**நண்பன்(2** - அப்பாவித் தமிழரைக் காப்பாற்றத் தவறியது ஏன்? எண்டு கேட்கப் போறன்.

**நண்பன்(1)** - கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்து என்ன பிரயோசனம் மச்சான். கீதையில் கண்ணன் சொன்னது போல என்ன நடந்ததோ அது நன்றாகவே நடந்தது நடக்கப் போவதும் நன்றாகவே நடக்கும் எண்டு நம்பி வாழவேண்டியதுதான். நீ மூனிட்டைப் (சந்திரன்) போனாலும் சன்னிட்டைப் (சூரியன்) போனாலும் வேலையில்லை மச்சான்.

கோ. கலைவாணி,

# உங்களாலும் ஓர் உயிரைக் காப்பாற்ற முடியும்



ஒவ்வொருவருமே தமது வாழ்வில் அன்றாடம் ஏதாவது ஒரு பிரச்சினையுடனே வாழ்கின்றனர். சிலர் அதிலிருந்து இலகுவாக மீண்டுவிடுவர். ஆனால், சிலரால் அவ்வாறு மீள முடிவதில்லை. அதன் விளைவாகவே பலவாறான தற்கொலைகள் இடம்பெறுகின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் தற்கொலை இறுதித் தீர்வல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை - தற்கொலை புரிபவர்கள் சுயநலவாதிகளே. ஏனெனில், தமது பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் தாம் சார்ந்த உறவுகளுக்கு வேதனையை ஏற்படுத்துவதுடன், தம்முடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் பிறர் மீது திணிக்கின்றார். ஒருவர் தன்னை முடிவுறுத்த அல்லது திருப்திப்படாத தேவைகள் குறித்து இன்னொருவருக்குத் தெரியப்படுத்தியபின் எடுக்கும் முடிவே தற்கொலை. இன்றைய காலத்தில் ஏற்படும் பல்வேறு உள,சமூக நெருக்கீடுகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் அதிகளவானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதைப் புள்ளிவிவரங்களுக்கூடாக அறிகின்றோம்.

உலக சுகாதார ஸ்தாபனம் உலகளாவிய ரீதியில் 800,000 இற்கும் மேற்பட் டோர் வருடந்தோறும் தற்கொலை புரிவ தாகக் கூறுகின்றது. அத்துடன், 40 செக் கனுக்கு ஒருவர் தற்கொலை செய்கின்றார் என்றும் கூறுகின்றது.

எமது நாடு தற்கொலை புரிபவர்களின் பட்டியலில் நான்காம் இடத்தில் உள்ளது. இதிலும் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டங்கள் முன்னிலையில் இருக்கின்றன. எதிரான உணர்வுகள் மற்றும் முழுமை செய்யப்படாத தேவைகள் ஆகியன தற்கொலையைத் தூண்டினாலும், இதுவொரு உடனடிச் செயலல்ல. ஒரு படிமுறையிலேயே இடம்பெறுகின்றது. ஆரம்பத்தில் ஒருவிடயம் தொடர்பாக மிகை அழுத்தம் ஏற்படும். அது மீண்டும் மீண்டும் தொடரும்போது மனச் சோர்வு நிலைக்கு இட்டுச் செல்லும். அப்போது ஏற்படும் கவலை, விரக்தி என்பன தனக்கு எவரும் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. இது நாளடைவில், வாழ்வதை விட இறப்பதே மேல் என்ற தற்கொலை எண்ணத்தை உருவாக்கிறது. அதன் பொருட்டு பல்வேறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு , இறுதியில் தம் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களில் 80 வீதமானவர்கள் ஏதோவொரு வகையில் தமது இறுதி முடிவை வெளிப்படுத்தியிருப்பர். அதனைக் கவனத்தில் கொண்டு நாம் ஒவ்வொருவரும் செயற்பட்டால், அநாவசியமாக மடியும் ஒரு உயிரைக் காப்பற்றலாம். அதற்காகக் கையாளக்கூடிய சில வழிமுறைகள் வருமாறு:

## உடல்- உள ஓய்வுப் பயற்சிகள்

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் பெரிய மனச்சோர்வு நிலையில் காணப்படுவர். அவர்களுக்கு உடல்- உள ஓய்வுப் பயிற்சிகள் அளிப்பது சிறந்த வழிமுறை. அதற்காக தியானம் மந்திர உச்சாடனம், மூச்சுப் பயிற்சி, தளர்வுப் பயிற்சிகள் போன்றனவற்றை மேற்கொள்ளலாம்.

## உடற் பயிற்சி

தினமும் செய்யப்படும் உடற்பயிற்சிகள் உளப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு உதவிசெய்வதாக ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. உடற்பயிற்சி வாயிலாக மூளையில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக இந்தச் சிகிச்சைச் செயற்பாடு தொழிற்படுவதாக ஆதாரங்கள் உள்ளன. எனவே, உடற்பயிற்சி மிக முக்கியமான ஒரு வழிமுறையாக இப்பொழுது கொள்ளப்படுகிறது. உடற்பயிற்சி மனிதனுக்கு உற்சாகத்தையும் உடல் வலிமையையும் தந்து அதனூடாக மன வலிமையை அளிக்கிறது. கடினமான உடற் பயிற்சிகளைவிட நடத்தல் மற்றும் மென் ஓட்டம் போன்ற பயிற்சிகள் உபயோகமாக அமையும்.

## நெருக்கீடுகளைக் குறைத்தல்

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருப்பவர் பெரும்பாலும் பலவகையான நெருக்கீடுகளுக்கு முகங்கொடுப்பவராகக் காணப்படுவார். அத்துடன், அவர் அவற்றை எதிர்கொள்ள இயலாதவராகவும் காணப்படுவார். தேவையற்ற நெருக்கீடுகளைத் தவிர்த்தல் அல்லது அதன் தாக்கத்தைக் குறைக்கும் வழிகளில் ஈடுபடல் மனச் சோர்விலிருந்து விடுபட உதவும். இத்தகைய சிறிய மாற்றங்கள் பெரியளவில் பலனைத் தரவல்லன. சில கடமைகளைப் பிற்போடுதல் மூலமும் தேவையற்ற நிகழ்வுகளைத் தவிர்த்து ஓய்வெடுத்தல் மூலமும் நெருக்கீடுகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

## எதிர்மறை எண்ணங்களை நிராகரித்தல்

எமது எண்ணங்களே எமது மனோபாவத்துக்குக் காரணமாக அமைகின்றன. இவை எதிர்மறை- நேர்மறை என்று இருவகைப்படும். இதில், எதிர்மறை எண்ணங்கள் தொடராக ஏற்பட்டு, அவையே எமது வாழ்வின் அங்கமாகவும் ஒரு பழக்கமாகவும் மாறி விடுகின்றன. அவை எமது துயர மன நிலையைத் தக்கவைத்து மனச் சோர்வை ஏற்படுத்தித் தற்கொலைக்கு இட்டுச்செல்லுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு நிராகரிப்பதன் மூலம் யதார்த்தமான- நேர்மறை எண்ணங்களை எம்மில் ஏற்படுத்தலாம். இதன் மூலம் சுய இரக்கத்தைத் தவிர்த்துத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி மகிழ்வாக வாழலாம்.

## அன்பான உறவுகளை உருவாக்குதல்

தனிமை தற்கொலைக்கான பிரதான காரணங்களுள் ஒன்று. தனிமையிலே தான் அதிகளவு எதிர்மறை எண்ணங்கள் உருவாகின்றன. இதனைத் தவிர்த்து மற்றவர்களுடன் ஆரோக்கியமாக உறவாடல் மிக முக்கியம். மற்றவர்களுடன் கலந்து மகிழ்தல் மற்றும் பொது இடங்களில் ஒன்றுகூடல் போன்ற நிகழ்ச்சிகளில் நாம் ஈடுபடும்போது, இந்தத் தனிமை உணர்வு நிலை குறையும். அத்துடன், அன்பான உறவுகளைச் சம்பாதிப்பதன் மூலமும் தனிமையைப் போக்கலாம்.

## பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடல்

பிடித்தமான ஓய்வுபடுத்தும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் சிறந்தது. பூந்தோட்டம் அமைத்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் மற்றும் இயற்கையை இரசித்தல் போன்றவற்றைச் செய்யலாம்.

> தனிமை தற்கொலைக்கான பிரதான காரணங்களுள் ஒன்று. தனிமையிலே தான் அதிகளவு எதிர்மறை எண்ணங்கள் உருவாகின்றன. இதனைத் தவிர்த்து மற்றவர்களுடன் ஆரோக்கியமாக உறவாடல் மிக முக்கியம். மற்றவர்களுடன் கலந்து மகிழ்தல் மற்றும் பொது இடங்களில் ஒன்றுகூடல் போன்ற நிகழ்ச்சிகளில் நாம் ஈடுபடும்போது. இந்தத் தனிமை உணர்வு நிலை குறையும். அத்துடன், அன்பான உறவுகளைச் சம்பாதிப்பதன் மூலமும் தனிமையைப் போக்கலாம்.

இதனைவிட நகைச்சுவைகளை வாழ்வில் சேர்த்துக்கொள்ளலாம். மனதுக்குப் பிடித்தமான பாடல்களையும் கேட்கலாம்.

## திறன்களைத் தேடிக் கண்டறிதல்

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தாம் சிந்திக்கும் ஒரே வழி தான் பொருத்தமானது என்று யோசிப்பர். ஆனால், இந்தப் பிரச்சினையைவேறு வழியாகவும் யோசிக்கலாம் அல்லது தீர்வு காணலாம் என்பதைப் புரியவைத்தல் வேண்டும். உதாரணமாக: சிறந்த விளையாட்டு வீரனான மாணவன் ஒருவன் பரீட்சையில் தோல்வியடைந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருப்பின் அவனுக்கு வாழ்வில் முன்னேற அவனிட முள்ள விளையாட்டுத் திறனைச் சுட்டிக் காட்டலாம்.


இவ்வாறான செயற்பாடுகளினூடாகத் தற்கொலை முயற்சியாளரைக் கையாள்வதுடன், தற்கொலை செய்யக்கூடிய அபாயத்தில் உள்ளவர்களையும் கையாளலாம். இதனைத் தேர்ச்சி பெற்றவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. உதவவேண்டும் என்ற சிந்தனை உள்ள அனைவருமே மேற்கொள்ளலாம். தற்கொலையற்ற சமுதாயத்தை உருவாக்க அன்னவரும் முன்வருவோம்.

கட்டுரையாளர்
உதவி விரிவுரையாளர்,
மெய்யியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



யாழ். ஆனந்தன்

# உளவியல் போர் புரிகின்றார் மைத்திரி!



## ஈழத்தமிழரைப் பயங்கரவாதிகளில் இருந்து போதை பாவிப்பவர்களாகக் காட்டும் நல்லிணக்க அரசு

அண்மையில் இலங்கை ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இரு முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டார். ஒன்று போதைப்பொருள் தொடர்பான விழிப்பு நிகழ்வு. இதில் போரின் பாதிப்பைவிட போதைப்பொருளின் பாதிப்பினாலேயே யாழ்ப்பாண மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

அடுத்ததாகயாழ்ப்பாணபொலிஸ் நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டார். இதில் எல்லா அரசியல் தரப்புக்களும் கட்சி பேதமின்றிக் கலந்துகொண்டன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது தமிழர்களுக்கு நன்மை செய்பவர்களாக இவர்கள் அனைவரும் தெரிகின்றனர்.

ஆனால், போதைப்பொருள் பாவனையும், மதுப் பாவனையும் குற்றச் செயல்களும் 2009ஆம் ஆண்டுக்குப் பின்பே யாழ்ப்பாணத்தில் அதிகரித்தன. இலங்கையின் நீதித்துறை, காவல்துறை என்பவற்றைத் தமிழ் மக்கள் அங்கீகரிக்கத் தமிழ் மக்களிடையே குற்ற வாளிகளை உருவாக்குவதே இலங்கை புலனாய்வுப்பிரிவின் முதல் நடவடிக்கையாக அமைந்தது. இதற்கு அரச நிர்வாக கட்டமைப்புகளும் குறிப்பாக மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் உறுதுணையாக இருந்தனர்; இருக்கின்றனர்.

### எப்படி வந்தது போதை?

யாழ்ப்பாணத்தில் மதுப்பாவனை அதிகரித்து உள்ளதாக கூறுபவர்கள், முதலில் யாழ்ப்பாணத்தின் மூலை, முடுக்குகளில் புதிய புதிய மதுபான விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதியளித்த அதிகாரிகளையே அதற்கான குற்ற வாளிகளாகக் காணவேண்டும். உண்மையில் இத்தகைய வரையறை அற்ற அனுமதிகளை அரசியல்வாதிகளின் அனு சரணையுடன் வழங்கியஅதிகாரிகளே முக்கியமான குற்றவாளிகளாவர். யாழ்ப்பாணத்தில் மதுப்பாவனையை அதிகரிக்கப் புதிது புதிதாக பல விடுதிகள் அமைக்கப்பட்டன. அவற்றுள் இராணுவத்தால் நிர்வகிக்கப்படுவது, கடற்படையினால் நிர்வகிக்கப்படுவது, வர்த்தகர்களால் நிர்வகிக்கப்படுவது, தனியார்களால் நிர்வகிக்கப்படுவது எனப் பல ரகங்கள் உண்டு. இவற்றின் மீது உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கட்டுப்பாடு இல்லை.

எனவே, அதிகரித்த மதுப்பாவனையைக் கட்டுப்படுத்த அரச நிர்வாகம் நடவடிக்கை எடுக்காது என்பதையும் மது, போதைப் பிரச்சினை என்பது ஒரு சமூகத்தை அணுகுவதற்கும் அந்தச் சமூகத்தை அடக்குவதற்கும் சிறந்தது என்பதும் இலங்கை அரசுக்குத் தெரியும். அதனாலேயே போதைமூலம் போர் வடுக்களை மூடலாம் என எண்ணங்கொண்டது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்பே இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்தில் மாதகல், தொண்டமானாறு பிரதேசங்களுக்குக் கஞ்சா கடத்தப்படுகின்றது. அங்கிருந்து இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளுக்குப் போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. இந்தப் போதைப் பொருள்கள் கடத்தலைச் சுலபமாக அரசியல்வாதிகளின் துணையுடன் யாழ்ப்பாணம், கொழும்பு பஸ் சேவை கள் காரைநகர், சுழிபுரம், காங்கேசன் துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து நடத்துகின்றன. யாழ்ப்பாணம் – கொழும்பு பயணச் சேவையாழ்.பஸ் நிலையத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஆனால் யாழ். குடாநாட்டின் புறநகரங்களில் இருந்து இந்தச் சேவைகள் ஆரம்பிக்கும்போது முடிச்சு மாறி களால் போதைப் பொருள் கடத்தல்கள் நடைபெறும்.

### அதிகாரிகளே பொறுப்பு


இவற்றைக் கட்டுப்படுத்தாத யாழ். சிவில் அதிகாரிகளும் இதில் குற்ற வாளிகளே. போதைப்பொருள்களை விற்பனை செய்பவர்களைத் துரத்திச் சென்ற மதுவரித் திணைக்கள அதிகாரிகள், அந்தக் குற்றவாளிகள் இராணுவ முகாமுக்குள் தப்பி மறைவதையும், அவர்கள் இராணுவத் துணைப் படைகளில் இருப்பதையும், கண்டு தமது இயலாமையை வெளி யில் கூற முடியாது உள்ளனர் என்று வெளியில் புலம்புகின்றனர். இது உண்மையானால் பின்னணிகள் எங்கே இருக்கின்றன? யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவதில் யாழ். அரச அதிபரின் பங்களிப்பு அதாவது இலங்கை அரசின் உண்மையான பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். அன்றேல் மக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மதுபான விடுதிகள், மதுபான நிலையங்கள், நட்சத்திர விடுதிகள் என்பனவற்றை முற்றுகை இடும் சூழல் உருவாகவேண்டும். இவை இரண்டைத் தவிர்த்து வேறு வழிகள் என்பது முதலையின் கண்ணீர் போன்றது.

### இளையோர் பலிக்கடா

போதைப்பொருள்மற்றும்சமூகவன்முறைகளுக்கு எமது இளம் சமூகம் விரும்பி அடிமையாகும் சூழல் வளர்ந்து வருகின்றது. இதில் உயர்தர வகுப்புப் பாடசாலை மாணவர்களும், பாடசாலையை விட்டு விலகியவர்களும் காவு கொள்ளப் படுவதைக் காணலாம். அடுத்து வெளிநாட்டில், உறவினர்களிடம் இருந்து பணத்தைப்பெறும் இளைஞர்களிடமும் போதைக்கு அடிமையாகும் தன்மை அதிகம். இந்த இளைஞர்கள் இங்கு வெட்டியாக இருந்து விட்டு வெளிநாடுகளுக்குச் செல்ல முனைகின்றனர். இதனால் புலம்பெயர் தேசங்களில் எமது சமூகத்தில் பிறழ்வுக் கூட்டம் உருவாகும். இன்று ஈழத் தமிழரின் பலம் புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழரின் காத்திரமான இருப்பே. இதை உடைப்பதற்கான சதியே யாழ். குடாநாட்டில் நிகழும் போதையூட்டல்கள். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் அடக்கிய இலங்கை அரசு, பின் இராஜ தந்திர ரீதியில் அடக்கியது. இவை இரண்டிலும் வெற்றி கொண்ட இலங்கை அரசு இன்று உளவியல் ரீதியில் அடக்குவதிலும் வெற்றி கண்டு வருகின்றது.

இதை ஒரு சில உதாரணங்களால் எடுத்துக் காட்டலாம். பாடசாலை மாணவிகளை ஜனாதிபதியின் காலில் விழ வைக்கும் அரசியல்வாதிகள், இளைஞர் கூட்டத் தைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப் படையினரைப் பயன்படுத்தும் செயன் முறை என்பவற்றைக் குறிப்பிடலாம். உண்மையில் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி தங்கள் அதிகாரத்தைப் பலப்படுத்தும், ஆக்கிரமிப்பு அரசின் செயலாகவே இவற்றை நாம் நோக்க வேண்டும்.





மலேசியத் தலைநகரில் இருக்கும் இந்தியத் தூதரகம் நம்ப முடியாத விதத்தில் அடித்து நொருக்கப்படுகிறது. இந்திய அரசின் உளவுப் பிரிவான 'ரா', தாக்குதலின் காரணத்தைத் துருவத் தொடங்குகிறது. இதை விசாரிக்கும்படி, இடைநீக்கத்தில் இருந்துவரும் 'ரா' அதிகாரி அகிலனை (விக்ரம்) கோருகிறது. முதலில் மறுக்கும் அவர், இதில் சம்பந்தப்பட்டது லவ் என்பவன் என்றதும் உடனே ஒப்புக்கொள்கிறார். லவ், அகிலனின் மனைவி மீராவின் (நயன்தாரா) மரணத்துக்குக் காரணமானவன். விக்ரமுடன் துணை உளவு அதிகாரியாக செல்கிறார் நித்யா மேனன்.

விசாரணையில் அதிபயங்கர ஊக்க மருந்தின் ஆபத்தான முகம் வெளிப்படுகிறது. அப்படியொரு மருந்தைத் தயாரித்து தீவிரவாத அமைப்புகளுக்கு உலகம் முழுவதும் விற்க முயலும் இரக்கமற்ற வில்லன்தான் லவ். மலேசியாவில் இருக்கும் வில்லனை விக்ரமால் நெருங்க முடிந்ததா? நயன்தாரா என்ன ஆனார்? லவ்வின் பேரழிவுத் திட்டத்தை தடுக்க முடிந்ததா? இதுதான் இருமுகன்.





விறுவிறுப்பான திரைக்கதை, தரமான மேக்கிங் ஆகியவற்றால் கவனிக்க வைத்த அரிமா நம்பி படத்தின் இயக்குநர் ஆனந்த் சங்கர் எழுதி, இயக்கியுள்ள படம். அதிபயங்கர விளைவை உருவாக்கும் ஊக்க மருந்து ஒன்றை முக்கிய கதாபாத்திரங்களோடு பிணைத்து த்ரில்லர் கதையை எழுதியிருக்கிறார். ஊக்க மருந்துக்கு அவர் தரும் முஸ்தீபான சித்திரிப்புகள், அதை எடுத்துக்கொள்பவர்களின் விஸ்வரூபம், அதை வைத்து நாயகனும் வில்லனும் ஆடும் அதிரடி ஆட்டம் என அத்தனையும் படமாக்கப்பட்டுள்ள விதத்தால் கவர்கின்றன.

படத்தின் முதல் பாதி வேகமாக நகருகிறது. பாத்திர வார்ப்புகள், தனிப்பட்ட உணர்ச்சிகள், மனித இனத்துக்கு எதிரான குற்றம் ஆகியவை சுவாரஸ்யம் சேர்க்கின்றன. ஆனால் முக்கியமான திருப்பங்களில் நம்பகத் தன்மை இல்லாததால் படம் பார்வையாளர்களின் கவனத்தை தக்கவைக்க தவறுகிறது.

கொடூரமான வில்லனின் கையில் பலமுறை சிக்கும் நாயகன் பத்திரமாகத் திரும்பிவிடுவது சிரிப்பை வரவழைக்கிறது. வில்லனை அடைத்து வைத்திருக்கும் மலேசியச் சிறை அநியாயத்துக்கும் போலியாக இருக்கிறது. அங்கிருந்து வில்லன் லவ் தப்பிக்கும் வழிமுறை அபத்தங்களின் அபத்தம். மலேசியக் காவல் துறையினைச் சித்திரித்த விதத்தில் திரையரங்கில் சிரிப் பலைதான் எழுகிறது.

மருத்துவமனைக்குள் நடக்கும் திருப்பங்களும் நகைச்சுவைக்குரிய பஞ்சத்தைப் போக்குகின்றன. இரசாயன வாயு மூலம் நரம்பு மண்டலம் முடக்கப்படும் நாயகன் அடுத்த நிமிடமே மின்னல் வேகத்தில் கார் ஓட்டுகிறார். இப்படி நீளும் கட்டுக் கதைகளால் கிளம்பும் கொட்டாவிகளுக்குப் பொருத்தமான முத்தாய்ப்பு கிளைமாக்ஸ்.

# இருமுகன்

## ஒப்பனை அதிகம் கற்பனை குறைவு

அகிலன், லவ் என இரண்டு கதாபாத்திரங்களுக்கான வேறுபாட்டை அநாயாசமாகக் கொண்டு வந்துவிடுகிறார் விக்ரம். அகிலனின் தீவிரம், லவ்வின் அலட்டிக்கொள்ளாத வில்லத்தனம் இரண்டையும் கச்சிதமாக வெளிப்படுத்துகிறார். நயன்தாராவுக்குக் காதல், டூயட்டோடு முடிந்துவிடாத வேடம். ஆனால், திரைக்கதையின் ஓட்டைகள் இவரது பாத்திரத்தையும் பாதிக்கின்றன. நயன்தாராவின் திரை ஆளுமை வசீகரிக்கிறது என்றாலும், அவர் பல காட்சிகளிலும் ஒரே மாதிரி நடிக்கிறார். நித்யாமேனனின் பாத்திரம் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வேடம் இல்லை. நாசர் விடயமும் அதேதான். சிரிக்கவைப்பதில் திரைக்கதையின் திருப்பங்களுடன் தம்பி ராமையாவால் போட்டிபோட முடியவில்லை. நயன்தாராவின் ஆடைகளும் பாடல் காட்சிகளில் அவரது தோற்றங்களும் கவர்கின்றன. பாதி கலை இயக்கம், மீதி கிராபிக் மென்பொருளில் உருவான செட் வடிவமைப்பு என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.



காட்சிகளுக்கும் பாத்திரங்களுக்கும் ஏற்ப உருமாறும் வண்ணங்களில் ஒளிப்பதிவாளர் ஆர்.டி.ராஜ சேகரின் கற்பனை பளிச்சிடுகிறது. சேஸிங் காட்சி கள், சண்டைக் காட்சிகளில் கமரா துடிப்பாகச் செயற்படுகிறது. ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் ஹெலணா பாடல் மட்டும் ஈர்க்கிறது. பின்னணி இசையில் பல படங்களின் எதிரொலி கேட்கிறது. இருமுகனில் ஒப்பனை அதிகம். கற்பனை குறைவு!

"பள்ளி மாணவிகள்
பலமாகத் தாக்கப்பட்டனர்"
பத்திரிகைச் செய்தி தனில்
பதவியாசை தெரிகிறதே....

என்னே.... கொடுமை இது
கவர் தகைமை கூட இதுவன்றோ...
தலைமை தாங்கும் இவர்க்கெல்லாம்
தனியான ஆசை உள்ளதால்தான்
பள்ளி மாணவிகள் படாதபாடு படுகிறார்கள்

இதுவரையில் இருந்தோர் காலம்
இப்படி ஏன் அமைந்ததில்லை?
அரசியலின் முனைப்புக்களைப் பற்றியுள்ளதில்
தெரிகிறதே
அவர் தம் தாற்பரியம்

இருக்குமிடத்தில் தொடர்ந்திருந்தால்
இலாபம் இன்னும் இருக்கும் போல...!

## இருக்குமிடத்தில் எல்லாம் சௌக்கியமோ...?





# அகீரா

## பெண்மையின் சீற்றம்

சாந்தகுமார் இயக்கத்தில் வெளியான மௌனகுரு படத்தை நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, அகீராவாக ஹிந்தியில் மறுஆக்கம் செய்திருக்கிறார் இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ்.

ஜோத்புரில் வசிக்கும் பள்ளி செல்லும் சிறுமி அகீராவின் (சோனாக்ஷி சின்ஹா) வாழ்க்கை, ஒரு அசிட் வீச்சுச் சம்பவத்தை நேரில் பார்த்த பிறகு மாறுகிறது. அவளுடைய அப்பா (அதுல் குல்கர்னி) தன் மகள் நடனம் தெரிந்துகொள்வதைவிட கராத்தே தெரிந்துகொள்வது முக்கியம் என்று நினைக்கிறார். கராத்தே கற்றுக்கொண்ட பிறகு, அகீராவின் தன்னம்பிக்கை அதிகமாகிறது. அதைத் தொடர்ந்து நடக்கும் ஒரு சண்டையில் மூன்று ஆண்டுகள் அகீரா சிறைக்குச் செல்ல நேர்கிறது.

பதினான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, அண்ணனுடன் வசிப்பதற்காக மும்பைக்கு வருகிறாள். கல்லூரியில் அமைதியாகப் படிப்பைத் தொடர வேண்டும் என்று நினைக்கும் அகீராவைத் தேடி வருகின்றன பிரச்சினைகள். இதற்கிடையில் ஊழல் அதிகாரியான கோவிந்த் ரானே (அனுராக் கஷ்யப்) பெரும் பணத்துக்கு ஆசைப்பட்டு, ஒரு விபத்தை மூன்று காவல்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து மூடிமறைக்கிறார். எதிர்பாராத விதமாகக் கோவிந்தின் திட்டத்தில் வசமாகச் சிக்கிக்கொள்கிறார் அகீரா. இந்த வழக்கைக் கண்டுபிடிப்பதற்காக வருகிறார் ராபியா சுல்தான் (கோங்கணா சென்). அகீராவால் இந்தப் பிரச்சினையில் இருந்து வெளி வர முடிந்ததா இல்லையா என்பதுதான் படம்.

பொலிவூட்டில் கஜினி, ஹாலிடே படங்களைத் தொடர்ந்து முருகதாஸ் இயக்கியிருக்கும் இந்தப் படம் பல அம்சங்களில் கவனத்தை ஈர்க்கிறது. சாந்தகுமாருடன் இணைந்து முருகதாஸ் எழுதியிருக்கும் திரைக்கதையை முக்கியமானதாகச் சொல்லலாம். கதாநாயகனை முன்னிறுத்தி எடுக்கப்பட்டிருந்த ஒரு படத்தை கதாநாயகிக்கானதாக மாற்றி அமைத்திருப்பது துணிச்சலான முயற்சி. அத்துடன், கதாபாத்திரங்களின் தேர்வையும் படத்தின் பலமாகச் சொல்லலாம். ஆர். டி. ராஜசேகரின் ஒளிப்பதிவும், ஸ்ரீகர்பிரசாத்தின் படத்தொகுப்பும் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

அகீராவாக சோனாக்ஷி சின்ஹா நடிப்பிலும் சரி, சண்டைக் காட்சிகளிலும் சரி அசத்தியிருக்கிறார். பாலிவூட்டில் ஆக்ஷன் ஹீரோயினாக வலம்வருவதற்கான எல்லா சாத்தியங்களும் சோனாக்ஷியிடம் தெரிகின்றன. ஏ.சி.பி. கோவிந்த் ரானாவாக அனுராக் கஷ்யப்பும், ராபியாவாக கோங்கணாவும் நன்றாக நடித்திருக்கிறார்கள். வீடியோ பதிவு திருட்டுப்போவது போன்ற சில திருப்பங்கள் நம்பகத்தன்மையுடன் சுவாரஸ்யம் கூட்டுகின்றன. காட்டிலிருந்து தப்பிப்பது போன்ற திருப்பங்கள் பலவீனமாக உள்ளன. மனநல விடுதியிலிருந்து அகீரா தப்பிப்பதை இன்னும் நம்பகத்தன்மையுடன் காட்டியிருக்கலாம். அதன் பிறகான அவரது நடவடிக்கைகள் எல்லாமே யதார்த்தத்திலிருந்து விலகியே இருக்கின்றன.



கல்லூரி மாணவர்களின் போராட்டத்தில் அகீரா மட்டும் தனியாக அமர்ந்திருக்கும் காட்சி, அகீராவின் அண்ணி அவளிடம் நடந்துகொள்ளும் விதம், என்னைநானேசிலுவையில்அறைந்து கொண்டேன் என்று அகீரா சொல்வது போன்ற வழக்கமான சித்திரிப்புகளைத் தவிர்த்திருக்கலாம். இவை படத்தின் இயல்பான போக்கைத் தடுக்கின்றன. கல்லூரியில் நடக்கும் சண்டை, கதையோடு ஒட்டாமல் அகீராவின் சண்டைத் திறனைக் காட்டுவதற்காகவே சேர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. காவல்துறையினர் பற்றிய சித்திரிப்பும் புலனாய்வும் கச்சிதம்.

சிறைவாசம் என்பது ஒரு தனிநபரின் வாழ்வில் ஏற்படுத்தக்கூடிய எதிர்மறையான தாக்கங்களையும், அதிகார மமதை கொண்ட காவல்துறை அதிகாரிகளின் பேராசையால் பாதிக்கப்படும் அப்பாவிகளின் வாழ்வையும் விறுவிறுப்பான முறையில் சொல்ல முயல்கிறது அகீரா. அழுத்தமான காட்சிகளும் நடிப்பும் அதைப் பெருமளவு வெற்றிகரமாகப் பார்வையாளர்களுக்குக் கடத்துகின்றன. ஆக்ஷன் திரில்லர் படத்துக்கென்று வழமையாகவுள்ள சில அம்சங்களைத் தவிர்த்திருந்தால், அகீரா இன்னும் வலுவான, இயல்பான சினிமாவாகத் திரையில் விரிந்திருக்கும். எனினும் விறுவிறுப்பில் குறைவைக்காத அகீரா பெண்மையின் கம்பீரத்தைப் பறைசாற்றுகிறது.




# தி எக்கவுண்டன்ட்

சண்டை, த்ரில்லர், ஹாரர் வகைப்படங்கள்தான் இப்போது ஹொலிவூட்டைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன. சண்டையும் த்ரில்லரும் கலந்த கலவையில் உருவாகும் படங்களுக்குக் ஹொலிவூட்டில் தனிமவுசு உண்டு. அப்படி ஒரு படமாகக் ஹொலிவூட்டில் உருவாகி, வெளியீட்டுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது தி எக்கவுண்டன்ட் படம். நாயகன் கிறிஸ்டின் உல்ப் (பென் அப்லக்) மிகப் பெரிய கணித விஞ்ஞானி. இவர் சிறிய ஊரில் உள்ள ஒரு சார்டட் எக்கவுண்டட் அலுவலத்தின் பின்னணியில் தடயவியல் கணக்காளராக வேலை செய்கிறார். கருவூலத் துறையின் கணக்கு வேலை இவருக்கு வருகிறது. அந்த வேலையில், மில்லியன் கணக்கான டொலர்கள் கணக்கில் வராமல் வித்தியாசப்படுவதை நாயகன் மோப்பம் பிடிக்கிறார். அது தொடர்பான முரண்பாடுகளையும் கண்டுபிடிக்கிறார். ஆபத்து நிறைந்த அந்த முரண்பாடுகளை எப்படிக் கண்டுபிடித்து நாயகன் தீர்க்கிறார் என்பதைச் சொல்லும் படமே தி எக்கவுண்டன்ட்.

நாயகன் கிறிஸ்டின் உல்ப் ஒவ்வொரு புதிருக்கும் விடை கண்டுபிடிக்கும் காட்சிகள் விறுவிறுப்பாகப் படமாக்கப்பட்டுள்ளன. இந்தப் படத்தின் டிரெய்லரே ஹொலிவூட்டில் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மிராக்கிள், வாரியர் போன்ற சில ஹொலிவூட் படங்களை மட்டுமே இயக்கி, பெயரெடுத்த கெவின் ஓகொன்னோர் கைவண்ணத்தில் இந்தப் படம் உருவாகியிருக்கிறது.

நாயகியாக அன்னா கென்ட்ரிக் நடித்திருக்கிறார். படத்துக்கு இசை மார்க் இஷாம். த்ரில்லர் படங்களுக்கே உரிய இசைக் கோவை, படத்தை மேலும் வலுவாக்குகிறது. இந்தப் படத்தின் படப்பிடிப்பு 2015ஆம் ஆண்டு ஜனவரியில் அதிகாரபூர்வமாகத் தொடங்கியது. 128 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்தப் படம், உலகெங்கிலும் ஒக்டோபர் 14ஆம் திகதி வெளியாகிறது.





# அன்புள்ள கடிதத்துக்கு...!

வருசக்கணக்காகிற்றுது உமக்குக் காகிதம் வரைந்து. அந்த ஆர்வத்திலையும் கொஞ்சம் சோகத்திலையும்தான் இதை எழுதுறன். இப்ப நீர் றிலாக்ஸ்சா இருக்கிறதால ஆறுதலாய் இருந்து படிப்பீர் என்று நினைக்கிறன். உலகக் கடித தினம் என்று ஒண்டு வந்ததால நீரும் பிசியா இருந்தா, கொஞ்சமா எழுதுறன் படிச்சுக் கொள்ளும். நீர் கொடிகட்டிப் பறந்த அந்தக் காலத்தில கிராமத்துக்குள்ள நுழைகிறீர் எண்டுறத டிங்...டிங்...பெல் சத்தத்தை வைச்சுக் கண்டு பிடிச்சுக் கொள்ளுவம். உறவுகளின்ர உணர்வுகளைக் காவிக் கொண்டு வரும் நீர் எங்களுக்கும் வருவீரா? எண்டு காத்திருந்தவை கனக்கப்பேர் இருக்கினம். இப்ப வீட்டுக்கு வீடு இன்டர்நெற், வை – பை எண்டு சொல்லுறதுகளும் கணினிகளும் போனும் வந்ததால நீர் இருந்த இடம் தெரியாமப் போய்விட்டீர், கவலை தான். என்ன செய்வது! எல்லாமே காலம் செய்த கோலம் எண்டு காலத்து மேல பழிய போட்டுச் சற்றே ஆறிக்கொள்ள வேண்டியதுதான்.

இன்னொண்டும் சொல்லவேணும். என்னதான் புதுசுபுதுசா வந்தாலும், உம்மைப்போல வராது பாரும். அந்தக் காலத்தில கைக்குக் கை மாறி நீர் வந்து சேர்ந்தாலும் அதிலஒரு சேப்டி இருந்திச்சுது. இப்ப பாரும் காத்தில வாறதுகளில கூடக் களவு செய்ய வெளிக்கிட்டாங்கள். அதோட உம்மளைக் கொண்டு வந்து சேர்க்கிற மனிசரெல்லாம் தெய்வமாய்த் தெரிஞ்ச காலமது. நீர் கையில கிடைச்சா என்னைப் போல அந்தக்காலப் பழசுகள் உம்மை அடிக்கொருதடவை திரும்பத்திரும்பப் படிச்சுக் கொள்ளுவினம். உறவுகளிடையே கோபதாபத் தையும், அன்பு அரவணைப் பையும் பரிமாறிக்கொள்ள வைச்சீர். இப்ப ஆவலோட உம்மை எதிர் பார்த்திருந்த அந்தப் பழசுகளும் இல்லை, நீருமில்லை. உம்மளைக் கொண்டு திரிஞ்சவைகூடக் குறைஞ்சிற்றினம். அதுசரி நீர் இருந்தாத்தானே அவயளுக்கு வேலை. பாவம் அவயளின்ர பாடும் திண்டாட்டம் போல. இப்ப வைபர், வட்ஸ்அப், முகநூல் எண்டு கனக்க வந்திற்றுது. என்ன தான் இருந்தாலும் உம்மட வருகைக்காய்க் காத்திருந்த அந்தக்காலம் போல வராது. என்னைப் பழசு எண்டு வீட்டில ஒதுக்கி வைச்சிருக்கிற மாதிரித்தான் இப்ப உம்மட நிலையும் பாரும். என்ர நிலையில இருக்கிற உம்மளோட இன்னும் மனம் விட்டு நிறையப் பகிர்ந்துகொள்ள வேணும் எண்டு ஆசைதான். உம்மளச் சேர்த்து வைச்சிருக்கிற றங் குப்பெட்டியத் திறந்து அடிக்கடி பார்த்துப் பழைய ஞாபகங்களை நினைச்சுக் கொள்ளுவன். இன்னும் கொஞ்ச நாளுக்குப் பிறகு உம்மளக் கொண்டுபோய் அருங்காட்சியகத்தில வைச்சாலும் வைப் பாங்கள் பாரும்.

*அன்புடன் உண்மை*
*என்றும் மறவாத அழகு சுந்தரம்.*

> இப்ப வைபர்.
> வட்ஸ்அப். பேஸ்புக்
> எண்டு கனக்க
> வந்திற்றுது. என்ன
> தான் இருந்தாலும்
> உம்மட வருகைக்
> காய்க் காத்திருந்த
> அந்தக்காலம்
> போல வராது.
> என்னைப் பழசு
> எண்டு வீட்டில
> ஒதுக்கி வைச்சி
> ருக்கிற மாதிரித்
> தான் இப்ப உம்மட
> நிலையும் பாரும்.

# சட்டைப் பையில் ஓர் உளவாளி!

நவீனங்கள் பல கொண்டதால் உலகம் நாளுக்கு நாள் சுருங்கி வருகிறது. இணைய வசதி கொண்ட அதி திறன் பேசிகளின் வருகைக்கு முன்னர் பெரும்பாலும் ஒலிச்சமிக்ஞைகளைப் பரிமாற்றக் கூடிய சாதாரண பேசிகள் பயன்பாட்டில் இருந்தன. ஆனால் தற்போதுள்ள மென்பொருள்கள் பதிவேற்றப்பட்ட அதிதிறன் பேசிகளின் வருகைக்குப் பின்னர், இணையத்தைப் பயன்படுத்தி, மனிதனின் அன்றாடத் தேவைகளைத் தீர்த்துக்கொள்ளும் ஓர் அத்தியாவசியமான பொருள்களாக இவை மாறியிருக்கின்றன. உங்கள் சட்டைப் பையில் உள்ள ஒவ்வொரு அதிதிறன்பேசிகளும் ஓர் உளவாளி என்றால் நீங்கள் நம்புவீர்களா?

தற்போதைய அதி திறன் பேசிகளை நாம் உபயோகப்படுத்த ஆரம்பிக்கும்போது தேவையான செயலிகளைப் பதிவிறக்கம் செய்கிறோம். இந்தச் செயலிகள் அனைத்தும் நம்பகத்தன்மை வாய்ந்தனவா? என்றால் கேள்விக்குறிகள்தான். நாம் உபயோகப்படுத்தும் செயலிகளுக்கு நாம் அனுமதி கொடுத்த பின்னரே அதிதிறன்பேசியில் தரவிறக்கம் செய்ய முடியும். அவ்வாறு தரவிறக்கம் செய்யும்போது திரையில் தோன்றும் கேள்விகளை என்றாவது நாம் முழுதாகப் படித்துப் பார்த்திருக்கிறோமா? தரவிறக்கம் செய்வதற்கு முன்னர், நாம் எவரும் அதைப் படித்துப் பார்ப்பதில்லை. அதில் சில செயலிகள், நமது கைபேசியில் இருக்கும் ஒளிப்படங்களையும், கைபேசியுடன் நாம் பயணம் செய்யும் இடங்களையும் அறிந்துகொள்ளுமாறு வடிவமைக்கப்பட்டு இருக்கும். இவை நமது தனிப்பட்ட தகவல்களை, சேகரித்தும் அனுப்பக்கூடியவை. தற்போது கைபேசிகளில் வந்துள்ள செயலிகள் மூலம், ஒருவரை எளிதாக உளவு பார்க்கும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில ஆராய்ச்சியாளர்கள், அவர்கள் உருவாக்கிய மென்பொருள் செயலியைக் கொண்டு அதிதிறன்பேசியின் இருப்பிடம் மற்றும் பயணிக்கும் இடங்கள் ஆகியவற்றை உளவு பார்க்கமுடியும் என நிருபித்துக் காட்டியுள்ளனர் இந்த ஆய்வு குறித்து வெளியான முடிவுகளில், இன்னொன்றும் தெரிய வந்தது. எந்தவொருநபரும்தான்தயாரித்தசெயலியைபாவனையாளர்களின் பயன்பாட்டுக்காகப் பதிவேற்ற முடியும். அந்தச் செயலிகளின் நம்பகத்தன்மை குறித்துப் பயன்படுத்துபவர்களே சிந்தித்துக் கொள்ளவேண்டும். எனவே ஒரு செயலியை பதிவிறக்கம் செய்யும்போது அதன் நம்பகத்தன்மை குறித்து, சிந்தித்து முடிவெடுப்பது சிறந்தது. மேலும், இதுபோன்ற செயலிகள் மூலம் ஒருவரின் அனுமதியின்றி அதிதிறன்பேசிகளின் கமராக்கள் மூலம் கண்காணிக்க முடியும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.





# பட்டகாலிலே படும்!

அடிக்கடி வருகின்றனர்
அவலங்களைப் பார்ப்பதற்கென்று
அவர் தாம் தொகைக்கன்றி
முடிவுகள் எதுவும் முற்றான பாடில்லை.

எந்தையும் தாயும்
காணாமற் போனபின்னும்
அரசியல் கைதியென்று
குடும்பத்தைத் தாங்கிக் கொள்ளும்
ஆண்களையும் பிடிக்கிறார்கள்.

அன்பாக வரவேற்று
அடிவரைக் குளிரேற்றி
கவனிக்கும் சிலரின் கயமை
அறிவார்களா?
தொடர்ந்து படும் பாடுகளால்,
கெட்ட குடிகள் சில கேட்கின்றன.



*ந.ஜெயநிஷா*



# தொற்றாநோய்களை தோற்கடிக்க!

ஸுடோ ஸ்வாமி

புகைப்பொருள்கள் மற்றும் மதுபானத்துக்கெதிரான போராட்டத்தை வலுவாக்கி வரும் சுகாதார அமைச்சு, தொற்றாநோய்களைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்குமான படிமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் அடுத்தகட்டமாக, அதிக சீனியைக் கொண்ட பானவகைகளுக்கு வரி ஒன்றை அறிமுகப்படுத்தத் தீர்மானித்திருக்கிறது. அதற்கு அமைவாக அதிகளவான (ஐந்து கரண்டிகளுக்கு மேற்பட்ட) சீனியை கொண்ட பான வகைகள் மற்றும் உடனடியாக அருந்தத்தக்க பால் உணவுப் பொருள்கள் என்பவற்றுக்கே மேற்படிவரியை விதிக்க யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்காசியப் பிராந்திய குழுவின் 69ஆவது மாநாட்டு அமர்வு, கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை கொழும்பில் நடந்து முடிந்த நிலையிலேயே அதன் இறுதி நாள் நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜிதசேனாரத்னவால் தொற்றாநோய்களைத் தோற்கடிப்பதை நோக்காகக் கொண்டு இந்த வரி முன்மொழிவு வெளியிடப்பட்டிருக்கிறது.

பங்ளாதேஷ், பூட்டான், மாலைதீவு, கொரியக்குடியரசு, மியன்மார், இந்தோனேசியா, இந்தியா, கிழக்குத் திமோர், நேபாளம், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய 15 அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய குழுவானது, வருடாந்தம் ஒன்று கூடி தமது செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதுடன், அது தொடர்பான வரவு–செலவுகள் தொடர்பிலும் ஆராய்வது வழக்கம். இம்முறை இலங்கையில் நடந்த குறித்த மாநாட்டில் தொற்றாநோய்கள் பற்றிய விவகாரம் சற்று ஆழமாக ஆராயப்பட்டிருக்கிறது.

### கொழும்புப் பிரகடனம்

10 நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்களும் ஒரு சுகாதாரப் பணிப்பாளரும் கலந்துகொண்ட மேற்படி மாநாட்டில் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரகடனம் முதன்மை சுகாதார சேவை மட்டத்தில் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்குவது பற்றியதாகும்.

### 70 வீதமான இறப்புக்கள்

தொற்றுநோய்களிலிருந்து தொற்றா நோய்களை நோக்கி உலகின் கவனம் ஈர்க்கப்பட்டுக்கொண்டிருக்கையில், வளர்முக நாடான இலங்கையில் அதனுடைய பாதிப்பு பாரதூரமானதாகவே இருக்கின்றது. இலங்கையில் வருடாந்த இறப்புக்களில் 70 வீதமானவை தொற்றாநோய்களினாலேயே ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதயநோய்கள், பெருமூளை இரத்தக் குழாய் சார் நோய்கள், உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, நாள்பட்ட சுவாசநோய்கள், நாள்பட்ட சிறுநீரகநோய்கள் மற்றும் புற்றுநோய் என்பவை கணிசமான அளவு நோய்ச்சுமையை இலங்கையருக்கு ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### வரிஅதிகரிப்பு

தொற்றாநோய்களை ஊக்குவிக்கும் உணவுப்பொருள்கள் மற்றும் உள்ளீடுகளின் நுகர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் அவற்றுக்கான வரியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. புகைப் பொருள்கள் மற்றும் மதுபானம் மீதான வரிஏற்றம், சீனி உற்பத்தி மீதான வரி, பாம் எண்ணெய், கோதுமை மா மற்றும் உப்பு என்பவற்றின் மீதான வரி, தொற்றாநோய் களுக்கான சந்தர்ப்பத்தைக் குறைப்பதனை இலக்கு வைத்தே திட்டமிடப்பட்டிருக்கிறது.

### சீனியின் அளவைக் காட்ட நிறக்குறியீடு!

மென்பானப்போத்தல்களில் அவற்றில் உள்ளடங்கியுள்ள சீனியின் அளவைப் பாவனையாளருக்கு அறிவூட்டும் விதத்தில் தெரியப்படுத்துவதற்கு குறியீட்டு நடைமுறை ஒன்றும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது கடந்த ஆவணி முதலாம் திகதியிலிருந்து இறுக்கமாக நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் பிரகாரம், 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த மே மாதம் 3ஆம் திகதி வெளியிட்ட 1965 18ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக பானங்களை உள்ளடக்கிய போத்தல்களின் சுட்டுத் துண்டுகளில் அவற்றில் உள்ளடங்கியுள்ள சீனி பற்றிய விவரணம் மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு 100 மில்லி லீற்றர் மென்பானத்தில் உள்ள சீனியின் அளவுக்கு ஏற்ப, குறித்த விவரணம் பட்டியலிடப்பட்டுள்ளது. சீனியின் அளவு11 கிராமுக்கு அதிகமெனில், அது உயர்நிலை சீனி என்னும் விவரணத்துடன் சிவப்பு நிறக் குறியீட்டினால் குறிக்கப்படும். 2 கிராம் தொடக்கம் 11 கிராம் வரையான சீனி உள்ளடக்கத்தைப் பழுப்பு அல்லது கபில நிறத்தினால் குறிக்கப்படும். 2 கிராமுக்கும் குறைவான குறைந்த நிலைச்சீனி, பச்சைநிறத்தினால் குறிக்கப்படும்.

### வருமுன் காப்பு

தொற்றாநோய்களின் தோற்றுவிப்புக்களிலிருந்து பிரஜைகளைக் காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வரவேற்புக்குரியதாக இருக்கும் அதேவேளை குறித்த நடைமுறைகளுக்குப் பின்னால் உள்ள உட்பொருள் மக்களுக்குச் சென்றடைய ஆவனசெய்யப்படவேண்டும். பாதுகாப்பான மாற்றுஉணவுப் பொருள்கள், உணவு உள்ளீடுகள் தொடர்பிலும் மக்களுக்குத் தெளிவூட்டப்படவேண்டும். மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் வாழ்க்கைத்தர மாற்றங்கள் தொடர்பிலும் அறிவூட்டப்படவேண்டும்.

இலவச சுகாதார சேவை மூலம் தொற்றும் நோய்கள், யானைக்கால் நோய் மற்றும் மலேரியாநோய் என்பவற்றுக்கு எதிரானபோரில் வெற்றிகண்டுள்ள இலங்கை, தொற்றாநோய்களைத் தோற்கடிக்க எடுத்து வரும் முயற்சிகள் ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழி சமைக்கட்டும்.



**உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்காசியப் பிராந்திய குழுவின் 69ஆவது மாநாட்டு அமர்வு, கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை கொழும் பில் நடந்து முடிந்த நிலையிலேயே அதன் இறுதிநாள் நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜிதசேனாரத்னவால் தொற்றா நோய்களைத் தோற்கடிப்பதை நோக்காகக் கொண்டு இந்த வரி முன்மொழிவு வெளியிடப் பட்டிருக்கிறது.**

# விதைப்பு



பூதலிங்கம் பெரும் பணக்காரர். நூற்று எட்டு வேலி நிலமும் பெரிய வீடும் அவருக்கு இருந்தன. மந்தை மந்தையாக ஆடுகளும், மாடுகளும் வளர்ந்தன. பொன்னும் பொருளும் நிரம்பிக் கிடந்தன.

பத்துவிரல் மோதிரம், பகட்டான தலைப்பா, பட்டுச் சட்டை, பட்டு வேட்டி, தங்கக் கைக்கடிகாரம் என்று செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார் அவர். எடுப்பான பதாகை, கைத்தடியுடன் கம்பீரமாக நடைபோடுவது அவரது அடையாளம். ஊரில் திருமணவிழா, காதணிவிழா, மஞ்சள் நீராட்டு விழா, பெயர் சூட்டு விழா, புதுமனைப் புகுவிழா என என்னென்ன சுபகாரிய விழாக்கள் வருகின்றனவோ, அனைத்து விழாக்களிலும் குடும்பசகிதமாகக் கலந்து கொள்வது பூதலிங்கத்தின் வழக்கம். அங்கு அவருக்கு முதல் மரியாதை வழங்கப்படும். அவரும் விழா முடியும் வரை இருந்து பொன் பொருளை அள்ளிக்கொடுத்து வாழ்த்திவிட்டு வருவார்.

ஆனால், துக்கவீடு என்றால் பூதலிங்கம் குடும்பத்தினருடன் செல்வதில்லை. அப்படியே சென்றாலும் இரண்டு நிமிடத்திற்கு மேல் இருப்பதில்லை. தனது கைத் தடியை அவர் வந்ததன் அடையாளமாக வைத்துவிட்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வீடு திரும்பி விடுவார்.

இறந்தவர் வீட்டுக்குத் தான் வந்ததாக எல்லோரும் கருத வேண்டும் என்று எண்ணிக்கொள்வதற்காக அவர் இப்படிக் கைத்தடியை வைத்துவிட்டுச் செல்வார்.

ஒருநாள் பூதலிங்கத்தக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. மூச்சுத் திணறல் அதிகமானதால், பட்டணத்திலுள்ள பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இருதய அறுவைச் சிகிச்சை நடந்தது. எனினும், அவரது உயிர் பிரிந்துவிட்டது.

பூதலிங்கத்தின் மனைவியும் மகனும் அழுது புரண்டனர். பூதலிங்கம் பெரும் பணக்காரர் என்பதால், இறப்புச் செய்தி சுற்றியுள்ள அனைத்து ஊர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஏராளமானவர்கள் திரண்டு வந்தனர். ஆனால், ஒரு சிலர் மட்டுமே மாலையும் கையுமாக வந்தனர். பலர் பூதலிங்கம் தங்கள் வீட்டில் துக்கநாளில் விட்டுச் சென்ற கைத்தடியோடு வந்தனர். அதை பூதலிங்கத்தின் உடலருகே வைத்து விட்டு சில நிமிடம்கூட நிற்காமல் திரும்பிச் சென்றனர்.

இறுதிச் சடங்கு நேரம் நெருங்கியது. ஆள்கள் கூட்டம் இல்லாமல் பெரும் கைத்தடிக் குவியலே நிறைந்திருந்தது. பூதலிங்கத்தின் மனைவியும் மகனும் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

'வாழ்வுக்குப் போகாவிட்டாலும், சாவுக்குப் போக வேண்டும்' என்று சொல்வார்கள். சாவுக்குப் போற இடத்தில் கடைசிவரை இருந்து காரியம் நிறைவேற்றிவிட்டு வர வேண்டும். ஆனால், பூதலிங்கம், பெரிய மனிதர் என்று தன்னைக் காட்டிக்கொள்வதற்காக கைத்தடியை விட்டு விட்டு வந்தார். இன்று அவரது இறுதிநாளுக்கும் கைத்தடிகள் தான் வந்திருக்கின்றன. கைத்தடிகளா காரியம் நடத்தப்போகின்றன? அவருடைய தந்தையின் இறுதிச் சடங்கினைக் கூலியாள்கள் மூலம் நடத்தினர். "உனது அப்பாவுக்கு நடந்த இந்த நிலைமையை நினைத் தாவது நீ திருந்தி வாழ். கடைசில போகும்போது பொன் பொருளைக் கொண்டு செல்ல முடியாது. நல்ல பெயர் சேர்த்து வைத்திருந்தால் தான் ஊரார் நம் புகழ்பாடித் தூக்கிச் செல்வார்கள். இதை மனதில் வைத்துக்கொள்" என்று தன் மகனிடம் கூறினாள் பூதலிங்கத்தின் மனைவி.

அதுவரை தந்தையின் தடம் பற்றி நடந்தவன், அவரது இறப்பிற்குப் பின்னர் விசால எண்ணம் கொண்டவனாகவும் ஏற்றத்தாழ்வு பாராதவனாகவும் மாறினான். பண்ணையாரின் மகன் என்று எண்ணாமல் மக்களோடு மக்களாக அவன் வாழத் தொடங்கினான்.

*கதையின் நீதி: விதைப்பதுதான் முளைக்கும்.*

– கே. இனியவன்

உலகம் முழுவதும் வீடுகள் இருக்கின்றன. எல்லா வீடுகளிலும் ஜன்னல்கள் இருக்கின்றன. எல்லா ஜன்னலுக்குப் பின்னும் ஒரு சிறுவனோ சிறுமியோ உலகை வியப்புக் கலையாமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

– எஸ்.ராமகிருஸ்ணன்



டி.டினேஷா,
தரம் – 03
மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.



த.பிறைன் காந்,
தரம் – 8E,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

## சிறுவர் உலகு

## ஒரு தந்தை எழுதிய கடிதம்



ஒரு தந்தை தன் மகனை ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தார். அவர் தன் மகனுக்கு அறிவுரை எதுவும் சொல்லவில்லை. மாறாக, பாடசாலை வகுப்பாசிரியருக்கு அவர் கடிதங்கள் எழுதினார். அந்தக்கடிதங்களில் அவர் குறிப்பிட்ட சில விடயங்கள் வருமாறு:

"தோல்வியை ஏற்றுக்கொள்ளவும்" வெற்றியைக் கொண்டாடவும் என் மகனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

"பொறாமையிலிருந்து அவன் விலகியே இருக்கட்டும்". "வானப் பறவைகள், தேனீக்கள், சூரியன், பசுமையான செடிகள், மலர்கள் இவற்றை இரசிக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்".

"பிறரை ஏமாற்றுவதை விட, தோற்பது கண்ணியம் என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

"சுய சிந்தனையில் நம்பிக்கை கொள்ளச் சொல்லுங்கள்".

"மென்மையானவர்களிடம் மென்மையாகவும், உறுதியானவர்களிடம் உறுதியாகவும் நடந்து கொள்ளக் கற்றுக்கொடுங்கள்".

"குற்றம் குறை கூறுபவர்களை அவன் அலட்சியப்படுத்தட்டும்".

""அளவுக்கு அதிகமாய் இனிமையாகப் பேசுபவர்களிடம் அவன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று கற்றுக்கொடுங்கள்.

"தன் மனதுக்கு சரி என்று தோன்றுவதை அவன் துணிந்து நின்று போராடி நிறைவேற்ற அவனைப் பழக்குங்கள்".

அந்தத் தந்தை வேறு எவருமல்ல. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி"ஆபிரஹாம் லிங்கன்.

## இது சொர்க்கத்தின் சிரிப்பு விழா



வாய் விட்டுச் சிரித்தால், நோய் விட்டுப் போகும் என்பார்கள். ஆதலால், பிள்ளைகளே சற்றுச் சிரிபோமா?

ஆசிரியர், குப்பை பொறுக்குபவர், வக்கீல் ஆகிய மூவரும் சொர்க்கத்தின் கதவுகளைத் தட்டினார்கள். சொர்க்கத்தின் காவலர், "நீங்கள் உள்ளே வருவதென்றால், நாம் கேட்கும் ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்" என்று கூறினார். முதலில் ஆசிரியரிடம் கேள்வி கேட்டார். "பனிப் பாறைகளில் மோதி உடைந்த கப்பலின் பெயர் என்ன?" ஆசிரியர், "டைட்டானிக்" என்று பதிலளித்தவுடன், சொர்க்கத்தினுள் அனுமதிக் கப்பட்டார். அடுத்து குப்பை பொறுக்குபவர். அவரை உள்ளே விட காவலருக்கு மனமில்லை. அதனால், சற்றுக் கடினமான கேள்வியாக? "எத்தனை பேர் கப்பலில் இருந்தார்கள்?" என்று கேட்டார். டைட்டானிக் படத்தைப் பார்த்திருந்த அவர், "1228 பேர்" என்று கூறினார். வேறு வழியில்லாமல் அவரையும் சொர்க்கத்திற்குள் அனுப்பினார். அடுத்து வக்கீல். நிச்சயமாக அவர் சொர்க்கத்திற்குள் வரக் கூடாது என்று நினைத்த காவலர், 'அந்த 1228 பேரின் பெயர்களைச் சொல்லுங்கள்" என்று அவரிடம் கேட்டார். அவர் திருதிருவென விழித்தார்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1502 – கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது 4ஆவதும் கடைசிப் பயணமுமாக ஹொண்டூராசைச் சென்றடைந்தார்.

1635 – ஒஸ்ரியாவின் புனித உரோமப் பேரரசன் இரண்டாம் பேர்டினான்டால் பிரான்ஸ் மீது போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது.

1759 – பிரிட்டனால் கியூபெக் நகர் கைப்பற்றப்பட்டது.

1887 – அத்தியார் அருணாசலம் பிறப்பு.

1940 – பிரித்தானிய SSசிற்றி ஒப் பேனார்ஸ் கப்பல் ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் U-48 இனால் மூழ்கடிக்கப்பட்டதில் 77 அகதிச் சிறுவர் உட்பட அதிலிருந்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

1943 – டென்மார்க்கிலிருந்து யூதர் களை வெளி யேற்றுமாறு அடொல்ப் ஹிட்லரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

1947 – தேசிய பாதுகாப்புச் சபையும் மத்திய புலானாய்வு நிறுவனமும் (CIA) தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டது.

1959 – அமெரிக்க கடல் ஆராய்ச்சி நிறுவனத்துக்குரிய வங்குவாட் 3 செயற்கைக்கோள் புவிச் சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

1973 – பஹமாஸ், கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனி ஆகியன ஐ.நாவில் அனுமதிக்கப்பட்டன.

1974 – மணிக்கு 110 மைல் மணி வேகத்தில் ஹெண்டூராஸைத் தாக்கிய சூழல் காற்றான பைபியில் 5ஆயிரம் பேர் வரை உயிரி ழுந்தனர்.

1977 – வொஜேயர் விண்கலத்தினால் பூமியும் சந்திரனும் ஒன்றாகப் படமெடுக்கப்பட்டன.

1982 – லெபனானில் கிறிஸ்தவ ஆயுததாரிகளால் 600 வரையான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

1990 – ஐ.நா. சபையின் உறுப்பு நாடாகியது லிச்ரென்ஸ்ரெய்ன்.

2001 – அந்திராக்ஸ் தாக்குதலின் தொடக்கமாக முதலாவது தபால் மூலமான அந்திரார்கஸ் கடிதம் நியூஜேர்ஸிட்றென்ரனிலிருந்து அனுப்பப்பட்டது.

2006 – இலங்கையில் மனித உரிமை மீறல் மோசமாக அதிகரிப்பு. கண்காணிக்குமாறு ஐ.நா. ஆணையாளர் லூயிஸ் ஹாபர் அம்மையாளர் கோரிக்கை.

– ஜிம்பிறவுண் அடிகளார் மற்றும் பொதுப் பணியாளர் விமலதாஸ் காணாமல் போய் ஒரு மாதம் நிறைவு.

– பொத்துவிலில் ஊர் மக்களுக்கு அதிரடிப் படையினருடன் முரண்பாடு இருந்ததாக ஹக்கீம் தெரிவிப்பு.

2015 – பாகிஸ்தான் பெஷாவார் புறநகர்ப் பகுதியில், தெஹ்ரிக் ஐ.தலிபான்களால் விமானப் படைத் தளம் ஒன்று தாக்கப்பட்டதில் இரண்டு பாதுகாப்புப் படையினர் 17 பக்தர்கள் மற்றும் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.



# அறிவியலும் ஆபரணமும்

# மூக்குத்தி





அழகுக்காகத்தான் ஆபரணங்கள் அணிந்துகொள்வதாகப் பலரும் நினைக்கின்றனர். ஆனால், அவற்றை அணிவதன் மூலம் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்று அறிவியல் நிரூபிக்கிறது.

உடலுக்கு ஒவ்வாத வாயுக்களை வெளியேற்றுவதற்காகத்தான் மூக்குக் குத்துவது, காது குத்துவது (துளையிடுவது) முதலான விடயங்களை எம் முன்னோர்கள் சடங்குகளாகச் செய்து வந்தனர்.

நமது மூளையில் ஹைபோதலமஸ் என்ற பகுதி உண்டு. நரம்பு மண்டலங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய, செயற்படக்கூடிய அளவு சில பகுதிகள் உள்ளன. அந்தப் பகுதியில் சில உணர்ச்சிப் பிரவாகங்கள் உள்ளன. இதனைச் செயற்படுத்துவதற்கு அந்தப் பகுதி துணையாக இருக்கிறது. இந்தப் பகுதியை அதிகமாகச் செயற்படுவதற்கும் பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக்கூடிய மூக்குத்தி வலது பக்க மூளையை நன்றாகச் செயற்படவும்வைக்கும்.

பெண்கள் மூக்குத்தி அணியும்போது, முன் நெற்றிப் பகுதியிலிருந்து ஆலம் விழுதுகள் போல் சில நரம்புகள் நாசித் துவாரத்தில் இறங்கிக் கீழே வரும். இவை மூக்குப் பகுதியிலும் சவ்வு போல மெல்லிய துவாரங்களாக இருக்கும். ஆலம் விழுதுகள் போல உள்ள மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அதில் மூக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்துத் தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும்.

பருவ வயதை அடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் தீயவாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளியேற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்டது தான் மூக்குக் குத்தும் சடங்கு. பெண்கள் மூக்குக் குத்துவதால் சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறு என்பன சரி செய்யப்படுகின்றன. இடப்பக்கம்தான் பெண்கள் மூக்குத்தி அணியவேண்டும். இடது பக்கம் குத்துவதால் சில மாற்றங்கள் ஏற்படும். சிந்தனாசக்தியை ஒருநிலைப்படுத்துகிறது; மனதை அமைதிப்படுத்துகிறது; தியானம், பிரார்த்தனையில் ஈடுபட முக்கியமாகக் கோபத்தைத் தணிக்க உதவுகிறது.



# வேர்க்கடலை புளிக்குழம்பு

**தேவையானவை:**

**வேர்க்கடலை - $\frac{1}{2}$ கப்**
**(ஊற வைத்து, வேக வைக்கவும்),**
**தேங்காய் துண்டுகள் - 2 அரைப்பதற்கு ஏற்ப**
**கடுகு, உளுத்தம்பருப்பு,**
**சீரகத்தூள் - தலா ஒரு கரண்டி**
**புளிக் கரைசல் - 1 கப்**
**வெங்காயம் - 2 பொடியாக நறுக்கியது**
**மிளகாய்த்தூள் - 1 $\frac{1}{2}$ கரண்டி**
**மஞ்சள்தூள் - $\frac{1}{4}$ கரண்டி**
**கறிவேப்பிலை - சிறிதளவு**
**எண்ணெய், உப்பு - தேவையான அளவு**

## செய்முறை:

ஒரு பாத்திரத்தில் புளிக் கரைசலை விட்டு, அரைத்த தேங்காய், மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், உப்புப் போட்டு, தேவையான தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும். வேகவைத்த வேர்க்கடலையைச் சேர்த்து, கொதிக்க வைத்துத் தீயைக் குறைத்து வைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகத்தூள், கறிவேப்பிலை போட்டு, பொரிந்ததும் நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து வதக்கவும். பொன்னிறமாக வந்ததும் கொதிக்கும் குழம்பில் கொட்டி இறக்கவும். சுவையான சத்துள்ள வேர்க்கடலை குழம்பு தயார்.

# ஆஸ்துமாவைக் குணப்படுத்தும்

# முசுமுசுக்கை

முசுமுசுக்கை, கொடி வகையைச் சேர்ந்த தாவரம். மூச்சுக் குழல், நுரையீரல் மற்றும் அதை ஒட்டி உள்ள எல்லாப் பகுதிகளிலும் வரக்கூடிய ஒவ்வாமை, குருதி கொட்டுதல், காயம் என அன்னத்தையும் சரிசெய்யும். கபத்தை அகற்றி சுத்தம் செய்வதோடு சளி, இருமல், வறட்டு இருமல், இழுப்பு வலி போன்றவற்றில் இருந்து நிவாரணம் அளிக்கும். மேலும் நீண்டநாள்களாக நோயால் பாதிக்கப்பட்டுத்தளர்ந்துபோனவர்களுக்குப் பலத்தைத் தரவல்லது. முசுமுசுக்கையை புதினா, கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை, உளுந்து, தேங்காய் ஆகியவற்றுடன் சேர்த்துத் துவையல் செய்து சாப்பிடலாம். நெய்யில் வதக்கி குழம்புடன் சேர்த்தும் சாப்பிடலாம். தோசைக்கு ஊறவைக்கும் அரிசியுடன் முசுமுசுக்கை இலையை ஊறவைத்து அரைத்தோ, தனியாக முசுமுசுக்கை இலையை அரைத்தோ தோசை மாவுடன் கலந்து தோசை சுட்டுச் சாப்பிடலாம். இப்படிச் சாப்பிடுவதால் ஆஸ்துமாவில் இருந்து விடுதலை பெறலாம். முசுமுசுக்கை இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி, தலைக்குத் தேய்த்துக் குளிப்பதும் ஆரோக்கியம் தரும். முசு முசுக்கை இலையை நிழலில் வாடவைத்து பொடியாக்கி சாப்பிட்டு வந்தால், எலும்புருக்கி நோய், காச நோய் போன்றவை குணமாகும். முக்கியமாக நுரையீரல் புற்றுநோயைச் சரிசெய்யும்.





# பேன், பொடுகுத் தொல்லையில் இருந்து விடுபட...

- வேப்பங்கொட்டைகளை அரைத்து, தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து, தலைமுடியை நன்கு அலசி விடவும்.
- நல்லெண்ணெய் தேய்த்து தலையை வாரி, தலைமுழுவதும் வேப்பங் கொழுந்தை அரைத்து தடவவும். ஒரு மணி நேரம் கழித்துச் சீப்பால் வாரி, தினமும் தலைக்கு எண்ணெய் தடவி வாரி வந்தாலே, பேன், ஈர் வெளியில் வந்து விடும், பொடுகுத் தொல்லையும் மறையும்.
- ஒரு கப் நல்லெண்ணெயுடன் ஒரு கரண்டி மிளகை அரைத்துக் காய்ச்சி, வடிகட்டவும். இந்த எண்ணெயைத் தலை முழுவதும் பூசவும். ஒரு பருத்தித் துணியால் ஒற்றி எடுத்தால், பேன், பொடுகு வந்துவிடும்.
- வெந்தயப்பொடி, வேப்பம்பூப் பொடி இவற்றைத் தலையில் தேய்த்துக் குளித்தால் பேன், பொடுகு, ஈர் தொல்லை இருக்காது.
வாரம் ஒரு முறை இந்த மருந்துகளைப் பயன்படுத்தினால், தலை சுத்தமாகும்.
- வாரம் ஒரு முறை நல்லெண்ணெய் தேய்த்து, சிகைக்காய் போட்டு முழுகுவது நல்லது. குழந்தைகளுக்குப் பேன் தொல்லை இருந்தால், வசம்பை அரைத்து தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி, தலையில் தடவிக் குளிப்பாட்டலாம்.



# இரகசியப் படுகொலை!

## வாழ்வாதாரங்களை உறிஞ்சும் உலைக்களம்

செ.இசைஅரசி

மனித வாழ்வியலின் அடிப்படைத் தேவைகள் எனும் இயல்பிலக்கணங்களாக உணவு, உடை, உறையுள் என்பன விளங்குகின்றன. இவை அனைத்தையும் தாண்டியதாக ஒரு சமூகத்தையோ, அந்தச் சமூகம் சார்ந்த குழுமங்களையோ அல்லது அங்கு அங்கத்துவம் பெறுகின்ற ஒவ்வோர் தனிமங்களையோ புறவயமாக நிலை நிறுத்துவதிலும் வாழ்தல் என்ற வரன்முறைகளைத் திட்டமிட்ட முறையில் திடமாக வரையறை செய்வதிலும் வாழ்வாதாரம் என்பது அத்தியாவசியமாகின்றது.எதிர்கால வாழ்வின் கட்டமைப்பிற்கான ஸ்திரத்தன்மையை அளிக்கின்ற அடித்தள அத்திபாரமாக இவை விளங்குகின்றன. வாழ்க்கை என்ற சீரான அறநெறியின் வழி இந்த ஆதாரங்கள் பல சேதாரங்களை மறைமுக நேர்முகமாகச் செய்துகொண்டு இருக்கின்றன.

கல்வியின் அடிப்படையிலும், அதன்வழி திறமை, அனுபவ மிளிர்தல் என்பவற்றின் வழியாக வருகின்ற படிப்புரிமையின் வழியும் வாழ்வாதாரங்கள் தற்கால வாழ்வியலில் முரண்நிலையற்ற தளம்பலான ஸ்திரநிலையை குடும்பங்களிடை தருகின்றபோதும் கல்வியறிவு நிலையில் பின்தங்கிய, அதனைப் பெறுவதற்கான ஆக்கபூர்வமான சிந்தனைவெளியிலிருந்தும் பின்னிலைப்படுத்தப்படுகின்ற, கூலித் தொழில்,- ஏணைய பிற சிறுதொழில் முயற்சிகள் என அனுதினமும் கடின உழைப்பின் வழி நகர்ந்திருக்கின்ற சமூகக் குழுமங்களிடை,ஒவ்வோர் தனிமங்களிடை வாழ்வாதாரம் என்பது இயைபுறவில்லை. இன்னமும் முரண்நிலையில்தான் இருந்துவருகிறது. பல குடும்பங்களைப் பொருளாதார நிலையிலே பின்தங்கியவர்களாக, சமூக வெளியிடை இடைவிலகலாக முன்னிறுத்தியிருக்கிறது. இவை அனைத்தும் யதார்த்தமான விடயங்கள்.

இந்த நிலையிலே 2009 களின் மனிதப்பேரவல அழிவு நிறைவுறுதல்களின் காலக்கணித்தல் என்பது, பொருளாதாரப் பின்னடைவின் வறுமைகளை மக்களிடையே அதீதமாகத் திணித்தது. இந்தத் திணிப்பு என்பது மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தின் தேடல்களிடை நிதி நிறுவனங்களின் வருகையையும் அவர்களின் மக்கள் நலன் சார்ந்த செயல்முனைவின் சாரமாக அமைந்துவிட்ட சேமிப்பின் சுரண்டல் பாணியையும் தமிழர் தாயகப் பிரதேசங்களிடை பணியாகச் செய்து வருகின்றன. தாங்கள் ஊதியம் செய்யும் நோக்குடன் வாடிக்கையாளர் நலன் பேணுதலை வார்த்தைகளிடை மாத்திரம் செப்பனிட்டு குத்தகை அடிப்படையிலே வாகனங்களை விநியோகம் செய்கின்றன. பின்னர் பண அறவீடு, தவணை என்ற அடிப்படையில் மக்களைத் தொந்தரவு செய்கின்றன. அவர்களின் உழைப்பின் பெரும் பகுதியைச் சூறையாடுகின்றனர். உதவியின் வழி நின்று பணச்சுரண்டலில் பேரம் பேசலை செய்கின்றன. உண்மையிலே உழைப்பின் உயிர்த்துளிகளை,வாழ்வின் ஆதாரங்களை உறிஞ்சும் உலைக்களங்களாக இவை அமைந்துவிடுகின்றன.!

அந்தவகையிலே இந்த முறை செயற்றிறன் அரங்க இயக்கம் ஒழுங்கமைத்திருந்த நல்லூர் நாடகத்திருவிழா - 2016 நிகழ்வில் பஞ்சபூத அரங்கிடை மேற்போந்த கருத்தியலின் காண்பிய நிலை நிஜ உருவம் கொண்டு எம்முன் நிழலாடியது.தற்கால வாழ்வியலின் பல கதை மொழிந்தது. அன்றாட உழைப்பின் நம்பிக்கை தருகின்ற ஊதியத்தோடு வாழ்வைக் கொண்டு நடத்தும் ஒரு குடும்பம். அங்கு தாய்,தகப்பன், அவர்களின் பெண் பிள்ளை என மூன்று அங்கத்தவர்களின் வாழ்க்கைப்பயணம். கறி முருங்கை மரத்தின் உதவிக் கரம்பற்றிய தகப்பனின் தினப் பயணமும், பால்குடம் சுமந்து அதில் சிறிதாய் வாழ்க்கையின் ஆதாரத்தை ஈட்டும் தாயின் நடைப் பயணமும்,திருமண வயதை எட்டிய ஒரேயொரு செல்ல மகளின் எதிர்காலக் கனவின் பயணமும் முட்டி மோதுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே வாகனங்களைக் குத்தகை அடிப்படை யிலே விற்பனை செய்யும் நிறுவனங்கள் இருகரம் கூப்பி மகிழ்வோடு அரவணைத்து எதிர் காலம் ஒளி பெற வேண்டு மெனில் வாகனம் வாங்குங்கள் என்ற மாயையைத் திணிக்கின்றன. இலகு தவணைப் பணம்! ஒரு கையெழுத்து வைத்தால் வீட்டு வாசலிலே வாகனம்! காப்புறுதி சிக்கலற்ற நல் உறுதி என தற்கால விற்பனைத் தந்திரங்களின் மூலோபாயங்களை வார்த்தை ஜாலம் செய்து அதில் வெற்றியும் கண்டு கொள்கின்றன. அவர்களிடம் இருந்த சேமிப்பை, வாழ்வாதாரத்தைத் தவணை அடிப்படையில் மிரட்டிச் சுருட்டுகின்றன.

இதனிடையே பெண்ணியச் சிந்தனையும் சீதனம் என்கின்றபேரம் பேசலும் தற்காலத்துள் முரணுறுகின்ற வித்தையையும் இந்தக் கதையோட்டங்களிடை நலனுறச் சொல்லியிருக்கிறது. குறிப்பாக மாப்பிள்ளைச் சந்தை ஒன்றின் தோற்றங்களிடை பல்வகை காண்பியங்களை முன்னிறுத்தி அங்கு இடம்பெறும் மாப்பிள்ளைக் கொள்வனவுக்கான விலை பேசலை நகைச் சுவை அலை வீசல்களிடை எடுத்துக்காட்டியிருந்தது. அந்தக் காட்சி அறை என்பது மனச்சாட்சிகளின் உறைதலிடை பெரியதொரு சிந்தனை வெளிக்கான கருத்தியல் இடித்துரைப்பை எடுத்தியம்பியது. உண்மையிலே போரின் பின்னரான பொருளாதார நெருக்குவாரங்களின் தொனிப்பும் மட்டற்ற நிதி மூலங்களின் கடைவிரிப்பும் தமிழர் தாயகத்திடை திட்டமிட்ட



முறையில் செய்து வருகின்ற முரண்பாடான சுரண்டல்களின் கருப்பொருளை இரகசியப்படுகொலை எடுகோளாக்கிஎதிர்வு கூறல்களை எச்சரிக்கை மணியாக அறைகூவல் செய்திருக்கிறது.தமிழ்ச் சமூகத்தினை விழித்துக் கொள்ளுமாறு அறைகூவல் செய்திருக்கிறது. நவாலியூர் சேமசுந்தரப் புலவரின் 'பருத்தித்துறை ஊராம் பவளக் கொடி பெயராம்' என்ற நாட்டார் பாடலின் நளின நகர்வுறுதல் கிராமத்தின் வாழ்வியல் சாரத்தை வாழ்வாதாரம் என்ற வரன்முறையோடு இயல்பாக ஒட்டி நின்றது. மக்கள் வெளியிடை சிந்தனை வெளியைத் தட்டி மீண்டெழ வேண்டி பலதைச் சுட்டி நின்றது, நிற்கிறது..!



# மனிதம் புனிதரானது

அல்பேனிய நாட்டு
அருட்கன்னி மலரொன்று
இந்திய மண்ணினை
இரக்கமுடன் நேசித்தது

வெள்ளை நிலா ஒளிக்கீற்று
சேரிக்குளத்தை நிறைத்ததனால்
அநாதை அல்லிகள் மலர்ந்தன
தெருவோரத்தின் காகிதக் குப்பைகள்
அன்னை இல்ல ஆலையில் சேர்ந்து
அழகிய நூல்களாய் வெளிவந்தன.

விட்டில் பூச்சிகள் விளக்கினை விடுத்து
ஒளி கொடுத்திடும் திரி மெழுகாகின
சாவினைச் சுமந்த வீதி இல்லத்தோர்
தாயின் மடியில் நிம்மதியாய் மரித்தனர்
குப்பைத் தொட்டிப் பாலரெல்லாம்
சிரித்து மகிழ்ந்தனர்


தொழுநோய் கண்டு
தூர ஒதுங்கியோர்
சாந்தி நகரில் மறுவாழ்வு கண்டனர்
மணமாகாது தாய்மையடைந்தோர்
மனம் நிறைந்தனர் அன்னை இல்லத்தில்

இத்தனை பணி செய்ய எப்படி முடிந்தது?
ஐந்தே ரூபாய்தான் ஆரம்பப் பணியில்
ஆண்டவன் துணைதான் அவரின் வெற்றி
காறி உமிழ்ந்தார் கனவான் கைகளில்
எதிர்ப்புக்கள் ஆயிரம்
எதிர்வந்து நின்றன
காலம் சுழன்றது பனிபோல் மறைந்தது
உதவிகள் ஆயிரம் வந்து குவிந்தன
உலகமே போற்றி வியந்தது
பட்டங்கள் பல பல
பரிசுகள் கொடுத்து மகிழ்ந்தனர்
இத்தனை பெருமைக்கும் யாரிவர்?
வாழ்வு கொடுத்திட சாவைத் தேடிய
வாழும் புனிதை அன்னை தெரேசா
புனிதராகினார் புனிதவாழ்வினால்
புவியே போற்றிப் பூரிக்கின்றது.

அபிராஜன் அன்ரனி பீற்றர்



# கறையான்கள்



ஜோ.ஜெஸ்ரின்

நாங்கள் பாருங்கோ உவன்ர எதிரிகள். நேரடியா ஒன்றும் மோதமாட்டம் முன்னேற்றத்தைத் தடுத்து உய்யவிடாமல் நிறையக் கெட்டித் தனங்கள் செய்வம். உவனுக்கு வந்த சம்மந்தத்தை நான் தான் குளப்பினனான். பத்தொன்பது சம்மந்தத்தைக் குளப்பினனான் இனியும் குளப்புவன் உவன் எங்களுக்குச் செய்த அநியாயத்துக்கு உவனை விடமாட்டம் பால்காறன்.

பால்காறன் பரமசிவத்திடம் சீப்பிளேன் ஆச்சி தமது வித்துவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள். பரமசிவத்துக்குத் தொழில்ப் பெயர் பால்காறன். சம்பளமில்லாத உத்தியோகமும் பார்க்கிறான் அதுதான் தபால்காறன் வேலை. இஞ்சத்தைக் கதையைக் கேட்டு·அங்கயும், அங்கத்தைக் கதையைக் கேட்டு இஞ்சையும் வஞ்சகமில்லாமல் சொல்லிப் போடுவான். எரிகிற நெருப்பில பெற்றோலை ஊற்றுவது பால்காறனுக்கு கைவந்தகலை!

சீப்பிளேன் ஆச்சி சொன்ன கதையை அங்கால இஞ்சால சொல்லும் வரையில் பால்காறனுக்கு தூக்கம் வரவில்லை. சீப்பிளேன் ஆச்சி எண்டா இதென்ன புது சாக்கிடக்கு எண்டு நினைப்பியள் சொல்லுறன் கோளுநங்கோவன். மகனும் மருமகளும் ஒற்றுமையா இருப்பதெண்டால் இந்த மனுசிக்கு பிடிக்காது. ஆறுமாதத்துக்கு வில்லங்கம் கொடுக்கும் செய்வினையைச் செய்து ஒருமாதிரி குடும்பத்தை பிரிச்சுப் போடுவா. மகன் வீட்டிற்கு யாரும் வந்தால் ஒட்டுக் கேக்கிறது முதல் ஒளிச்சு நிண்டு நடக்கிறதை கவனிச்சுப்போட்டு காதில விழுந்த கதைகளுக்கு கண், வாய் வச்சு மகளிடம் போட்டுக் கொடுத்தால் தான் ஆச்சிக்கு சாப்பிட்டது செமிக்கும்.

கருக்குமட்டை வேலியில கறையான் தட்டுவது போல, கறிவேப்பில பிடுங்கிறது போல வேவு பார்க்கிறத்தால இவவுக்கு ஊரில வைச்ச பெயர்தான் சீப்பிளேன் ஆச்சி.

சீப்பிளேன் ஆச்சியின்ர சீடி ஒன்றும் எழுத்தாளர் ஜெயக் காந்தனிடம் எடுப டேல்ல. மருமகளுக்குக் கவிதை படிக்கப் பிடிக்கும் எண்டு உவன் கவிதை எழுதிக் கொடுக்கிறான். கலை இலக்கியம் எண்டு விவாதங்கள் நீண்ட நேரம் கதைக்கினம். இஞ்சேரும் பால்காறன் நீர் ஒருக்கா எழுத்தாளர் ஜெயக்காந்தனிடம் சொல்லிவையும் அங்கையும் பால் கொடுக்கப் போறனீர்தானே! பால்காறனுக்குக் கொழுக்கட்டை கிடைச்ச மாதிரி. கடைப்பக்கம் அக்கம் பக்கம் எல்லாம் தபால்காறன் வேலையை பார்க்க வெளிக்கிட்டிட்டான்.

உங்களுக்கொரு விடயம் தெரியுமே கந்தப்புவின்ர மனிசியோட கந்தப்புவின்ர சகோதரர் சந்தியாப்பிள்ளைக்குத் தொடர்பாம். கவிதை, கதை எழுதிப் படிக்கக் கொடுக்கிறாராம். இன்றஸ்ரா.

> தீர விசாரித்தால் தீர்வு பிறக்கும். ஜெயகாந்தன் கலியாணத்தை குழப்பினது தனிப்பட்ட விரோதத்தாலதான். சதிகாரர்களின் கபடத்தனத்தை வெளிப்படுத்தி நல்ல சம்பந்தம் மிஸ்பண்ண பாத்தும் எண்டு விசுவமடுவுக்கு புறோக்கர் மாரும் போய் குழப்பின சம்பந்தத்தை சரி பண்ணிப் போட்டினம்.

இருவரும் கலை இலக்கியம் கதைக்கினமாம் சீப்பி ளேன் ஆச்சி என்னிடம் கவலைப்பட்டுச் சொன்னவ எழுத்தாளர் ஜெயகாந்தனை ஊரில சந்தியாப்பிள்ளை எண்டும் கூப்பிடுவினம். கதை கசியத் தொடங்கியது. கந்தப்புவுக்கும் சந்தியாப்பிள்ளைக்கும் நெருப்பு மூழத் தொடங்கியது.


சந்தியாப்பிள்ளையும் சும்மா ஆளில்ல பாருங்கோ. எழுத்தாளர் எண்ட தெனாவெட்டில மனுசன் கந்தப்புவின்ர செட்டப்பில இருந்து ஆடு, மாடு, கோழி பிடிக்கிற கதைவரைக்கும் கதை கவிதை எண்டு எழுதியிருக்கிறார். எழுத்தாளர்ண்ட ஜெயகாந்தன் கந்தப்புவின்ர மனுசி தனக்கு அண்ணி முறை தானே அவ சொல்லுற வேலைகளை கேக்கிற உதவிகளைச் செய்து கொடுத்திடுவார். உதவி செய்தால் உவத்திரவம் எண்டு எழுத்தாளருக்கு அப்ப விளங்கேல்ல. நட்பு எண்டா புனிதமானது காதலைவிட மேலானது நட்பு. இப்படியெல்லாம் மேடையில மனுசன் பொரிஞ்சு தள்ளியிருக்குது.

ஊர்வாயை மூட முடியுமே கந்தப்புவின்ர காதும் புளிச்சுப் போய் இந்த ஜெயக்காந்தன்ர நடவடிக்கையால கந்தப்புவுக்கு பைத்தியமாக்கிப் போட்டுது எண்டு பால்காறன் ஊரெல்லாம் பறை சாற்றியிருந்தான். ஜெயக்காந்தனைக் கண்டால் காறித்துப்புறது, தன்ர முகத்தை குரங்கு போல வைத்திருக்கிறது, ஊர் றவுடிகளுக்குச் சாராயம் வேண்டிக் கொடுத்து அடிக்கச் சொல்லுறது இப்படிக் காசை கரியாக்கிறதால தான் அவரை எல்லோரும் பைத்தியம் என்று கதைப்பினம். எழுத்தாளர் பார்த்தார் இதென்னடா வில்லங்கமாயிருக்கு என்று நினைத்து ஒதுங்கிக் கொண்டார். இருந்தாலும் கந்தப்புவும் சீப்பிளேன் ஆச்சியும் பால்காறனும் எழுத்தாளரை சிப்பிலியாட்டத் தொடங்கீட்டினம். பேனாவோட இருக்கிற மனுசன் எண்டா முன்னுக்கு யாரும் முரண்பட மாட்டினம் கண்டியளோ.

(43 ஆம் பக்கம் பார்க்க)


# மின்மினிகள் தேசம்

சுர்ஜீவா



பலவிதமான தாவரங்களும் புதர்களும் மண்டியிருக்கும் பகுதிகளில் இருள் சூழும்போது, அவற்றில் வைரத் துளிகளைப் போல மின்மினிகள் ஒளி வீசும். மின் விளக்கின் உதவியுடன் அவற்றைப் பார்த்தால் அவையெல்லாம் புழுக்களாக இருப்பது தெரியும். கூடுதலாகத் தரையிலிருந்து குறைவான உயரங்களில் பறப்பவையெல்லாம் பெண் பூச்சிகள். இறக்கைகள் பெற்று உயரப் பறக்கக்கூடியவை ஆண் பூச்சிகள். இனப் பெருக்கத்துக்குரிய பருவத்தில் உள்ள பெண் பூச்சிகள், அதை ஆண் பூச்சிகளுக்குத் தெரியப்படுத்துவதற்காகத் தாவரக் கிளைகளின் உச்சியில் ஏறி ஒளியைப் பரப்புகின்றனவாம். எல்லா இரவுகளிலும் மின்மினிகள் தென்படுவதில்லை. வெப்பநிலை, காற்றின் ஈரப்பதன் ஆகியவை அவற்றின் உலாவுதலுக்கு ஏற்றதாக இருக்கும்போது மட்டுமே அவை வெளி வருகின்றன. உலகிலுள்ள எல்லா வெப்ப நாடுகளிலும், மித வெப்ப நாடுகளிலும் அத்தகைய சூழல்கள் உருவாகும்போது அவை பெருகி வளர்கின்றன. மின்மினிப் பூச்சிகளில் பெரியளவிலானவை மேற்கிந்தியத் தீவுகளில் காணப்படுகின்ற குகுயோ என்ற இன மின்மினிகளாகும் . குகுயோ மின்மினிகள் அதிக ஒளி வீசுபவையாகவும் இருக்கும். அதன் காரணமாகவே அங்குள்ள பழங்குடி மக்கள் இருட்டில் நடமாடும்போது தம் கால் விரல்களில் மின்மினிகளை ஒட்டிக்கொள்வர்.

> மின்மினிகளின் ஒளி இயற்கையின் பெரும் அற்புதங்களில் ஒன்று. வெப்பம் இல்லாத அந்த ஒளியை உருவாக்க இன்றுவரை மனிதர்களால் இயலவில்லை. வீணாக்கப்படுகிறது.



### ஒளி இரகசியம்

மின்மினிகளின் ஒளி இயற்கையின் பெரும் அற்புதங்களில் ஒன்று. வெப்பம் இல்லாத அந்த ஒளியை உருவாக்க இன்றுவரை மனிதர்களால் இயலவில்லை. மின் விளக்குகளாயினும் குப்பி விளக்குகளாயினும் அவற்றின் ஆற்றலில் பெரும் பகுதி வெப்பமாக வீணாக்கப்படுகிறது. ஆனால், மின்மினியின் ஒளி வீசும் வால் பகுதி, இரவு நேர வெப்பநிலையைவிடக் குறைவாகக் காணப்படுகின்றது. மின்மினிகள் வண்டினத்தைச் சேர்ந்தவை. அவற்றின் முதுகில் சிறகுகள் இருக்கும். பறக்கும்போது அவற்றின் அடியிலுள்ள மென்மையான மெய்ச் சிறகுகள் வெளிப்படும். பகல் நேரத்தில் அவை ஏதோ சாதாரணமான பூச்சிகளைப் போலவே தோற்றமளிக்கும். கறுப்பு, சாம்பல், பழுப்பு எனப் பல வகை நிறங்களுடன் அவை காணக் கிடைக்கின்றன. சில வகை மின்மினிகள் தட்டையாக நீண்டிருக்கும்.

### இணைகளை ஈர்க்கும் ஒளி

ஆண் பூச்சிகள் ஒளிச் சைகை செய்தவாறு மெல்லப் பறக்கும். சராசரியாக 5.8 விநாடிகளுக்கு ஒருமுறை ஒளிச் சைகை தோன்றும். வெப்பநிலை அதிகமாயிருக்கும்போது குறைவான நேர இடைவெளியிலும், வெப்பநிலை குறையக் குறைய அதிகமான நேர இடைவெளியிலும் ஒளிச் சைகைகள் வெளிப்படும். புல் தரையில் மறைவிடங்களிலிருந்து பெண் பூச்சிகள் பதிலுக்கு ஒளிச் சைகைகளை வெளியிடும்.

ஆச்சரியமூட்டும் விடயம் என்னவென்றால், ஆண் பூச்சி, பிற ஆண் பூச்சிகளின் சைகைகளிலிருந்து பெண் பூச்சியின் சைகைகளைப் பிரித்தறியும் திறன் பெற்றிருக்கிறது. இரண்டு வகை ஒளிச் சைகைகளும் ஒரே நிறத்தில்தான் இருக்கும். எனினும், ஆண் பூச்சிக்குப் பெண் பூச்சியின் சைகையைத் தனித்து அடையாளம் காண முடிகிறது.

பெண் பூச்சி வெளியிடும் ஒளி ஆண்பூச்சியின் ஒளியைவிட பிரகாசம் குறைவானது. ஆண் பூச்சியின் ஒளிச் சைகையைக் கண்ட பின் சரியாக 2.1 விநாடிகள் கழித்துப் பெண் பூச்சி பதி லுக்குச் சைகை செய்கிறது. ஆணும் அதைக் கண்டு, பதிலுக்குப் பதில் சைகை செய்தவாறு பெண் பூச்சியை நோக்கிப் பறந்தோடி வந்து இணைந்துகொள்கிறது.

### ஒளியின் மூலம்

சில மின்மினிகள் தமது கூட்டத்தை விட்டுத் தனித்து வந்து அமர்வது உண்டு. அப்போது, அதை மெல்ல நெருங்கிப் பார்த்தால், அதன் வயிற்றின் அடிப்பகுதியில் மங்க லாக் ஒளி வீசும் உறுப்புகளைக் காணலாம். அந்த ஒளி தொடர்ச்சியானதாயிருக்கும். அவ்வப்போது திடீர் திடீரென்று பொலிவு கூடும். பின்னர் குறையும். ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் பொலிவு கூடுவதும் குறைவதுமாயிருக்கும். பூச்சிக்கு ஏதேனும் உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்பதே அதற்கான காரணம். உடல் நலம் சரியாகிவிட்டால் அதன் ஒளி ஏற்ற இறக்கம் இல்லாமல் ஒரே சீராக வெளிப்படத் தொடங்கும். நாம் நெருப்புத் தணலை ஊதும்போது ஒட்சிசன் பட்டதும் அதன் பிரகாசம் அதிகரிப்பது போலத் தான் மின்மினிகளின் ஒளியும். மின்மினியின் ஒளி வீசும் உறுப்புகளில் திசுக்கள் இரண்டு அடுக்குகளாக அமைந்திருக்கும். ஒரு அடுக்கில் குருணைகளைப் போன்ற பொருள்களின் ஒரு படலம் உள்ளது. அந்தக் குருணைகளில் ஒளி உற்பத்தியாகிறது. அருகில் அவற்றினூடாகக் காற்றுச் செல்லும் குழல்களும் நரம்புகளும் கொண்ட ஒரு வலையமைப்புப் பரவியிருக்கிறது. மின்மினி தன் உடலுக்குள் காற்றை உள்ளிழுக்கும்போது, காற்றுக் குழல்களூடாகச் செல்லும் காற்றின் ஒட்சிசன் . குருணைகளின் மேல் பட்டு அவற்றின் பொலிவு கூடுகிறது. சில வகை மின்மினிகள் தமது கூட்டுப்புழுப் பருவம் வரை மட்டுமே ஒளி உறுப்புக்களுடன் இருக்கின்றன. அதிலிருந்து வளர்ச்சி பெற்றதும் அவற்றை இழந்துவிடுகின்றன. அவை இனப்பெருக்கக் காலத்தில் ஒளி வீசுவதில்லை.


### ஒளியால் பயனுண்டா?

பூச்சியின் வால்முனையில் மட்டுமே ஒளி வீசுவதால், அது தனக்கு முன்னுள்ள வெளியை வெளிச்சமிட்டுப் பார்க்கின்றதென்று கருத முடியாது.

வெப்ப மண்டலச் சதுப்பு நிலங்களில் தவளைகள் வயிறுமுட்ட மின்மினிகளைப் பிடித்து விழுங்கிய பிறகு. உள் உறுப்புகள் எக்ஸ்-ரே படத்தில் உள்ளதைப் போலத் தெரியும். மின்மினியின் ஒளியில் அதற்குத்தான் ஆபத்து. எதிரிகள் இலகுவாக அடையாளம் கண்டுபிடித்து உண்ண உதவுகின்றது எனலாம். மின்மினிகள் நத்தையின் மேல் அமர்ந்து தமது உமிழ்நீரால் நத்தையின் சதைப் பகுதியைக் கரைத்து உறிஞ்சிக் குடிக்கின்றன் இவைதான் மின்மினிகளின் உணவு. இதைவிட தாவரச்சாறுகளையும் உண்கின்றன.

(நன்றி: த இந்து)

# எச்சரிக்கை!



மெல்லத் துளிர் விடுகின்ற
ரோபோப் புரட்சி
வேரெனப் பரவி எமை
வேரறுக்கப் போகின்றது.
படித்த முட்டாள்கள் என
விளைவறிந்தும் நாம்
வீணே போய்ப் படுகுழியில்
விழுந்தழியப் போகின்றோம்

நாளை விடியும் வேளை
வளர்ந்த எம் வரலாற்றை
மின்னலெனத் திசைதிருப்பி
மிதித்தழிக்கப் போகின்றன.
மனிதத்தின் உயிர் முடிச்சுகளை
இரும்புக் கைகளினால்
அவிழ்த்தெறிந்து எமை
துடிக்க வைக்கப் போகின்றன.
இன்றளவும் நாம் புரிந்த
இந்திரியங்கள் எல்லாமே
இல்லை எனப் போகுமளவு
இருளாகப் போகின்றன.
ஆதாம் ஏவாளால்
அன்றலர்ந்த பூமி இன்று
அவசியமற்ற ரோபோக்களால்
அந்தமாகப் போகிறது.

சிரித்து வாழ்வதே
சிறப்பென எண்ணி அது
இயந்திரச் சிரிப்புகளை
உதிர்த்திடப் போகிறது
உதிரும் அந்த சிரிப்புகளால்
சுவாசத்தை மறக்கும் பூமி
துடிதுடித்து பரிதவித்து
உயிர்விடப் போகிறது.

அமிலம் கக்கும் கண்களால்
அலையும் அதன் பார்வையில்
விண்மீன்களும் கசிந்துருகி
விரயமாய் போகிறது.
கால்படும் இடமெலாம்
காட்சிகள் மடிவதனால்
புண்பட்ட பூமி நாளை
புகைபட்டு எரியப் போகிறது.

பாரதங்களும் ராமாயணங்களும்
கண்ட எம் வரலாற்றை
ரோபோக்கள் கை தொட்டு
வரைந்திடப் போகின்றன
வானுயர வாழ்த்தியும் அல்ல
வாயாரப் பாடியும் அல்ல
என்றோ அழிந்திடும் பென்சில்
தீற்றல்களாய்

மனிதர் எம் விடிவுக்கென
நாம் செய்த உருவங்கள்
காலனாய் எம் கழுத்தை
கடித்தறுக்கப் போகின்றன.
உணர்வுகளை உதறித்தள்ளி
இயந்திர காதலர்களென
மாறுவதனால் எம் வாழ்வு
மங்கிடப் போகிறது.

*பா.பாலாஜினி, பளை*



# புரிந்து கொள்ளுமா தமிழக அரசு?

அதிரன்

காவிரி விவகாரம் உருவாக்கிய பதற்றம் குறைய ஆரம்பித்திருப்பது ஆறுதல் அளித்தாலும், இந்தப் பிரச்சினையின் அதிர்வுகள் அடங்குவதற்கு இன்னும் காலம் பிடிக்கும் என்றே தோன்றுகிறது. கன்னட அமைப்புக்கள் அரங்கேற்றிய வன்முறையின் அதிர்வலைகள் இம்முறை அமெரிக்கா வரை எதிரொலித்திருக்கின்றன. தன்னுடைய குடிமக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது அமெரிக்கா. இதற்கு முன்பு எப்படியோ அப்படியே மீண்டும் தமிழர்கள் இயல்பான சூழலுக்குத் திரும்புவார்கள், கன்னடர் - தமிழர் உறவு மீண்டும் இயல்பான நிலைக்குத் திரும்பும் என்றெல்லாம் பெங்களூரிலிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தாலும், நடந்த நிகழ்வுகளைப் பார்க்கையில், சில விடயங்களைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். பெங்களூர், கோலார் தங்கவயல், மைசூர், கொள்ளேகால், ஷிமோகா, பத்ராவதி என்று கர்நாடக மாநிலம் முழுவதும் சுமார் ஒரு கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கர்நாடகத்தில் குடியேறியவர்கள். மைசூர் மகாராஜாக்கள் காலத்திலேயே, திவான்களாகத் திகழ்ந்த தமிழர்களும் உண்டு. கர்நாடகத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாகத் தமிழர்கள் நின்ற வரலாறு உண்டு. கல்வி, வணிகம், திரைத்துறை என்று சகல துறைகளிலும் தமிழர்களுக்குப் பங்கிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில், அங்கு வெறியுணர்வு தூண்டப்பட்டுப் பதற்றச் சூழல் ஏற்படும்போது தமிழகத்தில் நடக்கும் சிறு சிறு சம்பவங்களும் இன்னொரு முனையில் சக தமிழர்களின் வாழ்வுக்கே துன்பத்தை விளைவிக்கும்.

கர்நாடகம் அளவுக்குத் தமிழகத்தில் வன்முறைகள் இல்லை. இயல்பாகவே அந்த மக்கள் அமைதி காத்தார்கள் என்பதோடு, தமிழக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததும் இதற்கு முக்கியமான காரணம். அதேபோல, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீதும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தது.

ஆனால், இப்படியான விடயங்கள் மாற்றுத் தரப்பின் காதுகளை எட்டுவது முக்கியம். தமிழக முதல்வர் இந்தத் தருணத்தில் பேசியிருக்க வேண்டும். கர்நாடகத் தரப்பை நோக்கி அல்ல, தமிழக மக்களை நோக்கியே அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, அமைதி காக்கும்படி வேண்டுகோள் விடுத்திருக்கலாம். அது பதற்றங்களைக் குறைக்கவும் நல்லெண்ணங்களை விதைக்கவும் வழிவகுக்கும். மேலும், பிரச்சினை இவ்வளவு தூரம் சென்ற பிறகும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் கூட்டாதது சரியானதல்ல எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒருபக்கம் காவிரியில் உரிமைகளை நிலைநாட்ட சட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியம். மறுபக்கம் இனி வரும் காலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ள என்ன மாதிரியான தீர்வுகளை நோக்கி நகரப் போகிறோம் என்று விவாதிப்பதும் முக்கியம். ஊர் கூடித் தேர் இழுக்கும் வேலை இது. முதல்வர்தான் ஊரைக் கூட்ட வேண்டும்.

காவிரிப் பிரச்சினையை உற்றுநோக்கும்போது, ஒரு விடயம் தெளிவாகப் புலப்படுகிறது. தண்ணீர் கேட்டுத் தமிழகத்தில் விவசாயிகள் மட்டுமே போராடுகிறார்கள். அதுவும் காவிரிப் படுகை விவசாயிகள் மட்டும்.

ஆனால், கர்நாடகத்திலோ விவசாயிகள் மட்டுமன்றி ஏனைய தரப்பினரும் விவசாயிகளோடு கைகோர்த்து நிற்கிறார்கள். உச்ச நீதிமன்ற உத்தரவு வெளியான சில மணி நேரங்களில், செய்தியாளர்களைச் சந்தித்தார் அம்மாநில முதல்வர் சித்தராமையா. குடிதண்ணீருக்கே இல்லை என்கிறபோது எப்படித் தினமும் இவ்வளவு தண்ணீரைத் தமிழகத்துக்குத் திறந்துவிட முடியும்? கண்டிப்பாக முடியாது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன். அப்போது என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதன்படிதான் இந்த அரசு நடந்துகொள்ளும் என்றார். தமிழகத்திலோ பெரும்பான்மை எதிர்க்கட்சிகள், முதல்வர் அனைத்துக்கட்சிக்கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று கோரிய நிலையில், அ.தி.மு.க அரசு இது குறித்து துளியும் அலட்டிக்கொள்ளவில்லை. தமிழக அரசு ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது புதிய ஆலோசனைகளைக் கேட்டுப் பெற மட்டும் அல்ல, காவிரிப் பிரச்சினையில் ஒட்டுமொத்தத் தமிழகமும் ஓரணியில் நிற்கிறது என்பதை வெளிப்படுத்தவும் இந்த விவகாரத்தில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும் தமிழக விவசாயிகளுக்குத் தார்மிக ரீதியிலான ஆதரவை வெளிப்படுத்துவதற்கும் அது பெரிய அளவில் உதவும். இதனைத் தமிழக அரசு புரிந்துகொள்ளவேண்டும்.






# தமிழில் வெளிவருகிறது எம்.எஸ் டோனியின் கதை





பாக்ஸ் ஸ்டார் ஸ்டூடியோ தயாரிப்பில் பிரபல ஹிந்தி இயக்குநர் நீரஜ் பாண்டே, இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் மகேந்திரசிங் டோனியின் வாழ்க்கை கதையை எம்.எஸ். டோனி தி அன்டோல்ட் ஸ்டோரி என்ற பெயரில் இயக்கி உள்ளார். இதில் சுசாந்த்சிங் ராஜ்புட் தோனியாக நடித்துள்ளார். கியாரா அத்வானி, அனுபம் கேர், பூமிகா சாவ்லா, ராஜேஷ் சர்மா உட்படப் பலர் நடித்துள்ளனர்.

இந்தப் படம் எதிர்வரும் 30ஆம் திகதி உலகம் முழுவதும் வெளிவருகிறது. மகேந்திரசிங் டோனிக்கு தமிழ்நாட்டில் கணிசமான ரசிகர்கள் இருப்பதால் படத்தை தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிடுகிறார்கள். அதோடு தெலுங்கிலும் மொழி மாற் றம் செய்கிறார்கள். இந்தப் படம் தமிழ்நாடு முழுவதும் 150 தியேட்டர்களில் வெளியிடப்படவுள்ளது. சென்னையில் ஹிந்தியிலும் வெளியிடப்படவுள்ளதாகவும் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
















## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 2 | | 5 | | 6 | 7 |
| 7 | | | 1 | | | 5 | | |
| 8 | | | | | | 4 | | |
| | | 3 | 7 | | | | 2 | |
| 1 | | | | | | | | 5 |
| | 7 | | | | 2 | 3 | | |
| | | 9 | | | | | | 6 |
| | | 7 | | | 8 | | | |
| 2 | 8 | | 5 | | 1 | | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 4 | 3 | 9 | 5 | 8 | 6 | 1 |
| 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 5 | 2 | 3 |
| 8 | 5 | 3 | 6 | 2 | 1 | 9 | 4 | 7 |
| 5 | 8 | 9 | 1 | 3 | 2 | 4 | 7 | 6 |
| 1 | 4 | 7 | 8 | 5 | 6 | 2 | 3 | 9 |
| 3 | 6 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 5 |
| 4 | 3 | 6 | 2 | 1 | 9 | 7 | 5 | 8 |
| 7 | 1 | 5 | 4 | 6 | 8 | 3 | 9 | 2 |
| 9 | 2 | 8 | 5 | 7 | 3 | 6 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**மேடம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். இல்லறத்துணையின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.



**இடபம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில், போட்டி பெருமளவில் குறையும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பாராட்டு, வெகுமதி பெறுவர்.



**மிதுனம்:** முக்கிய பணிகளை, சமயோசிதமாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிநிலை திருப்தியளிக்கும். வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி காண்பீர்கள்.



**கடகம்:** சிலர் உங்களை ஏளனமாகப் பேசும் சூழ்நிலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபமும் கூடும். பெண்கள், செலவுக்காக கடன் வாங்க நேரலாம். உணவு விடயத்தில் கவனம் தேவை.



**சிங்கம்:** முக்கியப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.





**கன்னி:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.



**துலாம்:** மனதில் நல்லெண்ணம் உண்டாகும். அன்றாடப் பணிகளில், புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் உயரும். குடும்பத்தில் சுப விடயப் பேச்சு நடக்கும்.



**விருச்சிகம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயற்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில், சுமாரான வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.



**தனுசு:** உங்களின் பிரச்சினைகளைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம், மந்த கதியில் இயங்கும். சேமிப்புப் பணம் செலவுக்கு பயன்படும். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரால் உதவி உண்டு.




**மகரம்:** உங்கள் நலம் விரும்புபவரை சந்திப்பீர்கள். அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் ஏற்படும்.



**கும்பம்:** எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளை, உரிய வகையில் சரி செய்வது நல்லது. சுமாரான இலாபம் கிடைக்கும். தகுந்த ஓய்வு உடல் நலத்தை சீராக்கும்.



**மீனம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். நீண்டநாள் விருப்பம் நிறைவேறும். மாணவர்களுக்கு, படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.



# சோற்றுப் பகோடா

### செய்முறை

மிகுதியாக உள்ள சோற்றை மிக்சியில் போட்டு ஒரு தரம் அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

அத்துடன் சிறிது கடலை மாவு, சிறிது கோதுமை மாவு சேர்த்து நன்றாக பிசைந்து கொள்ளவும்.

அதில் நறுக்கிய வெங்காயம், நறுக்கிய இஞ்சி, பொடியாக நறுக்கின பச்சை மிளகாய், தேவையான அளவு உப்பு, கறிவேப்பிலை சேர்த்து கிளறி வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி, சூடானதும் இந்த மாவைக் கிள்ளிப் போட்டு பகோடாக் களாகப் பொரித்து எடுக்கவும்.

### தேவையான பொருள்கள்

மிகுதியாக உள்ள சோறு - ஒரு கப்
கோதுமை மா - 1/2 கப்
நறுக்கிய வெங்காயம் - 1/2 கப்
பொடியாக நறுக்கிய -
இஞ்சி, பச்சை மிளகாய்
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - பகோடா பொரிப்பதற்கு
கறிவேப்பிலை - சிறிதளவு

## நாளை

புரட்டாதி-03
திங்கட்கிழமை -19.09.2016
திதி: திருதியை மு.இ.06.55
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ.03.01
ராகுகாலம்: 07.33-09.03 வரை
சுபநேரம்:12.03-01.33 வரை
சங்கடஹர சதுர்த்தி



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 650 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 700 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 800 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 600 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 350 | 400 | 450 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 300 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 150 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | – | – |
| வாளை | 100 | 200 | – | 400 | 300 | – | – |

## ஆண்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டிய சில உணவுகள்

- தண்ணீர் குறைவாகக் குடிப்பதும் தவறு அளவுக்கு அதிகமாக குடிப்பதும் தவறு. மேலும் அவரவர் உடல் எடை, வயது, உடல்நலம் குறித்து நீரின் அளவு வேறுபடும்.
- அளவுக்கு குறைவாய் தண்ணீர் பருகுவதால் உடலில் 'நீர்வறட்சி' ஏற்படுகிறது.
- நீர்வறட்சி உடல் பாகங்களில் செயற்திறன் குறைபாடு ஏற்பட காரணமாகிறது. முக்கியமாக சிறுநீரகத்தின் செயற்பாட்டை இது குறைக்கிறது.
- 'கற்றாழை ஜூஸ்' பருகுவது உடல் நலனுக்கு நல்லது என்பார்கள். உண்மை தான் செரிமானம் உடல், எடை குறைக்க, நோய் எதிர்ப்பை அதிகரிக்க இது ஊக்குவிக்கிறது. ஆனால், அளவுக்கு மீறினால் தசை பிடிப்புகள், கல்சியம் குறைபாடு போன்றவை உண்டாகும் அபாயமும் இருக்கிறது.
- 'பால் உணவு'களில் இருக்கும் கல்சியம் எமது எலும்புகளின் வலிமையை ஊக்குவிக்கிறது.
- அதே நேரத்தில் அதிகமாக பால் உணவுகள் எடுத்துக் கொள்வது, உடலில் இருக்கும் இரும்புச் சத்து குறைய காரணமாகி விடுகிறது.
- மேலும், இது இரத்தசோகை ஏற்படவும் காரணியாக அமைகிறது.
- 'நட்ஸ்' அளவாக சாப்பிடுவது உடற்திறனை அதிகரிக்கவும், நோய் எதிர்ப்பு மண்டலத்தை ஊக்குவிக்கவும் உதவுகிறது.
- ஆனால், அளவுக்கு அதிகமாக நட்ஸ் உட்கொள்வது உடல் எடை அதிகரிக்க காரணியாக அமைகிறது. ஏனெனில், இவற்றால் கலோரிகள் அதிகம்.
- நார்ச்சத்து மிகுதியாக உள்ள 'ஓட்ஸ்' செரிமானத்தை ஊக்குவித்து உடல் எடை குறைக்கவும் சீராக பயனளிக்கிறது.
- மேலும் இது 'கொலஸ்ரோல்' அளவைக் குறைக்கவும் இரத்த சர்க்கரை அளவை குறைக்கவும் கூட வெகுவாக உதவுகிறது.
- ஆனால் அளவுக்கு அதிகமாக ஓட்ஸ் உண்பதால் குமட்டல், வாயுப் பிரச்சினைகள் உண்டாகக் காரணியாகி விடுகிறது.
- ஆண்கள் இந்த நடைமுறைகளைப் பின்பற்றினால், அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.






## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | – | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 50 | 60 | 40 | – | 90 | 35 |
| கரட் | 120 | 100 | 120 | 100 | 100 | – | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 100 | 80 | 70 | – | 80 | 60 |
| பயிற்றை | 50 | 60 | 60 | 40 | 60 | – | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 120 | 100 | 100 | – | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 100 | 90 | 90 | – | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 80 | – | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30 | – | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 50 | 50 | 60 | – | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 80 | 80 | – | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | – | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 30 | 30 | – | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 120 | 180 | 80 | – | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 60 | – | 70 | 50 |
| கோவா | 80 | 90 | 100 | 80 | 80 | – | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 80 | 80 | 60 | – | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 200 | 120 | 140 | – | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 100 | – | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 35 | 30 | – | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | – | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 300 | 220 | 280 | – | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | – | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 120 | – | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 20 |
| முருங்கைக்காய் | 180 | 140 | 200 | 120 | 160 | – | 80 | 100 |



# கொலையாளிகளைப்போல் விரட்டப்பட்டோம்

## உலகக் கிண்ணத் தோல்வி குறித்து டோனி






2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் படுதோல்வியடைந்து வெளியேறிய பின்னர் தாம் கொலையாளிகளைப் போன்று ஊடகங்களால் நடத்தப்பட்டதாக டோனி தெரிவித்தார்.

டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி திரைப்படம் இந்த மாதம் 30 ஆம் திகதி உலகெங்கும் திரைக்கு வருகிறது. இந்தப் படத்தினைப் பிரபலப்படுத்துவதற்காக டோனி அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்தே அவர் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தோல்வி தொடர்பாக மனம் திறந்தார்.

"எம்.எஸ்.தோனி படம் தனிமையில் எனக்குக் காண்பிக்கப்பட்டது. படத்தைப் பார்த்தவுடன் எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் மீண்டும் என் நினைவில் புதிதாகப் பதிந்துள்ளது. நான் ஒரு கிரிக்கெட் வீரராக வெற்றிபெற 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் தோல்வியடைந்தமைதான் பிரதான காரணம். அந்தத் தொடரில் பங்களாதே-ஷிடம் தோற்று வெளியேறினோம். நாடு திரும்பி டெல்லி விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது ஏகப்பட்ட ஊடகங்கள் எம்மை மொய்த்துக் கொண்டன. எமக்கு எதிராக பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பலத்த பாதுகாப்புடன் விமான நிலையத்திலிருந்து வெளியேறி பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டோம். கொலைக் குற்றம் செய்தவர்களைப் போல் ஊடகங்கள் எம்மை நடத்தின. பொலிஸ் வாகனத்தைப் பின்தொடர்ந்து வந்தன. நாங்கள் ஏதோ பெரிய குற்றமிழைத்ததால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு சென்றதைப் போன்று அது இருந்தது. நாங்கள் அன்று அவ்வாறு நடத்தப்பட வேண்டியவர்கள் அல்லர். இவை என்னை மிகவும் காயப்படுத்தின. ஓர் உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று மனதுக்குள் நினைத்தேன். பல முயற்சிகளை மேற்கொண்டேன். அந்த முயற்சியே என்னை இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ஆக்கியது. இவை அனைத்து சம்பவங்களையும் எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்ரோறி படம் சிறப்பாகவே பிரதிபலிக்கிறது" என டோனி மேலும் தெரிவித்தார்



# தீவுகளின் தில்லுமுல்லு

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் அண்மைக்கால நடவடிக்கைகள் பல, யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டுவதைப் போல் அமைந்துள்ளன.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையே ஊதிய ஒப்பந்தப் பிரச்சனை ஏற்பட்ட காலத்திலிருந்து அந்தக் கிரிக்கெட் சபை வீரர்களுக்கு எதிராக கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களிலிருந்து கெய்ல், பிராவோ, சமி, ரசல், பொலார்ட் போன்ற அனுபவ வீரர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் அந்த அணி படுமோசமான தோல்விகளைச் சந்தித்தது. ஆனால் ரி-20 அணியில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. இதனால் உலகின் ஆகச்சிறந்த ரி-20 அணியாக தீவுகள் வலம் வந்தது, வந்துகொண்டிருக்கிறது. நடப்பு வருடத்தில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத்தையும் கைப்பற்றியது. இத்தகைய வெற்றிகளைக் குவித்த பின்னரும் தீவுகளின் கிரிக்கெட் சபைக்கும் அனுபவ வீரர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

சமீபத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரிலிருந்து சமி நீக்கப்பட்டார். உலகச் சம்பியனான தீவுகளின் ரி-20 அணியின் தலைவர் அவர். ஆகச்சிறந்த தலைமைத்துவம் அவரிடத்தில் உள்ளது. இதனால் தீவுகளின் கிரிக்கெட் சபைக்கு எதிராக விமர்சனங்கள் குவிந்தன. ஆனால் அணியில் புதுமைகளைப் புகுத்த வேண்டும் என்று அந்தச் சபை ஒற்றை வரியில் காரணம் தெரிவித்தது. புதுமைகள், திறமைகள் இல்லாமலா சமி உலகக்கிண்ணத்தை வென்றிருப்பார்.

சமியின் புறக்கணிப்பு ஒருபுறம் இருக்க மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்ட பில் சிம்மன்ஸையும் அந்தச் சபை தற்போது பதவி நீக்கம் செய்துள்ளது.

ரி-20 அணியிலிருந்து சமி புறக்கணிக்கப்பட்டமைக்கும், தலைமைத்துவம் அவரிடமிருந்து எடுக்கப்பட்டு வேறொருவரிடம் கொடுக்கப்பட்டமைக்கும் சிம்மன்ஸ் தனது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்தார். இதனால் சிம்மன்ஸுடன் முரண்பட்ட சபை, தமது தலையாட்டிப் பொம்மையாக அவர் செயற்பட மறுத்ததையடுத்து அவரையும் பதவிநீக்கம் செய்தது. மொத்தத்தில் ஒரு சிறந்த தலைவர், வீரர், சிறந்த பயிற்சியாளர் என இரு பெரும் தலைகளை அந்தச் சபை தன்னிடத்திலிருந்து அகற்றியுள்ளது.

உலகக்கிண்ண வரலாற்றில் முதலிரு கிண்ணங்களையும் கைப்பற்றி பல ஜாம்பவான் அணிகளை மிரட்டிய தீவுகள், தற்போது இவ்வாறான நடவடிக்கைகளால் தானே தன் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டுகிறது. உலகக்கிண்ணம் போன்ற தொடர்களில் கலந்துகொள்ள வேண்டுமாயின் தகுதிச்சுற்றில் விளையாடி வரவேண்டிய நிலைக்கு அந்த அணி தள்ளப்படப் போகிறது என்றால் அது ஒன்றும் மிகையாக அமையப்போவதில்லை.

# அதிகம் பின்தொடர்வோர் பட்டியலில் ரொனால்டோவுக்கு முதலிடம்




இணையத்தளத்தில் அதிக மக்களால் பின்தொடரப்படும் விளையாட்டு வீரராக ரொனால்டோ உள்ளார். விளையாட்டை மட்டுமல்லாது ஏனையதுறைகளையும் சார்ந்த நட்சத்திரங்களும் குறித்த பட்டியலில் உள்வாங்கப்பட்டால் ரொனால்டோவுக்கு இரண்டாவது இடம் கிடைக்கும்.

பன்னாட்டு ஆங்கில ஊடகமொன்றே இந்தப் பட்டியலை வெளியிட்டது. கால்பந்து நட்சத்திரமான ரொனால்டோவை மொத்தமாக 238 மில்லியன் மக்கள் பின்தொடருகின்றனர். இதன் மூலமே இப்பட்டியலில் ரொனால்டோ இரண்டாவது இடம் பிடித்துள்ளார். இந்த பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் காணப்படும் ஒரே ஒரு ஆண் என்ற பெருமையையும் தன்வசபடுத்திக் கொண்டார் ரொனால்டோ. முதலிடத்தில் உள்ள அமெரிக்கப் பாடகி டெய்லர் ஸ்விப்ட்டை 246 மில்லியன் மக்கள் பின்தொடருகின்றனர். மூன்றாம் இடத்தில் உள்ள மற்றுமொரு அமெரிக்க பாடகி கேட் பெர்ரியை 219 மில்லியன் மக்கள் பின்தொடருகின்றனர். 205 மில்லியன் மக்கள் பின்தொடரும் செலினா கோமஸ் நான்காவது இடத்திலும், 190 மில்லியன் மக்கள் பின்தொடரும் பார் பேரிய பாடகி ரிஹானா ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

# கறையான்கள்



(37 பக்கத் தொடர்ச்சி)முதுகில குத்துறது தான் இந்த மூதேவிகளின்ர நிரந்தரத் தொழிலாகிவிட்டது. எண்டா பாருங்கோவன். காந்தனுக்கு கலியாணப் பேச்சுத் தொடங்கிவிட்டது. ஏழுச் செவ்வாய் எண்டு குறிப்பைப் பார்த்து ஊர் சாத்திரியுமெல்லே சொல்லிப் போட்டார். பால்காறன் பல்லும் தீட்டவில்லை விடிந்ததும் விடியாததுமாய் சீப்பிளேன் ஆச்சிக்கு பால் கொடுக்கும்போது, எழுத்தாளர் ஜெயக்காந்தன் சந்தியாப் பிள்ளைக்கு திருமணப் பேச்சு நடக்குது. புறோக்கரை கண்டனான் சரிவரும் போல கிடக்குது. நீங்கள் காந்தன்ர கலியாணம் கனக்கு குழப்பின்னிங்கள் இதையும் குழப்பிப் போடாதயுங்கோவன் நான் வாறன். என்று மெல்லச் சகுனி வேலை பார்த்திட்டு புறப்பட்டார். கந்தப்புவுக்கும் சீப்பிளேன் ஆச்சிக்கும் தூக்கம் வரவில்லை சாப்பிடவும் முடியவில்லை. இது என்னடா வில்லங்கம் வாழை மரம் போல வெட்ட வெட்ட குருத்து எட்டிப் பார்க்குது. ஊரில நாங்கள் நினைச்சா ஒருத்தரை நல்லவராவும் புகழுவம் நாறவும் அடிப்பம். எங்களை மதிக்காதவர்களைச் சதிவேலை பார்த்து சாதித்துக் காட்டுவம். வெளிக்கிடடி விசுவமடுவுக்கு... விசுவமடுவிலதான் பாருங்கோ பொம்புளயின்ர வீடு....

ஆட்டோவைப் பிடிச்சுப் போய் பஸ்சில ஏறி இறங்கி, பிறகும் ஒரு ஆட்டோவைப் பிடிச்சு ஜெயக்காந்தன்ர காறெக்ரர் சரியில்லை எண்டு கனகதை எல்லாம் சொல்லி ஒரு மாதிரி இருபதாவது சம்மந்தத்தையும் குழப்பிய மனநிறைவுடன் வீட்டுக்கு வந்தா பசி ஒருபுறம். பால்காறன் கொண்டு வந்த பின்னேரப்பாலை காச்சி குடிச்சுப் போட்டு பால்காறனை இருத்தி வைச்சு விசுவமடுக் கெட்டித்தனத்தைச் சொல்லிச்சினமாம். அவனும் காது வெடிக்கப் போகுதெண்டு ஊரெல்லாம் பத்த வச்சுப் போட்டானாம். ஒரு பொருளை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிறது கறையான்கள் மட்டுமில்லை பாருங்கோ, சில மனிதர்களின் ஈனச் செயல்களும் தான்.

விசுவமடு ரமணிக்குச் சரியான கவலை. ஜெயகாந்தன்ர படத்தைப் பார்த்தவுடன் பிடிச்சுப் போச்சு என்று நினைத்தவள் முருகன் கோவில்ல போய் முறையிடத் தொடங்கினாள். ஐயரிடமும் அர்ச்சனை செய்து விரதமிருந்து வேண்டுதல்களை நாளும் செய்தாள். ஏழுச் செவ்வாய் ரமணிக்கு ஏழுச் செவ்வாய் என்று இருந்த போதுதான் ஜெயகாந்தன் குறிப்பு நல்ல பொருத்தம் எண்டு ஐயரும் சொல்லிப் போட்டார். ஆனா கலியாணம் குழம்பிப் போச்சுது..

தீர விசாரித்தால் தீர்வு பிறக்கும். ஜெயகாந்தன் கலியாணத்தை குழப்பினது தனிப்பட்ட விரோதத்தாலதான். சதிகாரர்களின் கபடத்தனத்தை வெளிப்படுத்தி "நல்ல சம்பந்தம் 'மிஸ்' பண்ண பாத்தம்" எண்டு விசுவமடுவுக்கு புறோக்கர்மாரும் போய் குளப்பின சம்பந்தத்தை சரி பண்ணிப் போட்டினம். ரமணியின்ர விரதம் வீண்போகவில்லை.

ஜெயகாந்தனைப் பார்த்து கதைத்து தனது சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொண்டாள். திருமண நாளும் குறிச்சு அழைப்பிதழும் அச்சடிச்சாச்சு. இந்த முறை பால்காறன் 'லேட்'டாத்தான் தகவலைக் கொண்டு போய்க் கந்தப்பு காதில போட்டான்.

ஊர் உலகத்தைக் கெடுக்கிற குடி அம்மா இருக்குமே வெளிக்கிடடி மீண்டும் விசுவமடுவுக்கு. ரமணியை சந்திச்சு கதைப்பம். அவள் எங்கட ஊர்பிள்ளை. தந்திரமாய் உவனைப் பத்தி கொழுத்தி விடுவம். இந்தக் கலியாணத்தை ஒருவாறு குழப்புவம் என்ற கனவுடன்.. பயணமாகின்றார்கள் சீப்பிளேன் ஆச்சியும் கந்தப்புவும். எது சொல்லியும் எடுபடேல்லப் பாருங்கோ. பெட்டைக்கு பெடியனைப் பிடிச்சுப் போச்சு சுருக்கமாகச் சொன்னா ஜெயகாந்தன்ர டயறி எழுத்துக்கள் யாவும் றமணி படிச்சுப் பார்த்த பின்பு முடிவெடுத்தாள். 'நல்ல புத்தகங்களைக் கறையான்கள் அரித்து விடக் கூடாது படித்துப் பார்த்துத்தான் ஒரு புத்தகத்தை விமர்சிக்க வேணும்' என்று ரமணி நினைத்துக் கொண்டாள். கந்தப்புவும் சீப்பிளேன் ஆச்சியும் தோத்துப் போட்டினம். தோல்வியை ஒத்துக் கொள்ளாமல் எப்படியும் ஜெயகாந்தன்ர குடும்பத்தை குளப்ப வேணும் என்று நினைத்து 'றூம்' போட்டு சிந்திக்கின்றார்கள். பால்காறன் வருகின்றான் எனக்கினி இஞ்ச வேலையில்லை மாட்டில பால் குறைஞ்சு போச்சு. அடுத்த மாடு கன்று போடட்டும் பொறுத்திருங்கோ என்று கூறி விடைபெற்றான்...

ஜெயகாந்தன் ரமணி இருவரும் ஒரு அழகிய கவிதை ஒன்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தனர்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 438

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | 5 |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | ■ | 10 | 11 | | |
| 12 | | ■ | 13 | | | ■ | |
| | ■ | 14 | | | ■ | 15 | |
| ■ | 16 | | | ■ | 17 | | ■ |
| 18 | | | ■ | 19 | | | 20 |
| 21 | | | | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. கழிவிரக்கம்
6. சுவர்
7. நிலத்திலோ படுக்கையிலோ சாிந்திரு என்ற ஏவல்
8. கழிவு வெளியேறும் உறுப்பு
10. சுகம் (விசாரித்தல்)
12. எலிக்கும் இது வேண்டும்
13. வடிவானவள்
14. தொண்டையிலிருந்து எழும் ஒலி
15. தமது
16. உப்பரிகை
17. உள்ள(து)
18. கால்
19. பத்தின் இரு மடங்கு
21. வணங்குதல்
22. வரி

### மேலிருந்து கீழ்

1. தகுந்த பருவம்
2. நள்ளிரவு
3. பணிவிடை செய்பவள்
4. ஒரு பீரங்கி வகை
5. பெற்றோர் பிள்ளைகள் சேர்ந்த கட்டமைப்பு
7. சிலவற்றையும் தாண்டியது
9. கட்டு
11. தோழி
13. ஒரு தீட்டும் கருவி
14. வண்ணத்துப் பூச்சியின் ஒரு பருவநிலை
15. சேனாதிபதி
16. திங்கள்
17. வடிவம்
18. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை
19. வீடு
20. பிரிவு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 436 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) பிரசவம் (4) பாவி (6) மறி (7) கடைசி (8) மாசாத்துவான் (11) தமது (12) தனிமை (14) வடம் (16)சூது (18) அம்மா (19) பார்வை (20) சுமை (21) ரகம் (22)பதிகம் (23)புயல்

**மேலிருந்து கீழ்**

(1) பிரமாதம் (2) சமத்துவம் (3) வறிது (4) பாடை (5) விசில் (7) கன்னி (9) சாம (10) வாதம் (13) மைசூர் (15) டமாரம் (17) துவையல் (18) அமைதி (19) பாம்பு (20)சுப

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 436 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
செல்வி தி.ஜயபாரதி,
வேரற்கேணி கந்தசுவாமி கோவிலடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**
ஹெலகன் ஸ்ரெபான் சொய்சா,
வங்காலை 01,
மன்னார்.

**3 ஆம் பரிசு**
சி.தர்மகுலராசா,
களபாவோடை, ஏழாலை மத்தி,
ஏழாலை.

**4 ஆம் பரிசு**
பிரபா செல்வராசா,
இல.375 கொரவபத்தான வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**
மா.சுரேஸ்கரன்,
பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

க.சிவஜனனி
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

நா.தவேந்திரராஜா,
மல்வம்,உடுவில்,
சுன்னாகம்.

ப.நவமணி,
மணற்பிட்டி,
காரைநகர்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.438
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(28.09.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.438இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.10.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 436இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

18.09.2016 முதல்
24.09.2016 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சந்திரன், கேது ஓரளவு நன்மை தருவர். திட்டமிட்ட பணிகள் கடும் முயற்சியின் பேரில் நிறைவேறும். உறவினர்கள் பாசம் கொள்வர். வாகனம் இயக்கும்போது, மிதவேகமாகச் செல்லவும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல் நிலையில் உரிய கவனம் வேண்டும். முன் பின் தெரியாதவர்களிடம் பழகுவதைத் தவிர்ப்பதால், பொருள் இழப்பைத் தவிர்க்கலாம். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கடும் சிரமம் இருந்தாலும், ஓரளவு பணவரவு இருக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கடுமையாக இருக்கும். மாணவர்கள் சுமாராகப் படிப்பர்.

## இடபம்

புதன், குரு, சுக்கிரன் அனுகூல பலன் தருவர். மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். பயணங்களின் எண்ணிக்கை கூடும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் சீராகும். புத்திரர்களின் குளறுபடியான செயல்களைச் செய்யக் கூடும். அவர்களுக்கு அறிவுரை சொல்லி வழிகாட்டவும். கடன்களை அடைப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்பான சூழல் இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டியை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பில் ஜாமின் ஏற்கக் கூடாது. மாணவர்கள் படிப்புடன் பயனுள்ள செயல்களில் ஈடுபடுவர்.

## மிதுனம்

சூரியன், ராகு, சுக்கிரன், சனீஸ்வரர் நன்மை வழங்குவர். குடும்ப நிகழ்வுகள் இனிதாக அமையும். மனதில் புத்துணர்ச்சி ஏற்படும். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் மனதில் ஆன்மிக எண்ணம் வளரும். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள், பணிகளை விரைந்து முடித்து, நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் முன்னேறுவர்.

## கடகம்

சுக்கிரன், செவ்வாய் அனுகூல பலன் தருவர். அக்கம் பக்கத்தவர் அன்புடன் நடந்து கொள்வர். உடன்பிறந்தவர்களின் பாசம் நெகிழ்ச்சி தரும். சிலர் வீடு இடம் மாறுவர். பூர்வ சொத்தில் வருமானம் பெற நம்பிக்கையானவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பது நல்லது. புத்திரர்களின் மனக் குழப்பத்தை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். கணவன், மனைவி இணைந்து திட்டம் தீட்டி வெற்றி பெறுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். பாக்கிப் பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.

## சிங்கம்

சுக்கிரன், குரு அனுகூல அமர்வில் உள்ளனர். மனம் உற்சாகமாக இருக்கும் என்பதால், செயல்களில் வெற்றி ஏற்படும். குடும்ப விவகாரங்களை பக்குவமாக அணுகுவீர்கள். நண்பர்களின் கருத்து பயன் தரும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். புத்திரர்களின் ஆர்வம் மிகுந்த செயல் மகிழ்ச்சி தரும். உடல்நிலையில், சிறு பாதிப்பு ஏற்பட்டு விலகும். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப் பைப் பெறுவர். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கு தாராளமாக பணம் இருக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## கன்னி

சுக்கிரன், சனி, கேது அளப்பரிய நன்மை தருவர். செயல்கள் சிறப்பாக அமைந்து நற்பெயர் பெற்றுத் தரும். உடன்பிறந்தவர்கள் உதவிகரமாகச் செயற்படுவர். வீடு, வாகன வகையில் பராமரிப்பு செலவு அதிகமாகும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நல்வழியில் நடப்பர். பணம் கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாக இருக்கும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை ஓங்கும். அரச உதவி கிடைக்க தாமதமாகலாம். கடன் கொடுத்த பணம் ஓரளவு வசூலாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர்.

## துலாம்

புதன், ராகு, சுக்கிரன், செவ்வாய் அனுகூல பலன் தருவர். இஷ்ட தெய்வ அருளால் முக்கியப்பணி நிறைவேறும். வாழ்க்கை வசதிகள் சிறப்பாக இருக்கும். நண்பர்கள் கேட்ட உதவியை வழங்குவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் மிதவேகமாகச் செல்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். கணவன், மனைவி இடையே ஒற்றுமை உருவாகும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு இருந்தாலும் வளர்ச்சி கூடும். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்பட்டு சலுகை பெறுவர். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேறுவர்.

## விருச்சிகம்

புதன், சூரியன், குரு, சுக்கிரன் தாராள நன்மை தருவர். பணிகளை திறமையாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் தேவையான உதவி வழங்குவர். பணவரவு திருப்திகரமாகும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் நல்ல சிந்தனைகளை வளர்த்து பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். உடல்நிலை நன்றாக இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சிக்காக விண்ணப்பித்த கடன் கிடைப்பதுடன் லாபமும் உயரும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணிகளை முடித்து நிர்வாகத்தின் அன்பைப் பெறுவர். பெண்கள் பிள்ளைகள், நலனுக்கான திட்டங்களைத் தீட்டுவர். மாணவர்களுக்கு நண்பர்களால் நன்மை ஏற்படும்.

## தனுசு

கேது, சந்திரனால் நன்மை உண்டாகும். பேச்சு, செயலில் நிதானம் வேண்டும். பணிகளை திட்டமிட்டு நிறைவேற்றி வெற்றி பெறுவீர்கள். உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். பயணங்களால் நன்மை ஏற்படும். புத்திரர்களின் செயல்களில் குழப்பம் ஏற்படலாம். அவர்களை கனிவுடன் வழிநடத்தவும். கொடுக்கல், வாங்கலில் மிகுந்த கவனம் தேவை. உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். கணவன், மனைவி ஒற்றுமை ஓங்கும். பணியாளர்களுக்கு சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். அவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கு சற்று சிரமம் இருக்கும். மாணவர்கள் சுமாராகப் படிப்பர்.

## மகரம்

குரு, சனி, சுக்கிரன் அதிக நன்மை தருவர். ஆர்வமுடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு உதவுவர். வாகன பராமரிப்பு செலவுகூடும். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதல்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கல்வி, பணியில் முன்னேறுவர். வீட்டில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். நோய் தொந்தரவு விலகி உடல் ஆரோக்கியம் பெறும். கணவன், மனைவி இடையே கருத்தொற்றுமை இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் சுற்றுலா சென்று வர யோகமுண்டு.

## கும்பம்

சுக்கிரன், செவ்வாய், சந்திரனால் நன்மை உண்டு. உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு சுபநிகழ்ச்சி நடந்தேறும். பயணங்கள் பாதுகாப்பாக அமையும். புத்திரர்கள் சில விடயங்களில் பிடிவாதத்துடன் இருப்பர். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். கணவன், மனைவி விட்டுக்கொடுத்து நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

## மீனம்

புதன், சூரியன், ராகு, குரு நற்பலன் தருவர். மனம் மகிழ்ச்சியாக இருக்கும். புதியவர்களின் நட்பு நன்மை தரும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும். அதிக பணவரவால் புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதுடன், சேமிக்கவும் செய்வீர்கள். வேண்டாதவர்கள் தந்த தொந்தரவு நீங்கும். கணவன், மனைவி கருத்து இணக்கம் கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை பூர்த்தி செய்து சலுகை பெறுவர். பெண்கள் தாராள பணவசதியுடன் மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவர்.

# உங்கள் பராமரிப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள மக்களை நன்கு கவனியுங்கள்

# புதிய ஆயர்களிடம் திருத்தந்தை பிரான்சீஸ் வேண்டுகோள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் — யாழ் பல்கலைக்கழகம்

வத்திக்கான் நகரில் யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய ஆயர்களோடு இணைந்து, திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களை செப்ரெம்பர் 9ஆம் திகதி சந்தித்ததையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களுடன் தனித்துச் சந்தித்தும் உரையாடினார்.

**அன்னை தெரேசாவின் புனிதர்பட்ட நிகழ்வில் யாழ். ஆயர்**

உரோமாபுரி வத்திக்கான் நகரில் புதிய ஆயர்களுக்கும் திருத்தந்தைக்குமான சந்திப்பில் கலந்து கொள்ள வத்திக்கானுக்கு சென்ற யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, முதலில் செப்ரெம்பர் 4ஆம் திகதி வத்திக்கானில் இடம்பெற்ற அன்னை தெரேசாவின் புனிதர்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டார். இலங்கையின் பல மறைமாவட்டங்களிலும், குறிப்பாக யாழ் மறைமாவட்டத்தில் கோப்பாய் மண்ணிலும் அன்னை தெரேசாவின் மிசனறி ஒவ் சறிற்றி சபையினர் பணியாற்றுகின்ற நிலையில் யாழ். ஆயர் அன்னை தெரேசா, புனித அன்னை தெரேசாவாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு இலங்கை மண்ணையும் மக்களையும் புனித அன்னை தெரேசாவிடம் ஒப்படைத்து, பாதுகாத்து வழிநடத்த வேண்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முன்பின் தெரியாத ஓர் அந்நிய மண்ணுக்கு வந்து, புரியாத மொழி, பழக்கம் இல்லாத மக்கள், தெரியாத கலாசாரம், இவற்றின் மத்தியில் பல சவால்கள், சர்ச்சைகள், எதிர்ப்புக்கள், குற்றச்சாட்டுக்கள் மத்தியில் தன் வாழ்வாலும் பணியாலும் அர்ப்பண வாழ்விற்கே அர்த்தம் கொடுத்த அன்னை தெரேசா, நாட்டை, இனத்தை, நிறத்தை, மதத்தை, மொழியை, கலாசாரத்தைத் தாண்டி உலகெங்குமுள்ள அனைத்து மக்களையும் தன் அன்புப் பணியால் தொட்டு, மனிதாபிமானத்தை உலகுக்கு உயர்த்திக் காட்டியவர். இதனால் இன்று புனிதராகி பீடத்தில் வைத்து வேண்டப்படவும் அனைவர்க்கும் பரிந்து பேசவும் வல்லமை மிக்கவராகத் திகழ்கிறார்.

**இரண்டு ஆண்டுகளில் நியமனம் பெற்ற 94 புதிய ஆயர்களுடன் திருத்தந்தை பிரான்சீஸ்**

உரோமாபுரியில் இயங்கும் நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயம் ஒழுங்கு செய்த, இந்த கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிதாக நியமனம் பெற்ற ஆயர்களுக்கும் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களுக்குமான இச்சந்திப்பு செப்ரெம்பர் 9ஆம் திகதி இடம் பெற்றது. இச்சந்திப்பில் ஆபிரிக்காவின் 19 நாடுகளில் இருந்து 42 ஆயர்களும், ஆசியாவின் 9 நாடுகளில் இருந்து 36 ஆயர்களும், அமெரிக்காவின் 9 நாடுகளில் இருந்து 12 ஆயர்களும்,ஓசியானியாவின் 2 நாடுகளில் இருந்து 4 ஆயர்களும் என 94 ஆயர்கள் கலந்து கொண்டனர். 5ஆண்டு களுக்கு ஒரு தடவை - அட் லுமினா விசிட் - என்னும் பெய ரால் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள் அனை வரும் திருத்தந்தையைச் சந்திக்கும் ஒரு வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இது நாடுகள் மற்றும் பிரதேசம் சார்ந்த ஆயர் பேரவைகள் என்ற விதமாக அமைகிறது. இதனைவிட புதிதாக நியமனம் பெற்ற ஆயர்களை ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருத்தந்தை சந்திக்கிறார். 2013ஆம் ஆண்டு திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற பின்னர் திருத்தந்தை கடந்த இரண்டு ஆண்டுகளில்ஆயர்பொறுப்பேற்றுக்கொண்டவர்களைச் சந்திக்கிறார்.

**நீங்கள் உரோமைக்கு யாத்திரையாக வரும் திருப்பயணிகளுடன் இணைந்திருக்கிறீர்கள்**

புதிதாக நியமனம் பெற்ற ஆயர்களாகிய உங்கள் அனைவரையும் நேரடியாகத் தனியாகச் சந்திப்பது எமக்கு மிக மகிழ்வைத் தருகிறது. இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில் உரோமாபுரிக்கு வந்துள்ள நீங்கள் உலகின் ஒவ்வொரு பாகங்களிலும் இருந்து உரோமைக்கு யாத்திரையாக வரும் திருப்பயணிகளுடன் இணைந்திருக்கிறீர்கள். இந்த அனுபவமானது, எம் எல்லோருக்கும் ஏராளம் நன்மைகளைச் செய்கிறது. இந்த அனுபவமானது, நாம் எல்லோரும் திருயாத்தரை செய்யும் திருப்பயணிகள் - இரக்கத்தின் திருப்பயணிகள் என்பதை உணரச்செய்கிறது. இந்த அனுபவமானது, நாம் என்றும் கிறிஸ்துவின் அருளைப்பெற்று இறைதந்தையைப்போல இரக்கம் உள்ளவர்களாக இருக்க அழைப்பு விடுக்கிறது. ஒவ்வொரு ஆயரும் இந்த உண்மையைத் தனியான அனுபவமாகவும், ஆடுகளின் பெரும் ஆயரின் பதிலாளியான (எபிரேயர் 13:20) அனுபவமாகவும் பெறவேண்டும். ஒவ்வொரு ஆயரும் இறை தந்தைக்குரிய அன்பை நன்மைத்தனத்தை, ஆழ்ந்த



அக்கறையை, இரக்கத்தை, சாந்தத்தை, தன் வாழ்வாலும் ஆயர்த்துவப் பணியாலும் காட்டவேண்டும். கிறிஸ்து தனது உயிரைத் தந்து எல்லா மனிதரையும் தந்தையின் அன்பினால் மன்னிக்கப்பண்ணி, எல்லா மனிதரையும் ஒரே குடும்பமாக்கினார். நீங்கள் ஒவ்வொருவரும் அவரின் மறைமாவட்டத்தில் இறைவனின் திருச்சபையை தந்தையின் பெயரால், அவரின் பிரசன்னத்தை காட்டுகிறீர்கள், அவரின் மகனான இயேசுகிறிஸ்துவின் பெயரால், அவராலேயே நீங்கள் ஆசிரியர்களாவும், குருக்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஆக்கப்பட்டீர்கள் - தூய ஆவியின் பெயரால், அவரே திருச்சபைக்கு உயிர் கொடுக்கிறார் - ஆண்டு நடத்த அழைக்கப்பட்டுள்ளீர்கள். இவ்வாறு இறையில் கலந்த அறிவுரைகளைக் கூறிய திருத்தந்தை நடைமுறை சார்ந்த கருத்துக்களையும் தெரிவித்தார்

**64 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் திருத்தந்தை பிரான்சீஸ் முதலிடத்தில்**

சுவிற்ஸர்லாந்தின் பிரபல ஆய்வு நிறுவனமொன்றினால், இவ்ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட்ட ஆய் வின்படி உலகில் செல்வாக்கு மிக்க பிரபலங்களின் பட்டியலில் திருத்தந்தை பிரான்சீஸ் முன்னிலை பெற் றுள்ளார். 64 நாடுகளில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் திருத்தந்தை பிரான்சீஸ் முதலிடத்திலும், அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா 2 ஆம் இடத்திலும், ஜேர்மன் அதிபர் 3 ஆம் இடத்திலும் உள்ளனர். இவ்வாறு பெயரும் புகழும் மிக்கவராகவும், வாழ்வாலும் பணியாலும் சான்று பகர்பவராகவும், விளங்கும் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் கருத்துக்கள் என்றும் மதிப்பும் பெறுமதியும் மிக்கவையாக உள்ளன.

**ஓர் ஆயருக்கு மிகவும் நெருங்கிய அயலவர் குருவானவரே**

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் தன் இல்லத்தில் தன்னைச் சந்தித்த புதிய ஆயர்களுக்குக் கூறிய புதிய சிந்தனைகள் பின்வருமாறு தொகுக்கப்படலாம். ஓர் ஆயருக்கு மிகவும் நெருங்கிய அயலவர் குருவானவரே என்பதை மறக்க வேண்டாம். அதேநேரம் ஒவ்வோர் குருவும் தனது ஆயரின் அருகாமையை உணர வேண்டும். ஓர் ஆயர், குருவானவரின் தொலைபேசி அழைப்புக்கும், அவரிடமிருந்து வரும் கடிதத்திற்கும் உடனடியாக இயலுமானால், அதே நாளில் பதிலளிக்க வேண்டும். இந்த ஒரு நெருக்கம், குருத்துவக் கல்லூரியிலிருந்தும், குருத்துவத்தை உருவாக்கும் பயிற்சியிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த ஆரம்பம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் திருத்தந்தை பிரான்சீஸ் தெரிவித்தார். ஆயர்கள் ஆற்றும் நற்செய்தி அறிவிப்புப்பணியும், அவர்கள் ஊக்குவிக்கும் மற்ற மேய்ப்புப்பணி நடவடிக்கைகளும் ஏற்கனவே நிலவும் அல்லது புதிதாக உருவாகும் பிளவுகளால் சேதப்படுத்தப்படாமல் இருப்பதில் கவனமாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

**பிளவுகள் - பணம் ஆகிய இரு முக்கிய ஆயுதங்களை சாத்தான் திருஅவைக்குள் கொண்டிருக்கிறது**

பிளவுகள் - பணம் ஆகிய இரு முக்கிய ஆயுதங்களை சாத்தான் திருஅவைக்குள் கொண்டிருந்து - அழிக்கின்றது எனவும், சாத்தான் பணப்பைக்குள் நுழைந்து பேச்சாலும், பிளவுகளை ஏற்படுத்தும் புறணியாலும் அழிக்கின்றது. புறணி பேசுபவர் குண்டுகளைப் போடும் பயங்கரவாதியாவார். புறணி பேசும் பழக்கம் ஒரு பயங்கரவாதப் பழக்கம். இது அழிவைக் கொணரும் என்றும் எச்சரித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். பிளவுகளுக்கு எதிராகப் போராடுங்கள். ஏனென்றால், இவை தலத்திருஅவையையும் உலகளாவிய திரு அவையையும் அழிப்பதற்கு சாத்தான் எடுக்கும் ஆயுதங்களில் ஒன்று என்றும் புதிய ஆயர்களிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். இந்தச் சவால்களைத் தீர்ப்பது கடினம்தான், ஆனால் இறையருள் செபம் - தபம் ஆகியவற்றின் வழியாக இயலும் என்றும் ஆயர்கள், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களையும் அருள்பணியாளர்களையும், குருத்துவ மாணவர் களையும் அக்கறையோடு கவனிக்க வேண்டும், இதுவே ஆயர்களின் பணி என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்தினார்.

**காணாமல்போன அல்லது தொலை தூரத்தில் உள்ள ஆடுகளைத் தேடிச் செல்ல வேண்டும்**

மறைப்பணித்தளங்கள் என்று சொல்லப்படும் பகுதிகளிலிருந்து இந்த ஆயர்கள் வந்திருக்கும் காரணத்தினால், நற்செய்தி அறிவிப்புப்பணியை முதலிடத்தில் வைக்கவேண்டிய மாபெரும் பொறுப்பு இவர்களுக்கு உள்ளது என்றும், நல்ல ஆயர் கிறிஸ்துவைப் போன்று இவர்கள் தங்களின் மந்தைகள் மீது அக்கறை காட்ட வேண்டும் ஆடுகளை, குறிப்பாக காணாமல்போன அல்லது தொலைதூரத்தில் உள்ள ஆடுகளைத் தேடிச் செல்ல வேண்டும். கிறிஸ்துவின் மந்தையை இன்னும் சேராமல் இருக்கும் ஆடுகளைச் சந்திக்கவும் ஊக்கப் படுத்திய திருத்தந்தை, நற்செய்தி அறிவிப்புப்பணி இயேசு கிறிஸ் துவை அறியாதவர்கள் அல்லது அவரை எப்போதும் புறக்கணிப்பவர்களோடும் முக்கியமாக தொடர்புடையது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**தயவு செய்து எனக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்**

திருந்தந்தையின் உரையின் இறுதிப்பகுதி உணர்வு பூர்வமானதாக இருந்தது. திருத்தந்தை ஆயர்களுடனான தமது சந்திப்பையும், ஆயர்கள் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட சந்திப்புக்களையும், அன்புறவுகளையும் மனதிற் கொண்டவராக பின்வருமாறு தெரிவித்தார். அன்பார்ந்த சகோதரர்களே இந்த நாள்களில் நீங்கள் உங் களுக்குள்ளே பகிர்ந்து கொண்ட விடயங்கள் இனி வருங்காலத்தில் உங்கள் பணியை இன்னும் அதிக ஆர்வத்துடன் உத்வேகத்துடனும் ஆற்ற நிச்சயம் துணைபுரியும் என்பது எனக்குத்தெரியும். உங்கள் பராமரிப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள மக்களை நன்கு கவனியுங்கள். குருக்களை நன்கு கவனியுங்கள். அத்துடன் குருமாணவர்களை அன்புடன் கவனியுங்கள். இதுவே உங்கள் பணி. இறைவனின் தாய் அன்னை மரி என்றும் உங்களைப் பாதுகாத்து வழிநடத்துவாராக. எனது பகுதிக்கு நான் உங்களுக்காகச் செபிக்கிறேன் என உறுதி கூறுகிறேன். நீங்களும் தயவு செய்து எனக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். எனக்கும் உங்கள் செபங்கள் தேவை என்று தன் உரையை முடித்துக்கொண்டார்.

திருத்தந்தையின் எளிமையான, அதேவேளை இயல்பான – அன்பான, அதேவேளை உண்மையான போக்காலும் ஆடம்பரமற்ற தன்மையாலும் மிகவும் கவரப்பட்ட ஆயர்கள்; திருத்தந்தையுடனான பொதுவான சந்திப்பு மற்றும் உரையாடலின் பின்னர் தமது தனிமையான



சந்திப்பையும் நிறைவு செய்து மறக்கமுடியாத அந்த அனுபவத்தின் நினைவாக படங்களையும் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களுடன் எடுத்துக்கொண்டனர்.

இலங்கையில் இருந்து யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் திருகோணமலை ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோர் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# தைரொயிட், ஹோர்மோன்

## பிரச்சினைகள் தொடர்பான சந்தேகங்களும் தீர்வுகளும்


மருத்துவர் எம்.அரவிந்தன்

**கேள்வி:** எனது வயது 26 ஆகும். எனக்கு சில மாதங்களாக தூக்கம், சோம்பல் என்பவை இருப்பதோடு, உடல் நிறையும் அதிகரித்து வருகின்றது. எனக்கு மாதவிடாயின் போதான குருதிப் போக்கும் அதிகமாக உள்ளது. எனது நண்பியொருவர் இது தைரொயிட் சுரப்பிக் குறைபாட்டால் ஏற்படுவ தாகக் கூறியிருந்தார். இது பற்றி ஆலோசனை வழங்கவும்?

**பதில்:** நீங்கள் குறிப்பிடும் நோய் அறிகுறிகளைப் பார்க்கும்போது உங்களுக்கு தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரக்கும் நிலை (Hypothyroidism) இருப்பதற்கான சாத்தியக்கூறு அதிகமாக இருக்கின்றது.
தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரக்கும்போது சோம்பல், தூக்கம், உடற்பருமன் அதிகரித்தல், தலைமுடி உதிர்தல், பெண்களில் அதிகளவு மாதவிடாய் வெளியேறுதல் மற்றும் குளிர்தாங்க முடியாமை போன்ற குணங்குறிகள் ஏற்படும்.
தைரொயிட் சுரப்பு குறைவாக இருக்கும் நோய் உள்ளவர்களுக்கு அதனை உறுதிப்படுத்த தைரொயிட் ஹோர்மோனின் அளவை குருதியில் பரிசோதிப்பது அவசியமாகும். தைரொயிட் ஹோர் மோனின் சுரப்பானது, குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. சிலருக்கு கழுத்துப் பகுதியில் வீக்கம் அல்லது கழலையும் காணப்படலாம். இவர்களுக்குத் தேவையேற்படின் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியேற்படுவதோடு FNAC எனப்படுகின்ற இழையப் பரிசோதனையும் செய்யவேண்டி நேரிடலாம். தைரொயிட் ஹோர் மோன் குறைவாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தைரொக்ஸின் குளிசையைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். நோயாளியொருவரது வயது, உடல் நிறை, பிறநோய்கள் (குறிப்பாக இதய நோய்கள்) என்பவற்றைக் கருத்திற் கொண்டு வைத்தியரானவர் தைரொக்ஸின் குளிசையின் அளவைத் (dose) தீர்மானிப்பார்.
இதன் பின்னர் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை தைரொக்ஸின் ஹோர்மோனின் அளவைப் பரிசோதித்துத் தேவைக்கேற்ப குளிசையின் அளவைக் கூட்டிக்குறைக்க வேண்டியிருக்கும். சில நோயாளிக்கு மேலதிகமான பரிசோதனைகளும் (உ+ம் Antibody tests) மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
எனவே, நீங்கள் காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனையைப் பெறுவது மிகவும் அவசியமாகும்.

**கேள்வி:** எனது வயது 29 ஆகும். எனக்கு தைரொயிட் குறைபாடு கடந்த 2 வருடங்களாக இருக்கின்றது. நான் தைரொக்ஸின் 75mg குளிசையை ஒவ்வொருநாளும் காலை நேரத்தில் உள்ளெடுத்து வருகிறேன். அண்மையில் திருமணம் முடித்த நான் கர்ப்பம் தரிப்பதற்கு விருப்பமாக உள்ளேன். இது சம்பந்தமாக ஆலோசனை வழங்கவும்?

**பதில்:** கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற தைரொயிட் குறைபாடுடைய பெண்ணொருவரின் தைரொயிட் ஹோர்மோன் அளவானது, கட்டுப்பாட்டினுள் இருப்பது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, நீங்கள் தைரொக்ஸின் குளிசையைக் கிரமமாக உள்ளெடுத்தல் அவசியமாகும். இதனைக் காலை வேளையில் வெறும் வயிற்றில் உள்ளெடுத்தல் வேண்டும். இதன் பின்னர் 30-40 நிமிடங்களுக்குப் பின்னரே தேநீர்,உணவு போன்றவற்றை உள்ளெடுத்தல் வேண்டும். அப்படியில்லாதவிடத்து தைரொக்ஸினின் அகத்துறிஞ்சல் குறைவடைய நேரிடுகிறது. அதேபோல வேறு குளிசை மருந்துகளை (குறிப்பாக இரும்புச் சத்துக் குளிசைகள், கல்சியம் குளிசைகள்) தைரொக்ஸின் எடுக்கும் நேரத்தில் உள்ளெடுப்பதையும் தவிர்க்க வேண்டும். அந்தக் குளிசைகளை காலை உணவை உள்ளெடுத்த பின்னரோ அல்லது இரவு வேளையிலோ உள்ளெடுக்க முடியும்.
கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற பெண்ணொருவரின் TSH எனப்படுகின்ற தைரொயிட் ஹோர்மோனின் அளவானது 2.5mu/l அளவிலும் குறைவாகப் பேணப்படுவது அவசியமாகும். பெண்ணொருவர் கர்ப்பம் தரித்ததை உறுதிப்படுத்திய உடனேயே (சிறுநீர் HCG பரிசோதனை) தைரொக்ஸின் குளிசையின் அளவை 25mg இனால் அதிகரித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக 75 mg உள்ளெடுக்கும் நீங்கள் கர்ப்பமானால், அதனை உறுதி செய்த பின்னர் 100mg அளவு தைரொக்ஸினை உள்ளெடுக்க வேண்டியிருக்கும். இதன்பின்னர் உடனடியாக வைத்தியரைச் சந்தித்து ஆலோசனையைப் பெற வேண்டும்.
கர்ப்பகாலத்தில், குறிப்பாக முதல் மூன்று மாதப் பகுதி (First trimester) கருவிலுள்ள சிசுவின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியின் பிரதானமான காலப்பகுதியாகும். எனவே, இந்தக் காலப்பகுதியில் கர்ப்பிணிப் பெண்ணானவர் குறிப்பிட்ட சரியான அளவு தைரொக்ஸின் குளிசையை உள்ளெடுப்பது மிகவும் அவசியமாகும். மேலும் கர்ப்பகாலத்தில், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தைரொக்ஸின் ஹோர்மோனின் அளவு பரீட்சிக்கப்பட்டு தைரொக் ஸின் குளிசையின் அளவு (dose) சரி செய்யப்பட வேண்டும்.




**கேள்வி:** எனது வயது 30 ஆகும். சில மாதங்களாக எனக்குப் படபடப்பு, அதிகளவு வியர்த்தல் என்பவை இருப்பதோடு, உடல் நிறையும் குறைவடைந்து செல்கின்றது. எனது கழுத்துப்பகுதியும் வீக்கமாக இருக்கிறது. இது பற்றிய ஆலோசனை வழங்கவும்.

**பதில்:** உங்களுக்கு இருக்கின்ற குணங்குறிகளைப் பார்க்கும்போது உங்களுக்குத் தைரொயிட் ஹோர்மோன் அதிகமாகச் சுரக்கும் நிலை (Hyperthyroidism) இருப்பதற்கான சாத்தியக்கூறு மிக அதிகமாகும். தைரொயிட் ஹோர்மோன் அதிகமாகச் சுரப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. இவ்வாறாக தைரொயிட் சுரப்பி அதிகமாகச் சுரக்கும்போது உங்களுக்கு ஏற்படுவதைப்போன்ற நோய் அறிகுறிகள் ஏற்பட நேரிடும். இதைவிடப் பெண்களுக்கும் மாதவிடாயின் அளவு குறைவடைந்து செல்லுதல், அதிக வெப்பத்தைத் தாங்கமுடியாத நிலை மற்றும் அடிக்கடி வயிற்றோட்டம் போன்று மலம் கழித்தல் போன்றவையும் ஏற்படலாம். சிலருக்கு கண்கள் வெளித்தள்ளிப் பலவிதமான பார்வைப் பிரச்சினைகளும் ஏற்படலாம்.
தைரொக்ஸின் ஹோர்மோனின் அளவை குருதியில் பரிசோதிப்பதன் மூலம் இதனை உறுதிப்படுத்த முடியும். அதன் பின்னர் தேவையேற்படின் தைரொயிட் ஸ்கான் மற்றும் பல விசேட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். தைரோயிட் ஹோர்மோன் பரிசோதனைப் பெறுபேற்றிற் கேற்பவும் நோயாளி ஒருவரின் குணம் குறிகளுக்கு ஏற்பவும் வைத்தியரானவர் குளிசை மருந்தொன்றை ஆரம்பிப்பார். Carbimazole என்ற குளிசையே இந்த நோய்க்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக இந்த மருந்தானது 18-24 மாதங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது. சில நோயாளரில் இந்தக் காலப்பகுதியின் பின்னரும் நோயைக் கட்டுபடுத்த முடியாமல் போக நேரிடலாம். இவ்வாறானவர்களுக்கு சத்திரசிகிச்சை மூலம் தைரொயிட் சுரப்பியை அகற்றவோ கதிர் வீச்சுத் திரவத்தை (அய டீன்) உள்ளெடுத்து தைரொயிட் சுரப்பியைக் கரைக்கவோ வேண்டியேற்படலாம்.
எனவே, நீங்கள் காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனையைப் பெற்று சிகிச்சையை ஆரம்பிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**கேள்வி:** எனது வயது 18 ஆகும். நான் வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு இன்னமும் முகத்தில் தாடி, மீசை வளராமல் இருக்கின்றது. அத்துடன் எனது விதைகளின் அளவும் சிறிதாக இருக்கின்றது. இது புற்றி ஆலோசனை வழங்கவும்?

**பதில்:** உங்களுக்கு இருக்கின்ற பிரச்சினையை நோக்கும்போது உங்களுக்கு ஆண் ஹோர்மோன் குறைபாட்டுத் தன்மை இருப்பதற்கான சாத்தியக்கூறு மிக அதிகமாகும். இவ்வாறு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.
பல வகையால் உடல் நோய்கள் மற்றும் ஹோர்மோன் குறைபாடுகளும் இதற்குக் காரணமாக இருக்கலாம். சில வேளைகளில் உங்கள் குடும்ப உறுப்பினர்களில் (குறிப்பாக உங்கள் தந்தையாரில்) இவ்வாறான காலம் தாழ்த்திப் பூப் படையும் தன்மை (Delayed Puberty) இருந்தாலும் உங்களுக் கும் காலம் தாழ்த்தியே ஏற்படலாம்(Constitutional Delay)
எனினும், உங்களுக்கு ஹோர்மோன்களின் அளவு உட்பட பலவிதமான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்பெறுபேறுகளுக்கு அமைவாக, தேவையான சிகிச்சை வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதனைப் பூப்படைதலைத் தூண்டுதல் (Induction of puberty) என அழைப்பார்கள். இது தொடர்பான மேலதிக விளக்கங்களை யாழ். போதனா வைத்திய சாலை அகஞ்சுரக்கும் தொகுதி சிகிச்சை நிலையத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி:** எனது வயது 35 ஆகும். எனக்கு இரண்டு மாதங்களாக உயர்குருதி அமுக்கம் (பிறசர்) இருப்பதாகக் குடும்ப வைத்தியர் கண்டறிந்து சிகிச்சை வழங்கி வருகின்றார். இதற்கு என்ன காரணமாக இருக்கலாம்?

**பதில்:** உடல்நிறை அதிகரித்துச் செல்லும்போது உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்திரோல் அதிகரித்தல் போன்றவை ஏற்படலாம். இது Metabolic syndrome என்று கூறப்படுகின்றது. இவ்வாறு உடல் நிறை அதிகரிக்காமலும் சிலருக்கு உயர்குருதி அமுக்கம் ஏற்படலாம்.(Hight blood pressure) இவ்வாறு இளம் வயதில் 'பிறசர்' ஏற்படுகின்ற நோயாளருக்கு அதற்கான காரணத்தைக் கண்டறிவது மிகவும் அவசியமானதாகும். சில ஹோர்மோன் பிரச்சினைகளாலும் சிறுநீரக நாடிகளில் ஏற்படுகின்ற சுருக்கத்தினாலும் (Renal artery stenosis) இவ்வாறு உயர்குருதி அமுக்கம் ஏற்படலாம்.
எனவே, உங்களைப்போன்ற இளம் வயதில் உயர் குருதி அமுக்கம் கண்டறியப்பட்டவர்களுக்கு (Young hypertenstion) பூரணமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தப் பிரச்சினைகள் மூலம் ஏதாவது காரணமொன்று கண்டறியப்பட்டால் அதற்கான சிகிச்சையை வழங்குவதன் மூலம் உயர்குருதி அமுக்கத்துக்குத் தீர்வைக் கண்டு கொள்ள முடியும்.
உணவுக்கட்டுப்பாடுகள் (கொழுப்புணவு, உப்புஅதிகமான உணவைக் குறைத்தல்) மற்றும் உடற்பயிற்சி என்பவை குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும். அத்துடன், வைத்தியர் பரிந்துரை செய்த மருந்துகளைக் கிரமமாக உள்ளெடுப்பதும் அவசியமாகும்.
குருதியமுக்கமானது கட்டுப்பாடின்றி அதிகரிக்கும் போது பல வகையான பிரச்சினைகள் ஏற்பட நேரிடும். (உ-ம் பக்கவாதம், பாரிசவாதம், stroke)
எனவே, நீங்கள் மேலே குறிப்பிட்டதைப் போன்ற முழுமையான பரிசோதனைகளுக்கு உட்பட்டு வைத்திய ஆலோசனையின்படி சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி [ஹோர்மோன்]
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.







மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் உள்ள குஞ்சுக்குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான பாதையில் அமைக்கப்பட்டுள்ள நுழைவாயில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நுழைவாயிலை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அருட்கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் இணைந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிறிமுஸ் சிறாய்வா, மடு பிரதேசச் செயலாளர் எப்.சி.சத்தியசோதி, கிராம மக்கள், கிராம சேவையாளர் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (56)




விசுவமடு தேராவில் பகுதியில் வசித்து வரும் இரண்டு மாவீரர்களின் பெற்றோர்களுக்கு ஜேர்மனி உதவும் இதயங்கள் நிறுவனத்தினால் மாதந்த உதவியாக உதவு தொகை அண்மையில் வழங்கப்பட்டது.



ஈச்சமோட்டையில் அமைந்துள்ள சாம்றொக் கல்வி நிலைய மாணவர்கள் லீவு சுற்றுலாவில் மடுத் திருப்பதிக்கு அண்மையில் சென்றிருந்தனர்.



வலி. மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வட்டு வடக்கு டச்சு வீதியில் ஆரம்பமாகி பிரமனாச்சித் தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாகச் செல்லும் வீதிக்குக் கற்பகப்பிள்ளையார் வீதி எனும் பெயர் சூட்டப்பட்டு, பெயர்ப் பலகை அண்மையில் நடப்பட்டது.



வட்டு. வடக்கு கற்பகச் சோலை முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள், முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர்.




மானிப்பாய், புதுமடம் றோ.க.த.க. பாடசாலையில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு நிகழ்ச்சி வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பங்கேற்புடன் அண்மையில் நடைபெற்றது. இதேநேரம் அந்தப் பாடசாலைக்கு செரெண்டிப் நிறுவனத்தின் அனுசரணையில் கொள்வனவு செய்யப்பட்ட கணினி ஒன்றையும் பா.கஜதீபன் வழங்கி வைத்தார். (ரி)






கிளிநொச்சி தருமபுரம் மூதாளர் பேணகத்தின் முதலாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பேணகத்தில் தங்கியுள்ள முதியோர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர். (108)






தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் பத்தாவது பதவியேற்பு நிகழ்வு அண்மையில் கொடிகாமத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தின் முதன்மை இணைப் பாளர் லயன் கே.என்.பத்மநாதன், பிரதிச் செயலா ளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ், பிரதிப் பொருளாளர் லயன் கே.ஜெயந்தன் உட்பட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (9)



கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் புதிய வசந்தமண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் பி. திருக்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ரி)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா தனது குறித் தொதுக்கப்பட்ட 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து பொருளாதாரம் நலிந்த குடும்பங்களுக்கு நல்லின மாடுகளை அண்மையில் வழங்கினார். (ற)

# தீயால் பாதிக்கப்பட்ட வர்த்தகர் இழப்பை ஈடு செய்ய முன்வருக

## கிளி. மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் இழப்புகளை ஈடு செய்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் நேற்றுமுன் தினம் தீ விபத்து ஏற்பட்டது. அதில் நூற்றுக்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் நாசமாகின. வர்த்தகர்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன.

இது தொடர்பில் பிரஜைகள் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி சேவைச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு எமது அனுதாபங்களைக் கூறுகின்றோம். கொடிய போரால் தமது வர்த்தக உடைமைகளையும், சொத்துக்களையும் முற்றாக இழந்து எந்த நட்டஈடும் வழங்கப்படாது வங்கிகளில் பெற்ற கடன்கள் மூலம் தமது சொந்தப் பலத்தால் வர்த்தகர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை மெதுவாகக் கட்டியெழுப்பினர்.

தற்போது ஏற்பட்ட இடரால் கோடிக்கணக்கான சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. ஒருவாறு மீண்டெழுந்து கொண்டிருந்த வர்த்தகர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு உதவுவதற்கு அனைத்துத் தரப்பினரும் விரைவாக முன்வர வேண்டும். உடனடியாக விசேட வாழ்வாதாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தமக்கான ஒரு நாள் வேதனத்தை மனமுவந்து வழங்க முன் வருதல், தொண்டு நிறுவனங்கள் உதவுவதற்கு முன்வருதல், புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் உதவுவதற்கு முன் வருதல், விரைவாக தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல், கடன் வழங் கிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன் மீளப் பெறும் செயற்பாடுகளை தாமதித்தலும் வட்டியை விலக் களித்தலும், வழங்கப்படும் உதவிகளை சேவைச் சந்தை வர்த்தக சங்கத்தின் ஊடாக வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு என்ற வகையில் பாதிக் கப்பட்டுள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மீள் கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கிறோம் - என்றுள்ளது. (ற-21)

---

### 220 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் முற்றாக எரிந்து சாம்பராகின. இதனால் புடைவை, அழகுசாதனம், காலணிகள் விற்பனை செய்யப்படும் 60 இற்கும் மேற்பட்ட கடைகளும், 40 இற்கும் மேற்பட்ட பழக் கடைகளும் முற்றாக எரிந்து அழிந்தன.

ஒரு கடையில் ஏற்பட்ட தீ படிப்படியாக அனைத்துக் கடைகளுக்கும் பரவி கொழுந்துவிட்டு தங்கள் கண் முன்னே எரிந்துகொண்டிருப்பதை அவதானித்த கடை உரிமையாளர்கள் செய்வதறியாது கதறி அழுதனர். தீ ஏற்பட்டுச் சிறுதி நேரத்தில் பொலிஸ் நீர்த்தாங்கியும், அதன் பின்னர் கரைச்சிப் பிரதேச சபையின் நீர்த்தாங்கியும் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. கட்டுக்கடங்காத தீ சுவாலை விட்டு எரிந்தது. பின்னர் இராணுவத்தின் நீர்த்தாங்கிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்தபோதும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

இந்த நிலையில் பொது மக்களும் பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ விபத்து ஏற்பட்டு ஒரு மணித்தியாலயத்துக்குப் பின்னர் இராணுவத் தீயணைப்பு வாகனம் கொண்டுவரப்பட்டுத் தீ அணைக்கும் முயற்சிகள் பலப்படுத்தப்பட்டன. தீ ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தொடர்ச்சியாக இணைக்கப்பட்டிருந்த கடைத் தொகுதி அத்தோடு கனரக வாகனம் மூலம் ஓரிடத்தில் இடிக்கப்பட்டுத் தீ ஏற்பட்ட பகுதிக்கும் ஏனைய பகுதிக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனை அடுத்து தீ தொடர்ந்தும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட சேத விவரங்களை நேற்று முன்தினம் உடனடியாக அறிய முடியவில்லை. நேற்றுக் குறித்த விவரம் தொடர்பாகக் கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:

சந்தைக் கட்டடத் தொகுதியில் இருந்த 124 கடைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அந்தக் கடைகளின் உரிமையாளர்களான வர்த்தகர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சேதமடைந்த பொருள்களின் பெறுமதியை உடனடியாக மதிப்பிட முடியாமல் இருந்தாலும் தற்போது அது கிடைத்துள்ளது. அதன்படி 220 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இந்த இடரை ஈடுசெய்ய முடியாது உள்ளபோதும் கரைச்சிப் பிரதேச சபையினூடாகப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உடனடி இழப்பீட்டு உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. வர்த்தகர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கோடு பிரதேச சபையினால் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. வர்த்தகர்களுக்கு நட்டஈட்டுத் தொகையைப் பெற்று கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (த-21)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை பிரபாகரன், தமிழகத்தின் அப்போதைய முதல்வர் கருணாநிதிக்கு 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கடிதத்தை, வை.கோ நேற்று வெளியிட்டுள்ளார்.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் இலங்கையில் அமைதியை நிலைநாட்ட இந்திய ராணுவம் அனுப்பிய ஐ.பி.கே.எப் அங்கு அநீதியைக் கட்டவிழ்த்துவிட்டதாக பகிரங்கமாக, தலைவர் பிரபாகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடிதத்தைத் தற்போது வெளியிட்டது குறித்து வைகோ 'தி இந்து" ஊடகத்துக்குத் தெரிவித்ததாவது:

இலங்கை வனப்பகுதியில் பிரபாகரனை நான் சந்தித்தபோது அவர் இந்தக் கடிதத்தை எனக்குக் கொடுத்தார். அதிலிருந்து ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் நான் அந்தக் கடிதத்தை கருணாநிதியிடம் கொடுத்தேன். அந்தக் கடிதத்தை அழித்துவிட்டதாகக் கருணாநிதி பின்னாளில் என்னிடம் கூறினார். நான் அதன் பிரதி ஒன்றை இன்றளவும் பாதுகாத்து வைத்துள்ளேன். அந்தக் கடிதத்தின் உள்ளடக்கத்தை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாலேயே அதனை இப்போது வெளியிடுகிறேன் - என்றார்.

அந்தக் கடிதத்தின் எழுதப்பட்டுள்ளதாவது:-

வைகோ தனது உயிரையும் பொருட்படுத்தாது எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் அடர்ந்த கானகத்தின் நடுவே என்னையும் எனது சக தோழர்களையும் சந்தித்துப் பேச வைத்துள்ள துணிச்சலையும் தமிழ்ப்பற்றையும் பார்க்கும்போது நான் எனது மொழிக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் இன்னும் ஆயிரம் தடவை இறக்கலாம் என்னும் மனத்தென்பே ஏற்படுகிறது. அண்ணா (கருணாநிதி) உங்களது ஆட்சி தமிழகத்தில் மீண்டும் வந்துள்ளதையடுத்து நான் பெருமைப்படுகிறேன். இனித் தமிழகத்தின் தமிழ் இன உணர்வு மீண்டும் தழைத்தோங்கும். எம்மைப் பொறுத்தவரை நாம் எந்த இலட்சியத்திற்காக ஆயுதமேந்திப் போராடினோமோ அந்த இலட்சியத்தை வென்று வாழ்வோம் அல்லது அந்த இலட்சியத்துக்காக சந்தோசத்துடன் மடிவோம். இன்று இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் நடவடிக்கையால் எமது நாடு சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது.

இதனைத் தமிழகத்தின் கவனத்துக்கும், இந்தியாவிலுள்ள எதிர்க்கட்சிகளின் கவனத்துக்கும் நீங்கள் கொண்டு வரவேண்டிய காலம் வந்துவிட்டது. அதனை நீங்களும் உங்கள் அமைப்பும் தான் செய்ய வேண்டும். அண்ணா நிச்சயம் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் துரோகத்தை நீங்கள் தமிழகத்தின் கவனத்துக்கு கொண்டுவர உதவுவீர்கள் என நான் நம்புகிறேன். இங்கு மீண்டும் மிகப் பெரிய தாக்குதலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அபாயச் சூழலைக் கருதித்தான் கோபால்சாமி அண்ணனை இந்த முற்றுகை வளையத்திலிருந்து மிகுந்த கவலையுடன் தமிழ் நாட்டுக்கு திரும்ப அனுப்பி வைத்துவிட்டேன் - என்று கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. (த-5)

### தீயணைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொரு இடர் ஏற்படாத வகையில் ஒரு தீயணைப்புப்படையை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர். க.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற மோசடியே புதிய திட்டங்களுக்கு நிதியைப் பெற்றுக்கொள்வதில் தடங்கல்களை ஏற்படுத்துகிறது. இருப்பினும் பாதிக்கப்பட்ட சந்தை வியாபாரிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் எரிந்து அழிந்துள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையை நேற்று மாலை பார்வையிட்ட முதலமைச்சர், பாதிப்புக்குள்ளான வர்த்தகர்களுக்கு உடனடி உதவிப் பணத்தை வழங்கி கருத்துத் தெரிவிக்கும்போதே இதனை கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

நட்ட ஈடு தொடர்பில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு எங்கிருந்து பணம் பெறுவது, என்ன செய்வது என்பது தொடர்பில் ஒரு மயக்க நிலை உள்ளது. இருந்தபோதும் ஓரளவுக்கு எங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நாம் அடையாளப்படுத்தியிருக்கின்றோம். எனவே அவர்களுக்குக் கொடுக்க கூடிய நட்டஈடு தொடர்பில் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொருவரும் எவ்வளவு நட்டத்தை அடைந்திருக்கின்றார்கள் என்பதை பார்த்து அதனை வழங்கக் கூடிய நிதி நிறுவனங்களுடனும் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு தீயணைப்பு வசதிகள் இல்லாமையே பெரும் இடருக்கு வழி கோலியுள்ளது. கரைச்சிப் பிரதேச சபைக்குத் தீயணைப்பு வசதிகள் வழங்கமாட்டார்கள். அதற்கு சட்டத்தில் இடமில்லை. ஆனால் கரைச்சி பிரதேச சபையை நகர சபையாக மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே எதிர்காலத்தில் இவ்வாறொரு இடர் ஏற்படாத வகையில் இங்கு ஒரு தீயணைப்புப் படையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு உடனடியாக இன்று பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இருபதாயிரம் ரூபா உடனடி நிவாரணத்தை வழங்குகின்றோம். இரண்டாவதாக மிக விரைவில் மீண்டும் வர்த்தக நடவடிக்கையை ஆரம்பிக்கும் வகையில் தற்காலிகமாக கடைகள் அமைத்து வழங்கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் பெற்ற கடன்கள் தொடர்பில் அவர்களுடன் பேசி சில சலுகைகளைப் பெற்றுத் தருவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும். சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் அமைத்து தருவதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொள்வோம்-என்றார். (த-21-35)

### வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோருக்கும் இடையில் ஜெற்விங் விடுதியில் மதிய போசனத்தின்போது சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் குழுவை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாண சபை, கொழும்பு அரசு ஆகிய மூன்று தரப்பின் சார்பிலும் தலா இருவர் வீதம் ஆறு பேர் கொண்ட குழு நிறுவுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமிக்கப்படும் குழுவின் மூலம் சிபார்சு செய்யப்படும் திட்டங்கள் மற்றும் முதலீடுகளை எதிர்காலத்தில் வடக்கில் மேற் கொள்ளலாம். இந்த யோசனையை முதலமைச்சரிடமும் தெரிவித்து முதலமைச்சரும் இணங்கும் பட்சத்தில் குறித்த நடைமுறையைப் பின்பற்றலாம் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டபோது, மயிலிட்டி விடுவிப்புத் தொடர்பில் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுமாறும் கூட்டமைப்பினர் பிரதமரிடம் கோரியுள்ளனர். படைத் தளபதிகளுக்கு இதற்குரிய அழுத்தம் கொடுக்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதற்குப் பிரதமர், இன்று (நேற்று) படைத் தளபதிகளுடன் சந்திப்பு நடத்தும்போது அதனை ஆராய்வதாகவும், இந்தச் சந்திப்பில் தமது நிலைப்பாட்டை இராணுவத்துக்குத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த-5-10)

### கீரிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி சுவீகரிக்கப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தக் காணிகளில் இராணுவத்தினரால் நூறு வீடுகள் பொதுமக்களுக்கு அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி கீரிமலையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின்போது, இராணுவத்தினரால் ஏற்கனவே விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட 400 ஏக்கர் காணியும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (த-5-10)

# திவிநெகும திணைக்களத்தின் பரீட்சையை நடத்துவதில் சிக்கல்

கொழும்பு, செப். 18
திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் மூன்றாம் தர உத்தியோகஸ்தர்களுக்கான பரீட்சை நாளை இடம்பெறவுள்ள நிலையில், குறித்த பரீட்சையை நடத்துவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பரீட்சைக்கு 2 இலட்சம் பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 90 ஆயிரம் பேருக்கு மாத்திரமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு வழங்கப்படாதவர்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இது தொடர்பான கலந்துரையாடலொன்று திவிநெகும திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் மற்றும் பரீட்சையை நடத்தும் குழுவினருக்கு இடையில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

வியாபார மேம்பாட்டு (Promotion) துறையில் மிளிர்வதற்கு அவசியமா?

நவீன விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அறிவினை புராதான ஆயுர்வேத ஞானத்தோடு இணைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கேற்ப உற்பத்தி பொருட்களை தயாரித்து விநியோகித்துவரும் லிங்க் நெச்சுரல் புரடக்ட்ஸ் (தனியார்) நிறுவனம், தனது அதி சிறந்த உற்பத்திகளுக்காக ஏராளமான விருதுகளை வென்ற நிறுவனமாகும். அத்தோடு எமது வியாபார நாமங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிபிரபல்யம் பெற்றவை.

எமது வடக்கு மாகாண வியாபார மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக கீழ்காணும் தகுதியுடைய, வியாபார இலக்குகளை வெற்றி கொள்ள அர்ப்பணிப்புடன் வேலை செய்யக் கூடியவர்கள் எமது வியாபார மேம்பாட்டு அணிக்கு தேவைப்படுகின்றனர்.

களை தொடர்பாளர் (Field Coordinator) (ஆண்)

* ஆகக்கூடிய வயதெல்லை 40
* க.பொ.த (உ/த) கல்வி கற்றிருத்தல்
* சரளமாகதமிழ் மற்றும் ஆங்கில மொழி பேசக்கூடிய திறமை அவசியம், மேலும் சிங்களம் மொழி பேசக்கூடிய திறமை மேலதிக தகைமையாக கருதப்படும்.
* சரளமாக தமிழ் மற்றும் ஆங்கில மொழி பேசக் கூடிய திறமை அவசியம், மேலும் சிங்களம் மொழி பேசக்கூடிய திறமை மேலதிக தகைமையாக கருதப்படும்.
* வியாபார மேம்பாட்டு திட்டமிடல்களில் (Promotional Planning) அனுபவம்
* சரளமாக மொழியை கையாளும் திறமை
* வணிக பிரசாரம் (Propagandist Experience ) பற்றிய அனுபவம்.
* கணனியை கையாளும் அறிவு
* வடக்கு மாகாணம் பற்றிய அறிவு
* வியாபார மேம்பாட்டு அணியை கையாளும் திறமை
* வடக்கு மாகாணத்தை வசிப்பிடமாக கொண்டவர் விரும்பத்தக்கது.

வியாபார மேம்பாட்டு அலுவலர்கள் (Promotion Officers) (பெண்)

* நேருக்கு நேர் பிரசாரம் செய்யக் கூடிய திறமை (One to one communication)
* சரளமாக தமிழ் கதைக்க கூடிய திறமை
* களத்தில் வேலை செய்யக் கூடிய திறமை
* வீடுகளுக்கு சென்று எமது உற்பத்திகளை ஊக்குவிக்க கூடியதிறமை
* யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு

* கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும்.
* ஒரு வருட ஒப்பந்த காலத்திற்கு நிறுவனத்துடன் வேலைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். இவ் ஒப்பந்தகாலத்தில் திறமையாக தொழில் புரிபவர்கள் நிறுவனத்தின் நிரந்தரபணியில் இணைத்துக் கொள்ளப்படுவர்.
* திறமை அடிப்படையில் தொழில் உயர்வடைய வாய்ப்பு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமை உடையவர்கள் தமது சுயவிபரக்கோவையை (Bio Data) அனுப்பவும். மேலதிக விபரங்களுக்கு 0711950101 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

Link Natural Products (Pvt) Ltd

Manager - Human Resources
Link Natural Products (Pvt.) Ltd., P.O.Box 02, Malinda, Kapugoda.
email : hrdm@linknaturalproducts.com
www.linknaturalproducts.com

# அலைபேசி வற் வரியை நிறுத்தவேண்டும் அரசு

## சோசலிச இளைஞர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செப். 18
அலைபேசி மற்றும் இணையத்தளக் கட்டணங்கள் மீதான வற் வரி விதிப்பதை நிறுத்துமாறு சோசலிச இளைஞர் சங்கம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புதிய தீர்மானத்துக்கு ஏற்ப அலைபேசி மற்றும் இணையத்தள கட்டணங்கள் மீது 100 இற்கு 50 வீதம் வரி சுமத்தப்பட்டுள்ளது.

அலைபேசி மற்றும் இணையத்தளக் கட்டணங்கள் மீது இவ்வாறு வரி விதிப்பது நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு மேற்கொள்ளும் பெரும் அநீதியாகும் என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

# மைத்திரி சென்ற ஹெலியை படமெடுத்த இளைஞர் கைது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணித்த ஹெலிகொப்டரைப் படம் பிடித்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஹெலிகொப்டர் பம்பலபிட்டி பொலிஸ் மைதானத்தில் தரையிறங்கும்போது அந்த நபர் அதனைப் படம் பிடித்துள்ளார். இதனால் அவர் கைது செய்யப்பட்டார். அவர் லிந்துலைப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.

"ஹெலிகொப்டர் தரையிறங்குவதைப் படம்பிடிக்க ஆசையாக இருந்ததால் படம் பிடித்தேன்" என்று கைது செய்யப் பட்ட நபர் தெரிவித்துள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. இவர்தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும், இரகசியப் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

பணவசதி
ஒழுங்கு செய்து தரப்படும்
"வங்கி / நிதி நிறுவனங்களிடமிருந்து"
STUDENTS / VISITS / MIGRATIONS FOR
UK / AUSTRALIA / NEW ZEALAND
UK மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான சகல விதமான விசாக்களும் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளவும்
0773 69 59 86 / 0117 22 62 62

1717 PRE PAID
மொபிடெலிலிருந்து மிகச் சிறந்த
IDD கட்டணங்கள்
IDD Buddy யில் மட்டுமே கிடைக்கப் பெறும்.
இந்தியா கனடா அமெரிக்கா ரூ.1.50
இங்கிலாந்து ரூ. 2.00 ரூ. 8.00
ஜேர்மனி ரூ. 1.50 ரூ. 4.50
Sri Lanka Telecom Mobitel


வாழ்க்கை முழுவதும் நிச்சயமான பரிசுகளைத் தரும்
செலான் Sure சேமிப்பு கணக்கு
ரூ. 200,000 வரை பண வெகுமதிகள்
*இவ்வனுகூலத்திட்டம் 2016 ஆகஸ்ட் 01ம் திகதி தொடக்கம் அமுலாகும்.
செலான் Sure
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 011 200 88 88 www.seylan.lk
செலான் வங்கி

# மரண அறிவித்தல்

திருமதி
## ஞானதயாபதி (தயா) பூபாலசிங்கம்

தோற்றம்
25 . 09 . 1941



மறைவு
14 . 09 . 2016

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டன் Bromley ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானதயாபதி (தயா) பூபாலசிங்கம் 14.09.2016 புதன்கிழமை லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) -தங்கரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தியாகராசா பூபாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும் அதீசன், அமலன் ஆகியோரின் பாசமிகு தாயும் சக்தி (திலகா), தர்மினி ஆகியோரின் அன்புமாமியும்ஆரனி, சின்மயன், அஷ்வினி, அஞ்ஜனி ஆகியோரின் பேர்த்தியும் ஞானசக்தி, ஞானதேவி, நற்குணமாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னா்ரது பூதவுடல் 17.09.2016 சனிக்கிழமை நண்பகல் 12.00-4.00pm வரை James Harper Funeral Directors, Bromely BR1 4DS என்ற முகவரியில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 20.09.2016 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.15 க்கு Hither Green Crematorium,Verdant Lane, London SE6 1TP இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:** **தகவல்: குடும்பத்தினர்**
**ஆதீசன் - 00447448214478**
**அமலன் - 00447867907347**
**நற்குணமாணிக்கம் (மாணிக்ஸ்) - 00442085722638**

# மரண அறிவித்தல்

## திருமதி அரியமலர் தாமோதரம்பிள்ளை (கமலம்)



யாழ்.மாரீசன் கூடலைப் பிறப்பிட மாகவும், அளவெட்டி வடக்கு தம்பையப் புலத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அரியமலர் தாமோதரம்பிள்ளை (16.09.2016) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் தாமோதரம் பிள்ளையின் அன்புமனைவியும் நகுலேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற நகுலேஸ்வரன் (ராசா) மற்றும் ஞானேஸ்வரி (கமலா - இந்தியா), விக்னேஸ்வரி (குஞ்சு - ஜேர்மனி), விக்னேஸ்வரன் (யோகு), மகேஸ்வரன் (நாதன் - ஜேர்மனி), முத்தையா (குஞ்சா - ஜேர்மனி), செல்வராசா (செல்வா - சுவிஸ்), சிவக்கொழுந்து (சிவா), கிருபானந்தன் (ஆனந்தி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற குணரத்தினம், புனிதவதி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), இராஜ்குமார் (இந்தியா), சிறீதரன் (ஜேர்மனி), வனயா, ஞானேஸ்வரி (ஜேர்மனி), தர்சினி, வதனி (சுவிஸ்), கோகுலசிங்கம், கார்த்திகா ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை, வேலாயுதபிள்ளை; செல்லத்துரை, றஞ்சிதமலர், சுபத்திராதேவி, சுப்பிரமணியம், விசயரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜனி (கனடா), சிறீதர் (சுவிஸ்) காலஞ்சென்ற மயூரி மற்றும் கிரிதரன் (இந்தியா), இரவிச்சந்திரன் (ஜேர்மனி), மயூரன் (சிங்கப்பூர்), ஷஜி (இந்தியா), திலீப் (ஜேர்மனி), தினோ (ஜேர்மனி), விஜிதா, விதுசா, மேனுயா, தேனுகன், தினேஸ் (ஜேர்மனி), துவ்வியன் (ஜேர்மனி), லக்சன் (ஜேர்மனி), அட்சய் (ஜேர்மனி), அபிராமி (சுவிஸ்), அஸ்வினி (சுவிஸ்), அஸ்விதா (சுவிஸ்), தனுஷந், கஜிரன், ஜாதவன், ரசிதா, பகீரதி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கருனிகா, ஜருசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2016) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வைரவர் அடைப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**செ.தர்மோதரம்பிள்ளை (கணவர்)**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை பசுபதி

தோற்றம்: 12.10.1927 மறைவு: 15.09.2016



## பசுபதி வள்ளிப்பிள்ளை

தோற்றம்: 12.11.1941 மறைவு: 15.09.2016



## பசுபதி நந்தமூர்த்தி
(மூர்த்தி போட்டோ)

தோற்றம்: 26.08.1970 மறைவு: 15.09.2016



மாயக்கை, புலோலி வடமேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பசுபதி, திருமதி வள்ளிப்பிள்ளை பசுபதி, பசுபதி நந்தமூர்த்தி ஆகியோர் 15.09.2016 வியாழக்கிழமை அகால மரணமாகிவிட்டார்கள்.

**வேலுப்பிள்ளை பசுபதி**

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-தெய் வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை (வியாபாரியார்), வள்ளிப்பிள்ளை, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை மற்றும் ஆழ்வாப்பிள்ளை (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

**திருமதி வள்ளிப்பிள்ளை பசுபதி**

காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-பொன் னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பசுபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (பெரியாம்பி), சின்னத்துரை, கிருஸ்ணமூர்த்தி மற்றும் சின்னம்மா, வேலாயுதம், இராசம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

**பசுபதி நந்தமூர்த்தி**

காலஞ்சென்றவர்களான பசுபதி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தர்மலிங்கம் காலஞ்சென்ற சாந்தாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாயினியின் (முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண கல்வி அமைச்சு) அன்புக் கணவரும், சுபாஷினி (வடமாகாண பொது சேவை ஆணைக் குழு அபிவிருத்தி உதவியாளர்), சோபனா (முகாமையாளர், நெல்லியடி செலிங்கோ காப்புறுதி நிறுவனம்), சுகந்தன் (Seaman), சுகிர்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவர்கள் இந்திராதேவி (சுவிஸ்) நந்தகோபால் (கொலண்ட்) நந்தகுமார் (சுவிஸ்) நந்தசீலன் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான நந்தசிறீதர், நந்தமூர்த்தி, நந்தமோகன் மற்றும் ஜெயதேவி ஆகியோரின் தந்தையும் தாயும், செல்வராசா, விஜிதா (கொலண்ட்) சிவாஜினி (சுவிஸ்) சசிகலா (சுவிஸ்) சுதாயினி (கல்வி அமைச்சு, வடமாகாணம், முகாமைத்துவ உதவியாளர்) காலஞ்சென்ற குலேந்திரன் ஆகியோரின் மாமாவும் மாமியும் ஆவார்கள்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாயக்கை, புலோலி வடமேற்கு, பருத்தித்துறை.**

(N/140)(10.17)

**தகவல்:**
**குடும்பத்தினர். 076 5452323**

## மாடி வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய 8 அறைகள். இரு கோல் இரு சமையலறைகள் வாகனத்தரிப்பிடம் என்பனவற்றுடன் புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.

077 666 9055, 077 476 6296

## சமையல் பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு நன்றாக சமைக்க தெரிந்த பெண் ஒருவர் தேவை. சம்பளம் - 12000/=

தொடர்பு - 076 5703988

## பணிப் பெண் தேவை

யாழ். நல்லூரில் நடமாடும் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பார்ப்பதற்காக குடும்பப்பொறுப்புக்களற்ற பெண் தேவை.

தொடர்பு - 077 6741213

## விற்பனைக்கு

மிருசுவில் புகையிரத நிலைய வீதியில் மர அரிவு ஆலையுடன் கூடிய 6 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 255 7761

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு பிரபல இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு கணக்குப்பதிவாளர், சந்தைப் படுத்தல் உத்தியோகத்தர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (உயர் தர வர்த்தகப்பிரிவில் கல்விகற்ற, கணினி அறிவு உடையவர்கள் (Excel) விரும்பத்தக்கது.) விரும்புவோர் 071 4273035 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வேலையாள்கள் தேவை

Photo Shop,Video Editing தெரிந்த வேலையாள்கள் தேவை. அடிப்படை சம்பளம் 20,000/- வழங்கப்படும்.

தொடர்பு: 076 6808541

## Florance nighhtingaale School of Nurs-


வேலை இன்றி இருக்கின்றீர்களா ?
நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி தகைமைகள் O/L 6 பாடம்.
6 மாதகால Mlt வகுப்புக்கள் தகைமைகள் A/L (Bio Science)
மேலும் இலவசமாக ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புக்கள் நடைபெறும்.
திங்கள் முதல் ஞாயிறு வரை, நேரம் - மு.ப.9 - பி.ப. 2 வரை
தொடர்புகளுக்கு - 077 7186438 பதிவுகளுக்கு முந்துங்கள்
கே.கே.எஸ் றோட், மருதனார்மடம்.

நெல்பாம் (Nel Farm) No.01 முட்டைக் குஞ்சு விநியோகம் 19.09.2016 திங்கட் கிழமை மேலதிக விவரங்களுக்கு.
Acca Farm, வட்டுக்கோட்டை சங்கரத்தை. T.P - 077 3086721

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
27.05.1946

இறப்பு
19.08.2016



அமரர் யோசப் பிரான்சிஸ் பாக்கியநாதன்
(ஓய்வு பெற்ற ஊழியர், சிறிலங்கா ரெலிக்கொம் மன்னார்)

என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார் (யோவான் 11 – 25 )

கடந்த 19.08.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் பிரான்சிஸ் பாக்கியநாதன் (குணம்) அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி இணையத் தளம் மூலமாக எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதித்திருப்பலியில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்த குருக்கள் இறுதிச்சடங்கில் கலந்து தோள் கொடுத்த அனைத்து உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 10/11, முதலாம் குறுக்குத் தெரு,
எமில் நகர், மன்னார்.

குடும்பத்தினர்
076 7072578

## காணி தேவை

நல்லூர் Temple Road அல்லது ஆலயத்தை அண்டிய பகுதியில் 3 பரப்பிற்குட்பட்ட காணி தேவை.

தொடர்பு - 077 6095604

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
அன்னையின் திருத்தாள் போற்றி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
கேதார கௌரி விரதம்

கேதார கௌரி விரதாரம்பம்
11.10.2016
கேதாரகௌரிவிரத பூர்த்தி
30.10.2016
விரதகாரர்கள் எதிர்வரும் 19.09.2016 திங்கட்கிழமை முதல் ஆலய செயலகத்தில் தாங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்.
இல.100, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## சபிண்டீகரண அழைப்பு

கடந்த 18.08.2016 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### இராசலெட்சுமி சண்முகலிங்கம்

அவர்களின் சபிண்டீகரண கிரியை இன்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"குற்றாலம்"
இல.43, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி

BCSB

ஒளி அழகன் ஸ்ருடியோவும்
**British College of Beauty Studies**
உம் இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான துறை சார்ந்த பாடநெறிகள்

- அழகுக்கலை - Makeup
- தையற்கலை - Tailoring
- சமையற்கலை -Cooking, கேக்ஐசிங் -Icing
- கணினி
- ஆங்கிலம்
- Ladies Skills Development



ஒவ்வொரு பாடநெறியிலும் பல பிரிவு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

* வயதெல்லை கிடையாது.
* அனைத்து பயிற்சி வகுப்புக்களும் பெண் ஆசிரியர்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்படும்.
* இலகு தவணை முறையிலான கட்டண வசதி. வகுப்பில் இணைந்தவுடன் பகுதிநேர வேலை வாய்ப்பையும் மாதவருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.
* வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் எங்களுடைய சான்றிதழ்.
* எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக
* சொந்தத் தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
* A/L எழுதிய மாணவர்களுக்காகவே விஷேட பயிற்சி பிரிவுகளை வடிவமைத்துள்ளோம்.

*Our Special Diplomas*

DIBC ADIBTH DIM
DIAM DIHC DIHB
DIHC DIM DIAMF
DIT DICFM DILS

எங்களிடம் எந்த பாடநெறியை தொடங்க விரும்பினாலும் வருடத்திற்கான இறுதி வகுப்பில் இணைந்து கொள்ளுங்கள்.

**குறிப்பு:** வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களுக்காக தொழில் வழி காட்டல் பயிற்சி வகுப்பு இடம்பெற உள்ளது.

ஒளி அழகன் ஸ்ருடியோ இயக்குநரால்உங்களுக்காக குறிப்பிட்ட பயிற்சி வகுப்புக்களை இலவசமாகவழங்க தீர்மானித்துள்ளார்.

பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 7011645
பலாலி வீதி,
திருநெல்வேலி.

# ACCOUNTS CLERKS
(Trainee)
## Jaffna

The Piyestra furniture (Pvt) Ltd located in Dambadeniya is in the process of manufacturing office and household furniture. The company distributes its product range island wide through a well-organized dealer network.

We seek suitable males below 26 years of age to be recruited for the above position.

Selected candidates shall be required to :

- ☑ attend to accounting works in branch office in the relevant area.

Applicants should :

- ☑ be permanent residents within 25km from above location.
- ☑ have G.C.E. (A/L) qualification in commerce subjects.
- ☑ have a qualification in accountancy, similar to AAT.

Having experience in accounting will be an advantage.

Total earnings will not be less than Rs. 25,000/= p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non-related referees to reach us within 10 days of this advertisement.

The Human Resources Manager,
Piyestra
Negombo Road,
Dambadeniya.
E-mail: hrm@piyestra.lk

Piyestra

## சமாந்தரமான

வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நிர்வாகச் செயற்பாடுகளை திறம்பட முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியை திறந்து வைத்துள்ளேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதிதாக நிறுவப்பட்ட யாழ். பொலிஸ் நிலையத்தைக் கடந்த 9 ஆம் திகதி திறந்து வைத்திருந்தார். சிவில் நிர்வாகம் திறம்பட இயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்க வேண்டியிருக்கின்றது. இந்த நாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பெரும் போராட்டத்துக்கு நடுவே 13 ஆவது சீர்திருத்தத்தை முன்வைத்து, அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்தினார். வடக்கிலும் – தெற்கிலும் இதற்கு எதிராக குரல்கள் எழுந்தன. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. முன்னைய அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்து, 13 ஆவது திருத்தத்தை அடித்தளமாகக் கொண்டு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவேன் என்றெல்லாம் கூறினார். நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை.

யாழ்ப்பாண – தமிழ் மக்கள் – பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இஸ்லாமிய மக்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றுதான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்காகத்தான் இரு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளன. அதற்காகத்தான் நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணயச் சபையாக மாற்றியுள்ளோம்.

சகல மக்களும் ஏற்கும் வகையிலான கருத்து உடன்பாட்டுக்கு வருவதற்கே முயற்சிக்கின்றோம். அரசமைப்பு உருவாக்க முயற்சியில் 6 உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் முறைமை, ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, தீர்வுத் திட்டம் தொடர்பில் நிறைவேற்றுக் குழு ஆராய்ந்து வருகின்றது. துணைக் குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு மாகாண சபைகளுக்கு மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்கள் வரை செல்ல வேண்டும். புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பின்னர், பொதுசன வாக்கெடுப்பு நடத்தி நிறைவேற்றத் தீர்மானித்திருக்கின்றோம்.

செனற் சபையை அமைப்பதற்கும், அதில் மாகாணங்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குவதற்கும் முடிவு எட்டப்பட்டுள்ளது. அந்த செனற் சபைக்கு எவ்வாறான அதிகாரங்களை வழங்குவது என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

கொழும்பு அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஒருங்கிணைந்த நிரல் இருக்கக் கூடாது என்று யோசனைகள் பல முன் வைக்கப்பட்டுள்ளன. இதனை முழுமையாக இல்லாமல் செய்வதா, சில விடயங்களில் ஒருங்கிணைந்த நிரல் இருப்பதா என்பது தொடர்பாக ஆராய்கின்றோம். கொழும்பு அரசுக்கும், மாகாண அரசுக்கும் சமாந்தரமான அதிகாரங்கள் பகிர்வது தொடர்பிலேயே கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

அரசியல் தீர்வுத் திட்ட முயற்சிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டன. நவம்பர் மாதம் அளவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழில் தேசிய கீதம் பாடப்படுவது தேசத் துரோகம் என்று சிலர் கூறுகின்றனர். டி.எஸ்.சேனநாயக்க தமிழில் தேசிய கீதம் பாடலாம் என்று கூறியிருந்தார். அதையே நாமும் இப்போது செய்து கொண்டிருக்கிறோம்.

சிலர் இனவாதத்தைத் துண்டுவதற்காக–பௌத்தம் ஆபத்தில் இருப்பதாகக் கூறுகின்றனர். பௌத்த சமயத்தைப் பாதுகாப்பது தொடர்பில் நாம் மல்வத்து பீடத்துடன் பேசியுள்ளோம்.

அடிப்படைக் குற்றங்கள் இல்லாத சிறைக் கைதிகளை விடுதலை செய்ய உத்தேசித்துள்ளோம். காணாமல் ஆக்கப்படவர்களின் உண்மை நிலையைக் கண்டறிய ஆணைக்குழுவை அமைத்துள்ளோம். தமிழ் மக்களுடைய துன்பங்களை நீக்கி நிம்மதியாக வாழ வைக்கவேண்டும். உண்மையைக் கண்டறியும் குழு நிறுவுவதற்கும் முடிவு செய்துள்ளோம்.

இனவாதம் மூலம் எதுவித நன்மையும் யாருக்கும் கிடைக்கப் போவதில்லை. நாங்கள் தற்போது வறுமையில் உள்ளோம். சில தென்னிலங்கை இனவாதிகள் எமது தமிழ் மக்களையும் தென்னிந்திய தமிழ் மக்களையும் ஒன்று என்று பரப்புரை செய்கின்றனர். உண்மை அப்படியில்லை. இலங்கைத் தமிழ் மக்கள் சிறப்பானவர்கள். அத்துடன் பௌத்தம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறதோ அதே போல் இந்து சமயமும் பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி மற்றைய மதங்களும் பாதுகாக்கப்படும். எல்லா மக்களும் சேர்ந்ததே இலங்கை நாடாகும்.

நாங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எல்லாரும் ஒரே காலத்து அரசியல்வாதிகளாகக் காணப்படுகின்றோம். அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அது மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இதில் பங்களிப்பு செய்ய வேண்டும். எமது நாட்டு மக்கள் நிம்மதியாகவும் சுந்தோசமாகவும் வாழ வேண்டும் – என்றார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டடத்தையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடா வெட்டி நேற்றுத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உள்நாட்டு விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன, சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, கே.மஸ்தான், யாழ் மாவட்டச் செயலர் ந.வேதநாயகன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

(த-5-101-ரி1)

## தியாகி...

1987 ஆம் ஆண்டு, தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புப் படையாக நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்துக்கு எதிராக திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தை செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்தார். நீராகாரம் இன்றி 12 நாள்கள் தொடர்ந்த உணவு ஒறுப்புப் போராட்டம் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி, திலீபனின் உயிர் துறப்புடன் முடிவுக்கு வந்திருந்தது. திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும் ஒரு தசாப்தத்தின் பின்னர் இந்த ஆண்டு உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது. திலீபனின் உணவு ஒறுப்பு போராட்டம் நடத்திய நல்லூர் ஆலய வீதியிலும், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியிலும் கடந்த 15 ஆம் திகதி நினைவு நாள் நிகழ்வு இடம் பெற்றிருந்தது. மலரஞ்சலி, ஈகச்சுடரேற்றல், அகவணக்கம் என்பன நடைபெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாகவே கிளிநொச்சி மண் ணில் இன்று நினைவு நாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி நகரில் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு பரவலாக சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-21-35)

**அறைகள் வாடகைக்கு உண்டு**

தளபாடங்களுடன் படிக்கும். வேலை பார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.

077 5218995, 077 6946274

**மணமகள் தேவை**

1979, கேட்டை, நியூசிலாந்து சிற்றிசன் மணமகனுக்கு மணமகள் தேவை.

துர்க்கா திருமண சேவை

077 818 5978, 075 011 1122

**வேலையாள் தேவை**

வல்வெட்டித்துறையில் இயங்கும் கிளினிக் நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

T.P: 077 9136990

**கலர் பிரதியாக்கம்**
**Colour Printing**

- சான்றிதழ்கள்
- புத்தக கவர்கள்
- துண்டுப்பிரசுரங்கள்
- விசிற்றிங் கார்ட்
- CD கவர், ஸ்ரிக்கர்
- அழைப்பிதழ்கள்

Colour

போன்றவற்றை உலகத்தரம் வாய்ந்த பிரதியாக்கல்களாக மிகக் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள........

MOORTHY
Digital Imaging Service
021 222 1358

**விற்பனைக்கு**

டிமோ பட்டா அலுமினியப் பொடியுடன் இல. P.P XXXX விற்பனைக்குண்டு.

T.P: 075 9789223

**காணி வீடு விற்பனைக்கு**

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில், யாழ் பல்கலைக்கழகம், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலைக்கு மிக அருகில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியோடு நான்கு(04) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.

076 975 4410, 076 977 0175

**வேலையாள்கள் தேவை**

எமது உணவகத்துக்கு கீழ் காணும் வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

- உணவு பரிமாறுபவர் - 3
- பிரதான சமையலாளர் - 2 ஆண்/பெண்
- சமையல் உதவியாளர் - 2 ஆண்/பெண்
- சுத்திகரிப்பு தொழிலாளர் - 2 ஆண்/பெண்

மேற்படி தகுதியானவர்கள் 21.09.2016 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை நேரில் சமுகமளிக்கவும்.

Danuska Restaurant
Manipay Road, Anaikoddai.
021 312 2445

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2801 திகதி 17.09.2016

01 45 55 64 E 34 ரூ. 3,77,12,475/-

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 551
சீட்டிழுப்பு திகதி 2016.09.17
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
25 29 31 63 Z
சுப்பர் ஜக்பொட்
ரூ. 5,10,08,940/=
வெல்லப்படவில்லை

**Job Vacancy**

**IIPM - International Institute Professional Management Center**

*நீங்கள் G.C.E. A/L படித்து முடித்தவரா ?
*நீங்கள் தொழில் புரிவதற்கு விருப்பமுள்ளவரா ?

100% Job Oriented பயிற்சி நெறிகள் விசேட புலமைப்பரிசில்கள் மூலம் பின்வரும் துறைகளில் விசேட நிபுணர்களால் பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சியின் பின்பு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

1. PC HARDWARE AND NETWORK TECHNOLOGY
2. ENGLISH TEACHERS TRAINING
3. ACCOUNTING & FINANCE
4. HOTEL OPERATIONS & MANAGEMENT
5. GRAPHIC & MULTIMEDIA
6. CIVIL AND CONSTRUCTION TECHNOLOGY
7. SALES AND MARKETING

மேலதிக விவரங்களுக்கு - 076 5563323

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## திருமதி புஸ்பரத்தினம் சௌந்தரநாயகம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பரத்தினம் சௌந்தரநாயகம் நேற்று (17.09.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - முத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சௌந்தரநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும் சிவகுமாரின் பாசமிகு தாயும் காலஞ் சென்றவர்களான கமலாம்பிகை, E.S.கந்த சாமி மற்றும் சுந்தரலிங்கம் (J.P), மருக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுந்தரியின் அருமை மாமியும் சாந்தகுமார், ரமேஸ் (கனடா), திருமதி ரமேஸ் இலக்சிதா, கிரிதரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரதான வீதி,**
**சங்கானை.**

தகவல்:
**சௌந்தரநாயகம்** சிவகுமார் (மகன்)
077 9284134

## கொக்குவில் இந்து. மாணவன் மேசைப்பந்தாட்டத்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், செப். 18
யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் மாகாண மட்டத்தில் முன்னெடுத்த மேசைப் பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பிரிவு, 18 வயதுக் குட்பட்ட பிரிவு, மற்றும் திறந்த வயதுப் பிரிவு ஆகியவற்றில் கொக் குவில் இந்துக் கல் லூரியின் மாணவன் டனுஸ் சம்பியனா னார்.

யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்கில் நேற்று இந்தத் தொடர் நடைபெற்றது. 15 வயதுக்குட்பட்ட ஆண் கள் பிரிவு இறுதியாட் டத்தில் டனுஸை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் கிருசாந்தன் மோதி னார். இதில் 3:0 என்ற செற் கணக்கில் டனுஸ் வெற்றிபெற்றார்.

18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் டனுஸை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியின் மாண வன் மேசக் மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 3:2 என்ற செற் கணக்கில் டனுஸ் வெற்றிபெற்றார்.

திறந்த வயதுப்பிரிவு போட்டியில் யாழ். மத்திய கல் லூரி ஆசிரியர் மோகனுடன் மோதிய டனுஸ் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்று பிரிவு களிலும் சம்பியனானார்.

(ம-23)

## வேம்படி பெண்கள் பாடசாலை மாணவி மூன்று பிரிவுகளில் கிண்ணம் வென்றார்



யாழ்ப்பாணம், செப். 18
யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கம் மாகாண மட்டத்தில் முன்னெடுத்த மேசைப் பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பிரிவு, 18 வயதுக்குட்பட்ட பிரிவு, திறந்த வயதுப் பிவு ஆகியவற்றில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை யின் மாணவி கிதுர் சனா சம்பியனானார்.

யாழ். மத்திய கல்லூரி யின் உள்ளரங்கில் நேற்று இந்தத் தொடர் நடைபெற்றது. 15 வயதுக்குட்பட்ட பெண் கள் பிரிவு இறுதி யாட்டத்தில் கிதுர்ச னாவை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி டிலக் சனா பலப்பரீட்சை நடத்தினார். இந்தப் போட்டியில் கிதுர்சனா 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார்.

18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி பதுமிலாவுடன் கிதுர்சனா மோதினார். இந்த ஆட்டத்தில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார் கிதுர்சனா.

திறந்த வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி பதுமிலாவுடன் கிதுர்சனா பலப்பரீட்சை நடத்தினார். இந்த ஆட்டத்தில் கிதுர்சனா 3:0 என்ற செற் வெற்றிபெற்று சம்பியன ானார்.

(ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று நடைபெற்றது. பெண்கள் பிரிவில் தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலய அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீ கரித்தது. (ம-422)



## தேசியமட்ட கரப்பந்தாட்டத்தில் விக்ரோறியா சிறந்த தொடக்கம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சிறந்த தொடக்கம் கண்டுள்ளது.

தேசியமட்ட மூன்றாம் கட்டப் கோட்டிகள் நேற்று ஆரம்பமாகின. கரப்பந்தாட்டத் தொடர் நாத்தாண்டியாவில் நடைபெற்று வருகிறது. 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரி அணி வடக்கின் சார்பாகக் கலந்து கொண்டது. நேற்று நடைபெற்ற ஆட்ட மொன்றில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து வஸ்முல்ல தேசிய பாடசாலை அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 23:25 என்ற புள்ளி களின் அடிப்படையில் இழந்தது விக்ரோ றியாக் கல்லூரி. இதனால் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றினால் மட்டுமே வெற்றிபெறலாம் என்ற நிலையில் அந்த செற்களை முறையே 25:11, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கைப்பற்றிய விக்ரோறியாக் கல் லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

(ம-422)

## கோப்பாய் ம.வி. முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கரப்பந்தாட்டத்தில் 15 வய துக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கோப் பாய் மகா வித்தியாலய அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

கரப்பந்தாட்டத் தொடர் நாத்தாண் டியாவில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஈ.ரி.சற். தேசிய பாடசாலை அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்க ளையும் முறையே 25:17, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றிய கோப்பாய் மகா வித்தியாலய அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

(ம-422)

## தேசியமட்ட தடகளம் யாழ். துரையப்பாவில்

யாழ்ப்பாணம், செப். 18
42 ஆவது தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மாதம் மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஆரம்பநாள் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவும் இறுதிநாள் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வும் கலந்து கொள்கின்றனர்.

(ம-23)

## கலைமகள் வித்தி. வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 18
பாடசாலைகளுக்கு இடையி லான எறிபந்தாட்டத்தில் வடமா காணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய நெளுக் குளம் கலைமகள் வித்தியாலய அணி முதல் சுற்றுடன் வெளி யேறியது.

அச்சிலியாகொட மகா வித்தியா லய மைதானத்தில் நேற்றுநடை பெற்ற இந்த ஆட்டத்தில் வவு னியா நெளுக்குளம் கலைம கள் வித்தியாலய அணியை எதிர்த்து யாகல மகா வித்தி யாலய அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் யாகல ம கா வித்தியாலய அணி வெற்றி பெற்றதையடுத்து கலைமகள் வித்தியாலயத்தின் ஆட்டம் முதல் சுற்றுடன் முடிவு கண்டது.

(ம-422)

## மெதடிஸ்த பெண்கள், வேம்படி மகளிர் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட சதுரங்கத் தொடரில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை அணிகள் முன்னேற் றம் கண்டன.

நுவரேலியா மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக் கான போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அணி, தான் எதிர்கொண்ட மூன்று லீக் போட்டிகளுமாகச் சேர்த்து ஒட்டு மொத்தமாக 8.5 புள்ளிகளைப்பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 19 வயதுக் கட்பட்ட அணி இரு போட்டிகளில் மோதி ஒட்டுமொத்தமாக 7 புள்ளிக ளைப்பெற்றுள்ளது. அந்த அணியின் இறுதி லீக் ஆட்டம் இன்று நடை பெறும். பெரும்பாலும் மெதடிஸ் பெண்கள் அணியும் அடுத்த சுற்றுக் குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்புக் கள் அதிகமுள்ளதாகக் கருதப்படு கிறது.

(ம-422)

# தடைகளைத் தாண்டி முல்லைக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், செப். 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 400 மீற்றர் தடைதாண்டலில் முல்லை மாவட்டத்துக்கத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர் நடைபெற்று வருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய ரி.தனுசியா 01 நிமிடம் 17 செக்கன்கள் 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தை வென்றார். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வை.மனோஜினி வெள்ளிப் பதக்கத்தையும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிவானுஜா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)





# முப்பாய்ச்சல் போட்டியில் தங்கம் வென்றது மன்னார்

யாழ்ப்பாணம், செப். 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு முப்பாய்ச்சலில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
மாகாணமட்ட தடகளத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றும், நாளையும் என இரு தினங்கள் நடைபெறுகிறது. ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டி நேற்று நடைபெற்றது. மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வெனிலன்மார்க் 13 மீற்றர் 44 சென்ரிமீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய கபில்ராஜ் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தேவராஜ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# தேசியமட்டப் போட்டிகள் யாழில்

யாழ்ப்பாணம், செப். 18
42 ஆவது தேசியமட்ட பெரு விளையாட்டுக்களில் கால்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கடற்கரை கபடி ஆகியன யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளன.
கால்பந்தாட்ட போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம், அரியாலை கால்பந்தாட்ட பயிற்சிநிலைய மைதானம், யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம், யாழ். மத்திய கல்லூரி மைதானம் ஆகியவற்றில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.
கூடைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியின் திடலில் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன.
கடற்கரைக் கபடிப் போட்டிகள் வல்வெட்டித்துறை ரேவடி கடற் கரை மைதானத்தில் எதிர்வரும் 29ஆம் 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம-23)

# குண்டு எறிதலில் மன்னாரிடம் தங்கம்

யாழ்ப்பாணம், செப். 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு குண்டு எறிதலில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
மன்னார் மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய எஸ்.எம். றெஜினோல்ட் 10.94 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திக் களமிறங்கிய சி.ஜனோயன் வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.செல்வரஜீவன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தலின் போது... (422)

# வசாவிளான் மத்தி. வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் வசாவிளான் மத்திய கல்லூரியின் 17வயது, 19வயது பிரிவு அணிகள் முதல் சுற்றுடன் வெளியேறின.
தேசியமட்ட மூன்றாம் கட்டப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி நாளை வரை மூன்று தினங்கள் நடைபெறுகின்றன. கரப்பந்தாட்டம் நாத்தாண்டியாவில் நடைபெற்றுவருகிறது.
நேற்று முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. 17 வயது, 19 வயது பெண்கள் பிரிவில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து வசாவிளான் மத்திய கல்லூரி அணிகள் கலந்துகொண்டன. இரு அணிகளும் முதல் சுற்றுடன் வெளியேற்றப் பட்டன.
குறித்த கல்லூரியின் 17 வயதுப்பிரிவு அணி அபயசேகர வித்தியாலய அணியிடம் 2:0 என்ற செற் கணக்கிலும், 19 வயதுப்பிரிவு அணி நீர்கொழும்பு மத்திய கல்லூரி அணியிடம் 2:1 என்ற செற் கணக்கிலும் தோல்வியடைந்து வெளியேறின. (ம-422)

# பெண்களுக்கான தட்டெறிதல் வவுனியாவுக்கு தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், செப். 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு தட்டெறிதலில் வவுனியா மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
மாகாணமட்ட தடகளத் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. பெண்களுக்கான தட்டெறிதலில் வவுனியா மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய ஆர்.தர்சிகா 28.95 மிற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். யாழ். மாவட்ட வீரரங்கனை என்.சிவானுஜா வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.லினோஜிதா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# தேசியப் போட்டிகளை நடத்தும் அந்தஸ்தை இழந்தன கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 18
போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நடைபெறவிருந்த தேசியமட்ட வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, நீச்சல் போட்டிகள் வேறு மாவட்டங்களுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டன.
கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் இம்முறை கிளிநொச்சியில் நடத்தத் திட்டமிடப்பட்ட நீச்சல் போட்டி, விளையாட்டு அமைச்சின் கொழும்பு உள்ளரங்குக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டது.
மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட உள்ளரங்கு கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கு உரிய வசதிகளுடன் இல்லாத காரணத்தால் பொலனறுவை மாவட்டத்துக்குப் போட்டிகள் மாற்றப்பட்டன. (ம-23)

## வீடு வளவு விற்பனைக்கு

சுன்னாகம் நூலகத்துக்கு அருகில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 790 3642 (இரவு 7.00 மணிக்குப் பின்)
இல. 7, விபுலானந்த வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
(J 4655) (13.18)

## வேலைவாய்ப்பு

அலிசன் நிறுவனத்தின் கொக்குவில், இணுவில் மற்றும் கிளிநொச்சிக் கிளைகளில் பணிபுரிவதற்கு 20 - 30 வயதிற்குட்பட்ட பெண் பயிலுனர்கள் தேவை.

077 9866409, 021 2216966

## Rent a Car

நாள் மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு -
077 4696695,
075 2040061


## விலகினார் ரிம் சவுத்தி



காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகினார் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ரிம் சவுத்தி. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்காக நியூசிலாந்து வீரர்கள் நேற்று வலைப் பயிற்சியில் ஈடுபட்ட போது சவுத்தியின் காலில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகினார். எனினும் ஒரு நாள் தொடருக்கு முன்பாக அவர் குணமடைந்து விடுவார் என்று நியூசிலாந்தின் மருத்துவக் குழு தெரிவித்தது. (ம)


## VACANCIES

Receptionist - 2
English Teacher - 1
Office Coordinator - 1
Recovery Officer - 10
Manager - 1
Cashier - 1
Excecutive - 5
Graphic Designers - 10
Factory Staffs - 2
Grocery Store Manager - 1

மேற்படி வேலைவாய்ப்புக்களை பெற விரும்பின் புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக்கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.
(பதிவுக்கட்டணம் உண்டு)
Open time mon - sat 10 am - 4pm
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
021 3202789

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
G.C.E (A/L) 2017
To Inquire : 077 336 4055

# Day Classes
திங்கள் - வெள்ளி

உயிரியல் — காலை 7.00 - 9.00 — திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர்
இணை.கணிதம் — காலை 7.00 - 9.00 — திரு. S.S. செந்தில்நாஜ்
பௌதிகவியல் — Batch I - காலை 9.30 - 11.30 — திரு. R. குகன்; Batch II - மு.ப. 11.30 - 1.30 — திரு. R. குமரன்
இரசாயனவியல் — மு.ப. 9.30-11.30 — திரு. டயஸ்; மு.ப. 11.30-1.30 — திரு. K.T சிவகுமார்

★ Physics : திரு. R.குகன்
Shortnote class
திங்கள், செவ்வாய், வியாழன் (பி.ப. 1.30 - 2.30)
★ Chemistry : திரு. டயஸ்
Theory Class : வெப்ப இரசாயனவியல்
புதன், வியாழன் (பி.ப. 1.30 - 2.30)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## மருந்தக (Pharmacy ) வேலைக்கு ஆள்கள் தேவை

- 02 வருடங்களுக்கு குறையாத Pharmacy வேலையில் முன் அனுபவமுள்ளவர்கள்.
- Account Clerk (கணக்குப் பதியுநர்) அடிப்படை அறிவுள்ளவர்கள்.

ஆண், பெண் இருபாலாரும் 25.09.2016 இற்கு முன்னர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.
சிற்றி மெடிக்கல்ஸ் - City Medicals
487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3880

## சாரதி தேவை

ஐந்து வருட அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
1. JCB- நாளொன்றுக்கு பத்து மணித்தியாலம் வேலை செய்தால் 3000 சம்பளம் வழங்கப்படும்.
2. பத்து சில்லு டிப்பர்- மாதம் 60,000/= சம்பளம் வழங்கப்படும்.
077 339 8775, 077 844 8775
துர்க்கா கிரேசர், புத்தூர்

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வவுனியாவில் உள்ள டாக்டர் ஒருவரின் பெற்றோரை பராமரிப்பதற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வயது வந்த ஒருவர் தேவைப்படுகின்றார்.
தகைமை - 50 வயதிற்கு பொறுப்புக்கள் அற்ற பெண்.
ஆரம்ப சம்பளம் - 18000/=
தொடர்பு: 077 758 8729

## புதிய பிரிவுகள்
## ஆரம்பம் 24.09.2016

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு
வங்கியியல் கற்கை நெறிகள்
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E.O/L 6 Passes with 5 credits.

இலங்கைப் பட்டயக்கணக்காளர் ஆவதற்கு
Chartered Accountants of Sri Lanka
Executive Level I & II (Tamil & English Medium)
Business Level ( English Medium)
Qualification:- G.C.E.A/L 3 Passes

தொழிற்றுறைக் கணக்காளர் ஆவதற்கு
aat {Sri Lanka}
[AA1, AA2, AA3]
Medium - Tamil & English
Qualification:- G.C.E.O/L 6 Passes

CERTIFICATE COURSE IN ENGLISH

வெளிவாரிப் பட்டதாரி ஆவதற்கு
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
BBA, BCom, BA
Note: 2015ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் ஒரே தடவையில் A/L 3 Pass சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
பதிவுகளை 30.09.2016இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149
FB:- Jcud Jaffna.

## வியாபாரத்தில் அதிக இலாபம் வேண்டுமா ?

ஜூஸ் (ஐஸ்) பக்கட் மெசின்
ரெயின்போ ஜெலி ஐஸ்கிறீம் மெசின்




விற்பனைக்கு உகந்த இடங்கள்
- கூல்பார்,ஸ்நெக் பார்
- ஹோட்டல்,ஸ்கூல்
- கென்டீன்
- பேக்கரி,பார்மசி
- குரோசரி,சுப்பர்மார்க்கட்

தமிழில் தொடர்பு கொள்ள : 0773918870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No 18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha Kollupitiya Colombo - 03

## SINGER FINANCE

மோட்டார் சைக்கிளுக்கான குத்தகை வசந்தகாலம்




தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.